பிஸ்மில்லாஹி

குத்புநாயகம்

என்னும்

# முகியித்தீன் புராணம்

இஃது

காயற்பட்டணம்

செய்கு அப்துல்காதிர் நயினர் லெப்பை

ஆலீம் புலவரவர்களியற்றியது.

---

கோட்டாறு

கா. ப. ஷெய்குத்தம்பிப் பாவலரால்

பரிசோதிக்கப்பட்டு

---

சென்னை

ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1903

ஹிஜறத்து ௧௩௨௧ றபியுல் ஆகிர் மீ

பிசுமில்லாஹி.

இஃது

# குத்புநாயகம்

என்னும்

# முகியித்தீன் புராணம்.

## முதலாங் காண்டம்.

—(*)—

### காப்பு.

வெண்பா.

பூவாச மாநபிக்குப் பூர்வகலைக் யானமெல்லாம்
நீவாச மாயளித்த நேசனே-நாவாச
ஆரணத்தி னுட்பொருளே யாதிமுடி வில்லானே
காரணத்தின் காரணனே காப்பு.

விருத்தம்.

பூமேவு மணமெனவும் புகழ்மேவும்
பொருளெனவும் பொருவாச் சோதிப்
பாமேவு சுடரெனவும் பொறிமேவு
புலனெனவும் பரவா நிற்குங்
கோமேவு வனமேவு மற்றிடத்து
முயிர்க்குயிராக் குறையாச் சீர்த்தித்
தாமேவு மொருநாதன் கருணையது
தப்பாது காவ லன்றே.

# கடவுள்வாழ்த்துப் படலம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்வள ரொளிவில் வாய்ந்த திருமணி யிடத்தி னின்று
பேர்வளர் கதிரே யென்னப் பெரும்புவி யிடத்திற் றோற்றுந்
தார்வளர் செவ்வித் திண்டோண் முகியித்தீ னவர்தம் மாகம்
பார்வளர்ந் தேறப் பாட வல்லவா பலன்செய் வாயே. (௧)

ஆதியே யுள்ளத் துற்ற வறிவினுக் குச்சந் தோற்றுச்
சோதியே யின்ன பாங்கென் றுரைவளர் தொகைக்குட் காணு
நீதியே நிறையிற் குன்று நிருபல ரெவரும் போற்று
மோதியே பன்மை காட்டு மொருமையே கருத்த னாமே. (௨)

பொதிந்தவிப் பொறிக்கு நாட்டப் பொலிவிற்கு முடிக்குங் கோளின்
வதிந்ததோர் வினைக்கும் பெற்றி வழிவழி நிறீஇய கோமா
னிதந்தர வவையாற் றெக்கி யியைந்தவிச் செயற்கை முற்றப்
பதந்தருங் கருத்த னாதி பாவுதற் றுணையா மன்றே. (௩)

பறப்பன வூர்வ மற்ற பல்லுயிர்ச் சாதிக் கெல்லா
மிறப்பன மடிவ மற்றை யேற்றவை யனைத்து மீந்து
மறப்பன வின்ப துன்ப மாய்வன யாவு மின்றிச்
சிறப்பன வறிவி னுள்ளே யறிவனைத் தேடாய் நெஞ்சே. (௪)

சொல்லினும் நீத வஞ்சச் செயலினுந் தொடர்ந்தோர் வாய்மை
வெல்லினுங் காய நோதன் மேவினுந் துன்பாங் கார
மெல்லினும் பகலுங் கொண்டுன் னெண்ணமுங் குலைவ தென்னே
கல்லினுங் கல்லாய் நெஞ்சே கருத்தனைக் கருதாய் மன்னே. (௫)

பொருதிரை யவனி வானம் பொங்கொளி மூன்று நல்லோர்
மருதிவ ளழகு வாய்ந்த மனைகளுந் தீயோர் வாழுங்
குருதியூ னருந்துஞ் செந்தீக் குழியுநின் னிடத்த தாமாற்
றருதலிற் கையிற் கோட றன்னளி நினது வல்லோய். (௬)

பன்மனக் கெழுந்த கோலம் படரடை யிருளைச் சித்து
நன்டினத் தெளிவு கொண்டோர் நவமனங் கொண்டோ ரென்றாற்
புன்மன வினையி னுள்ளம் புகுந்திடா தறிவிற் றேறிச்
சொன்மனம் பெறுதல் யார்க்கும் வேண்டிய தொழிலா மன்றே. (௭)

நாவினாற் பகர்த லுள்ளம் நவையற நினைத்தன் மெய்யிற்
பாவிய வினைகள் செய்தல் பயனறி வுணர்ந்து கேட்டல்

ஆவிபி னியல்புங் கொண்ட வாக்கையி னியல்புஞ் சோர்க்க
மேவினு ரியல்புங் கொள்வீர் வீணிலை யாக்க லன்றே. (அ)

கருணையு மதற்குண் டாய கருமத்தின் சிவ செந்துந்
தருணமு மியற்கை பற்றுந் தகுதியுங் குணமுங் காட்டு
மரணமு மளவின் வைத்த மாட்சிமை யுடைய நாத
னிரணமில் நண்பிற் காக்கு மியல்பதே நிலைத்த தன்றே. (கூ)

## வேறு.

விதியாதி யருளோடு மிகவாழி நிலைசீர்மை வினையோடு மறிவோர்மைபா
கதியாதி பெறுபேறு நவநீத முயர்மேன்மை கனமியாவு மினிதீகுமால்
துதியாவு முருவாகி யுயிராகி யணியாகி சுயமாகி நயமாகியார்
மதியாதி பொருளாகி மதினுவில் வருமாதி மகுமூது நபிபாதமே. (க0)

## வேறு.

கங்கைகொண்டு டுத்தலோக கஞ்சமென்ம லர்க்குநேர்
சங்கைகொண்ட மக்கமீது தண்கொண்முத்த மாவரூஉங்
கொங்கைகொண்ட துந்தளர்ந்த கூனியம்மை தன்னையோர்
மங்கைகொண்ட தன்மைசெய்த வள்ளலாரை யுள்ளுவாம். (கக)

## வேறு.

சீரறிவு பெறுமாந்தர் பாவுபுகழ் நனியோங்கு
தேவநபி யொளிவார்ந்ததாற்
பேரறிவு கொளவேந்த லானவர்க டொழவாய்ந்து
பேறணிகொண் முதுசான்றவர்
ஓரறிவு முதல்சூழ்ந்த சீவனிலை புரிவேந்த
னேதுமருள் நெறிசேர்ந்துவா
மீரறுப தொருநான்கி னுயிரவர் கழலாய்ந்த
வேகவுள மிசையேந்துவாம். (கஉ)

## வேறு

தனுதுற்ற மெய்ச்சோதி யெனுசத்தன் மிக்கான
சபாஅத்தருட் பாதையார்
வினுவிற்கு மொப்பான வளாகத்த னிற்பேதை
விவாகத்தளித் தோர்துயில்

கனவிற்ற வப்பான்மை விடார்துட்ட சொற்காய
கலேயிட்டடைத் தார்தம்வா
பினவுத்த மத்தோழர் அபூபக்கர் சித்தீகை
யெமாகத்தினுட் பேணுவாம். (கங)

வேறு.

சமரிடை யெதிர்த்தோர்க ளகிலெ யறச்சூர தகைபுரியும்விற் கோலினல்
கமரிய சினக்கோல வரிமறியு மொத்தார்வ கனகியதிறற் கோலினல்
தமருயிர்கண்மெய்ப்பேறுபெறநெற்றியினைப்பூவின்றடவியவரத்தாயின
ருமறிபுனு கத்தாபி னுயர்சரண மெப்போது முளமுறநினைப் பாமரோ.

வேறு.

புதுமானவர்க ளெந்நாளும் புகழ்மாநபிகள் மன்னீனும்
மதுமானினிகள் கைம்மேவு மருகாதிபர்மெய் நம்மாதி
விதிமானனியின் சொன்னேர்மை வினைபோலியல்செய் நன்னுதர்
உதுமானிபுனு அப்பானி னுயர்தாள்புகழு மென்னுவே. (கரு)

வேறு.

ஒலிகடலின் வாய்ச்சேறு நெடுபுடவி பாற்றாளு
முயர்ககன மேற்போதவே
கலியெனவு ளேய்ப்போடு பலவுயிர்க ளுற்கோடி
கதறவரை ளுட்பாடவும்
மலிபகைஞர் கோப்போடு முழலவிடு மார்ப்போடு
மறிநடன மாத்தீரனர்
அலியிபுன பீத்தாலி பெழில்குலவு பூப்பாத
மனுதினமு மேற்றேதுவாம். (கசு)

வேறு.

முதிர்மதி வரவுரை தருநவ முடையந முகமது நபிநயினர்
கதிர்தவழ் மடிமிசை குலவிய வருமையர் கனநகர் துகில்புனேவோ
ரெதிரடர் பகைஞர்க ளுயிர்கிலெ பெயர்தர வெறிமணி யயிலுடையா
ரதிர்புவி யிடையுளர் துதிதரு மசனுசை னடியிணை முடியணிவாம். ()

வேறு.

அருவகினைவுடனுதிகிலெதொழுகைநயினர்மு னனுகவொகியுடனேரவே
மருவிமன மதியோடு யழையகிலெ யினைமாறி வரிசைபெறு மதிமேல்வர்

இருமையினுமெவராலுமுரையிடுதலரிதானவியலுடையதவமீறிய[வாம்.
வொருபதின்மரணிபாத மனுதினமுமறவாதெம்முளநிறைய புகழோது

வேறு.

கண்ணரு மணியின் வாய்ந்த கபீபிற சூல்தஞ் சுற்றந்
தண்ணளி யலர்ந்த தோழர் தாபிகுத் தாபி கீன்கள்
விண்ணழி யாத கீர்த்தி வியன்பெறு சமய நான்கு
மண்ணழி யாது வைத்தோர் பதங்களு மனத்துட் கொள்வாம். (கசு)

நாடிய நாட்டத் துற்ற நயனெலாம் வியன்பெற் றோங்கக்
கூடிய தருண மென்னு குறைதவிர் கருணை வள்ள
லாடியி னுலக மெல்லா மகந்தரி சனவி னேத
நீடிய கவுதல் லகுலம் பதமலர் நினைவிற் கொண்டாம். (உ0)

நாவினிற் கிசைந்த தேம்பா நவிற்றுதற் கிசைந்து நின்ற
கோவிய லநந்தம் பெற்றி கொற்றவர் நாளு நாளும்
பூவினி லிசைந்து காவல் புரிந்துநன் கியற்று நாகை
மேவிய சாக மீதின் மென்பதந் தலைமேற் கொள்வாம். (உக)

வேதமே முழங்குங் காயன் மேனகர் தன்னில் வாழுஞ்
சீதமே குணங்கொண் டோங்குஞ் செய்கப்துல் காதிர் தோன்ற
னீதமே வநந்த ஞானி யகுமதி லெப்பை யாலிம்
போதமே கொண்டு தேர்ந்த வுரைவழி புகன்றிட் டேனால். (உஉ)

இயறருங் கார ணீக மெடுத்துரை யளித்தார் மெய்ம்மை
பயிறருங் குலாசத் தல்ம பாகிறு வெனுங்கித் தாபு
மயறரு நூலுந் தேர்ந்திட் டாதலி னெம்ம னோர்க்கு
முயறரா தேனுங் கொண்ட முறைமையிற் சிலசொல் வேனால். (உ௩)

மாரியிற் செழித்த வேலி மருதஞ்சூழ் நாகை வாழ்வோன்
ஞரியல் பொற்றோள் குப்பத தம்பிதன் வரத்தின் றோன்றல்
வாரிமா வரிசை செல்வ முகம்மது மஸ்தா னென்போன்
சீரியல் கவிதை கேட்பான் றிருக்கருத் தியற்றி னனால். (உச)

பற்பல வுயிரி னுள்ளம் படர்ந்தவன் கிருபை கொண்டு
நற்பல முகியித் தீனந் நாயகர் சரிதை கேட்போர்
சொற்பயில் வரிசை வேண்டிச் சொன்னமே பொழிந்து நின்றான்
மற்பயில் செவ்வி திண்டோண் முகம்மது மஸ்தா னென்போன். ()

இயற்றிய கார ணத்தி னெழிலுறுங் கருத்துப் பற்றி
முயற்றவத் தரு்குலாவு முகியித்தீ னென்னுங் கொண்டல்

பயிற்றுமெய்ப் பாதங் கொண்டோர் பதவிமேல் வரங்கொள் வாரால்
குயிற்றுநற் புராண நாமங் குத்புநா யகமென் றாமே. (௨௬)

பாரடை மணவி லக்கம் படைத்துவர் முன்னொன் றென்னுன்
போரடை யரிமுன் சீதப் புனலரி யியைந்த தேபோற்
சீரடை பொருளின் பாடற் செந்தமிழ்ப் புலவர் முன்னர்
நேரடை பனுவல் செய்யு நீர்மையே யோர்மை யோரே. (௨௭)

திசையிடஞ் செறிந்த கேடஞ் சேரிடங் குள்வி சேர்த்து
நசையிடந் தன்னி னுக்கு நவமென வெனது புன்சொ
லிசையிடங் கொண்ட மேலோ ரிருஞ்செவி யிடத்திற் புக்கின்
மிசையிடஞ் சேரு மென்னு நகைவெரீஇ யகன்ற தன்றே. (௨௮)

சீரணி கொண்ட காய றிருநகர் மணிப ரிட்சைப்
பேரணி கொண்ட மானுப் பிள்ளையி லப்பை டாலி
மேரணி கொளுங்க பீபு முகம்மது லெப்பை பால
னாரணி கொண்ட வல்லோ னுதவியிற் பனுவல் செய்தான். (௨௯)

மூவகை முறைபு மூவொன் பானியன் முறையுங் கொண்ட
பாவகை முற்றுந் தொல்காப் பியமுதல் பலநூ லொன்று
நாவகை சேர்ந்தா னல்ல னற்பயன் கருதி யின்ன
தேவகைப் பனுவல் செய்தான் செய்கப்துல் காதி றென்போன். (௩௦)

தனக்குறு நினைவி னூடே தயங்கிய வொளி வுண்டாகி
மனக்கணு மறிவிற் றுன்னு மதிக்கணும் பலசோ லத்த
வினக்கனின் வினோதத் தற்ற வெழிற்கணு மற்று முண்டாங்
கனக்கனின் கௌதுல் லகுலம் கடைக்கணி நாஷி னன்றே. (௩௧)

தேனனி மலர்த்தார் பொற்றோட் டிருநபி மதீனம் வேகும்
பானனி கிசுறத் தாய பன்னிரு நூற்றை யைந்தின்
மேனனி றமலான் றிங்கள் விழைமுதல் வெள்ளி நாளிற்
கோனனி புகழின் வல்லோன் கருணையிற் குறித்த தன்றே. (௩௨)

செழுநயக் கார ணத்தின் செய்கப்துல் காதி றென்னுந்
தொழுநய மேலோர் நன்மைச் சொன்னயப் பனுவல் செய்வான்
முழுநயக் கருத்தி யற்று முகம்மது மஸ்தா னென்பான்
கொழுநயஞ் செல்வ மேன்மைக் குடிநயம் வாழி வாழி. (௩௩)

கடவுள்வாழ்த்துப்படலமுற்றுப்பெற்றது.

ஆ படலம்-௧-இ-திருவிருத்தம்-௩௩.

# நாட்டுப்படலம்.

**கலிநிலைத்துறை.**

காரணிந்துய ருலகெலாங் காட்டிய நயினர்
பேரணிந்துயர் பெயரானுர் பெருமையி னுதித்த
சீரணிந்துயர் வரிசையிற் சிறந்தஜெய் லானி
யூரணிந்துயர் நாட்டணி சிலவெடுத் துரைப்பாம். (க)

தொடர்ந்த சிற்றெறும் புரைவழி புன்னகை தோற்றிக்
கடந்த நாயக ரியற்றிய பள்ளியின் ககனத்
தடங்கு லாவிய வெண்புய றண்கடன் மேய்ந்திட்
டிடங்கொள் வாரொடு மிகலிய புள்ளென வெழுந்த. (உ)

ஆன்ற வார்புயல் பயன்படு குணமிக வணிந்து
தோன்ற லாங்கட றழுவிநற் கருவயின் றுளங்க
வீன்ற தாய்மனை யெய்தலி னிவர்மலை யிடத்திற்
சான்ற சூலொடு போந்தது வான்றரு நெறியே. (௩)

துயலு மாலையி னகையென மின்னியுட் டியோரற்
கயலு றழ்ந்தகண் ணீரெனக் கதறிய குரலென்
றயலு லாஞ்சிறு திவலையோட் டிக்கடி யிடித்துப்
புயலு மின்னனை யாரென வீன்றது புனலை. (௪)

விரிந்த பாருல குயிரினுக் குயிரென வினவிப்
பரிந்து நாடொறும் வளர்த்தரு டாயெனப் படர்சூழ்ந்
தெரிந்த வன்கலி நீக்குமென் மருந்தென வெழிலி
சொரிந்த மாமழை தவழ்ந்தன மலையிடந் தோறும். (௫)

படித்த லத்தொடு வானகத் திடைவெளி பம்மித்
தடித்து வெண்கதிர் செங்கதிர் தகர்த்தெடுத் தென்ன
வெடித்த வாலியுங் கோபமும் வெள்ளிவீழ் வனபோ
லிடித்த மாமழைத் தாரையோ டிழிந்தன வன்றே. (௬)

வாரி யாடையி னிலமகள் குளிர்தர வரியா
நாரி யாடிய வில்லினை நகைசெயா வம்பான்
மாரி யாடிய போரினன் மாமலை யரசன்
சோரி யாடினன் பொருளெலாஞ் சூறையா டியதால். (௭)

பொழிந்த நீரொடு பொருளொடு பொருப்பிடை யோடி
வழிந்த நீரொடு துவக்குண்டு புடைபுடை மடங்கிக்
குழிந்த நீரொடு மிதப்புண்டு குளிரொடு முரணற்
றழிந்த நீரொடு விலங்கினங் கலங்கின வவணே. (அ)

மின்ன னேக்கலின் மழுங்கிய விழிகளு மிடியின்
மன்ன னேக்கலி னஞ்சிய நெஞ்சமும் வாடை
துன்ன னேக்கலி னடுங்கிய வுடலமுந் தொடர்ந்த
வின்ன னேக்கலின் வல்விலங் கல்விலங் கிலவால். (கூ)

இருட்டு லாம்புயல் சொரிபுனல் சுழித்தெடுத் தீர்த்த
வுருட்டு லாங்களி னெறிபட முறிபட வோடிப்
பொருட்டு லாவறி விழந்தவர் பல்வினைப் போக்கிற்
குருட்டு லாவுதல் போன்றன சிலவுயிர்க் குலங்கள். (க0)

கான ளாவிய நறைமல ரொடுகனி யோடு
வான ளாவிய கோடெலாங் கூடெலா மலைய
வூன ளாவிய வின்னலிற் பறவைக ளுழலத்
தான ளாவிய தருவெலாஞ் சலமளா வியதால். (கக)

நாக மோடிய புடையெலா நகுமணி வரன்றிப்
பாக மோடிய திரவியம் பலவழி வவ்வி
மோக மோடிய மன்னென வொருமையே முன்னி
யேக மோடிய திடமெலா மெழுபுன லிரைத்தே. (கஉ)

தன்ன கத்துள பொருளுந்தந் தரித்துள பொருளு
மென்ன கத்தின வென்றபல் லுயிர்களு மிழியப்
பொன்ன கத்தினிற் புதைத்தவர் பலன்பெறுர் போல
மன்ன கத்தொடு சிதைத்துக்கொண் டொழுகின வனமே. (கங)

மரங்கள் வேரற வீழ்த்துமம் மரத்தொடு விலங்கி
னுரங்க டேய்தர வொதுங்கியு மொண்சிறைப் பறவை
யிரங்கி மாய்தரப் படுத்தியு மணிகிரை யெறிந்தும்
வீரங்கொ ணீத்தவ ராமென வழிந்தது நீத்தம். (கச)

படர்ந்த பொன்கிரி வெறுங்கிரி யாகவெப் பாங்கு
மடர்ந்து வன்மனக் குறவரின் குடிலெலா மாய்ந்து
தொடர்ந்து பூங்கனி செந்தினை யைவனஞ் சுவிகை
கிடந்தமூலமற் றுள்ளன கலாய்க் கிளர்ந் ததுவே. (கரு)

எடுத்த முத்தின மணியினம் பொன்னின மெவையும்
படுத்த லாற்புதி யதுசெல்வம் படைத்தவர் போலத்
தொடுத்த வெக்களிப் பகத்தொடு சுழியொடு சுலவி
யடுத்து மாக்களைக் குறிஞ்சியோ டாட்டிய தன்றே. (கசு

வழிகொ ளாதபுன் மனத்தினர் பலனென்று மருவா
தொழுகு வாரெனத் திசைதிசை யோடியா நீத்த
மிழிகொ ளாப்பறை தொண்டக முதலியல் வெறிந்து
கழிகொ ளாதன காறெறுங் காறெறுங் கழித்தே. (கஎ)

சந்த னத்தொடு குங்குமஞ் சாதியோ டேலக்
கொந்த னைத்தையு மறப்புறத் தாக்கிய கொள்கை
தந்த னைத்தினல் வாங்கிய பொருளெலாந் தமக்கு
வந்த நத்தினற் பிறர்க்கிடும் பரத்தையர் மானும். (கஅ)

விரிந்த மென்சிறைப் பறவைகள் விலங்கின மிவற்றிற்
செரிந்த வெம்பகை யினங்களு முரணிலா தெய்வப்
புரிந்த நீதமன் னவரென வொழுகிய புதுநீர்
கரிந்த செஞ்சுர வெஞ்சுர நிலங்கலந் ததுவே. (கசு)

பறிந்த குஞ்சியின் வேட்டுவர் பஃறிசைச் சிதற
வெறிந்த வூனுகர் குழவியோ டெயிற்றிய ரிரங்கச்
செறிந்த பஞ்சரஞ் சூறைகொள் பொருள்பல திரட்டி
முறிந்த குச்சரே ளாடெடுத்தது முரணியவெள்ளம். (உ0)

தேடு மூன்பருந் தெருவைசெங் நாய்திகைத் துழல
வோடு மானின மொருபுறத் தினுமோ துங் காது
வீடு பாந்தளு மணிகளும் வெம்மையும் வீழச்
சாடு மாவலி நீத்தமத் தலமெலாந் தகைத்தே. (உக)

வெய்ய பாலையைப் புரட்டிய வேகமிக் கெழுந்து
கைய ளாவிய நிலனெலாக் காலளந் தேகிச்
செய்ய பூஞ்சினை மல்கிய தருவெலாஞ் சிதைத்து
மொய்கொள் வேலியின் முல்லையின் முனைந்தது வெள்ளம். (உஉ)

நிரைகொ ளானயங் கன்றொடு மறிகளு நிலைகெட்
டிரைகொ ளாவணி பட்டியு மெறிகொளா நெய்பாற்
கரைகொ ளாதயி ரரைகொளா கலத்தொடு கலங்கள்
விரைகொ ளாநெடுஞ் சேரியைச் சலக்கிவிட் டதுவே. (உங)

ஆய ருங்குலத் தாய்ச்சிய ருங்கலைந் தழுது
தாய ரேமரு தந்தைய ரேதனை யவரே
போயி ரோவென மறுகுற நனிபொரு ளெல்லாஞ்
சேய ராமெனக் கொள்ளைகொண் டகுசெழும் புனலே. (௨௪)

கோலு முத்தினை யுணுக்களு மூலமுங் கோற்றேன்
பாலும் வெண்ணெயு நறுநெய்யும் பலசுவை படர்ந்து
நாலும் பூங்கனி காய்களு நனிகடல் வேந்திற்
காலு மாநதி நல்விருந் தளிப்பது போலும். (௨௫)

ஒழித்து முற்றிட நினையெறிந் துரறிச்சூழ் கழையைச்
சுழித்து மாநிலங் கரைதரத் தொனித்துவன் றருவைத்
தெழித்து வல்லியைச் சிதறித்தின் காலினுற் றடையை
யழித்து மீறிய களிற்றினு மோங்குமிவ் வாறே. (௨௬)

தத்த மக்குள வுரிமையும் விருப்பமுந் தகையு
முத்தி செய்திலா ரவாவினு லொன்றினு நாணு
தெத்த லத்தினு மெய்பொரு ளினுமியை மனமே
யொத்த டங்கிடா தனைத்துங்கொண் டோடுமா னீத்தம். (௨௭)

திசைக ணுக்கலுஞ் செம்மணி யிலங்கலுஞ் சீறி
யிசையு மியானையுங் கடிதலு மிரைதலு முயிர்ப்பு
மசையு மேனியு மாவிட நரைத்தலு மாக
விசையு மாசுண மாசுண வோடுமால் வெள்ளம். (௨௮)

நீதி வாய்ந்தவர் செல்வத்தி னிலைதள ராது
கோதி வாய்ந்தன மிகமிக நிறைதரக் குணங்கொண்
டோதி வாய்ந்தவர் கருத்தெனக் கால்பல வோடி
வீதி வாய்ந்தநன் மருதத்திற் புகுந்தது விரைந்தே. (௨௯)

காய்ந்த வெஞ்சுரஞ் செஞ்சுரம் புனறரக் கருணை
தோய்ந்த நாயகர் மலரடிச் சிறப்பினுற் றேற்றி
வாய்ந்த வீந்ததி னிலையென வகுத்தெழு கால்க
ளாய்ந்து பாய்ந்தது கதியினே டமுதநன் னதியே. (௩௰)

மலைத்து வாளைக ளரம்பையங் கனியுக வனச
மலைத்துப் போதரப் பொலன்சிறை யன்னங்க ளகத்துட்
கலைத்து மீனின மெறிதரச் சேதகங் கலங்க
வலைத்துப் பாய்ந்தன வேரிமற் றுள்ளன நிறைய. (௩௧)

கரைதகர்த்துடைத் தேரியைக் குளங்களைக் காலால்
வரைதகர்த்தெடுத் தாம்பையைக் கமுகினை மாவி
னிரைதகர்த்திடித் தாலையை வேலியை நிவஞர்
தரைதகர்த்தடுஞ் சேரியைத் தாங்கின சலிலம். (௩௨)

வேறு.

பணைநிறை பெரும்புனற் பரவை நோக்குங்கண்
ணிணைநிறை மகிழ்ச்சியி னிரைத்திட் டெங்கினுந்
திணைநிறை மள்ளர்கள் செறிந்து சாற்றிய
கிணைநிறை களிதரக் கிளர்ந்து லாயவே. (௩௩)

வலம்புரி முத்தமு மகர முத்தமு
நிலம்புரி யம்புய நிதியு மற்றவு
மலம்புரி திரையெறிந் தார்க்கும் வாயெலாங்
குலம்புரி வரம்பிடக் குழீஇயி னர்களால். (௩௪)

விள்ளரு மதத்தினல் வேக மீக்கொளுந்
தள்ளருங் களிறினைத் தடுக்கு மாறெதிர்
கொள்ளருங் கரணெறிந் துடைக்குங் கோடெலா
மள்ளரும் புனலொடு மறுகு வாரரோ. (௩௫)

குரம்பையி னுயிரெனக் கூடுஞ் செல்வத்தி
னிரம்பிய பொருளென நிலவ வெங்கினும்
வரம்பணை யிட்டனர் மடங்கி லாரென
வுரம்பட விடமெலா முரப்பி நின்றதே. (௩௬)

பேர்தரு மலரனம் பிரியு மோதையுஞ்
சார்தரு புள்ளினந் தயங்கு மோதையு
மூர்தரு விலங்கினத் தொலியு மற்றவு
நீர்தரு மொலியொடு நிமிர்ந்து லாயவால். (௩௭)

பாலடர் குமுதமும் பதும நீலமுங்
காலடர் வளைகளுங் கலந்து குத்ததேன்
சூலடர் முத்தமுந் தொடர்ந்து மூஉம்படைச்
சாலடர்ந் தேறுமால் மருதச் சார்பெலாம். (௩௮)

நீரொடு கமடமுன் ஞெண்டு மற்றவும்
பாரொடு செரிபடப் பதியு மேழியூ

ரேரொடு மள்ளர்வா யெழுந்த வோசைபெய்
காரொடு மிகலுமால் கழனி யெங்குமே. (௩௯)

மால்வழி கருங்கடா குதட்டும் வாய்கடைப்
பால்வழி பன்மலர் நறவும் பாய்ந்தழூஉஞ்
சால்வழி தேறலுந் தகைய முத்தொடு
கால்வழி தரவெறி கடியு மள்ளர்க்கே. (௪0)

கனிகெழு மலர்களுங் கடிகொள் வேருந்தே
னனிகெழு முரமெலா நறைகு லாவிய
மணிகெழு வயலெலா மள்ளர் கோட்டத்திற்
றிணிகெழு கரன்படச் சேறு செய்வரால். (௪௧)

வரம்படைத் தனபுனன் மன்ன மையெனத்
தரப்படைத் தனபுய றவழ்ந்த தாரகை
திரப்படைத் தனவயல் செப்ப மாகவன்
கரம்படைத் தனபரம் படித்த காலெலாம். (௪௨)

தண்ணிறை தடத்துலாம் புட்க டாங்கிய
பண்ணிறை தரப்பரம் படிக்கு மோசையும்
விண்ணிறை தரவிரால் வெருவிப் பாய்தலான்
மண்ணிறை தரக்கனி யுருக்கும் வாழைகள். (௪௩)

வாரியிற் படர்புனல் வாவி மாமலர்
வேரியிற் படர்பயன் விளையுஞ் செய்யெலாஞ்
சேரியிற் படர்முறை செய்து மும்மத
மூரியிற் படர்குவார் முளைகள் வித்துவார். (௪௪)

கதிரினை நிலத்தினைக் கருதி வாழ்த்திமே
லெதிரிடு புபலினை யெண்ணி யுன்னிநின்
றதிர்தரு வக்கையா லள்ளி வீசும்வித்
துதிர்தரு மோசையால் வெறுமை யோடுமால். (௪௫)

நன்முறை யுயர்தரு குத்பு நாயகர்
சொன்முறை போற்பலன் றொகுத்த மள்ளர்கள்
நென்முளை யளவறு நிதிய மன்னிய
பொன்முளை யாமெனப் பொலியத் தூவுவார். (௪௬)

குதித்தெழு மந்தியிற் குலுங்கு மாம்பழ
மிதித்தெழ வுடைபடு வருக்கை மென்சுளை
கதித்தெழுந் தோறிழி கதலி பூங்கனி
யுதித்தெழு சாறணை யுடைத்துப் பாயுமால். (௪௭)

அரும்பொடு நறுமலர் கனிக ளன்றியுங்
கரும்பொடித் துண்ணும்வாய்க் கடையின் மன்னிய
சுரும்பொடு தூங்கிய மேதி யூறுபால்
பொரும்பொடித் துவட்டுமெப் புறமு மல்கியே. (௪௮)

பாகுலாம் பாணியாற் படருங் கோலிருல்
காகுலா நறைகளா லெழுந்து பைங்கதிர்
வாகுலாஞ் செல்வத்தின் வண்மை யோங்கலி
ளுகுலாம் வயலெலாஞ் செறிந்த நாறரோ. (௪௯)

எழுந்தநன் ஞற்றினை யிணைப்ப தோரிடம்
விழுந்தபைஞ் சுடரினல் வெண்முத் தாவன
வழுந்திய நிழன்மர கதங்க ளாமெனச்
செழுந்தடக் கரங்கொளாத் திகைப்பர் கோதைமார். (௫௦)

உள்ளக மகிழ்ச்சியி னெழுந்து கைதொடர்
வள்ளலி னிடுவிர லணியி றான்றியூன்
றெள்ளலில் வயலெலாங் கடைசி பேழைமார்
நள்ளிய நாற்றின நடுவ ராயினர். (௫௧)

தொடியிடை யரவமுந் தொனிக்கு மாரமுங்
கடியிடை தரநமேங் கடைசி மார்தமைத்
துடியிடை நடங்கமெய் துளங்க மென்னடை
யடியிடை பதியநோக் கன்ன நக்குமால். (௫௨)

முடியவிழ்த் துதறிய நாற்றின் மூசுசே
றடியவிழ்ந் துதட்டினிற் பொறிப்ப வங்கலார்
குடியவி ழாதவர் கூர்ந்து நோக்குவார்
கடியவி ழாம்பலிற் களிகொள் வண்டென. (௫௩)

கூந்தலுஞ் சரிதரக் குலுங்கத் தோள்முலை
யேந்தணி நெகிழ்வுற விகலி நாட்டுவார்
காந்தளின் கரமலர்க் கஞ்சமாமெனப்
போந்தல மரல்கொளப் புலம்பும் வண்டினம். (௫௪)

கோட்டிய விழிக்கடை குலவச் சேலெனச்
சூட்டிய வினைபுரி தோகை மாரிடை
மாட்டிய வராலென மள்ள ராற்றுக்கா
லாட்டிய ரெனவறி யாது துள்ளுவார். (௫௫)

கரும்புறழ் மொழிச்சியர் கருத்து வேறிடா
விரும்பிய தொழிலிடை விரையுந் தோறெலா
மரும்பென முலைகள்கண் காவி யாமெனச்
சுரும்பொடு மள்ளருஞ் சுழல்கு வாரரோ. (௫௬)

தொய்தர வுடல்முகம் வெயர்வு தாங்கமிக்
குய்தரத் தம்மள வொல்லை யுண்மகிழ்ந்
தைதரு வலம்புரி யென்ன வார்ப்பவாய்
கைதரு குரவையாற் களிக்குங் கோதைமார். (௫௭)

புள்ளியிற் பதிதரப் பொலிந்த நாற்றினை
யுள்ளியும் புயலினை யுவந்து வாழ்த்திடுந்
துள்ளிய கடைசியர் பழனந் தோறும்வாய்க்
கொள்ளிய குரவையிற் குயில்கள் மாயுமால். (௫௮)

கடிதரு நறையுகள் கமலத் தின்னிசை
வெடிதரு மளியினம் வெருவ முள்ளரைக்
கடிதரு சேலினம் வெறியிற் காய்ந்துவால்
வெடிதரப் பாய்தரு மடையின் மேலெலாம். (௫௯)

நன்மணி வளையுலா நளினி வாளைகள்
வன்மணி யோடுபாய் கமுகின் வாயெலாம்
பொன்மணி செம்மணி பசிய பூமணி
பன்மணி யாமெனப் பழங்கள் சிந்துமால். (௬௰)

கொன்றைபொன் சொரிமலர் குழீஇய தும்பிகள்
மன்றலங் குமுதத்தேன் வருவை கோடலால்
நின்றுநோக் குவதெனப் பூவை நீழலி
னென்றிய கண்களா லொகர மானுமால். (௬௧)

வஞ்சிநுண் ணிடைகடை வனிதை மார்மலர்க்
கஞ்சமுங் குமுதமுங் கடிகொ ளுற்பல
மெஞ்சிய முகம்விழி யிதழி னேடிக
ரஞ்சலாற் களையெனத் தொடர்ந்து கட்டுவார். (௬௨)

உறுதியில் லவர்மன வோர்பின் மள்ளர்க
டெறுகொலேக் கண்ணெடு செய்யி ஞேக்குவார்
மறுகிய கடைசியர் வனச மாமுலே
குறுமுகை யாமெனக் களேகொ ளாமையால். (௬௩)

கொட்டியுங் குவளேயுங் குமுத நெய்தலு
மொட்டியுந் தங்குண வுருப்பங் காட்டலாற்
கிட்டியும் பகைபுரி கெடும்பர் பேறெனக்
கட்டியும் வேரறக் களேந்து நீக்குவார். (௬௪)

பல்வினே நீக்கிய பரிசு போலிடை
மல்கிய களேகடி மடந்தை மார்களால்
நல்வினே பெறுபவர் போல நாட்குநா
ளல்கலி லாதெழப் பயிர்க ளாயவால். (௬௫)

தத்தமக் குரியன வினேயின் சால்பினு
லெத்திசை தொறுமெழுங் குரவை வீங்கொலி
மொய்த்தபோ தூடறீர் மருந்து மூலியென்
றுத்திசெய் துழவர்பாங் குலாவி நோக்குவார். (௬௬)

வருக்கையம் பெருப்பழம் வெடித்த வாயெலாம்
பெருக்கிய நறைகள்பாய் கிடங்கிற் பீடுலா
மருப்புடை மேதிகள் படிந்து மாழைபோன்
றுருக்கிளர்ந் துரிமைவிட் டுலவுங் காவெலாம். (௬௭)

மேனெறிக் குயிர்தரு நாதர் வித்தையிற்
ருனிவர் மனுவெனத் தகைய செய்கையாற்
பானிறம் படைத்துமேற்பசிந்த பொன்மையின்
மானிறம் படைத்தன வயலின் சாலிகள். (௬௮)

நிறைதரு சூலொடு நீர்மை யில்லவ
ருறைதரு நிலேயென வுறீஇமெய்ந் நூலது
முறைதரு முதியரின் முற்றி நெற்குலே
நறைதரு சாலிக ணனிதிற் றூழ்ந்தவே. (௬௯)

புள்ளியஞ் சிறைபல புலம்பப் புள்ளினந்
துள்ளிய முத்துகள் சுடர வெங்கினுங்
கொள்ளிய பொருளெலாங் கொடுக்கு மேன்மையின்
வள்ளிய ராமென வணங்கி நின்றவால். (௭௰)

வெடித்தவெங் களிறென வேண்டுங் கூழ்பல
குடித்தரைத் துகிலெடுத் திறுக்கிக் கொத்தலர்
முடித்தகக் களிப்பொடு முனைசெய் கூனிரும்
பெடுத்தனர் போர்செய்வான் மள்ள ரீண்டினர். (எக)

பெருங்குண நயந்தரு பெண்மை போகம்போ
லொருங்கரு ளடைவிளை வோங்குங் கூழெலாம்
வருந்துர லரிந்தனர் வயலி னெங்கினு
நெருங்குபன் மலரளி நிவந்து கூவவே. (எஉ)

தெரிந்தனன் வகைப்படு நெல்லின் செவ்விய
வரிந்தன வரிகளைப் புறத்தி னுக்கியும்
வரிந்தபல் சும்மையிற் செல்லு மாதராற்
சரிந்தன வரம்பெலாங் கதலித் தாறுகள். (எங)

இடைநுடங் கிடமுலை குலுங்க வேந்துபூந்
தொடைகுழ லவிழ்தரச் சுமைசு மந்துபோங்
கடைசியர் கதிர்மணிக் களங்க டோறினும்
புடைதரு பன்மலை போலப் போர்செய்வார். (எச)

மருக்கொழுந் திலைதுழா மணத்த வேர்பல
பெருக்கிய பண்ணைகள் பிலிற்றும் வாடையுந்
திருக்கிளர் சேரியின் செல்வ வாடையும்
வருக்கமார் போர்களின் வாடை கொள்ளுமால். (எரு)

நிரைநிரைத் தெருதின நிலத்திற் போரெனும்
வரைபிரித் தூர்தர வகுத்து நாவலோ
வுரைகொளத் திரித்துவை நீத்து ளார்ந்தன
கரைகொளாப் பொலிவொடு களித்துச் சேர்ப்பரால். (எசு)

உரியன தெய்வத்திற் குதவி செய்தொழில்
புரிநவ கூற்றருக் களித்துப் பூபதி
தெரிதரும் பத்தினொன் றருளிச் சீர்பெறு
வரிவினைத் திருவளர் மனையி னுய்ப்பரால். (எஎ)

முழங்கிய மொழிவழி பண்ட மாறனு
மொழுங்கியல் சகடினத் தொலிபு மெல்லவ
றழங்கிய வுலக்கையுந் தாழச் சேரிவாய்
வழங்கிய கொடையொடு குரவை மல்குமால். (எஅ)

துவரைபுல் வரகொடு தோரை சோளக
மவரைகூ வரகெள்ளு சாமை யல்லவு
நிவர்பல கொதிபுன னிலத்தி னுபவை
யிவர்தரு பண்டிபோ மிடங்க ளில்லையால். (எகூ)

நறைவழி யத்தியு நரந்த மாதளை
நிறைமது திரிகையு நிகரி லீந்துமற்
றுறைபடு கடமையிற் குரிய தீம்பழ
முறைமுறை வழங்கலின் முதிர்ந்த சேரியால். (அ0)

ஆதுல ரயலின ரறிஞர் சுற்றத்தார்
வேதியர் திருவிழா விருந்து முன்கொளப்
போதிய பயனொடு மருத்திப் போற்றிநின்
ரூதரித் தருந்துவார் பிதிரு மாரவே. (அக)

பாடுவர் பஃறிணைப் பண்க ளோர்ந்துளோர்ந்
தாடுவர்க் காடவர் பொய்மை யூட்டலாற்
கூடுவர் மருதத்திற் கொள்கை நீர்குடைந்
தாடுவர் கொடியென வொசியு மங்கலார். (அஉ)

வேறு.

பொழினிழல் செழிப்பும் வாசம் பொழிமலர் நிறைவு நீர்சூழ்ந்
தெழுமுயிர் களிப்புமூதா ரிருநிதி திருவு மெல்லா
மழகிய குப்பத் தம்பி யருள்முகம் மதுபஸ் தான்ற
னெழின்மனை நாளும் பொங்கி யிருப்பன போன்ற தன்றே. (அங)

கானலர் தொடையல் வேய்ந்த கனங்குழ லந்த லார்செந்
தேனலர் வாவி யாடுந் தொறுந்தெண்ணீர் ததும்ப லாலே
வானல ரமுதத் திங்கள் வளமுக நோக்கிக் கஞ்ச
மானல ரொடுங்கி நாணி மறைதலின் மறுகு மன்றே. (அச)

வனசமார் தடத்து மூழ்கு மானனர் மலர்ந்த செவ்வி
நனிநிலா முகத்தை யன்ன நறுவிய மலரென் றேந்து
மினமுலை முகைக ளென்னு வின்னிசை யளிக டுன்னி
மனநிலை மயங்கா நின்றுன் மால்கொளா மனித ரியாரே. (அரு)

மின்னனைத்த மருங்குல் கூந்தன் மேகத்தை யொத்த மேனி
பொன்னனைத்த மடவா ரீரம் புலர்த்துவார் காவு தோறும்

பின்னொத்த சாய னோக்கிப் பேதுறு மயில்க ளென்னின்
முன்னொத்த பொருளின் சாய லியாதென மொழிகு வேனே. (௮௬)

வெள்ளைபுங் கமுகு நாணுங் கந்தரம் விளங்க மின்னார்
வள்ளையும் புகழும் பாடுந் தொறுந்தொறும் வனத்துலாவிக்
கிள்ளையும் பூவை தானுங் கிளத்துவ கேட்டுக் காரிப்
பிள்ளையு மோது நாதர் பெருமையை பெவணு மன்றே. (௮௭)

ஆலைவா யுகுத்த கன்னல் சாறடு புகையு மண்ட
மேலைவாய்ப் புயலுங் கோட்டின் விரிமலர் மணங்க ளாலே
மாலைவாய்ப் பொழுதி னாக பஞ்ஞைக ளின்ப மூறிச்
சோலைவாய் தோறு மாலுங் குபிலினந் தழனி யார்ப்ப. (௮௮)

மாமலர் குதட்டு மேதிக் குடமுலை வழிந்த தீம்பாற்
றேமல ரன்னந் துய்த்துச் சேவலோ டிசைப்ப மின்னார்
காமுறுங் காந்தன் கூடல் கலந்துட றுவன்று வெய்தி
னேமுறுங் குபிலி னோசை யூடலை யிசைக்கு மன்றே. (௮௯)

கோட்டிய தந்த வேலிக் குறத்தியர் மகிழ்வி னேய்த்துப்
பூட்டிய வெல்லை நீங்கிப் பொன்சொரி கொன்றை வேலிக்
காட்டிடை பாலுந் தூங்குங் கனியுமுண் டான்கன் றோடு
நாட்டிடை யமரு நீழ னலங்கொளு மியானைக் கன்றும். (௯௦)

மலைபடு பொருளுங் காட்டின் மருவிய பொருளு மோங்கு
மலைபடு பொருளும் வேந்தி னணிநகர் பொருளு மெல்லா
நிலைபடு நாட்டின் வாய்ந்த நிதியினாற் சிறக்கு மாகில்
தொலைபடா வளமை பூத்த சொன்னமென் றியம்ப லாமால். (௯௧)

நிலவுமிழ் முத்த வண்ட னெடுந்திரை யெறிந்த சங்கம்
புலவுமிழ்ந் தூர்ந்து பண்ணைச் சிறுவியர் புனைந்த சிற்றில்
பலவுகச் சிதைப்பச் சீறிப் பற்றிலா ரென்று சிந்து
நலவுறழ் மணிகள் செல்வ நகைகொள நகைக்கு மன்றே. (௯௨)

செல்லினை வெல்லுங் கூந்த னுளைச்சியர் மருதச் சேரி
நெல்லினை வரகு சாமை நிறைதரு மிறுங்கு கோதி
புல்லினை மாற்று முத்த மிடைக்கிடை யளப்பர் போற்றுஞ்
சொல்லினை யளக்குங் கிள்ளைக் களப்பன தோற்று கில்லார். (௯௩)

திணைபல பொருளு மொன்றிச் செருக்கடைந் திருது தோறும்
பணைபல பயனும் பூப்பப் பதியெனப் பகர்ந்த நாட்டுக்
கிணைபல வில்லைத் தானே தனக்கிணை யாயிற் றம்ம
துணைபல னருளுங் கௌதுல் அகுலக்தோற் றிடுகை யானே. (௯௪)

அருந்தவத் தினர்க்கு மற்றை யவர்கட்கும் வேண வெல்லாம்
பொருந்தவு மோது வார்க்கு மோதலு நோய்புக் கோர்க்கு
மருந்தும்பண் டிதனுந் தம்ப மற்றவர் மருவா நிற்ப
விருந்துமன் னறத்தின் சாலை மிக்கன வெண்ணி னன்றே. (௯௫)

மறைநெறி யன்றி மற்றை நெறியறி யார்மன் னீத
விறைவனை யன்றி வேறோ ரிறையினை யறியார் கற்கு
முறைகுண மன்றிக் காணார் முரண்குண நடையிற் கற்பி
னிறைநிலை யன்றிக் காணார் நிலைபிறி தவர்க ளன்றே. (௯௬)

காலையி னோதல் செய்கை நண்பகல் கதிகொள் கேள்வி
மாலையி னோதல் யாம மணவினை மற்றப் போதிற்
சாலையி னோதை ருழ்த லிரத்தலித் தகுதி யோடு
வேலையி னோதை யில்லா வினோதமே முயலா நிற்பார். (௯௭)

கண்டவர் மேன்மை யெய்துங் காவலர் முகிபித் தீன்மீக்
கொண்டதன் புகழி னுனு மொலிகளின் குழுவி னுனு
மண்டுபே ரின்பம் பூத்து மன்னிய முறைபாற் செல்வத்
தண்டுறை நாட்டி னுள்ளார் தன்மையார் வகுக்க வல்லார். (௯௮)

இன்பமே பெரிய கொண்டா ரியற்கையே நெறியி னின்றார்
துன்பமே யொருவச் சென்றார் தோற்றமே யேற்றங் கண்டா
ரன்பினை யுயிரின் வைத்திவ் வாக்கையி னுக்கம் பூண்ட
மன்பதை நாட்டின் மேன்மை வகுக்கலாந் தகைமைத் தனறே. (௯௯)

வாரியிற் கலித்து மேரின் வளமையிற் பெருத்து வானின்
மாரியிற் செழித்து மேலோர் வளர்புகழ் செல்வம் பெற்றுப்
பேரிய லணிஜெய் லானிப் பெரும்பதி யணிபு நாட்டி
னேரியல் சொர்க்கச் சென்னத் தென்னலர்ந் தகைய வன்றே. (௱)

நாட்டுப்படலமுற்றுப்பெற்றது.

ஆ படலம்-௨-இ-கூடியதிருவிருத்தம்-௱௯௰௯

# நகரப்படலம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வானம் புவிமற் றவையெல்லாம் வகுத்தே பகுத்தற் கருங்கருணைத்
தானந் தனிப்பத் தனித்திருந்த தலைவ னருளா லெவ்வுயிரும்
ஞானம் பிறந்து தனையறிவா னடத்தற் கியற்று முகியித்தீன்
கோனங் குதித்த ஜைலானி நகரின் கொள்கை சிலசொல்வாம். (௧)

பொருப்பா றடைந்து பெரும்பாந்தள் கேண்மை புகன்று திருப்பாதம்
விருப்பா றுதிக்கு நபிநயினர் விழைவி னுதிக்குந் திருத்தாயி
னுருப்பா றுலங்கு முயர்வள்ள லுறுவா னேது பல்முயன்ற
கருப்பா றுடைக்கு நகர்மேன்மை கவல்தற் கெளிய வல்லவால். (௨)

தேயம் பலவு முறுப்பாகச் சிறந்த அறபு முகமாக
வேயும் பதிகள் விழியாக விழைவா யாகப் பகுதாது
தோயு மஜமு நுதலாகத் தோற்றும் புவிமா னழகுபெறற்
காயுந் திலதம் ஜெய்லானி யாக விருந்த நகரன்றே. (௩)

கோணு விளங்குந் தனிக்குணமுங் குடியா விளங்கும் பலகுணமுந்
தாணு விளங்கும் பொருளனையார் தனியே விளங்கும் பெருந்துறையே
யாணு லெவரு மதன்மகிமை யளவா நகர முயரறிவாந்
தேணு விளங்கு நறுமலரின் றிருவா விளங்குங் கற்பகமே. (௪)

உலவும் புயலுங் கடலெனமேய்ந் துண்ணும் பெரிய குடவளையி
னிலவு பொழியு மணிமுத்தா னிவருஞ் செம்பொன் கதிர்மதிலாற்
குலவுங் குவளை தாமரையெப் போது மலருங் குணத்தாலே
நிலவு மிரவும் பகலுமற்ற நீர்மைத் தாய பேரகழி. (௫)

திருந்தா வெருள்கொள் கராமுதகிற் றெரிந்த நாகின் றசைவேட்டுப்
பொருந்தாக் கெண்டை நெடுவாளை பொருக்கென் றெழலும் படுமளிக
ளிருந்தா துகுத்த மலர்நறவம் பொன்போ லிழிய விளைப்பாறி
யருந்தா நிற்கு மெனிற்சிறுமை யறியாப் பெருமை படைத்ததுவே. ()

உலகஞ் சூழ்ந்த பெருங்கீர்த்தி யொருங்கு சூழ்ந்த நகரன்றோ
வலகி லுயிர்க டமைச்சூழ்ந்த வாவி நபியா ருளமுடைய
விலகுங் கருணை சூழ்ந்தவரே யினிதி னுதிக்கு மிடமதனை
நிலவிச் சூழ்ந்து காக்குமதி னிலையை யாதென் றுரைப்பேனே. (௭)

வானம் பிறங்குஞ் செழுந்திங்கள் வயிற்றிற் படலா னடோறுந்
தானம் பெயருந் தேயுமுடல் வடுவாய்த் தயங்கத் தவழ்ந்துநனி
கூனம் பெறுமா னடங்குகொடிக் கோட்டா னின்று சரியுங்கதி
ரூனம் பெறுமா லிடைமுகிலு மிடிபட் டேறு முயர்மதிலால். (அ)

காடு மலையும் பேரகழுங் கனக மதிலு நாற்குணபாச்
சூடு மாற்ற முன்னுகிலோ சுடுமால் காந்த னியல்பினைக்கொண்
டாடு மழியாக் கற்புடைய நகரா மகளி னவயம்போற்
கூடு மலர்கள் பூத்ததெனக் குலவுங் கூட மற்றுளவே. (கூ)

மருநீர் சிறந்த மேனிலையின் வளரும் பித்தி நிலாமணிக
டருநீர் தவழு மதிக்குழவி தயங்குந் தசும்பின் மாமணிகள்
பெருநீர் தாங்குங் கரும்புயலைப் பிறி மின்னி யெங்நாளு
மொருநீ ரன்றி யிருநீரு மூட்டுங் காட்டுங் கதிரோர்க்கே. (௧௦)

பொருத்தும் வளையுத் திரமுதலாப் பூத்த மணமும் பள்ளியறை
திருத்துங் களபச் சித்திரத்திற் சிறந்த மணமும் விதானித்து
வருத்து மலரின் மாலிகையின் மல்கு மணமு மெப்போது
மருத்து முயிருக் குணவாக வணியா னுயர்ந்த மாளிகையே. (௧௧)

தூற்றுப் பளிதம் வெண்முத்தந் துகளாத் தெளித்து வடித்தெடுத்த
நீற்றால் விளங்கும் வேதண்ட நிகரா மாட நறுநிழலே
போற்று வெழுந்த புகழேபோ லுயர்ந்து பொலிதல் வெள்ளொளிவா
லேற்று விளக்கிட் டெப்புவியு மேத்த விருந்த வியப்பாமால். (௧௨)

மணத்தா லோங்கும் பெருஞ்செல்வ மக்கள் பெறலால் சம்பந்தக்
கணத்தா னிறையுந் திருவயிற்றுற் கவின்தோன் றணுகா துறக்காக்குங்
குணத்தால் கொண்டோர்க் கியைந்துநிற்குங் குறியால் வெறுத நிலையா
வணத்தால் வளர்க்கு மணிமனைகள் மாதா வனைய வியல்பினவே. [லும்

தெள்ளி விளங்குஞ் சுதையாலுஞ் செங்குங் குமச்சாந் தொளிவாலு
முள்ளி னமையும் பொருளாலு முயர்ந்த நிதியா லுயர்வாலு
மள்ளி யருளுங் கொடையாலு மளவா வளத்தி னியலாலும்
வெள்ளி மலையோ பொன்மலையோ பலவாய் வேடம் பூண்டதுவே. (௧௪)

மாட மனைமே னிலைமேடை மன்று சதுக்க முயர்சதுக்கங்
கூட மனைத்து மணவாடை குலவு மணிமா மலர்மாலைச்
சேட மல்கிச் செறிகுவையாற் சிறந்த விருந்து பருவுதலாற்
பாட மல்குங் குழுவாலும் பயன்கொள் சுவனம் போன்றதுவே. (௧௫)

திகழு மதியம் பலபூத்த தென்னச் செறிந்து நிலவுண்ணும்
புகழு மலர்ந்த முகமடவார் கூந்தற் கூட்டு மணப்புகையான்
முகிலு மணம்பெற் றுயர்மதிலின் மூச மணம்பெற் றுலவுநெடு
மகழு மணம்பெற் றனவென்று லியாது பெறுதங் கமைந்ததுவே. (கசு)

பல்லா றெழுகிப் படர்ந்தபுகழ் வென்றி முரசும் பயத்திருமை
நல்லா றெழுகுங் கொடைமுரசுஞ் சுபத்தின் விழாவி னனிமுரசுஞ்
சொல்லா றெழுகித் தொழுமுதியோர் துதிக்குந் தோறுந் ததும்பியநீ
ரொல்லா றெழுங்கண் ணுறங்கினுமே யுறங்கா தோங்கு முன்றில்களே.

பந்தி வாய்ந்த மணிமாட முகமாம் பசுந்தே னறுமலர்கள்
கந்தி வாய்ந்த மென்கனிகள் கனிந்து தோன்றும் பூஞ்சோலைச்
சிந்தி வாய்ந்த வுயிருவப்பச் சிறப்பி னுதவுங் கொடைப்பயனர்
சந்தி வாய்ந்த தெருத்தலையின் றன்மை யாதென் றறைகேனே. (கஅ)

மணியா ருடலம் பூக்குநிழன் மதியார் வேத மெல்லிசைக
ளணியார் மனைக ளாங்காங்கே யலரு மணங்கள் பூங்கனிகள்
பிணியாப் பொறிகள் பிணிப்புண்ணப் பெருகா நிற்குந் தெருவீதி
கணியா வளத்தின் மனம்போலக் கடவை கடந்த பேர்க்குளவால். ()

வேத மோதும் வேதிகையின் விளங்க வோது மஞ்சுகங்க
ளோத மோர்ந்து செனுமாந்தர் நன்மை யோர்ந்து நடைபிறழா
நீத போர்ந்து கொளத்தக்க நீரா லெவையுங் காத்தலினு
லேத மோடு மியல்பானோர் வழியென் றெருபே றெடுத்ததுவே. (உ0)

சிறுகண் வேழப் பெருங்குரலுஞ் செம்பொற் றேரிற் புடையொலியு
மெறும்கொள் கவனம் பரிதொனியு மிலங்கு மணியின் விமானங்கள்
குறிகொள் மற்ற வூர்திகளின் குரவை யெப்போ தினுஞ்செல்வ
மறுகு தோறுங் கருங்கடலு மறுக வோங்கிக் கலிக்குமரோ. (உக)

ஓத லியலும் வேதியரு மொளிரு மௌலி மன்னவருங்
காத லியலும் வீரியருங் கருத்த ரமைச்சர் முதலினரு
மீத லியலும் பல்வணிக ரெவருஞ் சாதி வேறுபடாஅப்
போத லியலா தெனில்வல்லா ரல்லார் போதற் கரியதுவே. (உஉ)

விலகி விரிக்குஞ் செந்நிழலா விழுங்குங் கதிரின் மாமணியா
லலகின் மறையா மின்குலம்போ லலருங் கிரண வயிரத்தால்
குலவி யெவையுந் தன்குணமே கொள்ள வுமிழு மரகதத்தால்
நிலவுஞ் சுவன வறைபோல நிவக்கும் வணிகர் கடைமுகப்பே. (உ௩)

பவள முத்து வயிடூயம் படரு நீலங் கோமேதந்
திவளும் புட்ப ராகமிவை செறிந்த நகைகள் குவையாக
நிவருங் காங்கி ரேங்குவன நிலவு முடிவுஞ் செங்கதிரு
முவளும் புயனு மோரிடத்தி னிகலிக் கிடந்த தெனவொளிரும். (உ௪)

வண்ணஞ் சிறந்த பலபட்டும் வகையிற் சிறந்த நூற்றுகிலுந்
தண்ணஞ் சிறந்த நாருடையும் வெப்பஞ் சிறந்த மயிர்ப்படமு
மெண்ணஞ் சிறந்த பேதகங்கொண் டிடையுங் கடையி னெழுங்கெல்
சுண்ணஞ் சிறந்த மலர்ச்சுவனச் சோலை போந்து வைகியவே. [லாஞ்

கொஞ்சுங் கிளியின் பஞ்சிறகுங் குலவுஞ் சுடரு மெனத்திசமு
மிஞ்சும் பொன்னின் வகைநான்கு மிகுந்த பணியும் பலதேயந்
துஞ்சும் விகற்ப நாணயமுந் தொகுத்த கடைக ளுலகமைந்த
விஞ்சுஞ் செல்வ மனைத்துமனம் வெறுத்திங் கடைந்த தெனலாமால்.

மனத்தா மரத்தாற் பாலானு மலரா லிலையால் வித்தாலுங்
கனத்தால் வடித்த நறைத்தயிலக் கடைக ளோர்பால் பலபாலிங்
குணத்தா லடக்கிப் பரிமளிக்க வெவரு மறுகல் கொளலாலா
வணத்தா லன்றித் தெருவெவையு மறுகென் றுலகின் வழங்குவவே.

மன்னு மேழு லோகநிறை மறுகு மணியாம் பலமறுகுந்
துன்னுஞ் சரக்கின் வகைமறுகுந் துயக்கும் பண்ட நனிமறுகு
மின்னுங் கனிகாய் விதைமறுகு மினிய நவதா னியமறுகும்
பன்னு மணத்தின் மலர்மறுகு மளவி னமையாப் பன்மையதே. ()

தலத்தே நடந்தோ ரன்றிபல வூர்தி நிவந்தோர் பேரானைக்
குலத்தே வந்தோர் கொள்வானுக் குறித்த கடைகொ ளியன்மாடத்
தலத்தே தந்த முணர்வோடும் விற்போர் தாமு மிருமையது
பலத்தே நிற்பா ராதலினு லிலாப மன்றிப் படலிலவால். (உ௬)

மலையி னுளவும் வனத்துளவு மன்னு திணைக ளிடத்துளவு
மலையி னுளவுந் தீவுளவுந் தேய மனைத்தி னுளவுமறு
நிலையி னுளவு நிலையாத பொருளி னுளவு நிறைதாங்கி
யிலையென் றுரைத்தல் கிடையாத வியல்பிற் றூய கடைத்தெருவே. ()

நிரையு மாட மயிலினமு நிறையும் வீதி நெடுங்கடலும்
விரையுந் துரக மாருதமும் விரியன் மணிகண் முச்சுடரும்
புரையி றூப நனிபுயலும் பொலியும் பொருள்கள் பல்லுயிருந்
தரையுந் தாங்குங் கடைத்தெருவின் பரிசோ ரண்டத் தன்மையதே. ()

### வேறு.

கொங்கு தாங்கு கானமுங் கூந்த றுஞ்சு மாலையு
மங்கை மார்கள் மேனியு மாடம் பூசு சாந்தமு
மங்க முழுதும் புலகிதத் தந்திப் பொழுதுஞ் செம்பொரு
ளெங்கு மெவர்க்குங் கடைகளு மெடுத்து வீசும் வாடையே. (௫௨)

அணிகொண் மாடக் கொடிகளு மைம்பொற் பலகை யூசலுந்
திணிகொள் பந்தம் மாலையுஞ் சேர்க ழுங்க ரங்குமாய்த்
துணிகொ ளெஞ்சும் பொய்கையுந் தொழில்செய் யெந்தி ரங்களு
மணிகொ ளரசர் சிரமமு மடுக்கு நாளு மாடலே. (௫௩)

முழங்கு மூரி வெங்களிற் றூலும் வீர முரசொலி
தழங்க லாலு நன்மணத் தைய லார்கு லாவலால்
கழங்கு வயிர மேனிலைக் காட்சி காட்டல் போல்வன
வழங்குந் தெருவி னெவர்கட்கு மான்ம தங்க ணுறுமால். (௫௪)

### வேறு.

பிள்ளைவெள் ளன்ன வாவியும் பெய்யுமுண் ணன்ன வீதியுங்
கிள்ளையின் மன்னர் மேனியுங் கிள்ளையி னின்சொ லுவினு
முள்ளிய யோக வுள்ளத்து மோங்கிய யோக மனைகளுங்
கொள்ளிய செல்வ வாரணங் குலவுமெந் நாளு மோங்கவே. (௫௫)

காவலர் தங்கள் விழிகளுங் கடிகெழு குமுத நளினமு
மாவலர் யோக வுள்ளமு மகிழ்தர வுதவு கைகளு
மாவலர் செய்யுந் தொழில்களு மாதுலர்க் கருளு மன்னமும்
பாவல ருணர்வின் மொழிகளும் பயனெடு பூத்து மலருமால். (௫௬)

ஒருவனை யுன்னு முள்ளமு மொண்மலர் மல்கு மளிகளு
மிருமைப யப்பொ ருயிர்கள்பா லிரங்குவ வல்ல தில்லையால்
பெருமையின் மார்க்க வியல்பினும் பெரியவர் மார்க்க நடையினு
முருமைகொண் டாட லெவர்களு முறையிட லல்ல தில்லையால். (௫௭)

மங்கைய ராடும் பண்ணையு மன்னிய பாத வங்களுங்
கொங்கையர் வேண்டுந் தோழியுங் கொண்டபொய் யன்றி யில்லையால்
பொங்கொளி யோங்கு மாடமும் பூமண யோங்கு பூகமுங்
கொங்குல வாரக் கொங்கையுங் கொடியன வன்றி யில்லையால். (௫௮)

கலவிவி னோத மாடலிற் கடிகெழு மார்ப மிதிபட
லுலவிய வூச லுதைபட லொண்கழங் கான தெறிபடல்

குலவிய பந்து மடிபடல் கொண்ணெறி தன்னி றலைபட
லலவிலை வேறு சினமையே யாடவர் மாதரி யார்க்குமே. (௩௯)

வாய்மையி னோங்கு நிலையினால் வழிபடு கின்ற கலையினால்
தூய்மையி னேந்து நடையினாற் றுன்பம டாத வுடையினாற்
சேய்மையி னாயும் பழமையாற் சேர்தர வோருங் கிழமையாற்
காய்மையி லாது நன்மையிற் தாய்மைகொள் சிந்தை யாமரோ. (௪0)

வேறு.

ஆர்த்திடு பொருண்மறை முழங்கு மம்பொனூர்
சேர்த்திடு வணக்கத்தின் முழங்குந் தீப்பவந்
தீர்த்திடு மறிவினின் முழக்குந் தேக்கிய
பார்த்திடு திசையெலாம் பள்ளி வாயலே. (௪௧)

நல்லறி வாளரை நாடித் தாடழீஇச்
சொல்லறி வாலுயர் துறையி னாடுவார்
பல்லறி வானெறி பகைப்ப வினாநசையின்
புல்லறி வாளர்க்குப் போக்குண் டாங்கொலோ. (௪௨)

உள்ளிய நன்மையி னுவந்து மேலவர்
தெள்ளிய முதியவர் வறிஞர் சிந்தையிற்
கொள்ளிய பொருளெலாங் கொடுத்துச் சீர்மைசால்
வள்ளிய ரென்பெயர் வளர்ந்த மாக்களே. (௪௩)

தந்தையர் பிறவியர் தனையர் சம்பந்தர்
பந்தினர் விருந்தொடு பாங்கிற் சூழ்தரச்
சந்தத முண்டிறை தன்னை யேத்துநன்
மந்திரத் தானனி வளருஞ் செல்வமே. (௪௪)

மகிழ்தரு நபிமுகம் மதுமெய்க் காரணம்
புகழ்தரும் கவிநறை பூக்கு மின்னரு
நுகர்தலிற் பகற்பொழு திரவு நோற்பன
வுகளலிற் றுன்பமற் றொழிந்து போதுமால். (௪௫)

வெள்ளையம் பலகையிற் பைம்பொன் மேன்மையாற்
கொள்ளைகொ ளெழுத்தினைக் குறித்த பள்ளியின்
பிள்ளைக ளொடுபொருள் பேதி யாக்கிளிப்
பிள்ளைக ளும்மறை பிறங்க வோதுமால். (௪௬)

பொற்பினிற் சிறியவர் சுடர்கள் போல்பவ
ரற்பினிற் சிறியவ ராவி யீபவர்
வற்பினிற் சிறியவர் மகத்து மேன்மையர்
கற்பினிற் சிறியவர் காருந் தாழ்பவர். (சஎ)

அறிவினிற் சிறியவ ரனைத்துந் தேர்பவர்
நெறியினிற் சிறியவர் நினைத்த தீகுவார்
குறியினிற் சிறியவர் திசைகொள் கீர்த்தியர்
பொறியினிற் சிறியவ ரெவையும் போற்றுவார். (சஅ)

நன்னெறி பயில்பவர் துறவி னுவினுற்
பன்னெறி தருமத்தாற் பாவை யார்நிறை
மன்னெறி யான்முறை மன்னர் நீதியா
லெந்நெறிக் குங்கொள விறைஞ்சு மாரியே. (சகூ)

நீதியுந் தகுதியு நெறியுஞ் சீர்மையு
மோதியுங் கருணையு முவப்புஞ் செய்கையும்
பேதியா துடையநற் பேறு கொண்ணகர்க்
கியாதினை யுவமையி னெடுத்துக் கூறுவேன். (ரு0)

செல்வமும் பெருமையுஞ் செருக்குந் துன்னலா ற
கல்வியு நன்றியின் கதியு மன்னலாற்
பல்வகைக் குற்றங்கள் படர்த லில்லையாற்
றெல்வகை பழுத்தது சொல்லற் பாலதோ. (ருக)

முதியவர் தோள்களு முகிபித் தீனெனக்
கதியவ ரவர்கொளுங் கருணை நாயகர்
பதியது பதிந்தமுத் திரையின் பான்மையே
விதியதாய் நகரெலாம் விளங்கி நிற்குமால். (ருஉ)

உயரொலி மார்க்கெலா முபிரி னல்லருள்
பயில்கெள் துல் அருலமெம் பயனி னுயகர்
துயில்கெழு மாவளந் துயலு மாதவச்
செயல்கெழு பொன்னக ரதுஜெய் லானியே. (ருங)

நகரப்படல முற்றுப்பெற்றது.

ஆ படலம் ந-இ கூடிய திருவிருத்தம்-கஅசு.

# மரபியற்படலம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செந்நறு வொழுகுங் கஞ்சச் செழுஞ்சிறை யன்னப் பார்ப்பி
னின்னறு விசையின் வாவி யியைபொழி ஜெயிலா னென்னு
மன்னறு நகரி னெங்கு மலிபுக ழப்தல் காதிர்
தந்நறுத் தோற்ற மேன்மை மரபியல் சாற்று வாமால். (க)

பல்வகைப் பட்ட கோலப் பருமிதத் துடல மெல்லாஞ்
சொல்வகை நீர்மை யேழிற் றுகுத்துளந் தோற்று நின்ற
நல்வகை யுளுற்று மேலோ னனியரு ளொளிவிற் பூத்து
வெல்வகை யறிவின் முத்தா விளங்கிய முகம்ம தன்றே. (உ)

கூறிய குறிப்ப தொன்றுங் கொள்கிலா தின்ன தென்ன
வேறியை வின்றி யேக மயமென விரிந்த சோதி
யூறிய வின்பத் துற்ற வொருபொரு ளனைய வள்ளல்
பேறினை விளக்கு வானிப் பெரும்புவி யிடத்தி னுனர். (௩)

நெடுநிலஞ் சுவடு காணு நீழலுங் காணு நானங்
கடிதரு மெய்யின் மக்காக் காவல்கொ ணபிகள் கோமா
னடவுடன் பயந்த மக்க ளனைவரி னுயர்ந்த பண்பின்
வடிவுடை யிளைய செல்வி மாமணி பாத்தி மாவே. (௪)

ஒழுக்கமும் நெறியும் வாய்மை யுறுதியுந் தயவு மன்பும்
விழுப்பமும் நிறையுங் கற்பும் விளங்கிய வுருவின் செல்வி
யழுக்கறு மறிவிற் பூத்த மதியினை யாதி யேவல்
பழுப்பவா ளலியுல் லாவும் பலன்பெற பணந்தா ரன்றே. (௫)

வாருதி யளவித் தூர்த்து வானரி யளவிப் போர்த்துக்
காருதிர்த் தட்ட கோணக் கரிக்கடாங் குழியைத் தூர்க்கும்
பாருகு துகள்கள் வேகப் பரிநட வரிய வீர
ராருமுள் ளன்பி னேக போகமுண் டமைந்தா ரன்றே. (௬)

மங்கையர் பெருமான் கற்பின் மலர்ந்தெழு முபிரும் வீரர்
தங்களின் பெருமான் போதந் தகைதரு முபிரு மொன்று
யங்கமெய் யழகு பூப்ப வணியுரு வெடுத்த தேபோ
லெங்கினும் படருங் கீர்த்தி யசனெனு பேந்தல் வந்தார். (எ)

கண்டவ ரிருக ணுள்ளங் கண்ணையும் வாங்கா வண்ணங்
கொண்டவர் சுவன வாழ்வு கொண்டகா ளையர்கட் கெல்லாம்
விண்டவ ரேத்துஞ் செய்பி தெனப்புவி விளக்கங் காணப்
பண்டவர் தம்மூ தாதை பகர்தரு மேன்மை பெற்றார். (அ)

குறிப்பிய ரோற்று தியார்க்குங் கொண்டலி னல்கும் வண்மை
திறப்படுங் கருணை வள்ள லின்னவர் சீர்மை யெல்லா
மறப்பினும் மறவா தாக வளர்க்குநன் னெறியின் வாய்ந்த
வறத்துறை விளங்க வந்தா ரசனுல்மு தன்னு வென்போர். (கூ)

வேதமே நெறியே மிக்க வெற்றியே கொற்ற முற்ற
நீதமே யிடனுக் கொண்ட நிருமல ரவரின் மைந்தர்
போதமே மதியே நாட்டப் புணர்ப்பொடு தெளிவே யோர்மை
யாதலே யன்பிற் சேர்க்கு மப்துல்லா மகுலென் போரே. (கo)

காரொடு மிகலி வெய்ய கனலினை யவிக்கும் வேக
மாருத மென்னும் மாய்மா வயந்தரு மரச ரியாருஞ்
சீரினை மருவி யுள்ளந் தெளிவுற நற்சொற் போற்று
மாரிய வரதம் மெய்ம்மைத் தவத்தினு லாய மைந்தர். (கக)

வஞ்சகக் கருமத் தோர்நல் வழியினோ டறிவிற் றேர்ந்து
தஞ்சமென் றடைந்து பாதந் தழுவிமெய் யுறுதி பற்றி
நெஞ்சகத் தொருமை யாக்க நிலைப்பவெவ் வினையின் பாலுஞ்
சஞ்சல மகற்று மூசல் ஜௌனெனச் சிறந்த தூயோர். (கஉ)

நனிபுகழ் நான்கு வேத நலந்தரும் பொருளை வேறுத்
தனிநிலை கொண்ட மூசல் ஜௌனிரு கண்ணி னுற்ற
நுனிமணி யொளிவே போல்வார் நாற்கட னுகர்ந்த நெஞ்சங்
கனியருளோங்கப் துல்லா தானியென் றுயர்த்துங் கத்தர். (கங)

வேகமிக் கெழுந்த பாவ வெம்பனிச் சிக்குஞ் சோதி
யாகமிக் கெழுந்த வள்ள லப்துல்லா தானி மைந்தர்
பாகமிக் கெழுந்த வேதம் பகாப்பதப் பதவி பற்றி
போகமிக் கெழுந்து நாளு முடல்குறாஉ மூசா தானி. (கச)

கருத்துறு நினைவும் நாட்டங் காட்டனு மவற்றுட் சிக்கும்
பொருத்தமுங் கொண்டு நின்ற பொலிவுறு வினையு நோக்கி
யருத்தமே நாட்டும் வள்ள லவரது தவத்தாற் றோன்றி
யிருத்திய புகழின் மேன்மை யிலங்கிய தாவூ தென்போர். (கரு)

எதிர்தலு முள்ளங் கைத்திட் டிகழொடு பகையும் பற்றி
யதிர்தலே கொண்டோர் செய்யு மாக்கமே காக்க வல்லோன்
முதிர்தலின் கருணை வேண்டு முற்றிய பொறையின் மாட்சிப்
பிதிர்தலி லன்னோர் தோன்றல் பெருந்தவ முகம்ம தென்போர். (கசு)

வெற்றியின் பகுதி யெல்லா மியல்பினல் வேய்ந்து நீத
முற்றிவித் துண்மை தேறு முகம்மதி னரிய தோன்றல்
நற்றவத் துறையிற் றேன்றி நல்லறி விடத்தி லோங்கிப்
பற்றறு மெகியா சாகி தெனப்பயன் படைத்தோ ரன்றே. (கஎ)

கனிதரு முள்ளந் தோற்றுங் காட்சியின் மாட்சி யாலே
யினிதரு போக மெல்லா மெழுவெழத் துய்த்தா நந்த
நனிதரு மெகியா சாகி தென்பவர் நன்மை யாற்றிற்
றனிதரு மணியின் வந்தா ரப்துல்லா சைலி யென்போர். (கஅ)

நேமமு மதனி னேதை னேர்மையு மொழுங்குங் கொண்ட
வாமமு மதிப்பும் பூத்த வரிசையார் பெற்ற வள்ள
லாமுறை மூசா ஜங்கிங் கந்தக்கூ சன்பா ருள்ளந்
தாமகிழ்ந் துயர்த்த வந்தார் தவத்தபீ சாலி கென்போர். (கசு)

அறிவினிற் குணத்தின் மெய்ம்மை யன்பினிற் றகையின் மிக்கு
நெறியினி லுவமை யில்லா நீர்மையால் விளங்கு மேன்மைக்
குறிபெறும் வள்ளல் செல்வக் குலம்பெறும் ஜைலா னென்னப்
பொறிபெறு நகரின் வாழ்ந்தார் புகழ்பெற வுலக மன்றே. (உ0)

மரபியற்படல முற்றுப்பெற்றது.

ஆ படலம்-சஇ-கூடிய திருவிருத்தம்-உ0சு.

# சகதசற்குருவுதையஞ்செய்தபடலம்.

கலிவிருத்தம்.

மாநில யுலகுறை மாக்க டம்முயிர்க்
காநில விளங்கிய விளக்கி னுதியின்
தீனிலை முகியித்தீன் ஜெகத சற்குருத்
தேசிலை யுதைபே சிறப்பி னேதுவாம். (க)

நனிபுகழ் திறைஜையி லானி யென்னுமூர்
மனிதரிற் றகுதியு மதிப்புந் தாங்கிவாழ்
வினிதரு மியலினே டொருமை யேந்துளங்
கனிதர விறையருள் கருத்த ராயினர். (௨)

நேர்வழி மறந்தவர் நினைவு கொண்டுமெய்
சேர்வழி நிலைபெறச் சிறந்த மேம்பொரு
ளார்வழி வேதத்தி னறிவு தூக்கியே
யோர்வழி விளங்குற வோதும் வாயினர். (௩)

தோற்றிய பொருள்களுந் தொடருந் தீவினை
யாற்றிய வுயிர்களு மடரு நோய்பல
வேற்றிய மாக்களுஞ் செழீஇ யெழாநிலைத்
தேற்றிடு கருணையஞ் செங்க ணாளரோ. (௪)

வரியளி யிசைமுரல் வளியிற் பொன்னளா
விரியலர்த் தாதொடு தேனும் வேரியுஞ்
சொரிதரு குங்குமத் தொங்க லோங்கிய
பரிவுறு மணிப்பருப் பதத்தின் றோளினர். (௫)

நெறிப்படு பேதக நிறத்து மின்னிடி
குறிப்பொடு தோற்றிய கொண்ட லன்றுநீர்
செறிப்படு சேதக நிதியுந் தாருவுந்
தெறிப்படுந் தெறிப்படாஅ வண்மை செங்கையார். (௬)

ஒருகர மீரெயிற் றெழுகு மும்மதந்
தருகரி யனையவர் தாழ்ந்து தோத்திரம்
புரிதர வுலகெலாம் புகழு நாமத்தின்
விரிகதிர்ப் பருதியின் வெய்ய வேலினர். (௭)

வீரமுண் டுமிழுமில் வேந்தர் பன்மதக்
காரமுண் டுழல்பவ ருலகு கைக்கொள்வான்
வாரமுண் டுலைபவர் வழிபட் டோங்குவான்
சாரமுண் டிறைஞ்சிய நளினத் தாளினர். (௮)

மனக்கடி கொண்டன வன்பி னின்றன
வினக்கடி யேய்ந்தன வெவையு மொன்றுபோற்
சினக்கடி யில்லவாய்ச் சிறக்கு நீழல்செய்
வனக்கடி வெண்குடை மாட்சி யாளரே. (௯)

ஊர்ந்தன வுலவின பறந்த வுற்றன
சேர்ந்தன மற்றன சிவ செந்துக
ளோர்ந்தன வுவப்பினு லொழுகி மெய்மதந்
தேர்ந்தன வாநெறி செலுத்து மாணையார். (௧௦)

பருப்பதந் தாங்கிய பாரா நீதியாற்
றிருப்புயந் தாங்கிய செம்மல் பல்லுயிர்
விருப்பணி வினைதங்கள் விளங்கு முள்ளகத்
தருப்பண மோங்கபீ சாலி காமரோ. (௧௧)

இனையன மேன்மைக ளியல்கொள் வள்ளலின்
மனையன வுள்ளக மலரின் வாழெழில்
புனையன முயர்துணை புகழு மியாவர்க்கு
மனையன வந்தவா ருயிரன் னாரரோ. (௧௨)

விரிதரு மிருசுடர் விளங்கு பன்மணி
புரிதரு வொளிவினல் பூத்த பூவெனத்
தெரிதரு மவயவஞ் செம்பொன் மாமணஞ்
சொரிதரு கொடியெனத் துவளு மாக்கையார். (௧௩)

உலகமு முலகுள வுயிருவு மற்றவு
மலகிலா நயத்தெழ வாவி பூப்பவார்
பலனனி யமுதமே பழுத்துச் செங்கருக்
குலவிய கடிமலர்க் குமுத வாயினர். (௧௪)

அறநெறி யொழுக்கமு மருளு மன்புமெய்ப்
புறநெறி கொளவெழு புலமென் பாந்திரு
மறைநெறி யனைத்துமோர் வடிவ தாகனி
நிறைநெறி வளர்தரச் செருகு நெஞ்சினர். (௧௫)

பெருநில வுயிர்க்கெலாம் பேறு நல்குவான்
வருநிலே மழையும்வான் வளருங் கோள்களு
மொருநிலே யருளும்வந் துவந்து நற்பணி
தருநிலே கருணையே தழைக்குங் கண்ணினர். (௧௬)

பேதக நீக்கிய வுளமும் பெண்களின்
பாதக நீக்கிய பார்வை யாதலான்
மேதக நீங்கலில் கற்பின் மென்கொடிச்
சாதக நீங்கரு மிறைமைத் தக்கதே. (௧௭)

திசைபடர் காரணச் சீர்த்தி நாயக
ருசைன்வழி செளஉமகிக் கிளையி னோங்கிய
வசைவிலாப் புகழபீ அப்துல் லாவரு
ளிசைவளர் பாத்திமா வென்னுந் தேவியே. (௧௮)

மின்னொடு மேகமும் பூவொ டாவியும்,
பொன்னொடு மணியுமே பொருந்துங் கேண்மையிற்
றன்னொடு பிறபொரு டழைக்கு நல்லற
மன்னொடு மங்கையு மருவி வாழ்ந்தனர். (௧௯)

தொகையிலாப் பெரும்புகழ் துலங்க நன்னிலை
மிகைதரும் பதிஜையி லானி மெய்ப்பவுன்
னகைதர விருமையு நல்கு மாதர
வகைதரு மமுதமுண் டுவந்து வாழ்ந்தனர். (௨௦)

கல்வியுந் தகுதியுங் கருத்தும் பூப்பநற்
செல்வமுஞ் செழுமையுஞ் சிறப்புஞ் சீர்மையும்
பல்வகை யுடையவர் பரிவு கோடற்கோர்
நல்வகை மகவின்றி நாளும் வாடுவார். (௨௧)

பேரொடு தலைமுறை பெற்ற சீர்த்திக
ணேரொடு விளக்குவான் விளக்கி னீணிலஞ்
சீரொடு வருந்திரு மக்க ளேயெனி
லாரொடு சிறக்குமென் றயர்ந்து ளெண்ணுவார். (௨௨)

பிறந்தனம் பலபல பெருமை கொண்டவர்
துறந்தனந் திசைதிசை துதிப்ப வாழ்ந்துநல்
லறந்தரு மகவில ராயின் மற்றெலா
மிறந்தன மன்றிவ ணிருந்த தில்லையால். (௨௩)

செய்தவக் குறிப்புமிச் செகத்தின் மன்னவ
ருய்தவப் பெருமையு மொழிந்த காலத்து
மெய்தவப் பலனுமீ தென்னில் வேறென்கொல்
கைதவ மென்னெனக் கவலை கொள்ளுவார். (௨௪)

நெறிவழி பிழைத்தவர் நீதி யில்லவ
ரறிவழி யிழந்தவ ரகந்தை யுற்றவர்
குறிவழி பெறுவதுங் கொற்றங் கொள்வதும்
பெறுவழி யெனிலெவர் பேசி யாரரோ. (௨௫)

எனமிக வருந்துளத் திடைந்து மட்டறுத்
துனிபெருங் கடலிடை யாழ்ந்து துஞ்சுவார்
நனிசுக வின்பமும் பருவ நன்மையும்
பனிதரப் பாவையர்க் கறுப தாகவே. (௨௬)

பலனிலா ரெனப்பர தவித்துப் பன்முறை
வலனுளார் பொழுதெலாம் வணங்கிக் கேட்டதாற்
குலனிலான் வேணிலா ணட்டங் கொள்பவர்க்
கலனிலா தருள்பவன் கருணை யாயினன், (௨௭)

வேறு.

வண்டு கொண்டநீ ருடுத்தவிம் மாநில மன்னர்
தொண்டு கொண்டசெங் கழலவீ சாலிகின் றுதியாற்
பண்டு கொண்டகல் லொளிமணி பாத்திமா வயிற்றிற்
கண்டு கொண்டகா ரணத்தொடு கதிர்விளக் கியதால். (௨௮)

கணங்கொள் வானவர் வானுல கடங்கலுங் கதிரி
னணங்கு மூர்கதிர் மதிமுதல் கோள்களு மவனி
யிணங்கு மானிடர் முதலிய வுயிர்களு மின்பக்
குணங்கொண் டாநந்த சோபனங் கூறிநின் றுட. (௨௯)

கருத்தி னிற்பொலி கருணையா னனைத்தையுங் காப்போன்
றிருத்து நல்லொளி யுதயத்தின் சிறப்புல கறிய
பெருத்த மேன்மையின் வரத்தினின் முதியவர் பிரியா
தருத்த மாதவர் கிலிறினை யழைத்தறைந் தனனல். (௩0)

வேத மேம்பொருள் விரிதர விரியொளி வெனது
போத நன்னிலைக் குத்பினை பாத்திமா புனித
மாத ருந்திரு வயிற்றினின் மனுமுத லெவையு
மாத ரத்தொடு சோபனம் பகர்தர வமைத்தேன். (௩௧)

அணிகொள் பேறுடை யவரிடத் தடைந்தவர் தமக்குக்
கணிகொ ளாப்பெரும் புகழினோ டென்சலாங் கழறித்
துணிகொள் மாமறை யனைத்தையு மாதங்க டோறுந்
திணிகொள் வானுள போதுவித் திடுகெனச் சிறப்ப. (௩௨)

கடந்த வல்லவ னவந்தரு ளேவலுங் கருத்தோர்
தொடர்ந்த நாயக ரவதரித் ததுங்களி துளக்கப்

படர்ந்த வாசர்தப் பரவசக் கடற்படிந் தோங்கி
யடர்ந்த சீள்புகழ் கலிறுசன் னபியினி தடைந்தார். (௩௩)

விரிந்த மேதினிக் குயிரென விளங்கிய கருணை
சுரந்த தூயவ ரிடத்தினிற் சலாஞ்சொலிப் புகுந்து
நிரந்த ரப்பொரு ளாயெவற் றினுநிலை நெடியோன்
புரிந்த சோபன சலாமையு மருளொடு புகன்றார். (௩௪)

வல்ல வன்புறத் தாமுறை வழிகொளு மேலோர்
சொல்ல வன்புறு தேத்திநுந் துணைப்பதம் வருந்த
வில்ல வன்புறம் வருந்தகை யிவனென வினிய
நல்ல வன்புற வருள்கென நவின்றனர் நாதர். (௩௫)

விளையுங் காரண நும்மிட மேலவன் மாதங்
கிளையுந் தோறுஞ்சென் றுயர்பொருள் கெழுமிய வேதந்
தளையு முப்பஃ தியலையுஞ் சாற்றுவா னேவன்
முளையுஞ் சிந்தையின் மகிழ்வினு லென்றனர் முதியோர். (௩௬)

சனிகொள் பல்லுயி ரோம்புவ னன்றியா னுள்ளங்
கனிகொண் டாண்டகை கருத்தொடு கான்மடித் திருப்பத்
தொனிகொ ளாவொலி யெழுத்தொடு சொல்லினிற் சோரா
தினிகொ ளாரண மோதிவித் தாரறி வெழவே. (௩௭)

தரித்த முற்படு திங்களி னுயர்மறை தன்னிற்
பொருத்தி லம்பக முப்பதின் மூன்றினைப் பொருளோ
டருத்தி நண்பெழ வாழ்த்தியவ் வன்னையு மறியா
தொருத்த னுத்தரத் தகன்றனர் கிலிறெனு முரவோர். (௩௮)

காண்ட காதவன் கருணையாற் கருவென வமைந்த
வாண்ட நாயகர்க் கணிபெறு மாதங்க டோறுந்
தேண்டு நன்னிலைத் திருமறை சிறந்தமும் மூன்று
பூண்ட வத்தியா யஞ்சொலா நின்றனர் போந்தே. (௩௯)

பொன்ன மாநக ரரம்பையர் வானவர் புவியோர்
மன்னும் வாழ்த்தொடு மனக்களி வளர்வது போலச்
சொன்ன மாமறை யறிவொடு துலங்கிய வொளிவு
மன்னை யார்வயி னெழுமதி நான்குமா யதுவே. (௪0)

நான்கு திங்களி னரிவையர் நாயகி யொருநாள்
வான்கு லாவினன் மறைந்தபின் வல்லிருட் படலந்

தான்கு லாவிய யாமத்திற் றம்புறக் கொல்லை
பான்கு லாமணி விளக்கென வந்தனர் தனித்தே. (௪௧)

வேறு.

வஞ்சநிறை நெஞ்சினிடை மன்னு கொடுமைப்
புஞ்சமுறை யெஞ்சலில் புணர்த்து மெறுழி
னஞ்சமுகு மஞ்செனநகைக்கு முடலான்
விஞ்சையரு பஞ்சுமொரு வெங்க டியரோ. (௪௨)

மேகமள வும்பெரிய வெற்பை நிகரா
மாகமள வித்திசைம றைக்கு மொருக்க
பாகமள வுந்தருப டர்ந்த மிருகத்
தாகமள விப்பிடிபி லப்பு மொருசை. (௪௩)

பூதரநி றைந்தசெடி போலு மயிரின்
மீதறநெ ருங்குமுடன் மிக்கி னதுவெந்
தீதொடுப டர்ந்தமலை செக்க ரெனவே
கோதொடுவி ரிந்தசடை கொண்ட சிரமே. (௪௪)

வானிடையெ ழுஞ்சிலையின் வன்பு ருவநீள்
கூனிடைவி ரிந்தபொறி கொட்டு மெரிகண்
ணூனிடையு ருக்குமழ லுற்ற புகைபோ
ரூனிடைபு யிர்க்குமுயிர் தங்கு குமிழே. (௪௫)

இருண்டபுய றன்னிட மிரண்டு பிறையாங்
குருண்டமுனை கொண்டுகடை யோங்கு மெயிறிற்
புரண்டிடைவ ளைந்தரவெ னப்பொ லியநா
முரண்டரு பெறுஞ்சுவைகள் மெல்லு முனல்வாய். (௪௬)

முன்னுறு பெருந்தடை முறித்தி டையெலாம்
பின்னுற வருஞ்சடை பிதிர்ந்து கொளுவா
கொன்னிறு மதத்தொடு கொதித்து ழல்சினந்
தன்னுறு திறத்தொடு தருக்கின் வரவே. (௪௭)

வாய்வழி பிளந்துமன வன்மை யுகளாக்
காய்விழி யழன்றுதொனி காட்டி யெதிரா
வாயதுவ ரும்பொழுதி னம்ம ணியொளி
சேய்வயின் விளங்கவை தெரிந்த னரோ. (௪௮)

கண்டனர் கலங்கினர் கருத்து மயர்தல்
கொண்டனர் திகைத்தனர் கொள்வி ழிமருண்
டுண்டன ரகத்துணர்வை யுள்ள நினைவால்
விண்டனர் பெருந்துதி விதிர்த்த வுடலார். (௪௯)

அருந்துமுயி ரெத்துணையு மன்பி னிடனு
வருந்தலற வோம்புமிறை வல்ல பெரியோய்
பொருந்தொழிலி னெய்துகடி புன்மை யணுகா
தொருங்கினி புரப்பதுனை யன்றி யிலையே. (௫௰)

என்றிறை வனைப்புகழ்த லின்பு றுமனை
தன்றிரு வயிற்றிடை தரித்த வொளியே
யன்றவ ரறிந்தவ ரலார்வெ ளியினோர்
வன்புறழ் கொடும்புலியின் வந்த துடனே. (௫௧)

மேலிடை செறிந்தவரி மென்னி தசையுங்
காலிடை பரந்தவுகிர் காய்ந்த வயிறுந்
தோலிடை சிலித்தமயிர் துற்ற வுரமும்
வாலிடை சுழற்றுமன வன்மை யுடனும். (௫௨)

அலற்றிய கனைப்பினொ டழற்கு மிழியா
பிலிற்றிய விழித்துரறி பிற்பு றமெலாஅ
கலிப்பிய வரத்தொடு கரத்து ணையினல்
வலித்துகளின் விட்டதெறி வற்பு றவரோ. (௫௩)

நிறைந்தபுகழ் காரண நிவந்த புலியி
னறைந்தவறை யாளுடலி னங்க மிழிவாய்
நிறைந்தவுர முங்கொடுமை நெஞ்ச முயிருங்
குறைந்தது விழுந்தது குலுங்க நிலமே. (௫௪)

இரைந்தகடி பொன்றிட வெழுந்த புலியும்
விரைந்துரு மறைந்தியல் விளங்க வயினே
கரந்தது தெரிந்தனை கனிந்து ளமகிழ்ந்
தரந்தையின் முகங்கழுகி வந்த னரரோ. (௫௫)

ஆதியரு டேர்நல னார்ம ரபினு
நீதியொடு பேரரென நேரு மொளியே
மாதரிட னேபுதுமை மன்னு நிலையாற்
பேதமற மாதன்னி பேறி னெழுமால். (௫௬)

## வேறு.

வெண்டிலரப் பரவை நெடும்புவி தனக்கும்
   வேந்தன வியன்முறை யுணருந்
தண்டியை யாயு ணிரினைப் பருகுந்
   தபோதனர்க் கொருமணி யனைய
வண்டிரை மலர்த்தார் பொற்புயக் கிலிறும்
   வல்லவ னுரைதரும் வண்ண
மெண்டிசை பரவு நாயக ரிடத்தே
   மதிதொறு மெய்தரு நிற்பார். (௩௭)

பிறரெவ ரேனு மறிகிலா தடைந்து
   பெரும்பொருட் குரியமெய் வேத
முறைமுறை மூன்றி லப்பகந் திங்கள்
   பதிற்றினு முப்பது முடித்தா
ரறநெறி வழியின் பயிற்றிய படியுள்
   ளாக்கமுந் தேகமு முருவாய்ப்
பிறவியின் பருவத் தளவினி னமைந்த
   பெரும்புகழ் குத்புநா யகர்க்கே. (௩௮)

கருவுறை யனையார் திங்களந் தோறுங்
   காரணக் காட்சியின் மகிழ்ந்து
பெருமையி னுடலங் களிநனி பூப்பப்
   பேணிய விலக்கணந் தோற்ற
வரிவிழி பனிப்ப மெல்லிடை துவள
   வருந்தலி னுளம்பதை பதைப்பத்
தெரிதராப் புதுமை நண்பனி வயிற்றி
   லடிக்கடி சிறந்தது நோதல். (௩௯)

சீதநன் னீரின் மஞ்சன மாடித்
   தெண்டிரை வெண்ணுரை யென்னப்
போதலர் துகில்பொற் கலன்பல புனைந்து
   பொலிவெழி லரம்பைய ரனையா
ராதலத் தமைந்த வபார்க ளிரயாரு
   மகிழ்ந்துசோ பனமலர் தூவ
மூதறி வளர்ந்த பாத்திமா தவத்தின்
   முகிபித்தி னுண்டவர் பிறந்தார். (௪௰)

அளவருந் தெளிவி னெழுகிய வழகா
 யருங்கதிர் குலவிய வொளிவாய்க்
கிளர்தரப் படர்ந்து வீசிய மணமாய்க்
 கிளைநலத் திலக்கண வடிவா
யுளமகிழ்ந் தெவரும் போற்றிய பொருளா
 யுறுதுடக் கீரமி லாதாய்க்
களவறு கத்னுக் குறிமறைத் துதித்தார்
 கண்மணி முகியித்தீ னெலியே. (௬௧)

காரணப் புதுமை விளங்கமெல் லிழையார்
 கனியிதழ் குரவைகள் முழங்க
வாரணப் பெரியோர் வாழ்த்தமாராய
 மவனியி னுயிரெலா மணிய
காரணத் தரசர் தொழும்அபீ சாலி
 காவியும் பாத்திமா வுயிரும்
பூரணத் தொன்று வருபொரு மணியிற்
 பொலிந்தனர் முகியித்தீ னெலியே. (௬௨)

கருங்கட லகத்துக் காரிருட் போதிற்
 கருங்கலிற் காவெறும் பூர
வருங்கருத் துணரு மேலவ னுரையால்
 வானுயர் சொர்க்கநாட் டமரர்
பெருங்களிப் பானு நந்தநீ ராடிப்
 பிரியமுற் றணியணி யிறங்கி
யொருங்கினிற் றெரிந்து சலாஞ்சொலிப் போத
 வுதித்தனர் முகியித்தீ னெலியே. (௬௩)

துயிலினுந் துயிலாப் புறத்தினுங் கேள்வி
 துலங்கிய நபிகளி னயினு
ரயலறி யாது மதீனமா நகருக்
 கடைந்ததோர் கிசுறத்தி னிலக்க
நயனுறு நானூற் றெழுபதிற் றேன்றி
 னனிறம லான்முதற் றேதி
முயலருந் தவத்திற் குருபல னென்ன
 முகியித்தீ னண்டவர் பிறந்தார். (௬௪)

பாரடர் கரிய விருட்குலஞ் சீத்துப்
  பஃறிசை யெறிகதி ரமுதச்
சீரணி பதியு முடுவின மெவையுஞ்
  செழுங்கரத் தபனனுஞ் சுவன
வூரணி கொழிக்கு மொளிர்மணி விளக்கு
  மொருவடி வெடுத்தது சிவண
வூரிய வரத்தோர்க் கதிபதி யாக
  முகியித்தீ னுண்டவர் பிறந்தார். (௬௫)

தானமுந் தகையு மொழுக்கமு நெறியுந்
  தவத்தொடு செல்வமுஞ் செழிப்பு
மானமுந் தயவு மிரக்கமா தரவு
  மானிடர்க் கரியன வாழ்வுங்
கோனவன் புறத்துப் பேறுள வெல்லாங்
  கூடியோ ருருவெடுத் தென்ன
மோனநன் னிலையின் ஞானமேற் றுறையின்
  முகியித்தீ னுண்டவர் பிறந்தார். (௬௬)

தங்நிலை மறந்து பன்னிலை கொண்டார்
  தவநிலை கொள்ளவு நெறிவிட்
டெங்நிலை பீது முண்ணிலை பார்ப்பா
  ரியனிலை பார்க்கவுந் தகைய
சொன்னிலை ஞால நன்னிலை நடத்தத்
  தூய்நிலை யாதர வுளத்தார்
முன்னிலை நின்றெம் மன்னிலை யாக
  முகியித்தீ னுண்டவர் பிறந்தார். (௬௭)

பொய்தரு நெறியும் புன்மனக் கசடும்
  புறந்தரு மொழியுமுண் ணிந்தை
வைதரு நிலையு மழுக்கடை வினையு
  மாசுறை பாவமு நீத்துக்
கைதரச் சிறந்த செழுங்கதிர் குலவுங்
  கதிதரு மணிவிளக் கென்ன
மொய்தருந் தவத்திற் றுறைபல விளக்கு
  முகியித்தீ னுண்டவர் பிறந்தார். (௬௮)

22116

செழுமணி தரளத் தொருமணி யாய
திருமணி முகம்மது நபினர்
கொழுமணி மகவின் றருமணி பெயரர்
குரைகட னவமணி யொளிபோ
ரெழுமணி யெழிலின் முகம்மது மஸ்தான்
றுதிமணி திகிமணி ஞால
முழுமணி யென்கண் ணிருமணி யென்ன
முகியித்தீ னுண்டவர் பிறந்தார். (சுக)

உலகமற் றெவையும் படைத்தருள் வல்லோ
னுவந்ததோர் திங்களா தலினு
லலகினங் நெறியிற் பேறுள ததனு
லருநபி மார்க்குயர் வேத
மிலகிய ததனுற் பெருமைமிக் குளதா
லெவர்கட்குங் குருவிவ ரன்றே
வலனனி புதுமை முற்படத் தோன்ற
வன்மூலை யுண்டில ரன்றே. (எய)

தோற்றிய காலை வைகறை தொடுத்துத்
துலங்கிய வாதவன் புகுது
மேற்றிசை யளவு முகங்கொளார் பின்னர்
மென்முலை நறியபா லுண்டு
சாற்றிய பொழுதின் வரையினி னேன்புந்
தவத்தொடு நோற்பரம் மாதந்
தேற்றிய வறிவின் றுறையிடை குவைஞ்
செம்மலெம் முகியித்தீ னெலியே. (எக)

ஒளிவுடன் மணிபி னழகொடு வாச
மொழுகிய வரும்பெரு மானுக்
களியுட னியற்று முறைமைக ளியற்றி
யருமறை நூற்பொரு டோர்ந்து
களியுட னுயுந் தந்தையு மகிழ்ந்து
கண்ணகங் குளிர்தரப் போற்றித்
தெளிவுடன் அப்துல் காதிறென் றரிய
திருப்பெய ரிட்டன ரன்றே. (எஉ)

பகற்பொழு தண்ணு தருங்கடற் கதிரோன்
படும்பொழு தினியபா லுண்டு
மிகைப்பொடு நோன்பு முப்பது நோற்று
மேலவன் கருணையால் வண்மை
தகைப்படு மறிவு மன்புட னுக்கந்
தழைத்தலி னழகொடு தேகஞ்
சகத்தினிற் குழவிப் பருவமே கொண்டு
காரணந் தரும்படி நின்றார். (எரு)

சகதசற்குரு வுதையஞ்செய்த படலமுற்றுப்பெற்றது.

ஆ படலம்-ரு-இ-கூடியதிருவிருத்தம்-உஎக.

---

# விரதத்தையமறுத்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருமலர் வனச வாவி மலிவளம் பழுத்துச் செல்வம்
பெருகிய ஜெயிலா னென்னும் பேறுடை நகரி னியார்க்குந்
திருமிழ லமுதம் பூப்பக் கலைகளுத் திகழ்ந்து தண்ணம்
புரிகதிர்க் குழவித் திங்கள் போலெழுடந் தோன்ற லன்றே. (க)

புதிதரும் புகழிற் பூத்துப் பொருடர விளக்கி யார்க்கு
மதிதரு மிரவு நீக்கு மாணிக்க விளக்கி னோங்கிக்
கதிதருங் குழவிக் கோரான் டெய்துங்கால் கனியா மேன்மைத்
துதிதர றமலான் றிங்க டொடர்தர வடுத்த தன்றே. (உ)

நன்மையோ ருருவ மாக நாள்வினை பொறிக ளாகத்
தன்மையே கருவி யாகச் சாரரு ளங்க மாகப்
புன்மையம் பகைக ளேகப் புகுமதி முகந்தோற் றுது
வென்மையி னுதர் செவ்வி விளங்கலான் வெருவிற் றன்றே. (ங)

கருத்தெழுங் கவலை நீத்துக் கருதிய பலனு மீந்து
பெருத்தமேம் பதவிக் கேது பிரித்துச்செய் வினையின் பேறும்
பொருத்திடற் குரிய திங்கள் முகங்கண்டு போதல் வேத
மருத்திய விதியா லியாரு மாவலிற் றேடி னூரால், (ச)

திரிதராச் சிந்தை வல்லார் திசையொரு நான்கிற் சேணிற்
பிரிதரா தெல்லைப் பிற்பாற் பெருந்திடர் வரையின் மற்றைப்
புரிதரு மிடங்க ளெல்லாம் புகுந்துமாய்ந் தாய்ந்து நோக்கித்
தெரிதராப் பிறையாற் செய்வ தென்னெனத் திகைத்தா ரன்றே. ( )

காணிலார் கவலை நீங்குங் கருத்தொன்று கொண்டார் செவ்விச்
சேணிலாக் குழவி யையந் தெளிதர வருள்வார் முன்னர்
பூணிலா விரதம் பூண்ட புண்ணிய அப்துல் காதிர்
வீணிலா வியல்பி னின்று விரும்பித்தம் மிடங்கள் சார்ந்தார். (௬)

மதிநிலை கண்டா ரல்லார் மதிநிலை கண்டு புக்க
வதிர்கட லனைய மாலை யகன்றவான் புக்க மன்னிப்
பிதிர்சிறைப் பறவை மற்ற வினம்பெறுஞ் சிறைகள் புக்கத்
துதிநிலை புகாதி யாண்டுந் துயில்கொளா திரவு புக்க. (௭)

தாங்கிய கருணைச் செங்கண் டவழ்கதிர் தூய மேனி
தேங்கனி யமுத வாயின் றிருமணி கௌதுல் அஃல
மாங்கனி யிரவின் பிற்பா லன்புள விரத நோற்றுத்
தூங்குத லொழிந்து மன்னைத் துணைமுலை யுணுதற் றூரால். (௮)

திசைதிசை படர்ந்த புட்க டிருநக ருள்ளீ ருள்ளீ
ரிசைதருங் கார ணத்தி னெழுமருட் குழவி யச்ச
மிசைதர விரத நோற்ற மேன்மைநன் குணர்த்தி ரென்று
விசைதர வார்ப்பச் செங்கே ழிளங்கதிர் விளங்கிற் றன்றே. (௯)

விடிந்தபி னகரின் மேலோர் திரண்டன ரெழுந்தார் வென்றி
நடந்தரு மொழுங்கிற் சற்று நகைதரா தணிந்த சோதி
யிடந்தருங் குழவி வள்ள லெழின்மனை யெய்தி யின்றூர்
கடந்தசீர் பாதம் போற்றிக் கருதிய தறியச் சொன்னார். (௰)

தவமெனும் விதத்திற் றோன்றுந் தருவினிற் பழுத்துச் செந்தே
னவமலர் கனியி னன்னீர் நற்குடி தழைக்க வந்த
துவமுடை நுந்தந் தோன்ற லிடத்தின்று புதிய தோற்ற
மெவனுள தறைக வென்ன வவர்களி லிருவர் கேட்டார். (௧௧)

கண்ணினு மணியி னுள்ளக் கருத்தினு மொளிவிற் றோற்றென்
வெண்ணிலாக் குழவி யின்றி யாமத்தின் விழிப்பச் சேர்த்துத்
தண்ணிலா வமுதத் தீம்பா லளிப்பதாம் பரிந்து வாய்வைத்
துண்ணிலா திருப்பக் கண்டே னீதென வுரைத்தா ரன்றே. (௧௨)

அன்னைதன் சொற்கேட் டியாரு மகக்களிப் பேறி யீதே
பன்னரும் புதுமை யென்னப் பயன்பெற வுடலம் பூரித்
துன்னிய வரிசைப் பாட்டி னொழுகிநாட் டிறமை யோர்ந்து
மன்னிய விரத நோற்பான் வழியொடு பற்றி னாரால். (௧௩)

அழிகின்ற தீமை மன்னா தறிவழி யுயர்த்தும் பான்மை
யெழுகின்ற கருணைக் கொண்ட லெழின்மணி யப்துல் காதிர்
பொழிகின்ற வமுத வாயின் முத்தினர் பாதம் போற்றி
மொழிகின்ற புகழி னோடும் போயினர் முதிர்ந்த வன்பால். (௧௪)

காரணி கவிகை வள்ளல் கதிவழி பெயர ரென்னப்
பேரணி சீர்த்தி யோடு நவநிதம் பெருகா நிற்பச்
சீரணி குழவி யோர்நாள் சிறப்பணி விளங்கத் தோற்றப்
பாரணி நிலைகள் பூப்பப் பரிவினோ டமுத தன்றே. (௧௫)

கண்மணி யனைய தோன்றல் கமழணை யாடை பாலிற்
றண்மணி யனைய தாயார் தாங்கொளும் வினையின் பண்பா
லெண்மனங் கொண்டார் வந்தங் கிருந்திலர் முனியா நின்றார்
விண்மணி விழியி னோக்கி மழலையின் விளம்பு மன்றே. (௧௬)

பெருமையி னின்ற வண்ணம் பெறற்கருந் தவத்தின் பான்மை
யுரிமையி னினிதி னீன்றீ ருயிரெனப் போற்றி நாளு
மருமையின் வளர்க்கா நின்றீ ரன்னையீ ரென்பான் மேவா
தொருமையின் முயலா நின்றீ ருஞற்றிய தகைகாண் கில்லீர். (௧௭)

வேறொன்று கருத்துட் கொண்டோர் விரித்திடுந் தீங்கை யெண்ணார்
பேறொன்று நன்றி மண்ணிற் பெரிதென வுவப்பா ரன்றோ
வூரென்று மிரவிற் றூங்கா வுருப்பமோ டடுத்த பூதங்
கூறொன்று செய்யா முன்னங் கொலையுண்டு போய தன்றே. (௧௮)

வெஞ்சின மருத வேங்கை வெருக்கொள வுருக்கொண் டண்ணை
நெஞ்சினைப் பிளந்து மேன்மை நிறுவிய ஸமந்த னானே
யஞ்சலி செய்யு மாதி யருளினைத் தெருளா தென்கொன்
மிஞ்சிய வினையி னிற்றல் விழைதரு மன்னா யென்றே. (௧௯)

தாயுடல் பூப்ப வென்றித் தந்தையார் பூப்ப மற்றோர்
மேயுடல் பூப்ப வானோர் மெய்யுளம் பூப்பப் பாடும்
வாயுடல் பூப்பக் கேட்போன் முகம்மது மஸ்தான் பூப்பச்
சேயுடல் கௌதுல் அஃலம் செவ்விதழ் பூத்த வன்றே. (௨௦)

மேனயம் விளங்க வோர்மை விதிவழி விளங்கச் செய்கைத்
தூநயம் விளங்க யார்க்குந் துதியறி விளங்க வானோர்
பானயம் விளங்க நாளும் பணிவிடை விளங்க வேதங்
கானய கௌதல் லஃலங் கனிமொழி விளங்கிற் றன்றே. (உக)

நீதமே படர நீத நிறைபயன் படர நுட்ப
வேதமே படர வேத விரிபொருள் படர வுள்ளச்
சீதமே படரச் சீத செயல்முறை படர வோங்கு
நாதமே கௌதல் லஃல மொழிநயம் படர்ந்த தன்றே. (உஉ)

காரண நடப்பக் காணுக் காட்சிக ணடப்ப வோது
மாரண நடப்ப வென்றி யரும்புகழ் நடப்ப வுள்ளம்
பூரண நடப்ப வெங்கும் புண்ணிய நடப்ப வண்மைச்
சீரணி கௌதுல் லஃலஞ் சிறடி நடத்தல் செய்தார். (உஙு)

அணிநலம் வளர நீதத் தாக்கமே வளர ஞானந்
துணிநலம் வளர மெய்ம்மைத் துதிநெறி வளரக் கீர்த்தி
மணிநலம் வளர வன்கை வருங்கொடை வளரச் செவ்வி
பணிநல கௌதுல் லஃலம் பரிவுடல் வளர்ந்த தன்றே. (உச)

வரிசைகள் சிறப்ப நித்தம் வடிவங்கள் சிறப்ப யார்க்கும்
பிரிசங்கள் சிறப்ப வல்லோன் பேரருள் சிறப்பக் கல்வி
யுரிசைகள் சிறப்ப வாழி யுயர்தவஞ் சிறப்பப் பாரி
னரசர்கள் சிறப்ப கௌதுல் லகுலமெய் சிறந்த தன்றே. (உரு)

விரதத்தையமறுத்தபடலமுற்றுப்பெற்றது.

ஆ படலம்-ஙு-இ-கூடியதிருவிருத்தம்-ந௦ச.

## ஒலிநிலைகண்டபடலம்.

### கலிவிருத்தம்.

கலித்தெழு வெண்டிரை காக்கு மாநிலம்
பலித்தெழு புகழொடு படரும் வல்லவன்
வலித்தெழு முகியித்தீன் வரிசை நாயக
ரொலித்தெழு வொலித்தகை விளக்க மோதுவாம். (க)

கண்ணகத் தருமையின் கனிந்த வுள்ளத்தி
னெண்ணகத் துயிரினி னின்ப முற்றிய
தண்ணகப் பெருமையிற் றுங்கும் வள்ளலும்
விண்ணகத் தொளிவென விளங்கு நாளுமால். (உ)

போற்றலாற் பனியடாஅப் புனித நீர்மையிற்
றேற்றலா லன்றுதன் சிறந்த வல்லமை
யாற்றலா லாள்பவ னுக்க மேன்மைக
ளேற்றலால் வளர்ந்ததவ் வெழில்கொ ளாக்கையே. (ஙு)

குழலினு மியாழினுங் குணங்கொண் டோங்கிய
மழலையுங் காரண மகிமை வல்லதா
னிழலுமிழ் குழவியின் பருவ நீங்கிமெய்
யெழிலுமிழ் மகனெனு மியற்கை தாங்கினர். (ச)

தெண்மதி யறிவெனச் செல்வ வாழ்வென
வெண்மதி யுண்ணிய மெனவ ளர்ந்தெழூஉம்
வெண்மதி செவ்வொளி வேய்ந்தமெய்யின
துண்மதி பிரிதெரி வுணர்வு பூண்டதே. (ரு)

மலியெழில் வயதிரு மூன்றின் மாமுறைப்
பொலிவெழப் புகழெழ அப்துல் காதிறெம்
மொலியினைப் பள்ளியி னோதை வைத்தனர்
அலியிபி னபீலெனு மத்தர் பாலரோ. (சு)

குறித்தன வெழுத்தொடு கூட்டுங் கூட்டமும்
பொறித்தது மற்றவும் புணர்க்குந் தன்மையு
நெறித்தறி விக்குமு னெஞ்சி னுள்ளவும்
பறித்துண ருந்திருக் கருத்தின் பண்பரோ. (எ)

பின்னிய பூதத்திற் பிறந்த பேதகந்
துன்னிய குரம்பைக டலங்கும் பல்வணம்
பன்னிய வியற்கையும் பலனு மின்னவென்
றுன்னிய தெளிகுவான் பார்வை போதுமால். (அ)

எழுதகை கடந்தொறு மியைந்த வைவகை
பழுதகன் மனங்களின் பயனும் பல்வகை
தழுவிய வோசையிற் சிறந்த தன்மையு
மொழுகுமக் கொடுசெவி யுணர வோதுமால். (கூ)

பொறிநுகர் நன்மையும் புலத்தி னுண்மையி
னெறிநுகர் கருத்துமே னிவந்து நின்றதாற்
செறியுயிர் தோத்திரஞ் செய்யும் பான்மையு
முறுதியு முணர்குவ ரோதுங் காலையே. (க0)

நிலத்துறு தாபர நிழலும் வானுயர்
தலத்துறு பறவைக ணிழலுந் தண்ணளி
வலத்துறு வானவர் நிழலும் வாழ்த்துமெய்ப்
புலத்துறு போதினுங் காவல் போற்றுமால். (கக)

வேனலி னலிவிலா அ விளையுங் கூறெழு
மேனல னறிவொடு மீறும் வள்ளற்கோன்
பானெரு வயதினிற் பரிவின் வானவர்
தேனளி யளியெனச் சூழ்ந்து செல்லுவார். (கஉ)

முழுமுத லவனரு ளொலிமுன் னீர்புவி
தொழுமுதல் வருகின்றூர் சூழு நம்பியீ
ரெழுமெழு மிடங்கொடு மென்று வானவர்
குழுமுனர் போந்துரை யன்பிற் கூறுவார். (கங)

பெரிதிடஞ் சிறூர்கொடுத் திருப்பப் பெற்றியின்
வருதுரை நடுவணி னிருப்ப வானவ
ரருகினிற் சூழ்ந்தினி திருப்ப வாதியின்
கருணையெப் பொருளையுங் காத்து நிற்குமால். (கச)

வழியினு மறிவளர் களத்து மற்றுள
மொழியினும் விநோதநூன் முயன்ற காலத்துந்
தழீஇயின ரினுந்தகை யின்மை சாருறூஉக்
குழீஇயின வானவர் காத்துக் கொள்வரால். (கரு)

தெள்ளலிற் றெளித்தெனத் தெளியும் பேரறி
வுள்ளவி னோங்கிய வொருவன் றன்னரு
டுள்ளலிற் றுலங்கிய குதுபிற் றென்னிலை
வள்ளலின் னவனென வாழி கூறுவார். (கசு)

காலமுஞ் செய்கையுங் கருது செந்துவின்
சீலமு மிருவினைத் திறனுங் கோவைகொள்
ஞாலமு நடைகொள நடத்து நாயக
மேலவ ரிவனென வியந்து போற்றுவார். (கஎ)

குணங்குறி யுரைதகாக் குப்பத் தம்பியின்
மணங்கமழ் திரைமுகம் மதுமஸ் தானுளத்
திணங்கிய நாயகர் வரிசை யின்னன
கணங்கொளு மோதிய பயிலுங் காலமே. (கஅ)

பெறுமுறை நான்மறை யன்றிப் பிள்ளைக
ளுறுமுறை விநோதத்தி னேடி யாடிய
சிறுமுறை தனின்மனஞ் செலுமுன் வானவர்
வெறுமுறை யாமென விலக்கிப் போதுவார். (கசு)

முற்றிய தொனியினுன் முன்பின் செல்கிலா
துற்றுற லான்மனத் தச்ச மூங்கலான்
பெற்றிடு மனைமடி பிரியங் கொள்வரா
னற்றவ முகியித்தீ னென்னு நம்பியே. (௨0)

தகைபயி றவத்தினர் தம்மி லியாவரு
மிகைபயில் விண்ணவர் சூழ்ந்து போற்றிய
வகைபயில் வனவுணர் வழியி னேர்ந்துள
நகைபயி லாநந்த நடன மாடுவார். (உக)

வானவர் கௌனியர் மௌனர் வேதியர்
மானவர் துறவியர் பகத்து வானவர்
கோனவ னருள்பெறுங் குத்பு நாயகர்
தூநனி மலர்ப்பத நாளுஞ் சூடுவார். (உஉ)

தண்சிறைப் புட்களும் விலங்குந் தாபரத்
தொண்சினை யும்பல வுயிருங் கான்டொறு
மெண்செறி வல்லவ னொலியென் றேத்தித்தங்
கண்செழு மணியெனக் கனிந்தி றைஞ்சுமால். (உ௩)

பரந்தெழு தோற்றங்கள் பருகும் பேரருள்
சுரந்தெழு கருணையுந் தோற்று மாவியு
மொருங்கெழு மாறென வுள்ளப் பான்மைகள்
விரிந்தெழ நம்பியும் விளங்குங் காலையே. (உச)

அன்பினுக் கோரிட மாய தந்தையுந்
தன்பெருந் தகுதியு நிலையுஞ் சால்புங்கொண்
டின்புற வளித்துய ரிறைவன் பேரருள்
பொன்பதி தனிற்குடி போயி னாரரோ. (உ௫)

பற்றிய பற்றினற் படரு மாகுல
முற்றிய சிந்தையின் முளைப்ப நன்மறை
வெற்றியு மாதவர் விளக்கு நீர்மையு
மெற்றிய தெழிறரும் பொறுமை யேந்தினர். (உசு)

எண்ணிய நயங்களு மேந்து சீர்களுங்
கண்ணிய செல்வமு முயருங் கல்வியும்
புண்ணிய நிலைகளும் பொங்கி யோங்குவா
னண்ணிய முகியித்தீ னுதர் வைகினர். (உஎ)

ஒலிநிலைகண்டபடலமுற்றுப்பெற்றது.

ஆ படலம்-எஇ-கூடியதிருவிருத்தம்-நநக.

---

## யாத்திரைப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவளர் கருணை பூத்துத் திசையெலாம் பயப்பத் தண்ணத்
தருவளர் கமலக் கண்ணி னுயர்புகழ் அப்துல் காதிர்
குருவளர் பான்மை யேற்பான் குலப்பதி ஜெயிலா னீந்தி
மருவளர் பகுதா தெய்து மானய வரிசை சொல்வாம். (க)

வேதமே மதமே தோற்றும் வீறுள பொருளே யன்ன
நாதமே யருவே துன்னு முருவமே நயங்கொண் மிக்க
போதமே தகையே வென்றிப் புகழ்ச்சியே யநந்தஞ் சூழ்ந்து
நீதமே நிலைப்ப வாக்கை நிவர்ந்தெழு மழகி னன்றே. (உ)

முறைமுறை யமரர் வாழ்த்த முனிவர்மற் றெவரும் வாழ்த்த
சிறைநிறை பறவை யோடு செறிவுயிர் பலவும் வாழ்த்த
மறையிறை கருணை வாழி வளர்ப்பமேம் பட்ட வெல்லாங்
குறைவறப் பதினே ழாண்டு நிறைதருங் கொண்டற் கன்றே. (ங)

அருமையம் பேறு பெற்ற வாண்டகை யுலகத் தாரிற்
பெருமையந் தகைகள் காணப் பிரிவுறு மக்க ளேபோல்
கருமையன் வினைத முள்ளக் கண்ணெடுந் துலங்கக் கண்டு
மிருமையின் பருவக் கோட்பா டியாரினு மொப்ப நின்றூர். (ச)

மணிவளை மலர்ந்த கஞ்ச மலர்த்தட ஜெயிலான் றன்னிற்
கணிவளங் கொண்ட வுள்ளக் காரணக் குரிசில் மெய்ம்மைத்
துணிவளர் அறபா நாளில் வைகறைப் போதிற் றாயோன்
பணிவரும் வணக்கங் கொள்வான் பாதைவாய்ப் போதுங் காலை. (ரு)

திரிவிலா மருப்பின் மென்னித் திரளுலாங் கரிய வேறேன்
றரிதினுங் கொருவி மேயா வணித்துறக் கண்டு கையாற்
பரிவுறப் புடைத்துக் காட்டிப் பருவத்தி னியல்புங் காட்டி
விரைவுற வெருட்டா நின்றார் விநோதத்தி னியைய வன்றே. (சு)

சந்தத மியற்றும் வல்ல வணக்கமுந் தவமு முள்ளீர்
சுந்தர வடிவின் மிக்கீர் தொடர்வழி யெருதின் பின்னே
சிந்தையிற் களித்து மேய்ப்பான் கருத்தெனச் சினந்து பற்றி
யுந்துவா னுதித்தீ ரேகொல் லுறுமுறை புனைதிர் மன்னே. (எ)

நீரலை யுலகிற் றேன்றி வீண்டொழி னேடி யாடுங்
காரணங் கொண்டோ வல்லோன் களிதரப் படைத்தா னன்று
சீரணி னிலையி னென்ன விடையிது செப்பக் கேட்டுப்
பேரணிப் புதுமை யெய்திப் பெயர்ந்தனர் புனித ரன்றே. (அ)

நந்தியி னுரையா னுள்ள நயந்தருங் கருத்துப் பற்றித்
தந்திரு மாடம் புக்கித் தண்ணிலா வுமிழ்ந்து வானத்
துந்துமே னிலையி னேறி யொருதிசை நோக்க வாங்குக்
கந்தர மறபா வெற்பிற் கணங்கொளத் தெரிந்தா ரன்றே. (கூ)

தணிதரும் வினையி னீங்கித் தவத்தது நிலையி னுற்றுக்
குணிதரு மனத்தின் கண்ணுற் குலாவொளி கண்ட தேபோ
லணிதரு மேலோர் கூட்டத் தருவரை யணித்துத் தோற்றக்
கணிதரு மறிவிற் றேறிக் கடிதினி னிறங்கி னாரால். (கo)

நனிதவஞ் செய்வார் போற்று நயத்தினைப் போற்றி யுள்ள
மினிதணிந் தனைபா லெய்தி யெழின்மலர்ப் பாதந் தாழ்ந்து
கனிதருங் கருணை யோடு கருதிய கருத்துத் தோற்றத்
தனிதவம் புரிவார்க் கேற்குந் தகைசில மொழிய லுற்றார். (கக)

உருவிலா தொழிந்தோ ரேனு முடலிடம் புகுவோ ரேனுங்
கருதிய முடிப்போ ரேனுங் கடலிலை கடந்தோ ரேனு
மருவிலா ரேனு மெங்கு மருவுவா ரேனுங் காணு
வருவுரு வில்லான் றன்னை யடைகிலர் ரிடைகின் றாரால். (கஉ)

வானகந் தெரிவார் நோக்கார் வண்ணிலா வொளிவை யெங்கு
மூனகந் தெரிவார் காணு ருடலகத் துருவை யின்பத்
தேனகந் தெரிவார் பாரார் திகழ்நறு மணத்தை யென்றூர்
கோனகந் தெரிவார் கொல்லோ குறிப்பெவ னுணர்வா ரன்றே. (௧௩)

நெஞ்சகத் தெழுந்த வன்மை நிலைபடுங் குணங்கள் மல்கும்
வஞ்சகத் தெழுந்து பொய்மை வழிகொள்வா ரிவைக ணீக்கிப்
புஞ்சகத் தெழுந்த மேன்மைப் பண்புணர்ந் தொழுகி யோர்மை
மிஞ்சகத் தெழுந்தார் மெய்மை வழிகொளார் வினையி னீங்கார். (௧௪)

மேல்வரு முறையு நாத வூக்கமும் விரிந்த வாவிப்
பால்வரு மணுவுந் தத்திப் படர்தரு முள்ளார் கொல்லெக்
காலமுந் தின்ன மென்னிற் கைவரற் கரிய வுண்மை
மாலுறத் தேர்ந்து பின்னர் வசங்கொள லாகு மன்றே. (௧௫)

தருமமு மதற்குண் டாய தகுதியு மதனை நீக்கும்
வருமமு மதற்குத் தொக்க வகையுமே யாக்கை கொள்ளுங்
கருமமே யென்னில் வல்லோன் காட்சிகாண் கில்லார் காணு
ரிருமையும் பயந்த பேறி னின்பமற் றடையா ரன்றே. (௧௬)

சொரிகதி ரமுதச் சோமன் சோதியுஞ் சுடரும் பல்பால்
விரிகதிர்க் காலின் றேலிவ் வுலகெனும் வீடு மின்றே
புரிகவர்க் காலு மற்றே போன்றுமே லெழுந்த வாக்கை
யுரியவே யுரிய கால முளுற்றலே தவத்தின் பேறே. (௧௭)

குணக்கலால் குடக்கே யல்லாற் கொண்டநண் பகலின் முன்னே
யிணக்கலாம் வினையின் பண்பே யேகிடிற் கதிரோன் மீளல்
பிணக்கலா வுயிர்கட் கேதும் பிறங்குமோ கறங்கு நெஞ்சை
வணக்கலாம் வணங்குங் கால மாறிடிற் பிடிப டாதால். (௧௮)

நீரினை யுகுதன் மேக நிலத்தினி னெவையும் பைங்கூழ்ச்
சீரினைப் பெறுதற் கன்றே சிறப்பழி வித்தற் காமேல்
மாரியு மாரி யன்று மண்ணுமே மண்ணு மன்று
காரியன் கருத்த னன்று கைவரு பலனி லாதால். (௧௯)

சீர்மையே பெருமை யேமெய் செப்பலே யொப்பு மியார்க்கு
நேர்மையே கொள்வார் கொண்ட கருவியி னிலைமை யல்லாற்
காரணப் பொருளிற் கேதுங் கலம்பக முளதோ வென்றூற்
காரியத் தமைந்த பேறு காட்டுவ ததனை யன்றே. (௨௦)

நிலைத்தன வென்னத் தோற்று நிலையிலாப் பொருள்க ளுளுங்
கலைத்தன வேனு மாக்கை கலங்கிடா அக் கருத்தி னுட்ட
மலைத்தனை வியற்றும் பன்மை வழிவரா தொருமை யுன்னிக்
குலைத்தன வற்றார் வேதக் கொற்றமே யுற்று ரன்றே. (உக)

வன்மையி னுக்கை யேனும் வழிநிலை தளர்ந்து நெஞ்சந்
தன்மையி னமைந்து மேலாந் தகுதிக ளிழந்து தோற்று
முண்மைகள் வெளிப்ப டாது தன்னிலை யுணரா தாகு
நுண்மையி னறிவொன் றாக நோற்றிலாத் தன்மை யாலே. (உஉ)

வாய்மையே யிஃது நன்கின் வருபய னிஃது நெஞ்சத்
தூய்மையே யிஃது தக்க தொழினய மிஃது வன்பிற்
காய்மையே யிஃது மேன்மைக் கதிபல னிஃதா மென்னுஞ்
சேய்மையி னறிவே யென்னிற் றேடுவ வேறு முண்டோ. (உங)

செறிபுனற் குணமு மண்கால் செவ்வழற் குணமு மல்கி
யுறுகுணம் பலகோ லத்தி லொருகுண மிவற்றிற் காய
நெறிகுணங் காட்டு முண்மை நிலக்குணங் காட்டல் வல்ல
வறிகுண மென்னி லியாவ ரக்குணங் குணங்கொள் ளாரே. (உச)

நீரின பறந்து நின்ற விலங்கின நிலையி னின்ற
வூர்வன வசேத னத்தி னுயிரென வுணர்தற் பாலாம்
பேரின வமரர் தாங்கும் பெருமையின் மக்க ளேனு
மோர்வன வறிவி லாதா லுறுப்பின மிருந்து மாதே. (உரு)

ஈதலும் புகழு மற்ற வியல்புங்கோ ளாக்கை வேண்டு
மோதிய பொறிபு லாதி யொன்றினு மொன்று தொன்றி
வாதியா அு காணுஅு வேக மயமென விளங்கா நிற்குஞ்
சோதியும் பரிசுங் காட்ட றாயறி வன்றி யுண்டோ. (உசு)

எழுத்தெனக் கிடந்த புள்ளி யிரண்டுமூன் றுென்று மென்ன
வழுத்திய தொகையும் பேறு மன்னிய மீனின் கூட்டஞ்
செழித்தவா னன்ன மெய்யிற் சிறந்தவா னகத்தின் சோதி
கொழித்தெழு தீபங் கொள்ள லறிவினோர் கொள்ளார் மற்றோர். (உஎ)

நீட்டலு முடக்கல் குந்த லிருத்தலு நிமிர்த லொன்றைக்
கூட்டலுங் குலைத்தல் கொட்ட லெடுத்தலுங் கொள்ளல் பார்த்தல்
கேட்டலு முகத்தல் பேசல் குறித்தலு முள்ளல் சிழ்மே
லுட்டலு நினைவே யென்னி லறிவின்றி நிலைபா டுண்டோ. (உஅ)

சிறியவர் முதலா யாருஞ் சிறப்பொடு போற்றல் மேன்மைக்
குறியினர் குறித்த லெண்ணங் கொள்ளலு மிறந்தோர் தாமு
நெறிபயன் பெறுதல் தந்தை தாயரு நேர்மை யாத
லறிவுறு மைந்தர் தம்மா லல்லவவ் வறிவி னன்றே. (௨௯)

தகாநிலை நீத்தன் மெய்ம்மைத் தவநிலை யாக்கல் வஞ்ச
மிகாநிலை பெற்று நிற்றல் வகைவகை விளங்கா நிற்குந்
தொகாநிலைப் பதவி நன்மை தொகுநிலை சூழ்ந்த பேர்க்கும்
பகாநிலை யருளி யார்க்கும் பயன்படு மறிவே யாமால். (௩௦)

வெருளலைச் சுழியிற் சிக்கி வெருவலைத் தாங்கித் தேரு
மருளலை முங்கி னூர்க்கு மறுகலைத் தவிர்ப்பா னாகத்
தெருளலை மரக்க லம்போற் சேர்தலை யறிவிற் செல்வா
ரருளலை யணிந்தா ரன்றோ பேதமை யகன்று ராமே. (௩௧)

வாரணத் தாடை பூண்ட மாநிலந் தாங்கும் வண்ண
மாரணத் தறிவு பூண்டோ ராக்கமே யுரைக்கற் பாலோ
பூரணத் தகமு மொன்றுப் பொருந்திய தொழிலுஞ் சொல்லுங்
காரணத் துறையுங் கொண்டு காணிய மாக்க ளன்றே. (௩௨)

கண்படு காட்சி கொண்டுங் காதியை கேள்வி கொண்டுந்
தண்படு சுவைநாக் கொண்டுந் தவழ்கடி துண்டங் கொண்டு
மெண்படுங் கருத்துக் கொண்டு மிருவினைத் தொடர்பு கொள்ளார்
வண்படும் பாதங் கொண்டால் வழிபடும் பாதை யாமே. (௩௩)

நகைத்தலே யுலக மென்னு நவையுளர்க் களித்து வேறும்
பகைத்தலே யில்லா மெய்ம்மை பாவிப பொருளைப் பற்றி
யகைத்தலே யின்றி நின்றோ ரவர்பணி கொண்டோ ரல்லார்
தகைத்தலே தகைத்துக் கீழாந் தழற்குமே லழிவ ரன்றே. (௩௪)

காமமே மதமே யாண்மைக் கருமமே யவய வத்தி
னாமமே நிவப்ப நின்றோர் நாட்டிய நிததி யோக
நேமமே பெறுவார் மேலோர் நெஞ்சகம் பொருந்து வாரேல்
வாமமே யனைய நீதே வழியெனின் மறத்த னன்றோ. (௩௫)

தன்னகத் தெழுந்த நாட்டந் தனிற்றகா தொருவி மெய்மை
துன்னகத் துணர்வுங் காட்டுந் துணையுணர் விரண்டு மொன்றாய்
மன்னகத் துணர்வு கொண்டோர் மலர்ப்பத நெஞ்சங் கொள்ளார்
பன்னகத் துணவா யங்கிப் பாழ்ங்குழி கொள்வா ரன்றே. (௩௬)

படர்ந்தெழுங் கான னீரிற் பயன்பெறற் குழலு மான்போ
லடர்ந்தெழு முலக போகத் தவாவிய கருத்தி னின்றோர்
கடந்தெழுங் கடந்தோர் பாதங் கடந்தில ராகி னின்பந்
தொடர்ந்துளங் களிதூங் காவோ தோற்றுவ கேடா காவோ. (௩௭)

சொல்வழி பலவுங் கண்டு தூய்வழி யுள்ளங் கொண்டு
செல்வழி தவாது சென்று திசைவழிந் தொழுகுஞ் சோதிப்
புல்வழி புல்லிக் காணப் புணர்தவ முஞற்று மிக்கோர்
நல்வழி வேண்டி நிற்ற னும்பெறும் பேறு மன்றே. (௩௮)

வாரிட மனைத்து மொன்றே மன்னுயிர் பலவு மொன்றே
சேரிட வினைக ளொன்றே செய்பவன் றானு மொன்றே
யாரிட மூன்று மொன்றே காலமு மஃதே யென்ன
நேரிட நின்ற வல்லோர் நிருமித்த லொன்று மொன்றே. (௩௯)

எண்டிசை விளக்கி நின்ற சுடரினை யெழுவான் றன்னைக்
கண்டிசை காலை வல்லாக் கையினைக் கட்டி வாயைப்
புண்டிசை யாது மூடிப் புணர்மனந் தெளிய வல்லார்
வண்டிசை மலர்த்தா ளன்றி மாறுரை வேறு முண்டோ. (௪௰)

ஒண்சிறை யசுண மியானை யொளிர்சிறை யளிப தங்கம்
தண்சிறை மச்சங் காதாற் சடத்தினன் மனத்தாற் கண்ணு
லுண்சுவை யதனு லிவ்வைந் துடலழி வித்த லென்ன
வெண்சிறை கொள்ளார் வார்த்தை யிருஞ்சிறை யெவர்க்கு மாமே. ()

இனையன மேலோர் தம்பா லியல்பினே டொழுகி மெய்ம்மை
புனைவன மேன்மை யெல்லாம் புணர்ப்பன வறிவு கேட்பான்
வனைவன பகுதா தென்னும் வளநகர் செல்வா னவ
றனையென துள்ளங் கொண்டேன் விடையரு டருக வென்னு. (௪௨)

மனத்துறு நாட்டத் தோடு வழியொடு நந்தி விண்ட
தனைத்தையும் வகுத்துக் கூற வாண்டகை வதன நோக்கிக்
கனத்திரு டேங்குங் கூந்தல் கதிர்மணி யனையா ருள்ளந்
தனைத்தெரி யாது கண்ணுற் றுரைநீ ரொழுக்கா நின்றார். (௪௩)

ஆவியி னறிவி னின்பத் தாசையி னழகின் மிக்க
வோவிய மென்னத் தன்பே றுருவெடுத் தென்னப் போற்றும்
பூவியன் மணியி னிற்கும் புதல்வனே தனக்கு மென்னு
மேவிய துயரந் தேறு தெழுவெழு மென்மே லன்றே. (௪௪)

பற்றிய கார ணத்தின் பன்மையாற் படைப்பின் பாலால்
வெற்றியும் பேறு நல்க விளங்கிய மைந்தர் தாமே
நற்றுறை செல்லு மென்னு நாட்டமே நாளு நாளும்
பெற்றநம் பகுதி யென்னு பேதமை யகற்றி னாரால். (சரு)

மெய்த்தவத் துயர்ந்த தந்தை மேலுல கடையுங் காலை
வைத்ததோர் பொருளிற் பின்னோர்க் குரியன நீக்கி மற்ற
மொய்த்தவர் மாடை நாற்பான் றன்னைக்கை மூலத் தின்கீழ்
தைத்தனர் கவசத் தூடு தகுவன சேமத் தன்றே. (சசு)

மின்னொளி விரிக்குந் தூய மேன்மையம் போர்வை தன்னைப்
பொன்னொளி விரிக்கு மெய்யிற் பொலிதரப் புனைந்து நாளுந்
தன்னொளி விரிக்க வந்த தவத்தினை யகனா நோக்கி
மன்னொளி விரிப்பத் தாயார் சிலமொழி வகுக்க லுற்றார். (சஎ)

நாவினுற் பகர்தன் மேன்மை நயனத்தாற் காணல் கேட்ட
லாவியிற் கொள்ள லியார்க்கு மறிவினே டிணக்க மாதன்
மேவிய தகையி னிற்றன் மேலவர்க் கருமை செய்தல்
பாவினை தகைய நின்றன் பழவினை யகலு மன்றே. (சஅ)

இகழ்ந்தவ ரேனுங் கோபித் தெதிர்ந்தவ ரேனும் வன்சொ
னிகழ்ந்தவ ரேனும் வஞ்ச நெஞ்சின ரேனு நன்மை
யகழ்ந்தவ ரேனு நோக்கா தரும்பொறை யாக்கங் கொள்வார்
புகழ்ந்தவ ராகி நாதன் பொருத்தங்கொள் பவரு மாவார். (சகூ)

பரவர்முற் படினும் பேதப் பதகர்முற் படினுஞ் சூழுங்
கரவர்முற் படினும் போர்செய் களத்தின்முற் படினும் வாடு
மிரவர்முற் படினும் வாய்மை புன்மையின் வாழ்க வெவ்வெவ்
வுரவர்முற் படினு முள்ளத் தொருமைமுற் பதியு மன்னே. (ருய)

செய்கொலை நீங்கும் வஞ்சச் சில்வினை நீங்கு நிந்தைப்
பொய்களை வறுதி மாறல் புறமுத லெவையு நீங்கு
முய்கதிக் குரிய செய்கைக் குதவியுண் டாகுந் தூய
மெய்கருத் துடையார்க் கென்னிற் பற்றுதல் வேறு முண்டோ. (ருக)

உறுதியே யுள்ளம் பூப்ப வுயரறி வூட்டி நெஞ்சம்
பொறுதியே விளையு மன்னை புகும்வழிக் குரிய நல்கி
யறுதியே கூறிச் செவ்வி யானன முகந்து முத்திப்
பெறுதியே காந்த னேயென் றிறையவன் புறத்திற் சேர்த்தார். (ருஉ)

கண்ணெழின் மணியே நெஞ்சங் கனிந்தினி தொழுகுந் தேனே
தண்ணெழின் மதியே யென்றன் றவப்பலன் மகவே நின்னை
விண்ணொடு மண்ணுங் கோன்மை விளக்கிய நாயன் பக்க
லுண்ணெகிழ்ந் தடைக்க லத்திற் பணையமா வுதவி னேனால். (ருந)

செறிமரப் பொதும்பின் ஞாங்கர் சினவிலங் குலவு ஞாங்க
ரெறியலைப் புனலின் ஞாங்க ரிணையிலா வெற்பின் ஞாங்கர்
மறிமனக் கயவர் ஞாங்கர் மாக்களின் வலியர் ஞாங்கர்
பெறினுமோ ரிடரு மெய்தா தோம்புமால் பெரிய னென்றார். (ருச)

தண்ணிலா வொழுகுந் திங்கள் சாரினு நாணு நின்றன்
வண்ணிலா முகத்தின் றோற்ற மகிழ்பெறக் கண்ட தீதே
மண்ணெலாம் போற்று மைந்தா மருசறி னின்னை யன்றிக்
கண்ணெலா நிறையக் காண லினியிலை காட்சி யென்றார். (ருரு)

உருகிநின் றினைய கூறி விடைகொடுத் தனுப்ப வுள்ளம்
பெருகிய களிப்பி னன்னை மலர்ப்பதம் பேணித் தாழ்ந்து
கருதிய நாட்டம் பெற்று லெனத்திருக் கருத்தி னூன்றி
மருதிகழ் மனையி னீங்கி யாத்திரை வழிகொண் டாரால். (ருசு)

மருவிய சீர்த்தி யோங்கு முகம்மது மஸ்தா னென்போன்
வருமனை நிலைத்த செல்வ மலிகின்ற வளமை யென்னப்
பெருகிய மணிமா டத்திற் பிதிரொளி பிறங்கும் ஜைலான்
திருநகர் வீதி போந்தார் செய்யிது முகியித் தீனே. (ருஎ)

விரைதரு காலை யொத்த வெம்பரி மணிப்பொற் றேர்கள்
வரையினை யொத்த மேக வனப்பினை யொத்த தந்தி
திரையினை யொத்த சேனை சிங்கத்தை யொத்த வீரர்
தரையினை யொத்த வீதி தபனனை வள்ள லொத்தார். (ருஅ)

அணியணி பேரி யோதை யருமறை யோதை மாறாப்
பணியணி முதியோ ரோதை பாவிய விருவர் வீதி
மணியணிப் பூண்கன் மற்றை மாடையோ டொருங்கு மாற்றுங்
கணியணி வணிக ரோதைக் கடைமறு கெவையு நீங்கார். (ருகூ)

வரிசையிற் சிறந்த ஜைலான் வளநகர் நகரைச் சூழ்ந்த
புரிசையும் புரிசை சூழ்ந்த பொருதிரை யகழு நீந்தி
யுரிசைய மறையின் றீஞ்சொ லோதுநாத் தழும்பு கொண்ட
வரசரு முள்ள நாட்டத் தன்பொடு நடந்தா ரன்றே. (சூ0)

யாத்திரைப்படல முற்றுப்பெற்றது.

ஆ படலம்-அ-இ-கூடிய திருவிருத்தம்-நகூச.

## வாய்மைவிளக்கியபடலம்.

### கலிவிருத்தம்.

குலகிரி யேந்துபார் பொறைகொண் டோங்கிய
வலகிரி யனையதோள் வள்ளல் வல்லவ
னலகிரி யமரரு மன்பிற் சூழ்தரப்
பலகிரி மதிற்பெரும் பதியை நீங்கினர். (க)

பொன்னவ மணிபல பொருளி னோங்கிய
பன்னகர் புகழ்பகு தாதுக் கேகுவான்
மன்னிய பண்டமாற் றிரிய மாக்களாத்
துன்னினர் தமைவழித் துணையிற் கூடினர். (உ)

எடுப்பரும் பொருளினை யியங்கு மாவியைத்
தொடுப்பருங் கதியினைத் தூய காட்சியைக்
கொடுப்பதோர் பொருளெனுங் கொள்கை தோற்றிடா
தடுப்பருந் தமியரி னடுத்துப் போயினர். (ங)

அயர்பெறும் புவிபொரு ளனைத்து நீத்துநன்
குயர்பெறுந் தகையறி வோது வானெனப்
பெயர்பெறு முளத்தினிற் பேத வேற்றுமைத்
துயர்பெறு தொருவனைத் துணைகொண் டோங்கவே. (ச)

செழுமணி வளையொடு சினந்து சேதகத்
துழுநெடுங் கயலின முகளும் வாவியுங்
கொழுநறு வுகுமலர்ப் பொழிலுங் கொண்டுயர்ந்
தெழுநில வளமெலாங் கடந்திட் டேகினர். (ரு)

பண்ணுடை வண்டினும் படர்கொள் சோலைசூழ்
தண்ணுடை பலபுறஞ் சால மாமணிக்
கண்ணுடைக் கரும்பது கழனி மொய்த்ததோ
ரெண்ணுடை நகர்கம்தா னெல்லை நீந்தினர். (சு)

தேனெடு மலர்கனி செறியக் காருலாங்
கானெடு குழலிசை கலைப்ப வஞ்சிய
மானெடு மறிகளு மல்குங் கான்சுனை
மீனெடு பருந்துலா வெளியு நீந்தினர். (எ)

குரவுடன் காருடை குறிய கள்ளிமே
லரவுகள் வெம்பர லழற்றுந் தீச்சுரத்

துரவருங் குழுக்களு முள்ளந் துன்புறா
விரவிய மனத்தொடு விழைவி னேகினார். (௮)

பசைதரா திடர்படு பாலை வேகமே
விசைதரு மாற்றிடை யேகுங் காலையோர்
திசைதரு துகள்வெளிச் செருகி வெங்கதிர்
மிசைதரத் தோற்றிய வெருவ றோற்றவே. (௯)

சாபத்தி னெழுஞ்சரந் தனினும் வேகவெங்
கோபத்திற் கனைத்தெழு கோர மாவினர்
பாபத்திற் றலைப்படு பழிகொள் சூறையிற்
றாபத்தி னறுபது சண்டர் தோன்றினார். (௧௦)

சொட்டைவே லத்திரஞ் சூலங் கப்பணம்
பட்டையந் தண்டொடு படர்ந்து கானுலாங்
குட்டியுங் கலையுமான் குலமு மாழ்குறக்
கட்டிய புலிகளின் கவசம் பூண்டனர். (௧௧)

தட்டின ரதட்டினர் சாரி வந்தனர்
வெட்டினர் மறித்தனர் வெருட்டி னார்கனன்
றொட்டினர் பிடித்தன ருருமிற் சீறினார்
கட்டினர் பொருளெலாங் கவர்ந்து கொண்டனர். (௧௨)

தொடர்ந்தவர் பொருளெலாஞ் சூறை யாடினார்
படர்ந்தொரு திசைபுறம் பதியப் பல்வினை
யடர்ந்தவ ரயர்கொள வயர்ச்சி யாவையுங்
கடந்தநங் கடவுள்முன் னொருவ னெய்தினான். (௧௩)

தைத்தடை செருகிய போர்வை தாங்கிய
மெய்த்தலத் தேழையாய் வெருவல் நின்னது
பைத்தலத் தெப்பொரு ளுளது பால்பெற
வுய்த்திடா யென்னநம் வள்ள லோதினார். (௧௪)

விரிகதிர் மணிபல விளங்கு பூணகை
யெரிகதிர் நிதிப்பொரு ளல்ல வென்னிடஞ்
சொரிகதி ரிருபதி னிரட்டி சொன்னத்தின்
புரிகதிர்க் காணமுண் டென்று பொய்யிலார். (௧௫)

உறுபொரு ளெவனென்பா லுதவு வாயெனக்
குறுகலன் கேட்பமெய் கொண்ட போர்வையு
ளிறுகுகை மூலத்தி னியைந்த தாண்டெனப்
பெறுமுறை யாசிறை பிரித்துக் கூறினர். (கசு)

கையிடத் தன்றுடற் காக்கும் போர்வையிற்
றையிடத் துளதெனச் சாற்ற லேநகை
செய்யிடத் துளதெனத் திரிந்து போயினன்
பொய்யிடத் துண்மைகள் புகாது மாறென. (கஎ)

விடுத்தபின் மற்றொரு வீரன் வேகமோ
டடுத்தன னேழைநின் னகத்தின் யாவுள
படுத்தியென் னலுமுயர் பயன்கொ ணுயகர்
தொடுத்தமுன் சொல்லினை யிவற்குஞ் சொல்லினர். (கஅ)

இருநிதி பெங்ஙன மீதி யென்னவவ்
வருநிதி போர்வையி னகத்தி னென்னநந்
திருநிதி நாயகர் செப்பப் பற்றிலாச்
செருநிதி மனத்தினன் சிரித்துப் போயினன். (கசு)

மீண்டவ ரிருவருஞ் சூறை வேட்டையிற்
கூண்டவர்க் கிறைமுனங் குறுகி மாதவம்
பூண்டவ ருரையினிற் புதுமை தோற்றிட
வாண்டவ ருரைத்தன ரவனுஞ் சொல்லினன். (உ0)

முன்னிய நீவிர்முன் மொழியும் வாய்மையி
னன்னவன் றனையிவ ணழைத்து வம்மெனச்
சொன்னயத் தொடுவிரைந் துரைத்துத் தூயுள
நன்னய நாதரைக் கொண்டு போயினர். (உக)

கொடியவெஞ் சூறையிற் கொண்ட பல்பொருள்
படியவாம் பாகத்திற் பகுக்கும் போதினில்
வெடிகுரன் மறவரின் வேந்தன் முன்னர்நம்
மடிகளு மெய்தின ரயர்வு சிந்தவே. (உஉ)

அருளடை விழிகளு மலர்ந்து பூத்தெனப்
பொருளடை முகமுஞ்சீர் புனையுங் கைகளுந்
தெருளடை யுள்ளமுந் திகழ்ந்த சோதியை
யிருளடை கிடந்தவ னெதிர்த்து நோக்கினன். (உங)

கண்டவ னிவர்கள்முன் கனகக் காசுக
ளுண்டென திடத்தினென் றுரைத்தி யாவென
மிண்டொடு வினவினன் மெய்யென் றூண்டகை
விண்டன ரெவனென விளக்கி னனரோ. (உச)

பொதிந்தவிப் போர்வையிற் பொருகை மூலக்கீழ்
வதிந்துதைத் துளதென வள்ளல் கூறலு
மதந்தரு சிந்தையன் மருங்கி னூர்தன்ம
யிதந்தர வெடுத்திரென் றேவி னனரோ. (உரு)

மின்னென மிளிர்திரு மேனிப் போர்வையிற்
றுன்னிய விடத்தினிற் சோதித் தெம்மிறை
சொன்னசொல் லெனவொளிர் சொன்ன நாற்பது
முன்னின்வைத் தனரவன் முரணற் றேகவே. (உசா)

வெவ்விழி குளிர்தர விழித்துப் பாதகத்
தெவ்வடை மனநிலை செழித்து மூழ்வினை
யவ்விய மொழித்துல களிக்கு நாதர்முன்
செவ்விய முறையினே டிதனைச் செப்பினன். (உஎ)

வேற்றுரு நோக்கிலம் விதன நோக்கிலந்
தேற்றுரு நோக்கிலந் தீமை நோக்கின
மாற்றுரு கவலைய மெமர்முன் னுபினர்
சாற்றுரு மொழியெலாஞ் சரத மல்லதே. ((உஅ)

கவ்வையம் புன்னிலக் கருத்தர் காகதர்
தெவ்வர்வஞ் சியர்பவத் தீயர் பாதையில்
வவ்வுவ ரிவர்கள்முன் வாய்மை கூறுவா
ரெவ்விடத் தினுமிலை யெழில்கொண் மேனியாய். (உகூ)

இத்திறத் தவர்முனிக் களத்தி னெய்த்திடா
தத்திறத் துண்மைநீ யறையுங் காரண
மெத்திறத் தினதென விசைப்ப வேத்திய
கைத்திறத் தொலியுல்லா விளக்கிக் காட்டினர். (ஙூ0)

கைவினை யில்லவர் கருத்து வேறுளர்
பொய்வினை முயல்பவர் புந்தி கேடுளர்
செய்வினை செய்பவர் நரகிற் செல்பவர்
மெய்வினைப் பொருளென வேண்டி லாமையால். (ஙூக)

எத்தலத் தாயினு மெவர்கள் பாலினு
மெத்தொழி லிடத்தினு மெவைவந் தெய்தினு
முய்த்திட லுண்மையா லுரைத்தி யென்றருள்
பொய்த்திடாத் தாயர்சொ லுறுதி பூண்டதே. (௩௨)

பேறொடு மானமும் பெயருங் கல்வியும்
வீறொடு தகுதியும் புகழு மேன்மையி
னூறொடு மிருமையு மன்னை தஞ்சொலின்
கூறொடு நிற்குமேல் வேறு கொள்வமோ. (௩௩)

அன்னைசொன் மறுத்திடி லனைத்து மின்றிமன்
பின்னையுந் துன்பமுந் துயரும் பின்னுமா
லென்னையோ பேனல்மற் றிதனி னுதனும்
முன்னையான் மொழிந்தன னென்று முற்றவே. (௩௪)

கூறிய நன்மொழி செவியிற் கொண்டுமா
சேறிய விடமெலா மெதிர்ந்து நீக்கலாற்
றேறிய வறிவெழுந் துணர்வு செய்யவுள்
ளூறிய புனல்விழி யுகுத்திட் டானரோ. (௩௫)

நன்னிலை வல்லவ னடத்துந் தன்மையாற்
றன்னிலை யினில்வருந் தண்மை யோர்ந்துளத்
துன்னிலை சஞ்சல முழற்ற வோங்கிய
முன்னிலை நாதர்முன் மொழிவ தாயினன். (௩௬)

படைத்தவன் சொல்லன்று பலன்க ளும்பெறக்
கொடுத்தவர் சொல்லன்று குளிர்ந்த வுள்ளத்தா
லெடுத்தவர் சொல்லன்றீன் றெடுத்த தாயரின்
றொடுத்தசொல் லேயிது தோற்றத் தாயதே. (௩௭)

அன்னைசொற் பொருளென வாக்கம் பெற்றவர்
பின்னைசொற் போற்றலிற் பேச வேண்டுமோ
வென்னைசொற் றிறனிலா துறுதி யில்லவர்
முன்னைசொற் பயன்கொளல் முறைதி றம்பினர். (௩௮)

தாயுரை யிகழ்ந்தனன் றந்தை மெய்க்குரு
வாயுரை யிகழ்ந்தனன் வல்ல நாயகன்
றாயுரை யிகழ்ந்தனன் றாதர் நந்நபி
யாயுரை யிகழ்ந்தனன் பாவி யாயினேன். (௩௯)

வல்லவன் சொல்லொடு வகுத்த நற்பணி
யில்லவ ளுயுமிக் கொடிய செய்கையிற்
புல்லவ ஞகிய பாவி போயினி
நல்லவ ளுதலெப் பான்மை நாதனே. (௪0)

குடிகளின் பகைமையு முதியர் கோபமு
நெடியவ ஞணையி னேருந் தண்டமும்
படிதரா தாள்வதும் பார பாரமெம்
மடிகளென் றழுதிணை யடியைப் பற்றினன். (௪௧)

பொய்கொலை களவொடு புறமும் வஞ்சமுஞ்
செய்கொடுந் தொழிலெலாஞ் சிதறி யோடுவான்
மெய்கொடுத் தாக்கிய வள்ளல் மேன்மையின்
கைகொடு தாங்கலுங் கண்ணின் வைத்திட்டான். (௪௨)

கைதனைப் பிடித்துளக் கருத்தி னச்சமுற்
றுய்தரு மொழியினே டுறுதி சொற்றுமுன்
கொய்தவை யொழிதரக் கொளுந்தெள பாவினைச்
செய்துநேர் வழியினிற் சிந்தை மீண்டனன். (௪௩)

இளங்கதிர்ப் பருதியி னிமஞ்சென் மாறென
வளங்கெழு வள்ளலாற் பவங்கண் மாறிய
வுளங்கொடு குளந்தரு நோக்கி னேடெதிர்
களங்கற நின்றனன் கள்வர் மன்னனே. (௪௪)

நாயகக் கடவுளி னிலையு நன்னெறி
மேயகத் தலைமைய னிலையு மெய்மைசான்
ருயகத் தோடுமற் றவரு நோக்கினர்
தீயகச் செயலெலாஞ் சிந்திப் போதவே. (௪௫)

புன்மைக்கு நீரெனிற் புகுந்த விப்பய
னன்மைக்கு நீரென நவின்று மன்னவன்
சொன்மைக்கு நிலையினைத் தொடர்ந்து வள்ளலின்
பன்மைக்கு மொருமைக்குங் கரத்தைப் பற்றினர். (௪௬)

இருமையும் பயன்றரு மினிய வாய்மையைப்
பெருமையி னறைந்துசெய் பிழைகள் போக்குவா
னொருமையி னிலைத்தெளபா வுறுதி பூண்டவ
ரருமையி னன்னெறி நடவ ளுயினர். (௪௭)

திறந்திகழ் முகம்மது நபிதந் நேர்வழி
திறந்தர வெமரைவெந் தீமை யிற்படா
தறந்தராக் காத்ததற் கருமை யாதென்கேஞ்
சிறந்தன வாதியின் சேமத் துள்ளவே. (சஅ)

நற்குல நாயக குத்பு நாயக
சற்குண நாயக தவத்தி னுயக
கற்குநல் லறிவளர் கருணை நாயக
பொற்புயர் நாயக வென்று போற்றினர். (சகூ)

சிந்திய மாக்களைத் திரட்டி வவ்விய
முந்திய பொருளெலா முறையி னல்கிநல்
வந்தனை யொடுபொ றுப் பித்து வண்கரந்
தந்துயர் சலாஞ்சொலி யொருமை தாங்கினர். (ரு௦)

தருங்கதி நாயகர் தம்மை வாழ்த்திநன்
கொருங்கருள் பணிவிடை பெற்று ணுண்மையான்
முருங்கழன் மூழ்கிவே றுருக்கொண் டாரென
வருந்திசை யேகினர் மறஞ்செய் வேலினர். (ருக)

முதலணி கரமலர் முகந்து நேர்வழி
நுதலிய மேலவர் செல்ல நூன்மறைத்
ததலிலை யாத்தவ நாதர் மற்றவர்
புதலலர் தந்நெறி பற்றிப் போயினர். (ரு௨)

நேரொடுநிற்பவர் தம்மைச் சேர்ந்தவர்
சீரொடு மேன்மைகள் சிறப்பி னெய்துவார்
பேரொடு மின்னல்போல் பேறு கொண்டுநன்
னீரொடு மியாவரு நெடிது போயினர். (ருங)

வாய்மைவிளக்கியபடலமுற்றுப்பெற்றது.

ஆக படலம்-கூ-க்கு-கூடியதிருவிருத்தம்-சாசச.

# பகுதாதுபுக்குபடலம்.

கலிநிலைத்துறை.

மதியின் மிக்கவர் முறைமுறை மலர்ப்பத மிறைஞ்சச்
சதியின் மிக்கவர் தம்வினை யகன்றுயர் தவத்திற்
றுதியின் மிக்கவ ராகுவான் றேற்றிய வொலிமார்
பதியின் மிக்கவர் புடைதரு பலரொடு போந்தார். (க)

தகைய செய்கையு மருமையு மார்வமுந் தாங்கித்
தொகைய மாக்களும் பலன்பெறத் தொடர்நெறி யெல்லா
மிகைய வாகவெவ் வனமெலா மேன்மைய வாக
நகைய வாகமற் றிடமெலா நடந்தனர் செம்மல். (உ)

தண்ணு லாமல ரருவியஞ் சாரலுங் கழையின்
கண்ணு லாமணிப் புறவமும் பலபல கடந்து
விண்ணு லாவிய புகழென வெண்புயன் மதிலின்
கண்ணு லாவிய பதிபகு தாதினைக் கண்டார். (௩)

வேறு

பொறிநிறைந்தவுரு வண்டினங்களிசை
பொங்குதண்டுளிய செங்கரு
வெறிநிறைந்தகம லாசனத்தினன
மேயமன்னுயிர்க ளோம்புவான்
குறிநிறைந்தவொலி குத்புநாயகர்கு
லம்பெறுந்தகையி னெய்தினர்
நெறிநிறைந்தபுகழ் நகர்நிறைந்ததென
நெகிழுளன்பொடுவி ளக்குமால். (ச)

தூயவெண்சிறையி னுரையஞ்சிய
துடித்தெழுந்தகய ருக்கலான்
மேயமேதிக ளுழன்றொலிப்பவெறுழ்
வெங்கராவெருவி மோதவாங்
காயவன்கமட மோடியுட்பதிய
வாண்டெழும்பணில வோசையின்
சேயுயர்ந்தபுய லாடிமேய்ந்தலவு
சிதவாயகழி நோக்கினர். (ரு)

எண்ணளக்கரிய மெய்த்தவத்தர்மதி
யென்னமேயினி தூனமூந்துநீள்
விண்ணளக்கவுயர் கேதனங்கள்பல
மேடைவெண்புய லளக்கவு
மண்ணளக்கரிலே யெண்டிசைப்புற
மதித்தளக்கமுக வாயெலாங்
கண்ணளக்குமதி னற்புகழ்க்குரிய
கண்ணளக்குமென வோங்குமால். (சுா)

நீர்முகந்தபுயன் மேயவெற்பென
நிவந்தகன்னிமதில் வாயிலார்
பார்முகந்தகட லாமெனப்பெருகு
மாக்கள்பார்வைபய னேபெறச்
சீர்முகந்ததவ நாயகக்குரிசி
லுட்புகுந்தனர் சிறப்புலாந்
தார்முகந்நகர் மாதினன்முகச்
ரோருகத்திலத மென்னவே. (எ)

ஏதமற்றமணி யாமெனத்திகழு
மேமமென்னமர கதமெனக்
கோதிலெப்புறமு மாகவில்லினொளி
கோலமேய்ந்துபல வரைகளிற்
றீதொழித்துநிறை பொருளுகுத்துவளர்
திருவுலாவியனபந்தியின்
வீதிமொய்த்தநெடு மாடமெங்கினும்
விளக்கெனக்குரிசி லெய்தினர். (அ)

கோடிகோடிய மணங்குளிர்ந்தகுறை
யாதுவீசவுயர் வண்கொடி
யாடியாடியசை யாதுநிற்பநிறை
யன்னமேமுதல் பொருளெலா
மோடியோடியெளி யோர்க்களிப்பகனி
யுறவினுளமி கைப்பநேர்
நேடிநேடிமறை நீதிநாயகர்வ
ரும்படிக்கணிக ளொத்தவே. (கூ)

செல்வமங்கல முழக்கமுங்கடை
சிறந்தவென்றிமுர சோதையுங்
கல்வியிற்பெருகு வேதமோதிய
கனிந்தவின்சுவையி ஞதமு
நல்வினைக்குரிய செய்கையோலமுநி
றைந்தமாநகர மேன்மைகள்
புல்வதற்குளப லன்படைத்தனென
போலுமோங்கவிறை யெய்தினர். (௧௦)

பொங்குவாருதியி னூடெழுந்தபொருள்
புயலளாவுமலை படுபொருள்
கொங்குபிர்த்தகட மீதினும்பொருள்
குளிர்ந்ததண்ணடை தரும்பொருள்
பங்கிலாததிணை யிற்பலன்கொள்பொருள்
பலவுமங்குளவும்வரைவிடா
தெங்குமன்னுவதி னற்கடைத்தெருவி
னென்றுமில்லையென லில்லையால். (௧௧)

சந்தனம்பலம ணச்சரக்கினெழு
தயிலமுங்கடிய பொடிகளுங்
கொந்துகுத்தமலர் மாலையுந்தொகையில்
குலவுநற்கடையி னிடமெலா
மைந்தருந்தகைய மாக்களுந்துதி
வகுத்தவின்னிசையி னுடன்மலர்ந்
தந்தணுள்ளமொடு செல்லுவார்கவுது
லகுலமாளுமெமர் நாதரே. (௧௨)

பாரியன்னவொலி யானையும்பரியும்
வல்லுரத்திரவ ணங்களும்
வாரியன்னவய வீரரும்பலவ
ரத்துமாக்களுய ரூர்தியும்
பேரியுங்குழலு மல்குமன்னரது
பெரியவீதியிடை யரியதோர்
சூரியன்கடன்மு கட்டெழுந்துவரு
தோற்றமென்னவிறை தோன்றினர், (௧௩)

பந்தமாகிய வழித்துணைத்தகை
படத்தொடர்ந்துவரு வோரெலாந்
தந்தமக்குரிய விடுதியும்பல
தலங்கொணுடுமுயர் மனைகளுஞ்
சிந்தையன்பொடு மகிழ்ந்துபோதவுயர்
செம்மலுந்தவமு யன்றுறாஉ
மைந்தர்வாழுமற மோங்குசாலையிடை
வைகினருலகை முய்யவே. (௧௪)

வேறு

அறிவளர் முதியோர் மொய்த்த வணிபகு தாதிற் செல்வங்
குறைவிலா தோங்க மெய்மை பல்புறங் குலவ நன்கின்
முறைதரும் பெருமைபூண்ட முகம்மது மதஸ்தா னென்போன்
பெறுமனத் துறைத லேபோல் வைகினர் பிரியா தன்றே. (௧௫)

பற்பல வுயிர்க ளுள்ளம் படர்ந்தெழு நாட்டங் காணு
மிற்புறத் தியல்பி னுனு மப்புறத் தியல்பி னுனுங்
கற்பனை யெவையுந் தேர்ந்த வகத்தொளிர் கண்ணர் நாளு
நற்பலன் பெருகு மூதூர்க் கணியென நாத ருற்றார். (௧௬)

தீவகத் தற்ற தேனுந் திரைக்கட லுற்ற தேனுங்
கோவகத் துற்ற தேனுங் குறும்பொறை யுற்ற தேனு
நாவகத் துற்ற தாக விளக்கிய நலங்கொண் மேலோர்
பாவகத் துற்ற வெல்லாம் பலன்கொளும் பொருளி னுற்றார். (௧௭)

பொருளொன்றுந் தனதிற் கொள்ளாப் பொறியொன்றுந் தனதிற்கொள்ளா
வருளொன்று மனத்தி னுண்மை யறிவொன்றுந் தனதிற் சொள்வான்
மருளொன்று தயரீ ரொன்பான் வயதினம் மூதா ரெய்தித்
தெருளொன்று மவைகடேர்வா ரவுலியா முகியித் தீனே. (௧௮)

அருந்தவ முதிருந் தாசுல் லாரிபீன் அபுல்வ பாவென்
றிருந்தவ வள்ளன் மேன்மை யியைந்தபே ரவையின் கண்ணே
பெருந்தவ மேலோர் மொய்ப்பப் பீடத்தி னிருந்தி யார்க்கும்
பொருந்தவத் தறிவு சொல்லும் போதினந் நாதர் புக்கார். (௧௯)

களங்கிலா தமுதங் கான்று கலைநிறைந் துலகு பூப்ப
விளங்கிய மதியு மென்ன விகசித முகமு மாரி

வளங்கெழு கருணைக் கண்ணும் வளர்ந்தெழு காமு மாயோ
ரிளங்கனி குமர வள்ளல் புதுமையி னெதிரக் கண்டார். (உ௰)

காண்டலு முரையா நின்ற கருத்தினை விடுத்துள் ளாரத்
தேண்டுநல் லறிவி ஞரின் றிருச்சபை நோக்கிச் செல்வி
பூண்டவிக் குமரன் றன்னைப் புறப்படுத் திடுமி னென்ன
வாண்டகை பணிப்ப மாறு தத்தகை யியற்றி ஞரால். (உக)

சூழ்தரு மாந்தர் நோக்கிச் சொற்றசொற் றொடர்பு நீங்கா
தாழ்தரு மறிவு முன்போல் அபுல்வபா வுரையா நின்றார்
கேழ்தருந் தூய மெய்யிற் கிளரொளி கௌதல் லஃவம்
வாழ்தரு மவையிற் பின்னு மகிழ்வொடு புகுந்தா ரன்றே. (உஉ)

கண்டனர் மறுத்துந் தாஞ்சொற் கனியுரை விடுத்துப் பேணு
மெண்டகை யவையை நோக்கி யினும்புறப் படுத்தி சென்ன
விண்டன ரன்ன தாக வெளிவிடுத் தனர்மே லோர்முன்
கொண்டதோர் சரிதை நேர்மை கொளப்பினும் விளக்கா நின்றார். ()

புறத்திலா மகத்து ளாய பொருளெலாம் பகற்போற் றேற்றுந்
திறத்தினு முகியித் தீனுஞ் சிறப்பொடு மீண்டும் வேதத்
தறத்தினு மவையுள் புக்க வாகமும் முறைபின் னுற்ற
சிறப்பினுந் தவிசி னீங்கித் தெருளுளத் தெதிர்கொண் டாரால். (உச)

தேடரு மறிவி னேடு திகழ்பொருள் பொருந்திற் றுக்கக்
கோடரு முயிரும் பேறுங் கூடிய தாக வேட்கை
நீடருங் கழுத்தி னேடு மார்பக நிமிரப் புல்லி
நாடருங் கருணைச் செங்க ணுப்பணின் முத்தா நின்றார். (உரு)

முத்தியுள் ளார்வத் தோடு முகந்துடல் சிலிர்த்துப் பூரித்
துத்தியி னரிய தோற்றுந் தொறுந்தொறு முவகை மீறிப்
பத்தியிற் புதுமை காணுஞ் சபையினர் பயப்ப நோக்கிச்
சித்தியி னுயர்ந்த தாசுல் லாரிபீன் செப்ப லுற்றார். (உசு)

நல்லறி வுணரா நின்றீர் நகைமுகங் கொள்ளா நின்றீர்
சொல்லரும் பகுதா துள்ளீ ரெழுமெழுந் துதியினேடு
புல்லிய லன்பிற் றூழ்ந்து நற்பலன் புனைமி னேம்பும்
வல்லவ னருளிற் பூத்து வருமொலி யிவருக் கன்றே. (உஎ)

வந்தவர் முகநோக் காது புறம்பட வழங்கன் முன்யா
னிந்தைசெய் வதற்கென் றெண்ணீர் நிருமல ரிவரென் றியாருஞ்

சிந்தையிற் றெளிந்து போற்றுஞ் சிறடி விளக்கிச் செய்யுந்
தந்தொழி லிருமைப் பேறுந் தாங்குவ கோடற் கன்றே. (உ௮)

எறிதிரை யுவரி சூழ்ந்த விரும்புவி கோண மெல்லாங்
குறிதருஞ் சோதி மாறாக் கொண்டையின் சிரத்தின் மேன்மை
செறிதர வோங்கா நிற்குஞ் சூடிகை திகழ்ந்த வல்லோ
னெறிதருஞ் சிறப்பி னுணை நீடிய வியல்பிற் றன்றே. (உகூ)

ஆய்ந்துண ரறிவு மெட்டா வாணையின் வல்ல பத்திற்
றேய்ந்தன புவன மெல்லாந் தொடர்படு கோவை நீங்கா
தோய்ந்திடா தாள்வான் றேன்றுங் குத்புமா யுயர்ந்தோர் போற்ற
வாய்ந்ததோர் கௌது மாக வருந்தகை யுடைய றென்றே. (௩௰)

சொன்முறை கேட்டுக் காணுப் புதுமையிற் றுளங்கி யாரும்
பன்முறை யெய்தா வாக்கைப் பரவச மெய்தித் தாழ்ந்து
நன்முறை புகழா நிற்ப குத்புநா யகத்தை நோக்கிப்
பின்முறை விளவ தாசுல் லாரிபீன் பேச லுற்றார். (௩க)

குணக்கிலா தியைய மேன்மை பெவற்றினுங் குறித்த செய்கை
மணக்குமா றுலக விந்தை வளர்க்குமிப் பகுதி யெல்லா
மிணக்குமிக் கால மெங்கட் குரியதா லினிமே லுள்ளம்
பிணக்கிலா தெய்துங் கால முமக்குள பேற்றிற் றுமால். (௩உ)

மேகமா வானம் வாரி மேதினி மலைமற் றுள்ள
பாகமா ருயிர்கள் கேட்பப் பன்முறை கூவி யோயுஞ்
சோகமார்ந் தெல்லா மன்றி யுமக்குள சுடிகைச் சேவ
லேகமா யூழி மட்டும் வாய்விடா தியம்பா நிற்கும். (௩௩)

பெருமையு மறனும் வென்றி மானமும் பிறங்கிப் பூவி
னருமையுந் தவமுங் கொண்ட வணிமணிச் சுடரி னன்னீ
ரிருமையும் போற்று முந்த மியல்பையார் வகுக்க வல்லா
ரொருமையீ ரென்னப் போற்றி யிப்பொரு ளுதவி னால். (௩௪)

தொழுகைக்கு விரிக்கு மாடை துணர்கைக்குப் பிடிக்குங் கோலு
மொழுகுடற் கணியும் போர்வை யோதுதற் குரிய மாலைப்
பழுதக லுணவு நீரும் பயிறரக் கலனிவ் வைந்து
மெழுதரு நவங்கள் பூத்த தென்பமா தவர்க ளன்றே. (௩௫)

என்னருங் கண்ணின் வாய்ந்த வெழின்மணி முகியித் தீன்றம்
பொன்னருங் கரத்தி னன்றி நிலத்தினின் வைத்த போதுங்

தன்னரு மணிக ளூர்ந்து மற்றுபால் சான்றி னுவி
மன்னரும் பொருளி னந்த மாலையாந் தசுபீ கன்றே. (ருசு)

ஆண்டவர் சுவனஞ் சேர்ந்த பின்னரைச் சட்டை நாணிற்
பூண்டிருந் ததுகை கொண்டார் புகழ்அலி யிபுனு கைத்தீ
மாண்டவ ரிடத்திற் கொண்டார் முகம்மது காயி தின்சேய்
தூண்டுமித் தன்மைத் தாகத் தொடர்படப் போந்த தென்ப. (ருஎ)

கிலத்தினிற் கிடந்த போதி னெருத்தரு நெருங்கிக் கையான்
வலத்தினிற் றெட்டா ரில்லை மணிப்புயத் திடத்திற் பாய்ந்து
பலத்தினி னிருந்தே யல்லாற் பரிந்தவுண் கலத்தின் பான்மை
நலத்தினிற் சிறந்த மற்ற பொருணயம் வகுக்கற் பாற்றே. (ருஅ)

* தம்மிடத் தடையா ளங்க டகைபெற நல்குங் காலை
நம்மிடத் தியல்பின் வண்கை நலமுறத்தொடர்வா னுகை
மும்முறை விளக்கும் வாய்மை யறுதியின் மூகியித் தீன்பால்
செம்முறை யுஞற்றும் வள்ளல் கொள்கெனத் தெளிக்கப் பட்டார். ()

இத்திறக் குமர வள்ள லிடத்தினி னறுதி வாய்மை
யத்திற முடிக்க வல்லா ரெனதருள் கபீபாய் மேன்மை
யெத்திறந் தனையு மாயு மபீசகீ தென்போ ரென்ன
வொத்திற வாத கீர்த்தி அபுல்வபா வுரைத்திட் டாரால். (சo)

இனையன வினிய வாய்மை யாவருங் கேட்டு நெஞ்சங்
கனிதர வுடலம் பூப்பக் காரண ரிவரென் றேத்தி
யனைவரும் போற்றித் தத்தந் திருமனை யடைந்தார் வள்ளல்
தனதுள வாக்கம் பூப்பத் தனித்தவ ணிருந்தா ரன்றே. (சக)

உயர்தருந் தவிசின் கீழ்பா லொருபடி தன்னி னுற்று
முயலறு மதியிற் றேற்று முகம்மது நபிதம் பேரர்

---

* தம்மிடத்திலுள்ள வடையாளங்கள் கொடுக்கும்போதில் அபுல்வபாவுக்கு ஒருசொற்சொல்லப்பட்டது. நம்முடைய வியல்பும் கொடையும்பொருந்தியகையினலே மூகியித்தீனம்மைத் தொடாதலுக்காக வேண்டிய மூன்றுவிடுத்தஞ் சொல்லிக் கொடுக்கும் அறுதிவார்த்தைப் பாட்டைப் பெற்றுக்கொள்வீராகவென்று சொன்னகருத்தா அவையினுள்ளாரென்றுகொள்க,

இத்திறமென்னுங்கவி யிதற்கு மாறுத்தர மென்றுகொள்க.

நயனுறு மலர்க்கை தங்கை களினத்தாற் பற்றிப் போற்றிச்
சயமுறும் பான்மை யெல்லாந் தாபதர் கிரீடி சொல்வார். (சஉ)

அணியுண்டாஞ் சொல்லிற் றீனி லழகுண்டா முடைய நாயன்
பணியுண்டா முலகிற் கெல்லாப் பலனுண்டா மெவரும் போற்றுங்
கணியுண்டாங் கால முண்டாங் காலமிக் கிழவ னுயுந்
துணியுண்டா மனத்தி னன்பா னினைத்திடாய் துதியின் மிக்காய். (சஙு)

என்றனன் மேம்பா டாய பயனெலா மிசைத்துப் பின்ன
ரொன்றனன் கரத்தை முத்தி யுவகையின் மோந்து விட்டா
ரன்றனன் தகையின் கல்வி யவைவிடுத் தறச்சா லைக்கு
ணன்றனன் குமர வள்ளன் முகிபித்தீ னண்ணி னூரால். (சச)

பகுதா துபுக்கபடல முற்றுப்பெற்றது.

ஆ படலம்-கo-இ-கூடியதிருவிருத்தம்-சஅஅ.

## கல்விபயில் படலம்.

(*)

### கலிவிருத்தம்.

வரிசையிற் சிறந்தன வியல்பின் மாதவர்க்
கரசென வருமப்துல் காதிர் நாயகர்
முரசுபர் முதுநகர் குரவர் பாலெலாம்
பரிசுணர் கல்விகள் பயின்ற தோதுவாம். (க)

நீரினு மலையினு நிலத்தும் வானினு
பார்வன வுயிரெலா மாக்கங் கொண்டதோர்
பேரறி வுணர்த்துவான் கருவிப் பேற்றியிற்
றேர்வன வறிவெலா நாளுந் தேடுவார். (உ)

ஆரணப் பொருணயத் தகமு மாழ்வதோர்
காரணப் பெருமையுங் கண்ண தாகையால்
பூரணக் கருத்தொடு வேறு போக்கிலாத்
தாரணத் தொடுமது தொழிலிற் றூங்குவார். (ங)

பல்வகை யவகுண மின்றிப் பாலவா
நல்வகை குணத்தொடு நடக்கை நூல்களின்

சொல்வகைத் துணிவுளத் தூய தேசிகர்
புல்வகை முறையொடு பாலிற் போதுவார். (ச)

ஒன்றுளத் துறுதியி னுடலு மாவியு
மென்றுளத் தொழுகலி னியைந்த நீழலு
நன்றுளத் தொடுவழி மடலு நாட்குநாள்
சென்றுளத் தான்மதி மருவிச் சேர்குவார். (ரு)

உள்ளிய பொருளெலா முள்ளத் தாயினுங்
கொள்ளிய முறைப்படி கொள்ள வேண்டுமா
லள்ளிய வறிவபி சகரி யாவெனும்
வள்ளியர் பால்பல நூல்கள் வாசித்தார். (சு)

பெயர்வினை யிடையுரி பிரிவின் வேற்றுமை
யியரரு தொகைதொகா நிலைக ளேற்பன
வயல்வழு வின்னன வனைத்துஞ் சொல்லிய
முயறரு நகுவென மொழியு நூல்களும். (எ)

உடலுயிர் சார்புமற் றெடுக்க மாதியி
னடைபெறல் விகாரமும் புணர்வு நாதமு
மடவுரு மெழுத்தின தாக்க மூங்கிய
தொடருள சறுபெனச் சொல்லு நூல்களும். (அ)

சீர்தளை யடிதொடை சிதைவின் மோனையுஞ்
சேர்தரு மினங்களும் பண்ணுஞ் செப்பலு
மார்தரு துறைபல வமையுஞ் செய்யுளி
னேர்தரு மறாவென நிகழ்த்து நூல்களும். (கூ)

அடிமறி சீர்மறி யசையி னுமறி
தொடைமறி பொருண்மறி தொடரந் தாதியுங்
கடைபடு மியைபினற் காட்டு மீரிடத்
திடைபடுங் காபியா வென்னு நூல்களும். (ய)

ஆற்றெழுக் களைமறி பரப்புக் கொண்டுகூட்
டேற்றிய வின்னிர னிறையி யன்மொழி
மாற்றிவை முதலிய நிலையில் வார்பொருள்
போற்றுதல் மகானியாய்ப் புணர்த்த நூல்களும். (கக)

காரண மியலினிற் கலந்த பல்கலங்
காரணங் காரியந் தோற்றக் காட்சியும்

பூரணக் கருத்துமாப் பொருளும் வாய்ப்பதோர்
தாரண மன்திகாஞ் சார்ந்த நூல்களும். (கஉ)

ஒருபொருட் பலபெய ரொன்று பல்பொரு
டருபொருள் விகற்பமு மரபுஞ் சார்புமாய்
வருபொரு ளிலக்கிய வகையெ லாம்பயின்
றிருபொருள் லுகத்தென வியம்பு நூல்களும். (கந)

குணமுதன் முப்பயன் கொள்ள வொப்புரை
யிணக்கமு முருவக மாதி யீறினின்
வணர்வதோர் பாவிக மற்று முள்ளன
பிணக்கறும் பதீகெனப் பேசு நூல்களும். (கச)

இன்னமுங் கருவியா யியைந்த நூல்பல
அன்னவ ரிடத்தினே யாய்ந்திட் டாரிறை
முன்னமே யமைத்துள முடிந்த சேமத்தைப்
பின்னமே யகறரப் பெயர்த்தல் போலவே. (கரு)

தவநெறி பிழைபடாச் சறகி னோர்மைக
ணவமுறப் பலன்றரும் பிகுகி னட்டுநூல்
அபுல்வபா அபுல்கிதாப் பூச கீதெனு
மிவர்கள்பா லுவகையி னியல்பி னேதினர். (கசு)

தெருண்மறை முகம்மது நபிதஞ் செவ்விய
மருளகல் வாய்மையாம் கதீதின் வாய்ந்தநூ
லருளபூ காஸிபும் அபுல்க ஹயிமும்
பொரு ளபுல் காசிமும் புனத்தி னர்களால். (கஎ)

அன்றியுந் தேசிகர் பலருண் டப்பொருள்
வென்றியின் விளக்கின ரொருமை மெய்மையி
னென்றியா ரீக்கத்தி னேங்கு நூல்பல
நன்றியின் செய்குகம் மாதி னண்பினல். (கஅ)

இத்தகை முதியவர் பலரிற் றேர்ந்தெழி
லெத்தகை யடையுமத் தகையி னெய்தினர்
வித்தகர் திருவுளம் வேத மெய்ப்பொருள்
புத்தக மாயின புதைய லாயின. (ககூ)

இகலிடம் விடுத்துநற் பலனெ லாம்பெறு
தொகலிட மியாதெனக் கலைக டொன்மைசா
லகலில தெங்குமாய்ந் தப்துல் காதிரும்
புகலிடம் புகுந்தது போல வைகிற்றால். (உ0)

கல்விபயில்படலமுற்றுப்பெற்றது.

ஆ படலம்-கக-இ கூடிய திருவிருத்தம்-நூஅ.

# கவுதைக்கண் ணுற்ற படலம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவளர் கமல வாவி செறிதரும் பகுதா தென்னப்
பெருகிய செல்வ மூதூர் பேறுடை தவத்தின் மேலோ
ரருமறைப் பொருள்கு லாவு மவைகளி னறிவு கேட்பா
ணெருமனத் தியலா நின்று ருயர்புகழ் முகியித் தீனே. (க)

நிலத்தொடு பொழுதுந் தேர்ந்து நினைவொடு குணமுந் தேர்ந்து
நலத்தொடு கொடையுந் தேர்ந்து நண்புகொள் குரவர் பாலின்
வலத்தொடு மடங்கி யெய்தும் பொருளெலா மனத்து ளாக்கிக்
குலத்தொடு கலந்து முள்ளத் தனிமையே கொண்டு நின்றார். (உ)

விரிப்பன தொகைக்குந் தோற்ற விடைபெறு வினவி னுக்கு
முரிப்பொருள் கருத்தா லன்றிக் கருத்துமவ் வுரியால் மாறல்
பிரிப்பதற் கொன்றுக் கொன்று திடப்படப் பேணு தற்குந்
தரிப்படு தற்கு மம்மான் புடையவர் தம்மைச் சேர்வார். (ந.)

திசைபல புறத்தின் மேலோர் திருவரு ளறிவு மல்கு
மிசைபெறு கலைகள் வேத மோதுவான் விரும்பி வந்தோர்
நசையறச் சாலை யோர்க ளாயினு நகரோ ரேனு
மிசைபெறக் குணத்தி னென்றி யொருமையி னியலா நிற்பார். (ச)

பேரறி விடத்து மிக்க பேறுடைச் செயலின் கண்ணுஞ்
சீரறி தொண்டின் மேலுஞ் சேர்ந்தவ ரகத்து நாளு
மோரறி வுடைய மேலோர் தெரிசன வுவப்பின் பாலு
மாரறி வன்றி மற்றை யறிகிலா துலவா நின்றார். (ரு)

இவ்வகை நடையி னிற்குங் காலத்திற் பகுதா தென்னுஞ்
செவ்விய னகரின் மேலோர் திருக்கழல் விளக்க யார்க்கு
மவ்விய மகற்றுங் காட்சி யறிவின துருவாய் மெய்ம்மை
யொவ்வியல் கௌதென் றேது மொருவரீங் குண்டு மென்றும். (சு)

படர்திரை யவனி மன்னு மன்பதைப் பலவின் கண்க
ளடர்தரா மறைய வுள்ள நாடுவா ராகிற் காணத்
தொடர்தர வெளியி லாகத் தோற்றுமித் தகைமை யெல்லாஞ்
சுடர்தரற் குரிய ரென்றுந் துதியொடு கேட்கப் பட்டார். (எ)

ஆண்டெம வுள்ளா ரோர்தற் கடைந்தவ ரிசுறான் மைந்தர்
மாண்டசி ரப்துல் லாவுங் கவிதையின் வண்சொற் காவல்
பூண்டவர் சகாவின் சேயும் புதுமையுற் றவனைக் காண்பா
னீண்டவுள் ளுவகை கொண்டா ருறுபய னோர்க வன்றே. (அ)

நாடொறும் வணக்க மோத னல்லவர் காண லாக
வீடுறுங் கருத்த ரன்றே விப்பயன் றனையுங் கொள்வா
னுடியென் னிருகண் போலு நல்லுயிர் போலும் வாழ்வு
சூடிய அப்துல் காதிர் தம்மொடு துணிவு பட்டார். (கூ)

தொகலரு மறிவி னுள்ளத் திருவரு மிரவிற் றேற்றும்
புகலரு மதிய மென்னப் புடைதர வுடையோன் சோதி
யிகலறச் சுடர்கள் வெட்க வெழுந்தென வெழுந்தார் செய்ய
பகலவ னிரவி யாகப் பாத்திஷா முகியித் தீனே. (கo)

யாவரு மகிழும் வீதி யிடையினிற் போதுங் காலை
மூவரி லிருவ ருக்கு மூத்தவர் சகாவின் றேன்றன்
மேவரு மன்னோர் பாலின் விடைகொடுப் பதற்கே லாத
தாவரு மொருசூழ்ச் சத்தை வினவுநான் சால்புக் கென்றார். (கக)

மற்றவ ரிசுறான் றேன்றல் வாலிப ரவர்பா லியானும்
பற்றியோர் துறையைக் கேட்ப னெவ்விடை பகர்வா ரென்ன
வுற்றுணர்ந் தறிவ மென்று ரொன்றுமியான் வினவர் வண்ண
முற்றுணர் வல்லோன் காக்க வென்றனர் முகியித் தீனே. (கஉ)

தோற்றமு மறைவு மன்றித் தூலமுஞ் சூழ்ச்சந் தானு
மேற்றிரு குணமு நீத்த பெரியவ ரெழில்கொள் காட்சி
யாற்றலி னிருமைப் பேறு மாயவுண் ணிலைமை தன்னைப்
போற்றலு மருள்க வல்லோ னேறுமோர் புந்தி கொண்டார். (கங)

மூவருங் கருத்தின் மூன்று முடிவுகொண் டினிய காட்சி
யாவலிற் போந்தா ராளு மாதன மற்றையெல்லா
மேவிய தவனாக் காணர் வியப்பொடு மவணி னுற்று
ரோவரு முத்தி யுள்ளார் மூர்த்தமொன் றளவு மன்றே. (கச)

காணருங் காட்சி காட்டுங் கருத்துணர் கருத்தர் கண்டு
பூணரும் விழைவற் குற்றோர் புந்தியிற் றெளிவு கொள்ள
வேணரும் புதுமை யாக விரிப்பிடை வரவு காணச்
சேணரு மதியிற் றோற்றித் திகழ்தரத் தெரிந்தா ரன்றே. (கரு)

வரும்பொழு தவனிற் காணர் வழிவிழி கொண்டு நின்று
ரரும்பொழு தேனு நீங்கா வாயுளத் தாயா துற்றூர்
பெரும்பொழு தாக வாங்குப் பிரிகிலா திருத்த லாவலவ்
விரும்பொழு தறிந்தா ருள்ளத் தெண்ணிய திரியா நின்றார். (கசு)

வெண்ணிலா முகத்தின் செவ்வி விளங்கிய கருணைக் கண்ணி
னண்ணிலாச் செம்மை வெண்மை நகையினோ டுருத்து நோக்கி
யெண்ணிலாக் கெடுதி யென்கொ லென்னிடத் தினினுத் தாரங்
கண்ணிலாக் கேள்வி நீயா கேட்பவன் களங்க முள்ளாய். (கஎ)

கதுவள ருளத்தி னுய்வாய் கருத்தினி லமைத்த கேள்வி
யிதுவரு பயனிற் கொண்ட திதுவினக் கெழுந்த தன்மை
யதுவலி குபிராஞ் செந்தீ யடர்ந்தெரி கின்ற வாற்ற
லுதுவகை யெல்லா நான்கண் டுளதுநற் பலனி லாதாய். (கஅ)

என்றவை பெவரு மஞ்ச விபுனுச காவைக் கண்டித்
தன்றவ ரோடு சேர்ந்த அப்துல்லா தன்னை நோக்கி
யொன்றுநீ வினவ னுனு முத்தர மதற்குச் சொல்லல்
நன்றுதீ தாய்த னீயோ நயனிலா யறிந்து கொள்வாய். (கக)

நெஞ்சகத் தமைத்த தீது நினைத்ததோர் பொருளு மீது
வஞ்சக வொழுக லாகா வழிமுறை கேடு பூண்ட
விஞ்சையா னுலக மாயை விரிகடல் செவியின் சோனை
மிஞ்சிய தளவு மீர்த்துக் கொளுகினை விடாம லன்றே. (உ0)

எனவிவர்க் குரிய தீமை யிவையிவை யென்று காட்டி
மனநிலை வெப்பந் தீர்ந்து மதிமுக மலர்ந்து மெய்மை
புனைமதி கௌதென் றோதும் புங்கவர் கருணைக் கண்ணால்
கனைகழல் வள்ள லப்துல் காதிறை நோக்கி னூரல். (உக)

வனமலர் நறிய செந்தேன் மதுரமென் மொழியால் வண்மைத்
தனமலர் செல்வ மிக்க முகம்மது மஸ்தா னுள்ள
மனமல ரிடத்து வாழு மாதவர் திருநா மத்தை
யினமல ரென்னப் போற்றி விளித்தன ரிதனைச் சொன்னார். (௨௨)

பல்லபல் லுயிரு மோம்புங் கருணையன் படரு மாட்சி
வல்லவன் றன்னை வல்லோன் வரிசையி னிலைமை நாட்டுஞ்
சொல்லருங் குணத்தின் வள்ளல் முகம்மது றசூலைக் கொண்டு
புல்லரும் பொருத்தம் பூண்ட புந்தியாய் புகலக் கேண்மின். (௨௩)

உள்ளகத் தறிவி னன்னு யுணர்வெழுந் தலரா நின்ற
தெள்ளகத் திடத்தி னுன்முன் கண்டதோர் செய்தி போலாங்
கள்ளகத் தலரின் வாடை கமழ்பொழில் பகுதா தூரி
னள்ளகத் தழகி னிட்ட தவிசினி னடுவி னுற்று. (௨௪)

ஆட்சியி னறிவின் மேலோ ரளவிலர் மருங்கு சூழ்ந்து
காட்சியி னொழுக்கி னுய்வின் காதினா னுகரா நிற்ப
மாட்சிமை யுடைய செய்தி வழிமுறை மதுரப் பைந்தே
னீட்சியம் மணிவாய்ப் பூவி னிதழினாற் பொழியா நின்றீர். (௨௫)

இன்னன நிகழ்த்தும் வேலை யிறையவ னொலிமா ராக
மன்னிய பேர்க டோள்மேற் பிடரிமே லெங்கு மாண்பி
னன்னயத் தெனது பாத மலர்நக மலரா நின்ற
தென்னநும் மதுர வாயா லிசைதர விசைத்தீ ரன்றே. (௨௬)

இம்மொழி கேட்ப யாரு மிருமையும் பயப்ப தாகத்
தம்மகக் களிப்பி னோடுஞ் சாய்தருந் தலையி னோடுஞ்
செம்மையி னொழுகா நிற்பத் தெரிந்தன னுங்கா லத்தின்
மும்மையுந் தெரிந்து நோக்கு முதியவ ரவர்க ளன்றே. (௨௭)

இவையிவை மேம்பா டும்பா னிகழ்ந்ததென் றிசைக்கும் போதே
யவையினிற் றோற்றா தாக மறைந்தன ரவரோ டுள்ள
நவையறப் பிறவுத் தார நவில்வதற் கிடமி லாதால்
கவைபடுங் கைசே தத்தின் கருத்தரா யெழுந்து போந்தார். (௨௮)

பதிகளிற் பெரிய றாமுப் பதியின்பான் மதியாற் றானா
பதியதாய்ச் சீர்த்தி வாங்கி யவன்பெறும் பாவைக் காத்தீப்
பதியடை நசாறா வாகிப் பலனற்றான் சகாவின் மைந்தன்
பதியெனச் சிறந்தோர் வாய்மைப் பயன்றரும் படியா லன்றே. (௨௯)

உயர்பதி திமசுக் காஞ நூறுத்தீ னுவந்த ழைத்துப்
பயில்தரும் ஒருபா யுள்ள தனைத்தையும் பார்க்க வைத்தா
ரயல்விலா துலக வாழ்வி னழுந்திமற் றென்று நோக்கா
தியலற அப்துல் லாவு மவருரை யியைவ தானர். (ருo)

கண்டவர் சொன்ன வாறே கருத்தன தருளால் வண்மை
கொண்டலர்ந் துயர்ந்த செங்கை முகியித்தீ னென்னுங் கொண்டல்
விண்டதன் பகுதி யாய மேன்மைகள் விளங்கா நின்று
ரெண்டரு முதியோர் சொன்மை யெவற்றினு மறையா தன்றே. (ருக)

பெரியவர் தம்மைப் போற்றல் பெரியவர் குணமா மன்றிப்
பெரியவர் தம்மை யெள்ளல் சிறியவர் குணமா மென்னி
லுரியவர் நயந்து கோட லுரியவை யாகிற் றீமைக்
குரியவ ராகா ரென்று லோர்பவோ மதிவல் லோரே. (ருஉ)

கவுதைக்கண் ணுற்றபடல முற்றுப்பெற்றது.

ஆ படலம் கஉ-இ கூடிய திருவிருத்தம்-ருசo.

## கச்சிற்குப்போந்தபடலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருவிரி யலங்கற் றண்ணறுந் திவலே
மணங்கெழு மணிப்புய நயினர்
தருவிரி மலரின் கடிபொழில் சிறந்த
தவத்துறை யெனும்பகு தாதி
லருவிரி வேத நெறிமுறை யனைத்து
மறிந்துயர் நடைபயில் காலே
வெருவிரி மனத்தான் முதன்முறை கச்சிற்
கெழுந்தவை விரித்தெடுத் துரைப்பாம். (க)

மேதியின் கடைவாய்க் குறுமுகைக் குமுத
விளிநறுந் துளிநுகர் கயல்கள்
காதிய வோதை நெடுந்தட முடுத்த
கதிபதி மாதவர் குரவர்

வேதியர் முதியர் துறைபுகும் வல்லோர்
விளக்கிய விளக்கினு லவர்கள்
போதிய கருணைத் தரிசனத் தாலும்
பலவரம் புனைந்தனர் வள்ளல். (௨)

உரையினி லமையாச் சுவையொளி திறமு
மூறுட னேசையின் றிறமும்
விரையிய திறமும் பூதியத் தெழுந்த
விகற்பமும் படிப்படி விளங்கக்
கரையிலா வுவகைத் திறமுமா ரின்பங்
கடைபடு திறமுமற் றுணர்ந்து
வரைதரா தொதுக்கித் துறந்தியங் கரித
மனத்தொடு மிருந்தனர் வள்ளல். (௩)

தன்னிலை நோக்குங் கருத்தினுற் கலவாத்
தனிமையும் பேச்சினிற் சுருக்கு
மன்னிய பசியுஞ் சுருங்கிய வுணவு
மறதியி லாதொரு நினைவுந்
துன்னிய துயிலும் பற்றும்விட் டொழிவுந்
தொழிலெனக் கொண்டுயர் தவத்திற்
கன்னிய மகமா யிருப்பன வுருப்போ
டாக்கமுற் றியைந்தன ரன்றே. (௪)

பற்பல வரம்பெற் றுயர்ந்தமெய்ப் பொருளாய்ப்
பலன்புரி முகம்மது நயினர்
கற்பணிந் துதித்த மக்கமா நகரிற்
கருபத்துல் லாவலஞ் செய்து
சொற்பயின் முறையின் கச்சியற் றிடுவான்
சூழ்தரு காட்சிகள் காண்பான்
பொற்பதி பகுதா திடத்தினின் றெழுந்தார்
புகழப்துல் காதிறெம் மொலியே. (௫)

பொருளொடு மியைகா ரகத்தொடு துணையும்
பொருந்திலா தைம்பொறி விடைய
மருளொடு முலகச் செய்கைகள் விளக்கு
மனத்தொடு பொருதுவென் றுயருந்

தெருளொடும் பற்று நினைவொடு தேடுந்
திடத்தொடு மொருமையி னிலைத்த
வருளொடுந் தனியே தம்முகங் கொண்ட
வதரொடும் போயின ரன்றே. (சு)

காரணத் தெழுந்த காரிய நிலையைத்
தொடர்தருங் கருத்தையுந் தொடராக்
காரணந் தனக்குங் காரண நிலையைத்
தொடர்தருங் கருத்தையுஞ் சோதித்
தாரண முறைபோற் றமக்கமை நிலையி
னுறுதியி னுகிவே றில்லாப்
பூரணத் தோடு நடந்தனர் கடந்தார்
புகழ்பகு தாதினை யன்றே. (எ)

கடிதரும் படைமற் றின்றிய கரமுங்
காப்புடை யின்றிய வுடலும்
படிதரு வாஞ்சை யின்றிய விளமைப்
பருவமு முருவமுங் குஞ்சி
வடிதரு நன்னெய் யின்றிய சிரமு
மணிக்கழ லின்றிய தாளு
மடிதரு குணங்க ளின்றிய வள்ளன்
மனத்தொடு தனிப்புறச் சென்றார். (அ)

வளந்தரும் பொழிலுங் கன்னலங் கழனி
மருதமு மலர்மண மருத
குளந்தரு மிடமுங் கடந்துவான் றோய்ந்து
கதிரினுங் குலவுபொற் கலசந்
துளங்கிய நீண்ட வணியின்ம ணுருத்
துஞ்சிய வும்முல்கு றானென்
றுளங்கனி தலத்தி னடைந்தனர் வரிசை
யோங்கிய முகியித்தீ னெலியே. (கூ)

வரிசையம் பொருளி னருணலம் பூத்த
வள்ளலார் போந்தவவ் விடத்திற்
றெரிசனத் துலக பாவினை யுணருஞ்
சிந்தையின் மும்மலக் குறும்பின்

சிரசினைத் தடியுந் தெளிவெனும் படையின்
றிறத்தினர் சைய்குஅ தியென்
றுரைசெறி நாம வள்ளலுந் தனியே
யுற்றனர் பற்றறத் துறந்தே. (௧௦)

முன்னடுத் தன்பின் சலாமுரைத் தரிய
முதுமறை மறையினு மறைந்து
மன்னிய ஞானப் பாகினைப் பருகு
மாதவக் குன்றமே யரசே
பன்னருந் துணையும் பொருளுமொன் றின்றிப்
பற்றிய கருத்தொடு மெவ்வூர்
தன்னிடம் புகுவான் றனிமையி னடைந்த
தகைமையென் னெனவின வினரால். (௧௧)

மதிநலம் பொழியுங் காரணக் குரிசின்
முகம்மது நபிவரும் புகழின்
பதிநலம் பொழியும் பேரெழிற் கஃபாப்
பள்ளியிற் றெரிசனஞ் செய்வான்
கதிநலம் பொழியு மொருவன்பாற் பற்றுங்
கருத்தொடுந் தனியடைந் தனனென்
றதிநலம் பொழியு முலகுயர் சீர்த்தி
யணியப்துல் காதிர்செப் பினரால். (௧௨)

அருந்தவம் புனையு மண்ணலெம் மரசே
யறிவருங் கல்விக ளெவைக்கும்
பெருந்தவத் துறைக்குந் தெரிசன முவக்கும்
பெரியரைத் தேடிச்செல் வதற்கு
மிருந்தவ யோக முறைக்கும்வேண் டுவதா
யிருந்தது துணையினன் மேன்மை
தருந்தவந் தனக்கு வேண்டிலா தென்கொ
லென்றனர் சைகுஅ தியே. (௧௩)

துவடருங் கருத்தி னிவற்றினுக் கேற்ற
துணையொடு முயன்றனன் முயன்று
திவடரு மாக்கைப் பேணல னாகிச்
செறிகழ றணையும்விட் டொழிந்து

குவடடர் வனமற் றிடமெலாம் பதத்தாற்
செல்குவான் கொண்டவென் றனக்கு
முவடருந் துணையு முண்டுகொ லென்று
ரொருமையிற் சிறந்தநா யகரே. (௧௪)

இன்னன வியல்பிற் றுறந்தவ னுகை
வெழுந்தன னியானுமென் றியம்ப
வன்னவர் கருத்துந் தங்கருத் தியைவ
தாமென வுணர்ந்துநன் கென்னச்
சொன்னநங் கௌதுல் லகுலமை யரிய
துணையென விருமைக்குங் கொண்டார்
மன்னலம் படர்ந்த விளமையம் பருவ
வாலிபர் சைய்குஅ திய்யே. (௧௫)

பற்பல வுயிர்க டொறுமெழு வினைதைப்
பயனது தெரிசனந் தன்னிற்
கற்பிதக் கருமத் தியல்பினி லுன்னுங்
காரிய முதன்மையில் விரதத்
துற்பனச் செய்கை யொழுங்கினி லறிவி
னுரிமையி லொன்றென வொன்றிச்
சொற்பயி னுத ரிருவரு மன்பிற்
றுன்புறு தேகின ரன்றே. (௧௬)

நறுவிய பன்மை மலரினும் பொழிலி
னனிதரு புள்ளொலி தனினும்
வெறுவிய வில்லா மணத்தொடு தயிரின்
விரிதரு குழனியு மிகைக்குங்
தொதுவியன் முல்லை வேலியுஞ் செறிந்த
சோலையு மின்சுவை நிறைய
நிறுவிய கனியின் பந்தரும் வளத்தி
னிவர்தரு நிலம்பல கடந்தார். (௧௭)

வேதமும் வேத போதமும் போதத்
துண்மையு மளந்திடா மேலோ
னுதியங் கருணை யவாவிய வுளமு
மவனிடத் தனைத்தையு மளித்த

மாதவ நிலையிற் றுணிவுங்கொண் டேகு
மிருவரும் வழியிடை யிருக்கும்
போதினி னழகி னுருவெடுத் தனைய
புகுந்தன ளொருமட வரலே. (கஅ)

## வேறு.

வானிலா மதியு மின்னும் வளரொளி யுடுவுஞ் செய்ய
பானுவுங் கதிர்செய் தூண்டாப் பன்மணிச் சுடருந் தம்மி
லீனமி லவய வத்தி னெழின்மல ராகிச் சோதி
தானுலாஞ் செம்பொற் கொம்பிற் பூத்தபோற் றயங்க வன்றே. (கக)

சோதியிற் சிறந்த செய்ய மாணிக்கந் தூய முத்த
மாதியா மணிக டம்மா லணியினுக் கணிசெய் தென்னப்
பூதலத் தரிவை மார்தம் பொற்பினைக் கற்பி னுக்கு
மாதர்பூ ணகையின் வாய்ந்த மடமயி லனைய கன்னி. (உ0)

வாடிய வுடலும் வல்லோன் வணக்கத்தின் குறிப்புங் காட்சித்
தேடிய கருத்து முற்றத் துறந்தெழு செழிப்புந் தூசான்
மூடிய முகமு நாணு முறைகிள ரியல்புங் கொண்டு
சூடிய கருணை வள்ள லெதிரினிற் றுளங்கா துற்றாள். (உக)

மருங்குலாஞ் சோலை நீழன் மலர்த்தட மற்ற வெல்லா
மொருங்குலாம் பயன்க ணோக்கா தொண்கதிர் மதியிற் பூத்த
கருங்குலா நீலக் கண்ணாற் காணிலும் பூதாற் பண்மை
முருங்குலாந் தவத்தின் வள்ளன் முகத்தையே நோக்கா நின்றாள். ()

செங்கனி யமுதஞ் சிந்துஞ் செவ்விதழ் மலர்ந்து மைதீர்
திங்களி னலர்ந்த தூய செழுமுகக் குமர வேந்தே
யெங்குளீ ரென்ன நங்கா யியல்புள அஜமு தேயத்
தங்குளே னென்று ரென்ற னகத்துள மூகியித் தீனே. (உ௩)

தெள்ளிய வழகு லாவுஞ் சித்திர வடிவீர் நாட்டு
முள்ளிய லகத்தி னுனு முறுப்பிய லானுந் தேடிக்
கொள்ளிய கரும மொன்றுங் கொளப்படா தாக வின்றே
யள்ளிய விருப்பத் தென்னை யாக்கினீர் வருத்தத் தென்றாள். (உச)

அழகிய குணத்தி னேங்கு மருளுடை யெந்தங் கோமான்
முழுமதி யனையாய் தொக்க முயற்சியிற் பொறிக ளெல்லா

மொழுகிடா தென்பாற் சிந்தை யுடன்பட்ட தெவ்வா ருசை
வழிகொள லென்கொ லென்ன வினையன வழங்க லுற்றாள். (உரு)

தேனினத் திசையி னன்னப் பார்ப்பிளஞ் சிறுகண் டுஞ்சுங்
கானிமிர் கமல வாவி கடிப்பொழி லபசா நாட்டி
ஞனவ ளவனி வான மனைத்தையு மாளும் வல்ல
கோனவ னேவல் பூண்ட வடியவள் குவவுத் தோளீர். (உசு)

வேற்றொரு பராக்கி னெல்கா விழைவுளத் தறிவா லாக்கை
போற்றிய கால்கள் பல்பால் புகாதனை யாது கும்பித்
தேற்றிய தீப மென்ன வெழுத்தொடு நினைவை நாட்டி
யாற்றலி னின்றிப் போதி னவ்விடத் திபோகத் துற்றேன். (உஎ)

வெளிவரு மகந்த நோக்கம் விலக்கியுண் ணினைவி னுற்றற்
றெளிவருங் கமலக் கண்ணிற் றெரிசனை யாக நாளுங்
களிவரு முயிர்கள் பூண்ட கதியெலாம் விதிக்கு நாமத்
தொளிவரு முடையோன் சோதி யுதயஞ்செய் தோங்கிற் றன்றே. ()

அரிதரி தறிவிற் காண்டற் காயதச் சோதி பூத்து
விரிதரல் யாண்டை யென்னு விளக்கமேல் விளக்கத் தோய்ந்து
தெரிதரக் கண்ட தக்கண் சீரியோ யிறைவ னேடு
திரிதராப் புணர்ச்சி பூணுந் திருவுளத் திடத்து மாக. (உகூ)

கருணையிர் நுமக்கல் லாது மற்றருங் கருத்தோர்க் கின்ன
வருணலக் கலப்புப் போல வருள்கல னுடைய னென்னத்
தெருளுமென் னறிவிற் கண்டே னறிகவிச் சிறந்த பேறும்
பொருளத னிடத்து மாகப் பொலிவொடு துலங்க வன்றே. (௩0)

கண்ணக நெஞ்ச மெல்லாங் களிப்புறக் கண்ட காட்சி
யெண்ணகத் தடங்கா தின்ப மெறியுமா நந்த மூழ்கி
விண்ணக மதிய மேயென் வினைப்பயன் கிடைப்ப தாக
மண்ணகத் தும்மைக் காண்பான் மனமிகக் கொண்ட தன்றே. (௩க)

தோற்றிய காட்சி யானுந் துளக்கிய விழைவி னுனு
மாற்றருங் கருத்தி னுனு மற்றென்றிற் றெடரா தானும்
போற்றிய கருணை வல்லோன் புரிந்ததாற் சொரிந்த பூவிவ்
வாற்றிடை யின்றிப் போதி னடைந்தனன் களிப்ப வன்றே. (௩உ)

கருத்தினிற் சிறந்த காதல் கண்ணினிற் காட்சி யாக
வருத்திய வல்லோற் காக வரும்புக ழாவல் தீர்வே
னொருத்தியு மிருவீர் நீயி ருடனிருந் தொன்று யின்று
பொருத்திய நோன்பு தன்னைத் துறக்குவன் போதி னென்றாள். (ருரு)

இனையன மடமான் கூறி யெழிலுளத் துவகை பூப்பத்
தனையுணர் நினைவி னோடு மெழுந்தன டணப்பி லாது
வனைதரு பொறிமூன் றாக மரீஇயவவ் வள்ள லோடு
முனைவரா தொருமித் தார்நம் பாத்திஷா முகியித் தீனே. (ருச)

மருவரு மலரு மென்ன மன்னுயி ரோம்பு நாதன்
றிருவருங் கருத்தி னோடுந் தேடிய தேட்டத் தோடு
மொருவரு மறிகொ ணாத வுயர்நெறி யிடத்தில் வீர
ரிருவரு மொருபாற் பக்கத் தேந்திழை யொருபாற் செல்வாள். (ருரு)

ஒதுங்கிடா வுள்ளத் தொன்று மொருவழி யிருபாற் செய்ய
பதங்கொடு போதுங் காலைப் பருதியுங் குடபாற் புக்கா
னிதங்கெழு நோன்பு நீத்திட் டொருதலத் தினிதி னுற்றார்
கதங்கடிந் தனைத்தும் வென்ற கருத்தரா மூவ ரும்மே. (ருசா)

மாலையின் விதித்த வேத வணக்கமும் வணங்கி மேவுங்
காலையி னெவருங் காணக் ககனிருந் திறங்கிற் றன்றே
வேலையி னிலத்திற் றோற்று வியன்மணி மூடி யிட்ட
சாலையி னடைந்த திங்க ணிகர்த்ததோர் தட்ட மன்றே. (ருஎ)

துறந்தன டுறந்தா ளியாவுந் துறந்தவர்க் குணவா மாறு
நிறந்தரு மடையு மின்ப நிறைதரு மட்கு நீங்கிப்
புறந்தரு மாக்கைக் காவி புகத்தரும் புளிங்கார் நீருஞ்
சிறந்தன கண்டு பூரித் தாநந்தத் தினைப்புற் றாளால். (ருஅ)

களிப்பினு ளளவி டாத கருத்தினு லெனையு மென்றன்
விளிப்பினு லமைந்த மேன்மை விருந்தையுஞ் சங்கை யாக்கித்
தெளிப்பினு லருளிச் செய்த வல்லவன் றெரிவி னன்றி
யொளிப்பினும் புகழுக் கெல்லா முரியனு மென்று போற்றி. (ருகூ)

இரவெலா மருளி னல்கு மிரண்டடை யேயிப் போது
தரவலா னூவர்க் காறுந் தந்தனன் றகைபோ லென்னப்
பரவினன் முறையின் வண்ண மயின்றனர் பரிவு கூர்ந்தார்
விரவிய தவத்தின் பான்மை விளைதரு மாக்கை யன்றே. (சo)

பொன்னவ மணியின் சோதி பொருவினும் பொருவா வெய்யோ
னன்னபூங் கிண்ண மூன்று மருந்தெளி வமுதத் தோடும்
பின்னர்வல் லவன்ற னன்பா லிறங்கின பெரிதின் வாங்கி
நன்னய மதுர மூறப் பருகினர் நவமே மல்க. (சக)

கடல்புடை பரந்த தீவிற் கனிமது கொழிக்கும் வாரி
யிடையினின் மூன்று கூற்றி னுவமமு மிசையா வின்ப
மடையடா வுள்ளங் கொண்ட வாண்டகை யவர்கட் கன்றிப்
புடவியி னெவர்க்குந் தோன்றாப் புதுமணந் தகைய தன்றே. (சஉ)

உடனிருந் துணவுஞ் செய்து களிப்பினோ டுரிய பேசி
வடிவுறுஞ் சிறந்த மாது வருவழி கொண்டு போந்தா
ளடர்தரு மிருளிற் றோற்று மலர்தருங் கதிரி னன்றே
தொடர்தரு முள்ள நீங்கா வொருமையே துணையா வன்றே. (சங)

பற்றிய வணக்க மெல்லாம் பயின்றுளத் தாற்றல் சாலும்
வெற்றியின் வள்ளல் நண்பின் விரும்பிய கருத்தர் தாமு
முற்றிய நாட்ட மன்றி முன்னிய நாட்ட மில்லா
துற்றவத் தலத்தை நீந்தி நடந்தன ரொருமை குன்றா. (சச)

வெஞ்சின மருத வேங்கை வெறிபடு கேழ லெண்கு
மிஞ்சிய விலங்கி னோசை விரிதரு மருவிக் குன்றம்
பஞ்சரப் பறவை யாடிப் பாண்செயுங் கடங்கண் மற்ற
வஞ்சிய விடங்க ளெல்லாங் கடந்தன ரச்ச மில்லார். (சரு)

போதெலாம் விரதம் வாயின் புகலெலாம் புகழ்தல் நெஞ்சின்
பீதெலா மொருமை நோக்கும் வெளியெலா முண்மை யாகத்
தாதெலா முதிர்க்குஞ் சோலைத் தடமெலாங் குபிலும் வண்டுஞ்
சீதெலா முதிர்ப்ப முல்லைத் தெருவெலாங் கடந்து போனார். (சசு)

பூத்தெழு மலருங் காயுங் கனியுந்தேன் பொழியுந் தேனும்
வாய்த்தன விவையு மேடு மணமிகப் பொழியுஞ் சோலைக்
காத்ததோர் மருத வேலிக் கதியினிற் காணும் பேறு
மூத்தமேம் புகழின் மக்கா முதுநகர் நோக்கி னரால். (சஎ)

உருவின ராக்கை மாய்ந்த வுருவில ரமரர் மற்றுந்
திருவினர் கருத்தாற் கொண்ட திருவில ரெவருந் தத்தம்
கருவினி னமைந்த பேறு காண்குற வடையு மூதூர்
மருவின ருடனும் புக்கார் மகுதூமு முகியித் தீனே. (சஅ)

நன்றியு மன்புந் தான நன்மையு மருளுஞ் செய்கை
வென்றியும் புனைந்த மேலோர் விரும்பிய வுடையோன் காட்சி
யொன்றிய வொளியின் வீடு வேண்டிய முறைக ளோங்கு
மன்றியு மியல்பி னேடே செய்துகொண் டகத்தி னூர். (சகூ)

தோற்றிய வுயிர்க ளெல்லாந் தோற்றுவா னுகத் தோன்று
மாற்றல்சான் முகம்ம தெந்த மாண்டகை தன்னிற் காண்பான்
போற்றிய தவத்தி னூலும் புண்ணியம் படைத்த மூதூர்
னோற்றவர் முறையி னேதுந் துவாவெலா நுவலா நின்றூர். (நூ0)

திரிதரு மகர வேலைத் திண்புவி யிடத்தி னின்று
விரிதருஞ் சுவன மெல்லாம் விளக்கொளி விளக்குப் போலச்
சொரிதரு கருணை யோனைத் தொழவருங் கருபத் துல்லாப்
புரிதரு தவப்பே றெய்த புகழொடு நோக்கி னூரால். (நூக)

தேன்படர் மலரின் மொய்த்த வண்டெனச் சிறந்த சிந்தை
தான்படர் மாந்த ரோடு சாரும்போ தியற்றத் தக்க
தூன்படா தியல்பி னுை துள்ளகம் பூரிப் பெய்தி
வான்படர்ந் தோருஞ் செய்யும் வலஞ்செய றொடங்கி னூரால். (நூஉ)

கடல்படு முலகிற் காணுக் காரணக் கடவுள் வீட்டை
யடல்பெற வலஞ்செய் காலை யரியன வனைத்தும் போர்த்த
வுடையவ னுதைய சோதி வொளிவொன்று தோற்ற நோக்கி
யிடைபட மயங்கி வீழ்ந்தார் அதிய்யெனுஞ் செய்கு மாதோ. (நூங)

தெரிவருங் கருணை வல்லோன் றிருவொளி விளக்க மென்னு
மொருபெருங் கடலின் மூழ்கி யுணருணர் புலன்கள் போக்கி
மருவசை வியக்க மின்றிக் கிடந்தனர் மற்றோர் மேலோ
னருள்பெறு மன்பின் மீறு மாசையின் மாண்டா ரென்றூர். (நூச)

பொறிபடு முள்ளம் வெள்ளக் கருணையிற் பொலிந்த கண்ணுற்
குறிபட வள்ள லேக்குங் காலையிற் கொண்ட நண்பி
னெறிபடு முன்ன ரம்மா ளிலன்படு மவர்தஞ் செவ்வி
செறிபடுஞ் சிரத்தின் மாட்டி னின்றனர் தெரிய வன்றே. (நூரு)

அழகிய வருட்க ணேக்கி யருங்கரத் தலத்த லத்திட்
டிழகிய வன்பி னேடு மிசைத்தனள் நிலத்தின் கண்ணே
விழவுட லாவி மாய்த்தா னெவனவன் மீள வும்மை
யெழவுட லாவி கொள்ள வியற்றும்வல் லவன்று னென்றே. (நூகூ)

இன்னதிங் கிவர்பா லாக வெழினருங் கருபா தன்னை
முன்னது செய்யும் வள்ளன் முகியித்தீ னிடத்தும் வல்லோன்
றன்னது நாளு நாளுஞ் சான்றது விரிந்த சோதி
யன்னதொன் றிறங்கிற் றுளு மருளினே டுலகம் பூப்ப. (நிஎ)

நிறந்தரு மெவையும் போர்த்து நிலைதரு மொளிவி னேடே
புறந்தரும் விசய மெய்தாப் புந்தியி னினைவி னுற்றற்
றிறந்தரு முள்ளத் தூடு சீர்தரும் விளக்கந் தன்னி
லறந்தரு மொருவன் வாய்மை யலர்தர வுதித்த தன்றே. (நிஅ)

என்னகத் துவந்த நேர்மை யியல்புனை யப்துல் காதிர்
மன்னகத் துயிர்க ளோடு மருவுத லொழிந்து மன்னித்
துன்னகத் தியாருங் காணும் வெளிப்படைத் தொடர்பு நீத்தும்
தின்னகத் தொதுங்குந் தன்மை விடுவிடும் நிலையன் றென்றும். (நிகூ)

நாட்டமு நாட்டத் துற்ற நனிமதி யூகம் வெவ்வே
றாட்டிய வினையுங் காணும் பயன்களு மொன்றின் மாட்டிக்
கூட்டமுங் குலைய வுள்ள மொருமையிற் குலவ நாளும்
பூட்டிய தனிமை கோடற் பற்றுதி புணர்தி யென்றும். (சுo)

தனித்தனி பிரிந்த வெல்லா மொருமையிற் றகைத்துக் காணும்
பினித்தனி நிற்கு மந்தத் தனிமையிற் பேதங் கொள்ளா
மனத்திறங் கொள்க கொண்டால் வகைப்படாப் புதுமை யெம்மிற்
கனத்திய வெவையும் பின்னர் காணநா மியற்று மென்றும். (சுக)

ஒட்டியு மொட்டா தாயும் வேண்டலொன் றில்லா தாயுஞ்
சுட்டியுஞ் சுட்டா தாயுஞ் சுயம்பெற நின்ற வென்பாற்
பட்டிய கருத்தை நின்பாற் பற்றிய கருத்தி னேடுங்
கட்டிய வியல்பி னெப்பக் கலத்தன்மி னுவமித் தென்றும். (சுஉ)

வன்முக விலங்கு லாய வனத்தினின் வரையி னெங்குந்
தன்முகங் கொண்ட தேனுந் தனிமுகங் கொண்ட வுள்ள
நின்முக நோக்க லென்பா னிலைபெற நிற்றி நின்று
லன்முகத் துயிரு நாளு மரும்பய னணியு மென்றும். (சுங)

தோற்றமா யெழுந்த தோற்றந் தோற்றவும் பெறுபே றெல்லா
மாற்றவுந் தாந்தாங் கொள்ளு மவதியிற் படவுஞ் செய்வான்
போற்றலி னென்னை யன்றி வேறொரு பொருளைக் காணு
யேற்றிய விளக்கி னுளு மிதயத்திற் கோடி யென்றும். (சுச)

நீதமே தகைய வின்சொ னோர்வரம் பெறுதல் வேண்டிப்
போதமன் பதைபா னன்கி னருணலம் பொழியா நிற்றி
பூதலத் தெவணு மோங்கும் புகழ்வளர்ந் தேற வென்றன்
சோதியின் காட்சி நிற்பாற் றுலங்குபு நிற்கு மென்றும். (சுரு)

என்னடி யவரின் மிக்கா ரெனக்குவப் புடையார் தம்மை
நின்னருங் கரத்தா னம்பா னெருங்கிய மருவல் கொள்வா
னுன்னலுண் டதனாற் பின்னர் சேர்த்துமுன் னிடத்தி னென்று
மின்னன மேன்மை யெல்லாம் விளக்கிய தியல்பி னன்றெ. (சுசு)

உள்ளகக் கமலந் தன்னை யுனையளி யலர்ப்பச் செந்தே
னள்ளகம் பூத்து நின்ற நனிபுகழ் கௌதுல் லஃலம்
வள்ளலின் முன்ன ரன்ன மடமயில் வந்தப் போதின்
விள்ளரும் விடலாய் கேண்மின் விளைந்தன வென்று கூறும். (சுஎ)

ஆரணத் தகையின் மெய்மை யணிபெறுந் தகையீர் மன்னுங்
காரணத் தகையோ நுந்தங் காரியத் தகையின் றூய
பூரணத் தகுதி யென்கொல் புகல்வன்யா னறிக வல்லோன்
பாரணத் தொளிவி னலோர் படங்கடித் திட்ட தன்றே. (சுஅ)

சோதியிற் சிறந்த செய்ய மாணிக்கந் துலங்கு முத்த
மாதியிற் சிறந்த பீடத் தழகினுக் கழகு போல
நீதியிற் சிறந்த நீரும் நிவர்தர வானோர் வான்விண்
வீதியிற் சிறந்து சூழ்ந்து வியப்பொடு போற்ற நிற்ப. (சுகூ)

மறைவிழை வலர்ந்த வுள்ளார் வரம்பின்மா தவத்தார் தத்த
நிறையினைப் பிசகார் கொண்ட நிலையினுக் குரிய மேன்மைத்
துறையினி னிருந்தே னும்பாற் றேற்றிய வரிசைப் பாட்டி
னுறைதர மனக்கண் ணெல்லா நோட்டத்தி னேட்டா நிற்பார். (எo)

இன்னமு முமக்கு நாத னருளிய வினிய மேன்மை
நன்னயப் பேறு போல்வ நனிபெற விரும்பி நாளு
மன்னிய வெண்ண மெல்லா நீட்டியு மதிப்பி னுற்று
ரென்னவின் னவைக ளோதி யிளங்குயி லகன்று போனாள். (எக)

மேம்பட விளங்குங் காட்சி விரித்தவை மதித்து நாளு
மோம்புமே லவனைப் போற்றிப் புகழ்ந்தன ருயர்ந்த வாழ்வி
னும்பல தகுதி பூண்ட முகம்மது மஸ்தா னுக்கத்
தேம்பபி னுளத்தி னேங்குந் திருப்பதக் குரிசி லன்றே. (எஉ)

துணிந்தெழு முறையிற் செய்யு மியல்பெலாந் தொடர்பிற் செய்து
பணிந்தருந் துறைக டோறுந் தெரிவன பலவுங் கண்டு
தணிந்திடா மேன்மை தாங்கித் தவத்தினர் புகழ்ந்து போற்ற
வணிந்தன நகரஞ் சேர்ந்தா ரவுலியா முகியித் தீனே. (எரு)

நவந்தரத் தோன்று மந்த நாரியை யதன்பி னியாண்டு
முவந்திடக் கண்ட தில்லை யென்றனர் வள்ள லென்ப
தவந்தரு மேன்மை யாண்பெண் ணிரண்டினுந் தகைய வாயி
னிவந்தவை புரித லியார்க்கும் வேண்டிய நிலையா மன்றே. (எச)

கச்சிற்குப்போந்தபடலமுற்றுப்பெற்றது.

ஆ படலம்-கரு-க்கு-கூடியதிருவிருத்தம்-சுகச.

---

## கிலிறுநபியைக்கண் ணுற்றபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்தரு நெறியின் வேதத் திருப்பொரு ளமிர்தந் தேக்கி
நேர்தரு முகியித் தீனந் நிருமல நாதர் மாக்கள்
சேர்தரு மிடங்க ளன்றி யிருக்கெனுந் தேயச் சார்பின்
போர்தரு வனம்போந் தேற்குந் தவத்தது பெருமை சொல்வாம். (க)

நெறிதவ ருத மேலோர் நினைவய ராத மேலோர்
குறிதவ ருத மேலோர் குலவிய பீட மெல்லா
மறிதவ ருது கண்ணுற் றணிபல நகர்கண் ணுற்றும்
பொறிதவ ருத வள்ளல் புகழ்பலன் முயலா நின்றூர். (உ)

ஆரணத் தறிவு லாய வகத்தினிற் றெளிவின் பாலாங்
காரண நினைவிற் றேற்றுங் காட்சியே கருதா நிற்கும்
வாரணத் துலகி னுள்ளார் வழிபடு மப்துல் காதிர்
பூரணத் தெவையு மாயும் பொருந்தொழின் முயலா நின்றூர். (ங)

மாதவ ரிடத்துங் கல்வி மன்னிய களத்துங் காட்சிக்
கோதிய தலத்துங் கொள்ளா நிலையினே டொதுங்கு முள்ளப்
போதமே னேக்கம் பற்றி முகங்கொண்ட போக்கிற் போது
நாதனுர்க் கையைந் தென்ன நடந்தது வயது மன்னே. (ச)

புறம்படு நிலையி னாகா வகம்படு நிலையிற் பூத்துத்
திறம்படு முணர்வு தன்னாற் செயல்படு மவுனம் பற்றி
யறம்படு மெய்மை வள்ள லணிபகு தாதைச் சூழ்ந்து
நிறம்படு பொழிலைக் கானே நிலைபடா துலவா நின்றார். (௫)

நாட்டமே நோக்கி நாட்டு நனிபொரு ளுணர்ந்து கண்ணிற்
காட்டுமெய்ப் பொருளி னோடு கைப்பொரு ளின்றிப் பைம்பொற்
றாட்டுணைக் கழலு மின்றி யயல்வரு சார்பு மின்றிப்
பூட்டிய முகங்கொள் போக்கே போயினர் புனித ரன்றே. (௬)

தண்ணளி துளிக்கும் பைந்தேன் றவழ்தரு தடமு நாளும்
விண்ணளி துளிக்கு மேக மூதுலாம் பொழிலுந் தாதார்
பண்ணளி துளிக்கு முல்லைப் பந்தரின் படப்பை யுந்தங்
கண்ணளி துளிக்கும் வள்ளல் கருதிலா தகன்று போனார். (௭)

வன்மன வயிர வீர வல்லவ ரறிவின் மிக்க
நன்மனத் தவத்தோர் மன்னு நலம்புனை யிருக்கு தேயத்
தன்மனத் தவருஞ் செல்லா விலங்கின தரிய கானஞ்
சென்மனங் கொண்ட தேபோற் புகுந்தனர் செம்ம லன்றே. (௮)

தனிவழி போதும் போதிற் சார்ந்தன ரொருவர் செவ்வி
நனிவழி வடிவுக் கொப்பா நாட்டலெப் பொருளோ தண்ணப்
பனிவழி சுடரு மல்லோன் பகல்வரு சுடரும் வெய்யோன்
றனிவழி சுடருஞ் சேர்ந்தாற் கொல்லியாத் தொன்ற லாலே. (௯)

அணிநகர் களினும் பல்பல் லாற்றினுங் காட்டி னுந்தாக்
கணிமலை தனினு மியாண்டு முன்னொரு போதுங் காணா
மணிநிரை யுருவத் தார்பன் மலர்நிரை யுருவத் தாரின்
பணிநிகர் வதன நோக்கி யொருமொழி பகர லுற்றார். (௧௦)

எண்ணருந் தவத்தின் மேன்மை யெடுத்தகந் தெளிய நின்ற
விண்ணடும் புகழி னாக்கை விளங்கிய விடலாய் நானே
நண்ணுமெத் தலத்து மன்பி னட்புறும் பாங்கா யும்மோ
டுண்ணயந் துறுதற் குள்ளம் விருப்பமோ வுரைக்க வென்றார். (௧௧)

உள்ளகத் தெழுந்த பண்பி னொருவழி யொருவா தாகத்
தெள்ளக முயற்சி யெல்லாந் திடம்படு பயன தன்றோ
நள்ளகத் துரிமை வள்ள லும்மொடு நண்பு நாட்டிக்
கொள்ளகங் கொள்ள வென்றார் குத்புநம் முகிபித் தீனே. (௧௨)

எம்முற வினிமை யாகு மெம்மிடத் தமையுஞ் செய்கை
யெம்முறை விரித்த பான்மை யிவற்றினுக் கொருபோ தேனு
மும்முளத் துரிமை யேது மாறுறு துறுதி கொண்டா
லிம்மையு மறுமைப் பேறு மிதனகத் தெய்து மென்றார். (கங)

நானொரு போது நஞ்சொன் னடைவழி கடவேன் மாறி
நானொரு வழியிற் செல்லே னடுநிலை யிஃதா மென்னக்
கோனரு ளொலியார் கூறக் குமரவிங் கிருக்க நீங்கா
தியானொரு வழிபோய் மீள வெய்துமவ் வளவு மென்றார். (கச)

நன்றுநன் றென்ன நண்பி னவின்றசொற் பழுதா றாது
நின்றவன் னிலத்தி னன்னே நிலைபெற விருந்தார் வள்ள
லன்றவ ணடைந்த கோமா னேவலி னுக்க நோக்கிச்
சென்றனர் தெரியா வண்ணந் திசைபல குறிப்பு மன்றே. (கரு)

விடயமெய்ப் புறத்துஞ் செல்லா விநோதம்ப் புறத்து மெய்தாக்
கடைபடும் பலநாட் டத்தின் கால்பட ராது கொண்ட
நடைபெறு நினைவி னோடு நனிபுகழ் வணக்கத் தோடு
மடைபடு மிருப்பிற் போரா தொருநிலை யாக வுற்றார். (கசு)

சூழ்கின்ற தருவிற் காய்ந்து நிலத்தினிற் றொடர்ந்த காற்றின்
வீழ்கின்ற தெதிரி னூற்று னுணர்விழிக் குரிமை விட்டாற்
றாழ்கின்ற வுடலிற் காவி தந்தவர் வாய்மைப் பாட்டி
னாழ்கின்ற புந்தி தேரு மறிவுடன் படுமவ் வள்ளல். (கஎ)

காரணத் தகுதி நோக்குங் கருத்தினு னினைவி னுற்றல்
பூரணத் துறுதிப் பாட்டி னொருநிலை பூண்ட வள்ள
றூரணத் தொடர்பை நீக்கித் தன்வசம் படுத்திக் கொள்வான்
சீரணத் துலக மாயை திருவுரு வெடுத்த தன்றே. (கஅ)

காரியப் பிணக்கங் கூந்தல் களிப்புள முகம்வி நோதங்
கூரிய விழிகள் பொய்யாங் கொவ்வைவாய் மாறு பாடு
சீரிய முலைகள் தீமை செழுங்கர மில்லா வின்ப
நேரிய வுடல மாக நிமிர்ந்தது வடிவு பூண்டே. (ககூ)

புன்மைகள் பலவு மாய பொற்றொடி யலங்கா ரத்தி
னன்மைகள் பலகொ ணுதர் தமக்கெதிர் நடனஞ் செய்யத்
தன்மையை நினைத்தும் வேறுந் தகைமையை யொழித்தும் வல்லோ
னுண்மையைப் பற்றுங் கண்ணு ணெருகண மேயு நோக்கார். (உ0)

ஒருநிலை விடுதல் கொள்ளு மொழுங்கினைக் குலைத்த லுள்ள
மருணிலை பூணல் வல்லோ னாணையை மறுத்தல் வேறு
வொருநிலை கெடுதல் மற்றை மலமெலா முனாற்றும் பூதப்
பெருநிலைக் கண்கள் செம்பொற் பெண்கொடி யாக வெய்தும். (உக)

பொய்யுடற் கேற்றுந் தீயப் புன்றொழிற் கேற்ற கோலஞ்
செய்யுட லெடுத்த வெல்லாந் திருமுகத் தாடா நிற்ப
வையுடற் சாரா தேக னருணைய மொழியா தோங்கு
மெய்யுடற் கொல்கா தற்றார் வேறென்று நோக்கா தன்றே. (உஉ)

திசையிடஞ் செல்லா நாட்டத் திறத்தினாற் றமக்குட் பட்டு
மிசைதராக் கருத்தி னாலு மேலவன் கருணை யானும்
பசைதருந் துன்பக் கோலப் பாவையார் வினைதை யெல்லா
மிசைதரா திருப்ப வள்ள லெதிர்பொரு திகலா நிற்பார். (உங)

முன்வினை விடத்தே னாட்ட மூந்தாறு தானு மாக்கை
தன்வினை யியற்றும் வண்ணந் தனையினிற் றகைத லானு
நன்வினை யுடைய கோமா னவனிலை யசையா தாலே
புன்வினை யுழற்று மாயப் பூவைதோற் றோடு மன்றே. (உச)

பொருளொடு சுகத்தி னோடு புணர்தலி னின்பத் தோடு
மருளொடு மனத்தின் கார மாயவள் விகார மெல்லாந்
தெருளொடு நிலையிற் பூட்டுஞ் செயலொடு கருத்த னாட்டு
மருளொடு தோற்றப் பட்ட வங்கத்தோ டகலு மன்றே. (உரு)

உரைமுதல் கருவிக் கேற்கும் பொருளெலா மொழித்து நீர்சூழ்
தரைமுதல் பொருளி னாசை தனையறுத் தழுக்கா றென்னும்
புரைமுத றீமை யொன்றும் புகாதடைத் திருளாய்த் தோன்றுந்
திரைமுத லளவா னாதர் திருமொழிப் படியி னுற்றார். (உசு)

இவ்வழி யிருப்ப வோராண் டகன்றபி னியல்பின் வாய்மைச்
செவ்வழி யமைத்த வள்ள லடைந்தனர் திருமு னுற்று
ரவ்வழி நிலையை நோக்கி யையரைக் கடிகைப் போதும்
வெவ்வழி யமிர்த வாயா லியாதொன்றும் விள்ளா தன்றே. (உஎ)

உற்றவ ரெழுந்துள் ளன்பி னுரிமையின் விழித்து வாய்மைப்
பெற்றிடு நிலையி னீங்குப் பிசகிடா துறுக யான்போய்
நற்றுறை நம்பான் மீண்டு நண்ணுபட் டென்ன முன்போற்
சொற்றவ ரகன்று ரெண்ணந் தொடாதொரு திசையி னன்றே. (உஅ)

திரையெனப் படர்ந்த பன்மைச் சிந்தனைத் தெளிவாற் போழ்ந்து
வரையென வெழுந்த கோப வெம்பசி நினைவான் மாய்த்துத்
தரையென விரிந்த சோதி தன்னொடு கலந்து நாட்டம்
பிரையென வோங்க வுற்றார் நிலைபெய ராது வள்ளல். (௨௯)

குணக்குறும் பான்மை கண்டு கொளுமுறை கொள்ளச் செய்து
வணக்குறும் பருவங் காட்டுந் தேசிக வள்ளன் முன்போ
லிணக்குமோ ராண்டின் பின்ன ரெய்தினர் திருமு னுற்றார்
கணக்கிரண் டாயாம் பேசாக் கடிகையி னளவு மாதோ. (௩௦)

இருந்தவ ரெழுந்து தெண்டித் தெழிறவ முயலு மைந்த
வருந்தலத் திதுபோ லாதி மீண்டியா னடையுங் காறும்
பொருந்துக வென்னப் போந்தார் புண்ணிய வியல்பு கூடிப்
பெருந்திதி கொண்டு தேடும் பொருளெனப் பிறங்கு நாதர். (௩௧)

சொல்லொன்றி நினைவு மொன்றித் துதியொன்றிப் புலன்க ளொன்றி
வில்லொன்றிக் குறியு மொன்றி விடுசர மொன்றி னுற்போ
லல்லொன்றிப் பகலு மொன்றி யாவியு மருளு மொன்றிக்
கல்லொன்றித் தூங்கி னார்நங் கருத்தொன்று முகியித் தீனே. (௩௨)

வரிசையிற் சிறப்பின் மிக்க வள்ளலோ ராண்டின் பின்னர்
பரிசினிற் சிறந்த தாகப் பலசுவைக் குணங்கண் மன்னி
யுரிசையிற் சிறந்த தீம்பா லொருகையி லடையு மேந்தித்
தெரிசனச் சிறப்பி னாதர் திருமுன முற்றா ரன்றே. (௩௩)

தேடரும் பொருளின் வன்மைத் தெளிதர முயலுஞ் சிந்தை
கோடருந் தவத்திற் பற்றுங் குணந்தரும் பருவக் கொண்டால்
நாடரு மொருவ னேவ னடைவருங் கிலிறு நானுங்
கூடருங் கூட்டி னுண்பான் பணித்தனன் கொண்டு வந்தேன். (௩௪)

என்னநன் மொழியு மீந்திட் டிருந்துண வுடனு வுண்டு
வண்ணவொண் கிண்ணத் தூய மதுரமா வமுத மூட்டிப்
பின்னருங் கருணைச் செங்கண் களிகொளப் பெரிது நோக்கி
நண்ணுமித் தலம்விட் டோங்கு நகர்புகு மெழுக வென்ன. (௩௫)

எழுந்துமுன் னடந்து வல்லோன் கிலிறெனு மேந்தல் சென்ற
வொழுங்குறும் வழியிற் பின்னே யுடன்பட்டுப் பகுதா தெய்தி
யழுந்திய வமுதச் சொல்லி னவன வறைந்த கன்றார்
செழுந்தகை கொண்டு புக்கார் செய்யிது முகியித் தீனே. (௩௬)

அருமையி னகரஞ் சேர்த்திட் டவர்வழி கொண்டார் கொண்ட
பெருமையி னுட்டத் தோடு பெயர்முறை யொழுங்கு பற்றி
யொருமையின் முகங்கொள் போக்கி னுயர்நிலைக் காட்சி நோக்கிக்
கருமையின் முயலா நின்றார் கதிநிலை முகியித் தீனே. (௩௭)

கிலிறுநபியைக் கண்ணுற்ற படல முற்றுப்பெற்றது.

௮ படலம் ௧௪-இ கூடிய திருவிருத்தம் ௯௩௧.

## முரீதுபெறுபடலம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தன்னினை வுடனே யாருந் தகைகொள்வான் கருணை நல்கு
மன்னினை வெழுந்த சிந்தை மணிப்புய கௌதுல் லஃலம்
பன்னினை வொழிய நோற்குந் தவப்பயன் பயப்ப தாக
நன்னினை வுடன்மு ரீது பெறுமுறை நவிற்று வாமால். (௧)

முகங்கொளப் போதும் போக்கே முன்னிய முகியித் தீன்றம்
மகங்கொளா தூரிற் பல்லோ ரமைகொளா துலகி னுள்ள
சுகங்கொளா தியல்பிற் போற்றுந் துதிகொளா திணங்கிச் செய்யு
மகங்கொளா திருக்குத் தேய வனங்கொளா நின்று ரன்றே. (௨)

பற்றிய விரத நோற்கும் பகலெலாம் பல்பா லீர்த்த
முற்றிய கருத்தின் போக்கின் முறையொடு வணக்கம் பூண்பார்
சுற்றிய தருவிற் சிந்துந் துணரினுற் கனியாற் காயான்
மற்றியை பசியா னீரான் மாலையிற் றுறப்பா ரன்றே. (௩)

வரையிடந் தனினுஞ் சூழ்ந்த வளையிடந் தனினு மாற்றின்
கரையிடந் தனினும் வாழாக் கானிடந் தனினுஞ் செல்லாத்
தரையிடந் தனினுந் தானே தனிமையின் வணக்கம் யோகம்
புரையிடம் புனைவா னேற்றுப் புகழ்நிலை புணர்ப்ப ரன்றே. (௪)

கீழ்படத் தழலைத் தாழுந் தேவெனக் கிசுறா மன்னன்
றாழ்பட நபியின் வாக்கா லரசொடு தகுதி யெல்லாம்
பாழ்படக் காடு கொண்ட பதியினைப் படர்ந்து வெற்பின்
சூழ்படக் கிடந்த நாஞ்சில் மதிலொடுந் தொடர்ந்து நிற்பார். (௫)

மாலையி னிசாவிற் செய்யும் வணக்கத்தி னுலவி னாலே
காலையின் வணக்கஞ் செய்யும் வழக்கத்தார் கழிபி ராவின்
வேலையாம் வேத முற்று மோதுதல் விதித்த யோக
சாலையிற் றியானத் தோடு சமாதியி னிருத்த லன்றே. (௬)

நிறைந்தடு முறக்க முன்னி நேரிடா தடக்க வோதல்
குறைந்திடா தாக வோங்கு மதிற்புறங் குடைந்தோர் கந்தி
டறைந்ததை யொருகை பற்றித் தாளொன்றி னமைய நின்று
மறைந்திடா வுணர்வின் முற்றும் வைகறைத் தலையிற் றீர்ப்பார். (௭)

தீர்ந்தபின் னுலவி னேடே செறிமதி லேணி மேற்சென்
றூர்ந்தர மியத்திற் கொள்ளுந் தியானத்தி னமைவ ரப்போ
தோர்ந்துநீ ருணர்சகா அத் தொன்றள வுறங்கிப் பின்னர்
தேர்ந்தது முயல்கி னன்று மென்னுமால் நபுசாஞ் சித்தம். (௮)

இவ்வுரை பிறந்த போதே விரைந்துட னெழுந்து நின்றன்
றெவ்வுரை கொள்ளேன் காண்டி சிறுமையி லாக்கு வேனென்
றெவ்வறு நிலையிற் கைப்பற் றெழித்தொரு காலின் மீட்டச்
செவ்வுரை யோதா நிற்பார் வைகறை தீரு மட்டே. (௯)

ஏற்றிய வியல்பின் மூன்று நாளொரு நோன்பா யின்னும்
போற்றிய நாற்பா னொரு மொருபொழு தாயிப் போக்கி
னூற்றிய பலவாம் யாதும் பருகிடா துண்ணு தாகத்
தேற்றிய நெறியி னேற்பார் செய்யிது முகியித் தீனே. (௧௦)

தொடற்கருந் தவத்தின் மூட்டுங் கனலெனத் தொடர்ந்து முன்பின்
படற்கருந் தொழுகை யோதல் ஜெபம்பயி லியோகம் நோக்க
மடற்கரி தாக்கஞ் செய்யுந் தருணத்தி லனந்த லின்ப
முடற்கரி தூட்டு வான்முன் னுருவெடுத் தெதிரு மன்றே. (௧௧)

கண்டனை நிலையி னிற்குங் கருணையங் கடவுள் பாலின்
மிண்டொலி யதிர வஞ்சி வெளிப்படா தகலு மற்றை
மண்டல மாது மாலின் மலிகின்ற பொருளு மாகக்
கொண்டலங் கரித்து வந்து குலாவுவாள் வீறி னன்றே. (௧௨)

திசையெலாம் வசஞ்செய் மாயச் செயலெலா மியலிற் றேற்ற
விசையெலாம் புணர்த்து வானின் விநோதஞ்செய் யுருவ மெல்லாம்
பசையெலாந் தீந்து பல்பாற் படர்ந்திரிந் தோட வள்ள
லிசையெலா நிறைந்த வுள்ளத் ததிர்ந்தெழுந் தொலிக்கு மன்றே. (௧௩)

ஒலியினா லொலியிற் பட்ட வுரகங்க ளென்ன வுள்ள
நலிவினால் விரோத மெல்லா நடுக்கொடு மறையுந் தாங்கொள்
வலியினால் வள்ள னாமம் வழுத்தினா ரிடத்தும் செல்லாக்
கிலியினா னிற்கு மென்றால் கிளத்தலென் னிலையை யன்றே. (௧௪)

இம்முறை தவத்தி னிற்குங் காலையி லெழுந்தோர் பாலின்
வெம்மறத் துயிறல் சற்றே விரும்பின ரடர்ந்து மாயைக்
கொம்மையம் மூலையி னாரிற் கலப்பொடு கலைப்பக் கொற்ற
நம்மிறை யுடனே போந்து நதிகுடைந் தாடி னாரால். (௧௫)

வந்தனர் பின்னுஞ் சற்றே மலர்விழி முகிழ்ப்ப மாயாப்
பைந்தொடி தொடர்ந்து கூடிக் கலைத்திடப் பதறி யாற்றி
னுந்தினர் குளித்தா ரிவ்வா றேரியா மத்தின் மாறு
தந்தினாற் பதத ரஞ்சேர்ந் தலக்கழித் திட்ட தன்றே. (௧௬)

திசைகளி னடக்கம் பற்றிச் சேர்ந்தன வுயிர்க ளெல்லா
மிசைதர வகட்டிற் சென்னி நடுக்கொடு வெருவா நிற்கு
மசைதருங் குளிருங் கூதி ராட்டிய பருவத் தண்ண
லிசைதரக் குளித்து ளாக்கைக் கலக்கணெய் திற்ற தன்றே. (௧௭)

எத்திரை யடர்ந்த தேனு மடர்பன்றிவ் வாவி யாக்கை
முத்திரை கடக்கு மாவிம் முத்திரை தன்னை பாய்க்கு
நித்திரை கடத்தன் மிக்க வரிதென நினைவிற் கொண்டு
பொத்திரை பதண மேற்போந் தொருநிலை போற்றி நின்றார். (௧௮)

கதமுதல் குணத்தின் றீமை காட்டிய வுடலின் கோர
விதமற விரோதி யான மேன்மையம் பண்பை மீட்டி
நிதநித முயிரிற் காக்க நிலையொரு மிப்ப நின்றார்
பதணசஞ் சாரம் வள்ளல் பதினொரு வருட மாக. (௧௯)

பகலினிற் பயிற்சி பல்பா லாயினும் பற்றுஞ் சிந்தை
யிகலினுந் தொடர்பு கொள்ளு மிரவினு நிலைவி டாது
புகலிட மொன்றே யாகப் புணரிட மொன்றே யாக
வகலிட மொன்றே யாக வருந்தவத் துறையாக் கொண்டார். (௨௦)

ஆண்டகை பிறந்த தேயம் அஜமுவான் டிருந்து பன்னாள்
பூண்டருந் தவத்தி னின்ற புணர்ப்பினா லெவரு மேத்த
நீண்டதப் பதண மோர்பேர் படைத்தது நிகரி லாது
மாண்டது புகழ்பு றாசல் லஜமியென் றினுமா றுதால். (௨௧

ஈட்டிய தவத்தின் பன்மை யியல்பெலா முயலும் வள்ள
லூட்டினு லன்றி யுண்ணே னுண்ணுநீர் தானு மாங்தேன்
கோட்டியர் பதண நீங்கே னெனமன வயிரங் கோலி
யாட்டிற முடைய வல்லோ னவனெடு வாய்மை யிட்டார். (உஉ)

பொறிவழி யடக்கிச் செல்லும் புந்தியு மடக்கி யோகங்
குறிவழி யடக்கி மீறுங் குணமற மடக்கி யூறு
மறிவழி யடக்கி யாவி யருளினி லடக்கி வல்லோ
னெறிவழி யடக்க மாக நிலையினி னடங்கி நின்றார். (உங)

தூய்மையா விளங்கா நின்ற சோதியி னிழல்போற் றேன்றிச்
சேய்மையா வண்மை யாகத் தெருள்படா வொருத்தன் றன்பால்
வாய்மையா லோத லான்மேல் வழிதரி சனத்தா லியாவுங்
காய்மையான் மூட்டி மூட்டிக் கதிபல காணு நின்றார். (உச)

திருநிலை நாத மோங்கும் பேரவை தெளியு நோக்கோ
டொருநிலை நிற்கு நாற்பா னுளின்பி னடையோ டுண்டி
யுருநிலை மதிக்கக் கூடா வொருவர்கொண் டுவந்து வள்ளல்
வருநிலை யுணரா வண்ணந் திருமுனம் வைத்துச் சென்றார். (உரு)

கதுமென வாயு வோடு கலந்துலாஞ் சுவையி னுண்டிப்
புதுமணம் பொறியி னூடு புகப்படு விடயந் துள்ளிக்
கொதிகொதித் தகத்தின் கார வேட்கையிற் கூடி மீறிப்
பதைபதைத் தெழுந்த தோங்கும் பசிதருங் கொடுமை யாலே. (உசு)

விளங்கிய தெளிவு மாய விரிந்தடர் வேட்கை யூங்கிக்
களங்குறை மனமே யெங்குங் கருத்தனு வாரு கின்ற
வளங்கெழு வல்லோன் பாலின் வாய்மையை முறிப்ப னல்லேன்
றுளங்கிடா தொடுங்கு வேகந் தோற்றிடா தமைதி யென்றார். (உஎ)

என்னலு மீறி மீறி யிரைத்திரைத் தகடு சுற்றி
மன்னலு மிறைவ னுணை மறுத்திடேன் மனமே யென்று
பன்னலுந் தன்கூத் தெல்லாம் படுதலுங் கொள்ளா நிற்ப
வின்னலுற் றடங்கி நின்ற பசியெழுந் தியம்பு மன்றே. (உஅ)

வெந்தழ லெரிநா வென்ன வெங்குணங் காட்டி மிக்க
சுந்தர வடிவின் வள்ளால் தோன்றுமிவ் வுணவிற் சற்றே
நந்தலி னுண்க வென்ற னவையற வாக்கைக் கூக்க
மைந்துற வென்ன வுள்ளா வழிகொளா வியல்பி னுற்றார். (உகூ)

நிறையுணர் வெவையு நோக்கா நிலைபுரி வள்ள றன்னே
டறைதர வுதர வெந்தீப் பெருமுழக் கதிரா நிற்பப்
பொறைபொருந் தலத்தின் ஞாங்கர் போதுங்கால் செவியிற் கேட்டார்
முறையுணர் அபீச கீதல் முபாறக்குல் மகுரூ மிய்யே. (௩0)

வரிசையு மருளுந் தாங்கு மறைவளம் பழுத்த வள்ளல்
புரிசையி னடுத்து நோக்கிப் புகழ்பெறு மப்துல் காதி
றெரிசினத் தடர்ந்த வோதை முழங்குவ தென்கொல் லென்னப்
பிரிசமுற் றிதனைச் சொன்னார் பெருந்தவ முயலுங் கோமான். (௩௧)

பொறிவழி நடந்து வேண்டும் பொருள்களிற் கலந்து தான்கொள்
குறிவழி கொள்ளுங் காய சூக்குமங் குளற லுள்ளத்
தறிவழி தொடர்ந்து வேறு தாண்டவன் பாலிற் றாழ்ந்து
நெறிவழி முறையிட் டோம்பி நின்றதென் னாவி யென்றே. (௩௨)

இம்மொழி யுணர்ந்து நெஞ்சத் திருங்களிப் பெய்தி நோக்கிச்
செம்முகங் கொடுத்து வாழுந் திருமனைக் கடைதி யென்னச்
செம்மலென் றுயர்த்த வந்த தேசிக ரகன்றார் பின்னு
மம்முறை பிசகா வண்ண மவ்விட நெகிழா துற்றார். (௩௩)

என்னகத் தெழுந்த நாட்டத் தியல்பினிற் றெளிய வல்லோ
னின்னகத் தேவ லொன்று தாங்கியே யல்லா லிந்த
மன்னகம் விடுத்துப் போதே னெனப்பல மறுக்கங் கொள்ளுந்
தன்னகத் துருவி னோடு சாற்றின ரதனி னன்றே. (௩௪)

உளத்தினோ டிருத்து மேலா முணர்வொடு முறுதி பூண்டுங்
களத்தினைப் பிசகா துற்ற நிலையினிற் கலையா தாக்க
வளத்தினோ டெந்தங் கோமான் வதியுங்கால் வல்லோ னன்பாற்
கொளத்திற னவையுங் கொண்டு குறுகினர் கிலிறு வள்ளல். (௩௫)

நனிதரு செல்வ மேன்மை நயந்தரு மறிவும் பெற்ற
மனிதரிற் பெருமை பூண்ட முகம்மது மஸ்தா னென்போன்
புனிதவுள் ளகத்தின் வாழும் பூம்பதத் தப்துல் காதிர்
தனிதரு முகத்தின் முன்னர் சலாஞ்சொலி மகிழ்ந்து நின்றார். (௩௬)

அருந்தவ முயலா நிற்கு மண்ணலே வரிசை மன்னித்
திருந்திய சிந்தை வல்ல செம்மலே முன்ன ரீங்கு
வருந்தவ முதியோர் தம்பால் வழிகொளு மொழியிற் போதிர்
பெருந்தவம் புனைதி ரென்றார் பேரருள் சுரந்த கண்ணார். (௩௭)

பொருதிரை யவனி காக்கும் புனிதவா னுரைத்த சொல்லிற்
றிருமலர் மலர்ந்து தேடுந் தெளிபொருள் கிடைத்த தென்ன
வொருவரு மளவி டாமெய் யாநந்த முண்டுண் டோங்கி
வருவழி நோக்க லுற்றார் வரிசைமா தவத்தின் வள்ளல். (௩௮)

முன்வந்த மகிமை வள்ளன் முன்னிய கருத்தி னோடு
பொன்வந்த மனையின் வாயிற் புறத்தினின் வழிபார்த் துற்றார்
பின்வந்த கருணை நாதர் பணியினிற் பிறந்து சிந்தை
தென்வந்த அப்துல் காதிர் திருவருள் பெறுவான் வந்தார். (௩௯)

எதிரணித் துற்ற போதி னெழிலிளங் குமர முன்யான்
கதிபெற வருதி யென்ற கட்டளை போதா தென்றோ
முதிர்புகழ் கிலிறி னேவன் முற்றுமென் பணியி னிற்பான்
மதிபெற வருளுங் காறுந் தாமத மருவ நின்றீர். (௪0)

உறுதியி னுறுதி தேடு முளத்தின துறுதி நன்று
பெறுதகை யிஃதே யென்னப் பிரியமுற் றழைத்துக் கொண்டு
மறுவகன் மனைக்க ணெய்தி மருங்கினின் மதிப்ப வைத்து
நறுவிய மணஞ்செய் யுண்டி நலம்பெற வெதிரின் வைத்தார். (௪௧)

எழிறருந் தளிகைச் சோதி யின்னென நளினச் செங்கை
செழிதரு மலரான் மேன்மை திகளுண வினிதி னேந்திப்
பொழிகதிர் முகமென் றிங்கள் பொலிவினிற் குவித லேபோ
லழகுறை முகியித் தீனுக் கபூசகி தூட்டி னாரால். (௪௨)

உடலகங் குளிரத் தூய வுள்ளகங் குளிர வாவிப்
படலகங் குளிர வெய்ய பசியகங் குளிர மாயை
யடலகங் குளிர வானு டணியகங் குளிர முன்னீர்க்
கடலகங் குளிரத் தீம்பா கமுதமும் புகட்டி னாரால். (௪௩)

நறியன வினிதி னூட்டி நாரத்தால் கனிவாய் பூசி
யெறிகதிர்ப் பருதி தன்னை யிளநிலா வனைந்த தேபோற்
செறிதரு போர்வை மெய்யிற் றிகழ்தரப் புனைந்து கையா
னெறிதரு தவத்திற் கேற்ற நிலைபல வெடுத்துச் சொன்னார். (௪௪)

வரத்தினின் மகிமை வல்ல தேசிக வள்ளல் யாவுந்
தரத்தினி னியங்க வல்லோன் றன்புறம் பற்று நாட்டத்
திரத்தினி னியற்கை கொள்ளுஞ் செயற்கையும் பிரித்துக் கூறி
நரர்க்கொரு மணிய னார்க்கு நசீகத்து மருளிச் செய்தார். (௪௫)

பாக்கிய மனைத்துங் கொண்ட பலன்பகா வினிய தீஞ்சொற்
றேக்கியா நந்தம் பூத்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப வுள்ள
மூக்கிய குத்பு நாதர்க் குயர்பணி முயல்வா னகப்
போக்கிய லருளிச் செய்தார் புகழ்குரு நாத ரன்றே. (சசு)

நன்னெறி பலவும் பெற்று நவநிதம் படைத்து வேதம்
பன்னெறி தொகையிற் கண்டு பண்ணவ ரருளு மாப்போன்
முன்னெறி நடந்து நின்ற முதிர்புகழ் தலத்தின் மேவித்
தன்னெறி முயலா நின்றார் தனிகௌது முகியித் தீனே. (சஎ)

ஸ்ரீதுபெறுபடல முற்றுப்பெற்றது.

ஆ படலம் கரு-க்கு கூடிய திருவிருத்தம் ௬௬அ.

# நாமோதயப்படலம்.

கலிநிலைத்துறை.

வரிசை மிக்குள மாதவர் மனத்தட மகலா
வரசர் கோன்பெருங் கருணையி னண்டகை தமக்குப்
பிரிச மாயுல கேத்திய காரணப் பெயர்நற்
றெரிச னத்தினே டெய்திய திறனெலாந் தெரிப்பாம். (௧)

ஆழ்ந்த சிந்தையின் குருவரு ளாக்கத்தா லகந்தைப்
போழ்ந்தெ ழுந்தவத் தெண்டனை கண்டனைப் புணர்பாற்
சூழ்ந்த கான்றரு நிழலினும் வெளியினுஞ் சுரத்துந்
தாழ்ந்த நீர்படு கரையினும் வரையினுந் தனிப்பார். (௨)

ஒன்றி னென்றிய துறவினி னெருமுக மன்றி
நன்றி னென்றிய பன்முக நாடிய போதின்
மன்றி னென்றியு மாதவ ரொன்றியு மதிலாங்
குன்றி னென்றியும் வாய்வழங் குவமுதல் கொள்வார். (௩)

ஏக மாகிய துறையினு மினப்படு துறையும்
பாக மாகிய நிலையினிற் பயிறருங் கால
மாக மார்புகழ் மாதவ நாயகர் மனத்தோ
டாக முங்களி கூர்தர வொருதிசை படைந்தார். (௪)

மதிக்கு மாமறை முகம்மது நபிவழி கிசுறத்
துதிக்கு மைந்துநூற் ருெருபதிற் ருென்றினி லுலகந்
துதிக்கு நாயகர்க் காண்டொரு நாற்பதிற் ருெழுகை
விதிக்கும் வெள்ளியி லொருநெறி தனின்வினை குற்ருர். (ரு)

காதுங் காரவெம் பவமகல் கருணையங் கடவு
ளோதுங் காரண மறைமொழி வாய்மலர்ந் தொளிரத்
தாதுங் கானறைப் பூம்பதந் தொடுகழ ருங்காப்
போதுங் காலையி னணித்தொரு புதியனைத் தெரிந்தார். (சு)

உலர்ந்த மெய்யினன் குன்றிய நிறத்தின னூனம்
புலர்ந்த தோலினன் வெளிப்படு நரம்பினன் பொசிப்புக்
கலர்ந்த சிந்தையன் பல்வகை நோயின னழிநீர்
மலர்ந்த கண்ணினன் குறையுயிர்ப் பெறிதரு மார்பன். (எ)

நடையு மற்றவன் முடங்கிய வுறுப்பின னலிவு
மிடையு முற்றவ னொடுங்கிய வாக்கையன் மேனி
யுடையு மற்றவன் சஞ்சலக் கடலிடை யுழன்று
குடையு மற்றவ னுயகர் குளிர்முகங் கண்டான். (அ)

மெலிவி னுலயர் வான்கதி நாயகன் மேன்மை
வலிவி னல்வளர் புகழப்துல் காதிறே வரிசைப்
பொலிவி னுகவென் சலாமெனப் புகல்வாய் பொருந்த
மலிவி னுகவென் சலாமென நாதரு மறுத்தார். (கூ)

தெரிச னத்துயர் பந்தனை செய்தவன் றிகைப்போ
டரசர் நாயக வென்னிடத் தடைகயா னழகின்
பிரிச மெய்துவா னென்னலும் பேரருள் சுரந்து
வரிசை வள்ளலா ரன்பொடு மடுத்தனர் மருங்கே. (கo)

அளவி டாதருங் கருணையி ரருங்கையாற் ருங்கி
விளவி டாதெனை யெடுத்திருத் திடுகவெம் பிணிகள்
களவி டாதென ருரைத்தலு முடலுளங் களிப்புக்
கொளவி டாதரு கிருந்தெடுத் துயர்த்தினர் கொண்டல். (கக)

சிறந்த வெம்மிறை மலர்க்கரந் தீண்டிய பொருட்டா
லிறந்து போம்படி கிடந்தவ னெழிலுட றழைத்து
நிறந்தி கழ்ந்துமெய் யூன்பரந் தணிநிறைந் தாக்கந்
திறந்த ரப்பருத் துரத்தொடு செழித்துயர்ந் ததுவே. (கஉ)

பரந்த தண்கதிர் மதியென முகத்தொளி பாயச்
சுரந்த பேரருள் கடலெனக் கண்களிற் றுலங்க
விரிந்த பாரெடு வரையென மணிப்புயம் விளங்கச்
சொரிந்த தேமல ரெனவுட றுளங்குறக் கண்டார். (௧௩)

நொந்தி ருந்தது முழன்றது நவன்றது நொடியின்
வந்தி ருந்தது மெடுத்ததுந் தழைத்தது மனத்திற்
றந்தி ருந்ததோ ரச்சத்தா லென்னெனத் தயங்கி
யந்தி ருந்திய தவத்தின ரதிசயித் தனரால். (௧௪)

விளங்கு மென்முக நோக்கிமிக் கருந்தவ வேந்தே
துளங்கு மென்றனை யறிவிர்கொ லென்னலுந் தூயோர்
களங்க ளெங்கினு மிதற்குமுன் கண்டில னென்ன
வுளங்க னிந்தெழும் புதியவ னிம்மொழி யுரைத்தான். (௧௫)

வென்றி மாதவ தீனெனும் பெயரினன் விரும்பி
யென்று மாதரிப் பாரெடுப் பாரில ராலே
யின்று நீர்கண்ட கோலம்போ லாயின னியல்புங்
குன்றி யென்னுடற் பழையதா யுகக்குறைந் ததுவே. (௧௬)

இறக்குந் தன்மையா னிறையவ னும்மைக்கொண் டென்னைப்
பிறக்குந் தன்மையா யுயிர்தந்த பெருமையா லியானுந்
திறக்குந் தன்மையான் முகியித்தீ னெனியெனத் திருப்பேர்
சிறக்குந் தன்மையா யினிர்புகழ் திசையெலா மென்றே. (௧௭)

எறியுந் தெண்டிரை மாநில மெங்கினு மிருமை
செறியும் பேறெலா முதவுநந் தீனெனு மேன்மை
நெறியு மார்வமுற் றுநந்த மாநிகழ்த் தியலிக்
குறியு மெவ்வெவப் பலனையுங் கொடுத்துநின் றதுவே. (௧௮)

வஞ்ச நீங்குமற் றகலுமுள் ளழுக்கடை யிருளின்
புஞ்ச நீங்குமற் றகலும்வெம் பவப்பிணி புன்மை
வெஞ்ச நீங்குமற் றகலுநல் லுணர்வொடு விரும்பி
நெஞ்ச நீங்கிலா முகியித்தீ னெனநினை வோர்க்கே. (௧௯)

பொருளு மாமுயர் நிலையுமாம் பொருள்புண ரறிவின்
றெருளு மாஞ்செல்வ மாம்பல கலைகளைத் தெளிக்கு
மருளு மாமொளித் தனமுமா மமைகுரு வாகு
மருளி லாதுள முகியித்தீ னெனமதிப் பதுவே. (௨0)

இனைய காரணப் பெயரினோ டவ்விட நீங்கி
நினையு முள்ளமற் றெவற்றையு நீக்கிய வள்ளல்
தனையு ணர்ந்தவர் வாழ்பகு தாதினிற் றண்ண
னனைய ஜாமிகுற் றலாபத்திற் கேகுமப் போதில். (உக)

மென்கை தாங்கிய கழலினோ டொருவர்மெய்த் தவத்தி
னன்கை தாங்குமென் னுயக நமர்குல வியல்பை
முன்கை தாங்கிய முகியித்தீ னேயென முன்னிட்
டென்கை தாங்கிய திருப்பதம் புனைகவென் றிசைத்தார், (உஉ)

முன்னி லாப்பெயர் முறையறிந் தன்புடன் மொழியு
மன்ன மேலவர்க் கருமையி னருங்கழல் புனைந்து
பன்னு மெய்ம்மறைப் பதிவளர் பள்ளியிற் போந்து
நன்ன யத்தொடுங் குத்துபாத் தொழுதனர் நாதர். (உரு)

தொழுதெ ழுந்தனர் வெளிப்புற மடைந்தனர் தொடர்ந்த
குழுவெலாம்பணி வியல்பொடு குளிர்ந்துள முலக
முழுது மேத்திய முகியித்தீ னெனவெயன முளரிச்
செழும லர்க்கரந் தொட்டனர் முத்தினர் சிலிர்த்தார். (உச)

காண்ட காதன காரணத் துறையினிற் கணித்துப்
பூண்ட நாமத்தி னுதயமு மவரவர் போற்று
மாண்ட பெற்றியும் பெருமையி னமைதியென் றகன்று
மாண்ட தோர்தவத் தமையிட மறைந்தனர் வள்ளல். (உரு)

மானி லத்தொரு திருமணி விளக்கென மருவுங்
கானி லத்தினும் வனத்தினும் வெளியினுங் கரந்து
மேனி லத்தினு நகரினும் நாள்சில விளங்கும்
நானி லத்தினு முகியித்தீன் குத்புநா யகமே. (உசா)

நாமோதயப்படல முற்றுப்பெற்றது.

ஆ படலம் கசா-க்கு கூடிய திருவிருத்தம் எஉச.

# கொற்றமுற்றபடலம்.

**சந்த விருத்தம்.**

அணியாய்பொருண்மறை யினிதாயுணர்மன
வறிவோடுயர்வகை நெறிமேவிக்
கணியாநலனுறு தவமேகிதமுயல்
கதியார்புகழதி பதியானோர்
தணியாதெதிர்கடி முதலாகியபல
தடையோடமர்பொரு தடல்கொண்டு
பிணியாதுயர்நிலை வழியேறியமுறை
பிரிவாய்வகையினொ டுரைசெய்வாம். (க)

மலர்வாவிகள்புனை பகுதாதினுநிறை
வளநாடுகளினு மணுகாமல்
புலராதெழுபொழில் வனமீதினுமழி
புலமீதினுமுள மருவாமல்
சலனார்மவுனமொ டிருபோதினுமொரு
தலமாயினுநிலை கொள்ளாம
லுலவாவினைகொளு மகுபூபொலிமுகி
யித்தீன்குத்புகண் மணியன்றே. (உ)

ஒருவாமனநிலை பலபாலினுமிக
விரியாதொருமையிற் பிரியாது
வெருவாதுறுதியி னகலாதுறுவன
மிகையாதெவையினும் பகையாது
மருவாதமைதரு முறையேகுவிதர
வழியாய்முயறரு தொழிலாலே
கருவாகியபய முடனுதரவிவை
கலவாநெறியினொ டுலவாரால். (ங)

பிணியாலெழுமுடன் மணியாகினைவறி
பிரியாதுடனடை புரிவாழ்வி
னணியாவருதுறை யிவைநாலினுமுய
ரருளாதியினெதிர் பொருளானே

கணியாவலபெரு மையினுளுளம்வரு
கருதாவெருவுத லொருதானுந்
துணியான்மருவுத லெனுமேலிருதுறை
தொடர்பாலொழுகுத லடர்பாலே. (௪)

பரிவாமெனவுல குளயாவையுமுயர்
பயனுமெனவுணர் * வயனுள்ளீர்
சரிவாமுமர்பொருள் மருவாதெனையொழி
தரமேலனசுக வரமேவப்
புரிவாமொருதவ மெனநாயகர்படு
புலமேயொருசுடு கலமாழ்ந்த
விரிவாய்வழியடை சுடுகாமரவக
மிசையாயினர்திசை தெரியாதே. (௫)

முறியாவுவுட னொழியாவிரதமு
முரணுவிதயமு மரணுக
நெறியார்தொழுகையு மிகலாமவுனமு
நிவராதெழுஜெப வுணர்வேரு
வறியாவழிவரு முடையோனறிவினி
னமைவாகியபொரு டமைநோக்குங்
குறியாநிலையொடு பதையாதுறைபவர்
கொளுநீர்மைகளெவர் தெளிவாரால். (௬)

செறிவாரடவியி னிடைகூடுறுசிறு
சிறகார்பறவையின் முறைபோலே
யெறிபேருணர்வினுள் வருகாரணவுணர்
விவையாகியபொழு தியல்பின்றி
யறிவாகுவர்மய மகல்போதவைபிரு
துறையாலருண்பெற முறையீடு
குறியாலுருகிய நிலையோடமுதுசெய்
குணவோசையினுயிர் மணமாமால். (௭)

* உணர்வுகளைவிரித்து நாயகர்கூறியது.

தெளிவாடியமரு வுதலாடியதுறை
திருவாடியவிறை சமுகத்தி
ஞெளிவாடலினிடை யுறவாடியமது
வுணவாடலின்றி மருளாலே
களியாடியசுக மிகவாடியவுணர்
கனிவாடியகதி மதிபோத
வெளியாடுவர்தனி விளையாடியபொருள்
விரிவாடியதெரி சனையாலே. (அ)

உள்ளென்றும்புற மிஃதென்றும்பக
லுளதென்றும்பொழு திரவென்றும்
புள்ளென்றுந்திரி வுயிரென்றுஞ்சுடு
புலமென்றுங்கெடு நிலமென்று
முள்ளென்றுந்துறு கல்லென்றும்பெரு
முருடென்றுஞ்சிறு கறடென்றுங்
கள்ளென்றுஞ்செறி புனலென்றுந்திரி
கலரெங்குந்திரி குவரன்றே. (கூ)

அடரும்பொறிபுல வுடலந்திரிசர
மசரங்களுமறை தரவோங்கிச்
சுடரும்பெரியவ ஞெளிநின்றெறிகதிர்
துவளுந்திருவுள மிவரும்பா
லிடரின்றியநடை கொளுமெந்துரைதமை
யெதிர்கண்டவரெவ ரவரெல்லாம்
படருங்கிரிகையர் மதிசிந்தினர்பல
மருள்கொண்டவரென வெருள்கொள்வார். (கo)

உலகந்தனிலுள வழகும்புதுமைசெய்
கிலவொன்றியபொருள் பலவொன்றும்
மலகின்றியதொழில் கொடுநெஞ்சகமயர்
வதுதந்திலமன மதமிஞ்சிக்
கலகம்பெறவெதிர் பொருகின்றிலவிவை
கருதுந்திறனழி தராலே
நிலவுந்தனிநிலை குணமுந்தனிகுண
நிவருங்கருணையி னவர்க்கன்றே. (கக)

அடமிக்குளபல விடயத்தொடுவரு
மகமுப்பகையிவை யகலத்தந்
திடமிக்குளவருண் மருளுக்கிடையிடை
தெளிவுற்றிடுபொழு துளவெல்லாக்
கடமிக்குளகுண நடைபட்டடல்வலி
கடைபட்டுறுமிட மிடைபட்டு
விடமிக்குளவினை யொழிபட்டுழல்வன
வெளியிற்றிகழ்தர வுணர்வாரால். (கஉ)

## வேறு.

அறிவி னேறிய கலக்கமு மறிவினிற் றெளிவு
நெறியி னேறிய நிலைகொளு நிமலநா யகரெக்
குறியி னேறிய வேற்றமுங் குறிபடக் குணத்தின்
வெறியி னேறினர் கறுகெனும் பொழில்வன வெளியே. (கங)

செல்லுங் காலையிற் பற்பல பவவினை திரண்டு
புல்லுங் காலழ லுகுமன மிகுமனம் பொங்கிச்
சொல்லுங் காரணக் குரிசிலைத் தவத்தொடர் பொழிய
வெல்லுங் காலமென் றடவிபு லீசுமிக் குவந்தான். (கச)

விஞ்சை மிஞ்சிய தலைவரின் வினைதமிக் குடைய
வஞ்ச மிஞ்சிய கருத்தின ளெருத்தனை வருத்தி
நெஞ்ச மிஞ்சிய வினையம்போ னிவர்வினை யியற்றல்
புஞ்ச மிஞ்சிய கணங்களை யவனெடு பொருத்தி. (கரு)

எடுத்த நின்றிற வீரமு மியைந்தவிப் படைக
டொடுத்த வீரமும் படித்தன தொழில்களுந் தோன்ற
வடுத்துச் சென்றழி வனத்துறு மவன்றவ மெல்லாங்
கெடுத்தொ ழித்திவ ணடைதியென் றேவினன் கிளத்தி. (கசு)

ஏறு சீற்றவெந் தழலெரி மனத்தின னேவ
லூறு சீற்றத்தை வளர்த்திட வொன்றினு மடங்கா
மீறு சீற்றத்தி னெழுந்தன னவனெடு பல்பால்
கூறு சீற்றத்தின் வற்பொடு குதித்தன கணங்கள். (கஎ)

எரிமு கத்தன பெரியதோ ருருவின வேற்றி
னரிமு கத்தன வடங்கிலாச் சினத்தின வடருங்

கரிமு கத்தன பரிமுகத் தனகள வொழியா
நரிமு கத்தன சிலவொரு புறநடந் தனவால். (கஅ)

வான ளாவிய சிரத்தின வரையினும் வளர்ந்து
தான ளாவிய புயத்தின தளையளா வியவெவ்
வூன ளாவிய தாளின வுலகளா வியபல்
கான ளாவிய கரத்தின சிலகண மொருபால். (கக)

அடரும் வெவ்வரி மேலின யானையின் மேலும்
படரும் பாய்பரி மேலின பன்றியின் மேலுந்
தொடருங் கூளியின் மேலின துருவையின் மேலு
மிடருங் கர்த்தப மேலினும் பலகண மெழுந்த. (உo)

கூனு றுப்பின குறளுரு வினகுரு டுடைய
வூனு றுப்பின முடங்கிய வூமைய செவிடு
தானு றுப்பின வுறுப்பிலா வுடம்பின தாமும்
வேனு றுப்புளச் சினத்தினன் வெகுண்டெழுந் தனவால். (உக)

ஏறு வாகனத் தொலிகளு மெடுத்தபல் லியத்தின்
வேறு வாய்த்தன வொலிகளும் வெகுண்டிக லித்துக்
கூறு வாய்ப்படு மொலிகளுங் குமுறலிற் குணத்தி
னாறு வாய்ப்படு மருந்தவ ரெவர்களு மயர்வார். (உஉ)

என்னெ னப்படு முலகமுந் திசைகளு மெடுத்த
கொன்னெ னப்படுஞ் சூலமுந் திகிரியுங் கோலு
மின்னெ னப்படும் வேலொடு பாலமும் வெம்மை
மன்னெ னப்படர்ந் தவிதரா தெரிவளர்ப் பதனல். (உங)

குலவு மால்வரைக் குடுமிக டோறினுங் கொண்ட
லுலவு வானினுந் திசைவரு கச முகத் தூடு
மலகி லாப்பல துறையினு மறையினு மாடி
யுலகெ லாம்பட ரிருட்கண மடைவபோ லுறுமால். (உச)

முந்தி யுந்துவ சிலசில முனைத்திற முரணு
னுந்தி யுந்துவ சிலசில வொன்றொடொன் றிகலிக்
குந்தி யுந்துவ சிலசில குதித்துப்பல் லணியின்
பந்தி யுந்துவ சிலசில பாய்ந்துபாய் கணங்கள். (உரு)

கொழுந்து விட்டெரி யுமிழ்ந்தன விழிகளுங் கொடிறின்
வழிந்த வூனிண நாறிய வாய்களு மன்னி
யெழுந்த தீமையின் மனங்களும் வினைகளு மெவர்க்கு
மிழிந்த வன்பிணி பலபல தரவெதிர் வருமால். (உசு)

கோலங் கொண்டபல் லணிநிரை கொடிபல விருதும்
ஞாலங் கொண்டவா னுலகமுங் கொண்டிடை நடித்துச்
சாலங் கொண்டவன் கணப்பெருந் தண்டங்க ளார
வோலங் கொண்டவா ருதியென வுரவரை சூழ்ந்த. (உஎ)

கோர வெம்பரி வலமிடங் கடவின கொடுங்கண்
டீர வங்களை யேவின மதகரி செலவிட்
டார விண்டுகள் பரப்பின வடர்பரி கழுதை
வீர வேகத்தி னடத்தின மருங்கெலாம் விரைய. (உஅ)

வேலெ டுத்தன வில்லினை வளைத்தன வெய்ய
கோலெ டுத்தன கோணங்க ளேந்தின குதித்துப்
பால டுத்தன வெங்கணப் பரப்பினைப் பார்த்து
நூல டுத்துலாங் கருத்தினை நோக்கினர் வள்ளல். (உகூ)

கண்க டையுக வழற்புகை நாசியிற் கதுவ
மண்க டையுக வனற்படை சுழற்றிவற் புறுத்த
வெண்க டையுக வியந்தரம் பொருதலி னியாதும்
யுண்க டையுகாப் பேதியா திருந்தது புந்தி. (௩௦)

புறத்தெ ழுந்தன கலகத்திற் கலங்கிடாப் புலனு
ரகத்தெ ழுந்தன முன்னிலைப் படுமொழி யதனின்
றிறத்தெ ழுந்தன வென்னெனத் தெளிந்தனர் தெரியா
மகத்தெ ழுந்தநன் னிலைப்படு பயனென வழங்கும். (௩க)

சொல்லு மிக்கிய லுடையவர் துதியப்துல் காதிர்
கொல்லும் வன்கணப் பெரும்படை குலைகுலைந் தோட
வெல்லு நல்லுளத் துறுதியி னூக்கத்தின் வெருண்டு
நில்லு நின்றெதிர் பொருமுறு நிலைதள ராதிர். (௩உ)

அறம்ப டுத்துவா மகத்தினை யணிநிலைப் பதத்தைத்
திறம்ப டுத்துவாஞ் செய்கையைச் செயல்பட வீர
மறம்ப டுத்துவா மெம்மரு ளுதவியால் மகிமை
நிறம்ப டுத்துவா மும்மைநாம் புகழ்நிலை நிற்க. (௩௩)

என்ற மேம்படு வாய்மைகேட் டெறுழ்வலி வீரங்
குன்றி லாமனத் தொடமிரு வகைநிலை கொண்டு
நின்று செவ்விழி யொளிதர நேர்சினங் காட்டி
வென்றி நாயக ரோரொலி முழக்கினர் வெகுண்டு. (௩௪)

பருப்ப தங்களுந் தாங்கிய புடவியும் பல்பா
லிருப்பி டங்களுந் துயிர்களு மிடிகளும் வானு
முருப்ப முற்றதிர்ந் தயர்ந்தன கடுஞ்சின மூறி
நெருப்பு குத்தன பேய்க்கண நிலையுகுத் தனவால். (௩௫)

தெரிந்தி டாதெழு மொலியினுற் றிசையெலா மூலைப்
பிரிந்தி டாதடர் வலிமனந் திடுக்கொடு பெயர்ந்து
சரிந்து காறளர்ந் துடனிலை தனையுணர் கில்லா
திரிந்து சாடின வோடின சிலவிழிந் தனவால். (௩௬)

வேலுங் கையொடு சோர்ந்தன வில்லொடு தொடுத்த
கோலும் பற்றுவிட் டனகொளுங் கரம்விழி விழியோ
டாலுஞ் செந்தழ லவிந்தன வுடலினே டாக்க
மேலு மாய்ந்தன வொழிந்தன சிலவிளிந் தனவால். (௩௭)

கொள்ளு மோசையிற் பல்வினை நீடிய கொடுமை
தள்ளு நெஞ்செலாந் துள்ளலு மாருதஞ் சுழலுற்
றள்ளும் பூளையின் மலரென வழிதரச் சேனை
விள்ளு மாதிப னேக்கினன் கொதித்தனன் வெகுளா. (௩௮)

### வேறு.

அடங்கிலா மதங்கொண் டேக்கி யாண்மையின் கார மீறி
யொடுங்கிலா துமிழுஞ் செந்தீ விழிகளோ டுயிர்ப்பு மின்ன
மடங்கிடா தசனி யேற்றி னுரறிமுன் னெதிர்ந்து மாறு
நடங்கிடாத் தவத்தி னேரை நோக்கிவற் புறத்திச் சொல்வான். (௩௯)

என்கண மனைத்தும் பல்பா லிரிதர முரியுஞ் செந்தீ
நின்கணி னுகுத்த வேக நிலையினை யறிவ னியானே
வன்கண யிவணின் மேவா தகன்றுமற் றியாண்டும் போதி
புன்கண்வந் தடரா தென்சொன் மறுத்தியால் பொறுத்த தன்றே. ()

அழலுகு படையிற் கேவ ணுவியை யள்ளிக் கையாற்
குழைவுற வெறிவன் வானிற் குரைகடற் புகுத்தி விப்ப

னிழிகொளு முடலே யென்னு வெறுழ்வலி வீரங் கூறி
யெழிலுறுங் கருணை வள்ளற் கெதிரின்வற் புறுத்தி நின்றான். (சக)

வெறிபடுங் கொடிய பூத வீரிய னுரையி னுள்ளத்
தெறிபடு சினமேற் கொள்ளா வெரிவிழி நோக்கி வள்ளல்
குறிபடு நளினக் கையா லோரறை கொடுத்தார் மேகந்
தெறிபடு மிடியே றென்னத் தீயொடு மொலித்த தன்றே. (சஉ)

அடியொடு மடியும் வேகத் தாவியு மலற வோடிப்
படியொடு சுழலுற் றெல்க நா்யகர் பார்த்துப் பார்த்துக்
கடியொடு கௌக லாச்சொற் கூறலுங் கனலிற் பட்டுப்
பொடியொடு நீறுங் காட்டம் போலற நீறி னுனல். (சங)

எரிந்தவப் புதுமை தன்னை யெழிறருங் கௌதல் லஃலங்
தெரிந்துறுங் காலே யன்ன திசையினின் றூர்ப்பிற் றாமஞ்
சொரிந்துவெங் தழலிற் பொங்குந் துணைவிழி யெரிய வான்வின்
னெரிந்தன புருவங் கோட நேர்ந்ததோ ரசனி போல. (சச)

ஊறிய கொடுமை யோங்கு முளத்தின னூறு பட்டு
மாறிய கண்ண னெங்கு மருவுதுன் புடைய னூத்தை
நாறிய மெய்யன் பார்ப்போர் நகைத்திகழ் வடிவன் வெஞ்ச
மீறிய வினையின் வல்லன் வெருவல்செய் முகத்த னன்றே. (சரு)

மாதவர் பகையன் வேத வழிகெடு கள்வ னூளுங்
தீதமை பவர்க ணுதன் செம்பொனு ரொழித்த கோளன்
காதகன் பாவ மெல்லாங் கலவிய வவய வத்த
னேதகு விரோதன் வேகத் தெய்தின னெடியி னன்றே. (சகூ)

மதம்பட வெதிரி னின்று வன்சொலாற் றன்சொ லாகக்
கதம்படச் சீறிச் சீறிக் கருதுவாய் கருது வாயென்
றிதம்படுஞ் சேனை யெல்லா மெறுழ்வலிக் கிழிவு தோற்ற
விதம்பட விரியச் செய்த வீரம்யான் காண்ப னென்றான். (சஎ)

கருங்கடல் கடக்க வோங்குங் கனலியை யவிக்கக் காணுப்
பெருங்கக னளக்கச் சீறு மிடியினைப் பிதிர்க்கச் சூறை
மருங்கெலாந் தடுக்க மற்ற வலியெலா மொழிக்க வல்லே
னருங்கருத் துவந்த வண்ண மமைப்பதை யறிகி லாயே. (சஅ)

திவின திடத்து நீர்சூழ் திண்புவி யிடத்துஞ் சொர்க்கக்
காவின திடத்தும் வானின் கடவுள ரிடத்தும் காசிம்
நாவின திடத்து மற்ற நபிகளி னிடத்து மென்றன்
பாவினே யணிந்த கோன்மை யாணையிற் படர்ந்த தன்றே. (சகூ)

எத்துறை யிடத்துஞ் செல்லு மியல்பினு னிப்போ துன்னே
யித்துறை மறுத்து மாறு தெனக்குள பணிகள் செய்யு
மத்துறைக் காக்கிக் கொள்வா னடைந்தன னறிவாய் தோன்று
முத்துறை கண்ட நானே முரண்படு மிபுலீ சென்றான். (ருo)

என்னலுங் கடுத்துக் கண்ணி னெரிசிறந் தவழ நோக்கி
முன்னநீ யிறைவ னுணை முறையினே யிகழ்ந்து கோபந்
தன்னைக்கொண் டகன்ற பாவி யகலகல் தரணி மீதி
னுன்னைக்கொண் டொழிவா யென்று ருபர்புகழ் முகியித் தீனே. (ருக)

பொருவருந் திசைக ளெல்லாம் பொருதுவென் றூணை மாட்டி
யொருவரு மென்கை நீங்கா தொழுகலி னடக்கி னேனை
வெருவரு மாற்றங் காட்டி யகல்கென வெகுண்ட தன்மை
தெரிவரும் புதுமை யென்ன மணிவிர னுசி சேர்த்தான். (ரு௨)

அடிக்கடி யுயிர்த்துக் கண்க ளழற்பொறி கதுவ வெண்பற்
கடித்திகழ் மென்று தின்று கைத்துணைப் பிசைந்து நிற்ப
முடித்தலைப் புறத்து மேலோர் முனைக்கரந் தோன்றி வற்புற்
றடித்தவேற் பிடித்த போலுந் திசையெலா மதிர்ந்த தன்றே. (ருங)

படுந்திறத் தடியி னேங்கிப் பதறினன் குழறி வீழ்ந்து
நெடுந்திறத் துடல மெல்லாம் பூழ்தியி னிமிர்ந்து ருண்டு
கெடுந்திற மாகப் போகக் கிளர்மதி முகமு முள்ளு
மடுந்திறத் தறிவாற் பூப்ப வாக்கமே பூத்தார் வள்ளல். (ருச)

பின்னுமற் றகில மெங்கும் பேதகப் படுத்து முள்ளத்
துன்னுந்தன் னுண்மை வீர மொருவகை யானுந் தேரு
தின்னும்வென் றிடுவா மென்ன விருவிழி யழல்கள் சிந்த
மின்னுமோர் படக்கை யேந்தி வெகுண்டமுன் றெதிரின் வந்தான். ()

தன்னுடற் பிறந்த குண்டத் தழலினிற் பிறந்த தோங்கு
மன்னுயிர்க் கிறுதி காட்டு மறமைய தலக முற்று
மின்னுயிர்த் தெரிக்குந் தீமைக் குணத்ததவ் வீர வேலான்
முன்னரெத் திசையு மாட முனைமுனைந் தாடா நின்றான். (ருசு)

உடற்புறஞ் சுழலும் வேகப் படையுகு முருப்ப வெந்தீக்
கடற்புறம் படர்ந்த பாருங் கானமுங் குன்று மெல்லாம்
பொடிப்புற வெரிக்கு மாகிற் பொருபவ ருளமுங் கண்ணு
நொடிப்பொழு தேனு மஞ்சா தறுதிபி னேக்குங் கொல்லோ. (ருஎ)

அழற்படை யெய்தா முன்ன மவனது சிரத்திற் பாயுஞ்
சுழற்படு சூறை போன்ற பொற்பொளிர் துரக மீதி
னிழற்படு சுடரிற் பூத்த வடிவொடு நிலமை தோற்றுக்
கழற்படு வீர மோங்கு மொருத்தரக் கணத்தி னுற்றார். (ருஅ)

வரவறி யாது வந்த வள்ளலோர் வடிவாள் சோதி
விரவறி யாது லாவ வளிப்பமே லன்பா லன்றி
யிரவறி யாத கையி னேற்றுஞ்சு வுலகுக் கெல்லாம்
புரவறி யாது நல்கு நாயக ருள்ளம் பூத்தார். (ருகூ)

காரண வடிவா ளேந்திக் காரண வுருவ மாக
வாரணக் குரிசில் வேகத் தகோரமுற் றுறுத னேக்கி
மாரணக் கொடிய நெஞ்ச மலைவுபட் டுழன்று பிற்காற்
றூரணங் கெடப்பாய்ந் தோடி மறைந்தனன் றன்மை நீங்கான். (சுO)

மறைந்தனன் மீண்டு மப்பாற் றோன்றினன் மாழ்கிப் பூவி
லறைந்தனன் விழுந்து கண்ணீ ராற்றினி னுடலந் தோயக்
குறைந்திடத் தனுவும் விம்மிக் கொடுங்கையா லெற்றிப் பூழ்தி
நிறைந்தமண் டலைவாய்ப் பெய்து நினைந்தினைந் தழுது சொல்வான். (சுக)

குரிசிலென் றுலக மேத்துங் கொற்றவே லப்துல் காதிர்
அரசிழந் தெனது வீரத் தடலிழந் துடலின் வன்மைப்
பரிசிழந் துன்னல் முன்னம் படர்கிலாக் கொடிய தண்டம்
பிரிசமுற் றடர்ந்து கொள்ளப் பெற்றன னென்று வீழ்வான். (சுஉ)

கலங்குவ னஞ்சி யஞ்சிக் கதறுவன் வடிவ மாறி
விலங்குவன் புலம்பி விம்மி விம்மியெய் திரப்ப னுள்ள
மலங்குவ னேங்கி யேங்கி மாழ்குவன் முடியிற் சாய்ந்து
நிலங்கொளப் படுப்பன் பின்னு நிவந்தெழுந் தழுவ னன்றே. (சுரு)

பதிபுகழ் நயினர் பாதம் பண்புட னுள்ளங் கொண்டு
மதிபுகழ் பவுசு பெற்ற முகம்மது மஸ்தா னென்போ
னிதிபுகழ் தரவே யேற்றோர் வறுமைநீங் குவபோ லன்னுன்
சதிபுகழ் வீர மெல்லா மொழிதருந் தனிய னுனன். (சுச)

உலம்பொரு புயத்து வள்ள லொளிர்மணித் திருவாய் விண்டு
வலம்புரிந் தாளும் வல்லோன் முனிவினிற் பட்டாய் நின்றன்
சிலம்பினு றனினு நொய்ய சில்வினை நடவா தீங்குச்
சலம்புணா ராது போதி பிழைத்தியுன் சார்பி னென்றூர். (சுரு)

அருந்தவக் குரிசில் காணு வாக்கமும் வலியு நின்றன்
பெருந்தவ நிலையு மென்பாற் பெயர்கலாக் கொடிய துன்பக்
கருந்தவக் கடலா யாழ்ந்தே னெனமிகக் கரைந்து ளஞ்சி
யிருந்தவத் திசையுந் தோற்று தேகின னிபுலீ சன்றே. (சுசு)

தன்னுயிர் பிழைத்த றூனே தனக்கொரு வென்றி கொண்டு
மன்னுயிர்க் கிடுக்கண் செய்யு மாயவன் போய பின்ன
ரின்னுயிர்க் காக்கந் தேடு மிறைவரவ் வனத்தின் சார்பிற்
பொன்னுயிர்த் தென்னப் பூத்த பொழிலொரு நீழ லுற்றூர். (சுஎ)

### வேறு.

வளஞ்சால் கறுகி யெனும்பொழிலின் மருவா தெவரும் புறம்போய
களஞ்சார் வனத்தி னுளததன்பாற் கடிய விரத நிலைபூண்டு
தளஞ்சால் புடைய புறுதியெனுந் தருவின் குழையே யுணவன்றி
யுளஞ்சா ராமற் றுணவருந்தா துறுதி நிலையி னுருமித்தார். (சுஅ)

வெயிலும் பகலும் வெருவியபோல் விடியல் விடியா திடத்தின்முன
மெயிலின் முயலுந் தவத்தினுமிக் கினிய ஜெபமும் வணக்கமுமுள்
ளயிலும் நினைவும் யோகமுமற் றதன்பாற் குரிய முறையெல்லாம்
பயிலுங் குரிசி லொருநிலையா வொன்பா னுண்டு பரிந்துற்றூர். (சுகூ)

பிதுங்கா தொதுங்கா தொருநோக்காற் பெயரா நிலையி னுறுங்காலத்
திதங்காண் பனபோற் பேரருளே யிறைக்கு மொருவன் கருணையினுல்
விதங்கா ணுலகும் சேர்பொருளும் விண்ணும் விண்ணோர் மற்றுளவும்
பதுங்கா தறுசுங் குறுசியெலாம் பரிந்து திாைக டிறந்ததுவே. (எ0)

மறையா தெல்லாம் வெளிப்படவு மருங்கி னேங்கு மாயவலைக்
குறையாக் கண்ணி யெறிதடிவிற் கொடுங்கோன் முதலாப் பலகொண்டு
நிறையா தளத்தின் பிரபஞ்ச நிற்பக் கண்டா ரென்கொலென
வறையா முன்ன மொருவார்த்தை பிறந்த தசரீ ரியினன்றே. (எக)

வீட்டி னுரிமை மிகவேண்டி வேண்டும்பொருள்கள் வெறுத்தகன்று[லை
காட்டின் மலையிற் பொதும்பினிடங் கரந்தா ருமைப்போற் பெருங்கன

மூட்டி யிருந்தார் தமையெஞ்சொன் முயற்சி முயல்வா னுகவடர்
வேட்டின் வேட்டை யாடுவன வென்ன வென்கோன் வெகுண்டனரால்.

வேகத் தடர்ந்து போராடி வெருட்டி யடித்து நொறுக்கித்தொடர்
பாகத் தடர்ந்து புறமழியப் படுத்தி நின்றூ ரோராண்டு
தேகத் தடரா தொருதிசையின் வினையின் செயலாத் திரண்டுலவிப்
போகத் தடரா துறக்கண்டா ரென்கொ லெனப்புந் தியினுய்ந்தார். ()

வேண்டுமவர்க்கும் வேண்டாதா ரெவர்க்கும் விரும்புங் காரியமுந்
தேண்டும் பொருளின் முயற்சிகளுந் திரிந்த பொருளிற் கவலைகளுங்
கூண்ட சுற்றத் தொடர்பில்வருந் தொழிலு முயிர்கட் காங்கூற்றிற்
பூண்ட வேத விவையும்மைப் புணரா நின்ற வெனக்கேட்டார். (எச)

எங்கும் பொங்கு மித்தொடர்புக் கெதிரிட் டதற்காம் விந்தையினுற்
சங்கை தெளிய வறுத்தொதுக்கிச் சாரா திருந்தா ரோராண்டு
கங்கு னீக்கி யொளிபமுதங் களங்கற் றுகுத்த தனிமதிபோ
லங்கைக் கனியி னுலகோங்க வகக்கண் சிறந்து துறந்ததுவே. (எரு)

சித்தத் தெழுந்த விருத்திகளுந் தெளிவின் கார விளக்கங்களும்
புத்தி விரையு மனத்தொடர்பும் பொலிவிற் பொலிய விஃதென்னென்
றுத்தி வினவா முனமூறு மும தாட்ட மும்பொருத்த
மத்த மறியா தனவென்ன வறையப் பெற்றா ராண்டகையே. (எசு)

உள்ளித் தொடர்ந்து பலநாட்டத் துவப்பிற் பலபாற் படர்ந்தறிவிற்
றுள்ளித் திரியு நற்குணமுந் தொலையத் திரிய வொருகுணமே
புள்ளிப் பதிய வோராண்டு பொருது பொருதவ் வகக்கண்ணுந்
தெள்ளித் தெளிய தவநிலையிற் சிறந்தார் குத்பு நாயகமே. (எஎ)

பற்றி நோக்கும் பக்கமெலாம் பயில நோக்குங் காலிவைகள்
சுற்றி நோக்கா தகன்றபினர் சூழச் சகாய காரணங்க
ளொற்றி நோக்கும் பல்பிணிக ளுவகைமூரி வன்கணங்க
டுற்றி நோக்கிக் கிடந்தவெலாந் துறந்து காண லாயதுவே. (எஅ)

துலங்குங் காயப் புரியட்டகஞ் சூழ்ந்த பிணிக ளொதுங்கும்படி
யிலங்கு மருந்து முரனறுக்கு மெறுழ்கொள் படையு மொருபுறமும்
விலங்கா நாட்டத் துயர்வணக்க மொன்றின் விசிப்புற் றோராண்டு
கலங்கா திருப்ப வவையெல்லாங் கழன்று மாய்ந்து பட்டனவால். ()

அடுக்கா யொழியா வெழுபான்மே லாய திரைக ளவ்வளவும்
படுக்கா தழிய பின்புளவாம் புவனம் பலபல் லுயிர்களெல்லா
மெடுக்கா தனவு மெடுத்தனவு மாய கரும மெத்தனையு
மொடுக்கா மொருவன் றனக்குளென வுண்மை தோற்றித் துறந்ததுவே

இன்ன பலனுற் றெழுகாட்சி யிடத்திற் குத்பு நாயகனு
ரன்ன நிலைபி னவரொருத்த ரன்றி மற்ற படைப்பனைத்தும்
பின்ன ராக முன்னுகித் தனித்தார் பெருமை யுடையவன்றன்
மன்னு மயமா நிறைவெள்ளக் கடலின் மறைந்து சிறந்ததன்றே. (அக)

கூட்ட நீங்கக் குலநீங்கக் குணங்க ணீங்கக் குணப்பான்மை
யூட்ட நீங்க வுடனீங்க வுணர்வு நீங்கப் புணருருவ
நாட்ட நீங்க வுயிரொன்றே நாட்டு மிறைவன் றன்சமுகத்
தேட்ட நீங்கா தெழுசோதித் திரளி லாகித் திகைப்புறவே. (அஉ)

தேடும் பொருளே யறிவினுக்குந் தெரியாப் பொருளே தெளிவழுந்தக்
கூடும் பொருளே வேறுபடா அஃலம் பொருளே யென்றிரப்பு
நாடும் பொழுதிற் பெருங்கருணை நாடியிழுப்பக் காந்தயத்
தாடும் பொருள்போல் சிழுப்புண்டவ் வாவிக் கியக்க மற்றதுவே. ()

சுழலுங் காற்றிற் சுழிபட்ட துரும்புபோலப் பரம்பாயா
தழலு மாவி தனக்குள்ள வுரிய கருத்தத் துவமெல்லா
நிழலாய் நிழலை யுடையவன்பால் சாட்டு நேர்மை யாகியதோர்
கழலாத் தவக்கு லெனும்வாயிற் கடையுந் துறப்பப் புகுந்ததுவே. ()

கடங்க டோறுந் தன்குணமே காட்டுந் தானே யுடையனென
வடங்கா திருக்கு மியல்பெல்லா மடங்கி யொடுங்கி யாங்குற்ற
மடங்காத் திரளி னெருக்கமெல்லாங் கடந்து மறுகும் போதவருள்
தொடங்கா திழுத்துக் கினுவென்னும் வாயிற் றுறந்து சேர்த்ததுவே.

எண்ணுப் புவன கோடிகளி னியைந்த பலபல் லுயிர்களினு
முண்ணு டுவதொன் றிலையாவு மொழியா நாட்ட மூசுகின்ற
விண்ணு மந்தத் திருவாயில் வேண்டும் பொருள்வேட்டுட்படலுங்
கண்ணுர்தகைய திரனெருக்கங் கடைப்பட் டிருப்பத் தடையட்டே.

எடுத்த குணத்தா லிடைநீந்தி யேக லாகா தப்போதே
தொடுத்த வருளே மடுத்திழுப்பச் சூழ லறியா தவ்வாவி
யடுத்தே யிழுப்புண் டடன்போத வணித்தா முடுகு நிலைபூண்ட
கடத்தற் கரிய குறுபென்னுங் கடையிற் சேர்த்துக் கனித்ததுவே. ()

ஆவி யணிந்த சிபாத்தேழி னுக்க மவன்ற னுக்கமதா
மேவி யணியுங் கேண்மைநிலை விளையுந் துறையி னுயர்வாயில்
தாவி நெடும்பே ரருள்பெறுவான் புகுந்து தாவில் பெருந்திரளை
நீவி நீவிக் கடந்தொருவர் நிலைகொண் டுய்யு மவ்வேலை. (அஅ)

ஓங்கி யகலா துரிமையினு லூறி யொலிக்கு மவ்வருளே
தூங்கி யிழுப்ப விழுப்புண்டு சோர்ந்து கிடக்கு மவ்வுயிரைத்
தாங்கிப் பெற்ற வக்குணங்க டாமால் முற்றுந் தரிபட்டு
நீங்கா திருக்கும் சுக்றென்னும் வாயி னிலையின் விட்டதுவே. (அகூ)

மேவ லரிய நயமெல்லா மேவி யகலா தாகமுபல்
பாவ லுடைய கடைபுகுந்து பார்க்கப் பார்க்கத் தோற்றுறு
காவ லுடைய பெருந்திரளைக் கடந்து கடந்து மிகுமொளிவி
னுவ லுடனே செலமயக்குற் றுநந் தார்வ முற்றுறுமால். (கூ0)

மாறு தூறு மவ்வருளே மருவுங் குணங்க ளவற்றினையும்
வேறு தோன்றித் தெடுத்திழுப்ப விரிந்த சோதி சொரூபமயத்
தாறு தழுந்தி யிழுப்புண்ணு மாவி யதனை முஷாகதத்தென்
றேறு துயர்ந்த பெருவாயி லிடத்திற் கொடுபோய் விட்டதுவே. (கூக)

திசைகள் பலவுங் காலமுதல் செய்கை பலவு மெப்படைப்பு
மசையு மசையாப் பொருளுமெல்லா மழிந்து வஸ்து வெனும்பெயரின்
பசையு மற்றுப் பரப்பிரமப் படிவச் சோதி தானுக
விசையுங் கடையுட் புகுந்தகலாத் திரள்க ளெவையுங் கடந்ததுவே. ()

தானே தனக்குக் காண்பனவாய்த் தன்னைக் காணும் படிபூத்த
மானே ரருளே வசித்திழுப்ப மயங்க ளெவையு மறமாய்ந்த
வூனே பயிலா வறிவடிவத் துன்மை விளங்கு மான்மாவுங்
கோனே ரிழுப்புண் டுயர்பகுறென் றோங்கும் வாயில் கூடியதே. (கூக)

நன்மை தீமை நாடுநினை வொருமைப் பன்மை நடப்பனவொன்
றின்மை யின்மைப் பெருங்கடையி லேறி யாங்கு நோக்களவிற்
தன்மை யாகத் தானிருப்பத் தன்சொற் கிழாய்த் தானெழித்த
பன்மை யாவும் வழிபாட்டிற் பரிவி னுறுத ரேற்றினவால். (கூச)

இயங்கு முணர்வு ளுயிரறிவு மெழுந்த கருத்துஞ் சத்துவமு
முயங்குங் கேள்வி பார்வையொடு மொழிமற் றெவையு மழிந்தவற்றின்
பயங்கொள் வான்ற ணுயகன்றன் பண்பே யோங்கத் தானுமழிந்
துயங்க லின்றி யதுநிலையி னுண்மை தோற்ற லாகியதே. (கூரு)

வேறுய்க் கொண்ட குணமழிந்து விளங்கும் பெயரு மழிந்துபல
கூறுய்ப் பிரிந்த பிரிவழிந்து கொள்கை யழிந்து பலவற்றின்
மாறு யிருந்த பொருளாகி மாயா நிலையின் மாய்ந்துயர்ந்த
பேறுய்ச் சிறந்த வென்கோமான் பெருமை யென்னென் றறைகேனே.

தேக்கு மருளிற் பிறந்துவருந் தெளிவிற் பூத்த பல்லுயிர்க
ளாக்கு மியல்பும் வளர்க்குமியல் சாக்கு மியல்பு மாப்பொதிந்த
போக்கில் பெரிய புதைபல் வல்ல புகழின் சிறப்பு மழியாத
பாக்கி யமும்பெற் றுயர்வள்ளல் வலுமை யெளிமை பகாதன்றே. (கூ௭)

தொண்டென் றியங்கு நிலைதிரிந்து சுத்தத் தோன்ற ஞயகமைக்
கொண்டெங் நாளு மித்துறைகள் சூலைபா தொழுகு மகத்தொடர்பா
லண்டு மென்போ லடியாரை யாளுங் கருணைப் பெருமானே
யண்ட புவன கோடியெல்லா மணிபா தரத்தின் குத்பாமால். (கூ௮)

நோற்ற விரதந் தழைகொண்டு துறந்து நோய்செய் வெங்கணப்போ
ராற்றி யாற்றி யகப்பகைநா லாண்டா வடர்ந்து கடைகளின்மே
லேற்றி யேற்றி யையாண்டு மிரியா தரிய தவநிலைமைப்
போற்றி யொன்பா னுண்டுமென்கோன் புனைந்த புணர்ப்பிற் களவிலவே

சொல்லுந் தவத்தி னுறுமாண்டு தோறுந் தலைநா ளினிலொருவர்
செல்லும் பொழுதிற் றேன்றுமயி ரகத்தாற் செய்த வெழிற்கவசம்
புல்லும் படியொவ் வொன்றருளிப் போவா ரன்றி வேறெருவ
ரல்லும் பகலு மறியாத வகத்தின் மருஉத லிலவன்றே. (க00)

செற்ற வினையின் குணமுமகச் செருக்கும் புறத்தின் பெருக்குமெல்லா
மற்ற நிலைபி னருதவர்போ லகிலத் தொழுகு நெறிமுறையிற்
பெற்ற பேறுஞ் சறுகாது பேணு மியல்பாற் கிடையாத
கொற்ற முழுதுங் கொண்டனர்நங் குத்பு முகியித் தீனொளியே. (க0க)

எடுத்த இசாவி னுலுவாலே சுகுபு தொழுதா ரீரிருபான்
றெடுத்த வருட மொருகாலி னிலைபிற் சுருதி முடித்தவிரா
வடுத்த வருடம் பதினைந்தென வறிவிற் குணத்திற் பழகியருண்
மடுத்த முதிய மாதவர்கள் வகுத்தா ரவர்கள் வாய்மொழியால். (க0உ)

வல்லோன் கிலிறு நிறுத்திவைத்த வருட மூன்றும் பதினொன்றும்
பல்லோர் புருசுல் அஜமியென்ற பதணந் தன்னிற் சுல்லியிடத்
தல்லோ ரறிபு மிடங்களினு மிரண்டு மாக்கந் தருவனத்தி
னல்லோர்புகழு மொன்பானுந் தவத்தா னடந்த தையைந்தே. (க0௩)

ஆண்ட நாய னருள்வழியே யறிவினைத் தாண்டியயல்பிற்
பூண்ட நாதர் தவத்தினது போலப் பயின்று நிலைபெற்று
வேண்டு மடியார் நலம்பெறுவான் விழைவி னமைந்து படிதிருத்தி
மாண்ட புகழிற் புரந்தளித்த வரலா றெடுத்துக் கூறுதுமால். (க0ச)

கொற்றமுற்றபடல முற்றுப்பெற்றது.

காண்டம் க-க்கு படலம் கஎ-க்கு

கூடிய திருவிருத்தம் அஉஅ.

## இரண்டாங்காண்டம்.

# குருநிலைபெற்றபடலம்.

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

தண்முகி லுயிர்க ளோம்புந் தனிக்குடை நீழல் வள்ளல்
கண்மணிப் பெயரர் அப்துல் காதிறு முகியித் தீனெவ்
விண்முத லுலக மெல்லாம் விருப்பினின் றிறைஞ்சி யேத்த
வுண்மையங் குருவாய்க் காக்கு மொருமையா நிலைமை சொல்வாம். (க)

தவநிலை தருக்க ளெல்லாந் தழைத்ததி யமுத மூறு
நவநிலை யரும்பும் பூவு நற்கனி யுகுப்ப யார்க்கும்
பவநிலை யொழிய வூட்டும் பருவத்தின் பகுதா துள்ளோர்
துவநிலை கொள்ளத் தோற்றுந் தோன்றலின் றகையார் சொல்வார். (உ)

வன்மரக் கடங்கள் செல்லா வனம்பல விடங்க ளெங்குந்
தன்மனத் தொழும்பிற் சென்று செய்வன தவங்கள் செய்து
நன்மையம் பெறுபே றெல்லா நாயகத் தகையிற் பெற்றுப்
பொன்மதில் பகுதா தோம்பு மொருதனிக் கடவுள் போன்றார். (ங)

மறைநலம் பழுத்த நாவின் மாதவர் கணங்கட் கெல்லாந்
துறைநலம் பழுத்த வள்ள லபூசகீ தென்னுந் தூயோ
ரிவைநலம் பழுத்த தானத் தெழினலம் பழுப்ப யார்க்கு
முறைநலம் பழுக்கு மென்கோன் முதன்மையி னமையா நின்றார். (ச)

அணியணி மாடகூடத் தருநகர் தன்னிற் றங்கண்
மணியணி பொன்னத் தோன்று மகத்துவ நிலைமைக் கெல்லாம்
பணியணி யாய கௌதுல் அகுலம்சொற் பயனு லியாரு
மணியணிந் துயரச் செய்வா னகங்கனிந் தவகை பூத்தார். (ரு)

ஆதிபி னருளா லாகு மரியன முறைக ளோர்ந்து
மேதினி யுயிர்க ளெல்லாம் வெவ்வினை யிழிய மேலா
நீதிபி னொழுகி வாழி வாழ்கநீத் தவர்க ளுதை
ரோதிய சைகு தங்க ளுயர்நிலை நல்கி னாரால். (சு)

மன்னிய தவத்தோர் வாழ்த்த மாமறை யாளர் வாழ்த்த
வெந்நிலத் தவரும் வாழ்த்த பல்லுபி ரினங்கள் வாழ்த்த
பொன்னிலத் தமரர் வாழ்த்த பூமழை மகளிர் வாழ்த்த
நன்னிலை நாதர் தங்கள் தவிசினி லிருத்தல் செய்தார். (எ)

மதிவர வமுத மூட்டி மாதவ மொழிகள் கூறிக்
கதிபெறு மூச நீதம் மறைமொழி கனிந்து பாடத்
துதிதர மூத்தோர் மற்றோர் சூழ்தர வாசி கூற
விதிமுறை யாக் கௌதுல் அகுலம்வீற் றிருந்தா ரன்றே. (அ)

முன்னிலை நபிகள் கோமான் முகம்மது மதீனத் தெய்தி
மந்நிலை கிசுறத் தைஞ்ஞூற் றைந்துநான் கொன்றிற் சவ்வால்
நன்னிலை மதியி ரெட்டா மங்கல னாளி னைம்பான்
மன்னிலை வயதில் வள்ளல் மாண்புறை நிலைபி னுற்றார். (கூ)

அவனிவா னுலக மெல்லா மமைதரு கோவை நந்தாப்
புவனகோ டிகளி னோங்கும் புகழினோ டாட்சி பூண்டு
நவநிலை யறிவு சொல்வான் குத்புநா யகருற் றுரென்
றெவணினு மிருந்தோ ரெல்லா மிடனற வீண்டி னாரால். (க௦)

அறிவினின் மிக்கோர் செல்வத் தாக்கத்தின் மிக்கோ ராட்சிக்
குறிபினின் மிக்கோர் வண்மைக் குணத்தினிற் குலத்தின் மிக்கோர்
நெறியினின் மிக்கோர் வல்லோ னொலியெனு நிலையின் மிக்கோர்
பொறியினின் மிக்க வாழ்வு பொலிந்தென மலிந்து மொய்த்தார். (கக)

எதிர்தரா விழியு நெஞ்சத் தெதிரிடு முகமு முள்ள
மதிர்தரு பயமும் பேணு மொழுக்கமு மாய்வு மாகப்
பிதிர்தரா தாடை யோசை யுயிர்ப்பொடு பேச்சு மற்று
முதிர்தரச் சித்தி ரத்தி னுருவென வெவரு முற்றார். (கஉ)

செம்மணிக் கிரணச் சோதி கதிரெனச் சிறந்த பீடத்
தெம்மணி யொளிவு மாயு மெழின்மணி கௌதுல் அஃலம்
அம்மணி யவையிற் றேற்று மச்சமுள் ளதிர்ப்பச் செய்ய
தம்மணி வாய்விள் ளாது தயக்கமுற் றிருந்தா ரன்றே. (கங

யாதொன்று முரையா துள்ளித் தவிசினி னிருக்கும் போதிற்
றீதொன்று மணுகா தோம்புந் திருவுகர் தொழுதன் முன்னர்
கோதொன்றுந் தொடரா மேனிக் கொண்டலங் கவிகை வள்ளல்
போதொன்று மகிழ்வி னேடு புனிதர்முன் றேற்றி னால். (கச)

பூத்தமான் மதத்தின் வாடைப் பொலிவினு லவையா ரெல்லா
நீத்தநெஞ் சுடைய ராகி நினைவினே டிருப்பத் தீனைக்
காத்தநா யகர்கண் டஞ்சிக் கடிதினி னெழுந்து போற்றி
யேத்தநான் மறைக்கு நாத ரின்னருள் கூர்ந்து சொன்னர். (கரு

சிந்தையிற் கனிய நின்ற தேந்திக ழமுதே யென்றன்
சுந்தர விழியின் பேறே துதிதரு மகவே நின்றன்
கந்தமா மணிவாய் விண்டு கதிவழி யறிவு சொல்லா
திந்தபே ரவையார்க் கென்கொ லிங்ஙன மமைந்தா யென்றே. (கசு)

செய்தவப் பயனே யென்றன் றேடரு மறிவே யிவ்வூர்
மொய்தரு மாக்க ளியாரு மறபினின் முதிர்ந்த நாவார்
மெய்தரச் சூழ முன்ன ரஜுமியான் வேறு தோற்று
துய்தர வுரைத்த லென்னென் றுற்றன னென்றூர் வள்ளல். (கஎ)

கேட்டுணர்ந் துயர்மூ தாதை யகநிறை கிருபை கூர்ந்து
வாட்டமுள் ளயரே னின்றன் வாய்மல ரலர்த்தி யென்ன
வேட்டமுற் றின்ப மூறு மெய்ப்புள கெறிப்ப வென்கோன்
றேட்டலர் குமுதச் செவ்வாய் மணந்தரத் துறந்தா ரன்றே. (கஅ)

பலபுறம் பம்மு நெஞ்சும் வெளிப்புறம் படர வூறுங்
கலைபுறத் தறிவு நாளுங் கனிவுற வெவர்க்குந் தோற்று
தலைகறு பயன்க ளெல்லா முன்னுற வச்ச மாற
நலனுற வமிர்தம் வாயா லூட்டினர் நபிகள் கோமான். (கக)

என்னகத் திடத்து மின்பத் தீஞ்சுவை மதுர மூறு
மின்னகத் தமுத மிவ்வா றெழுதர முமிழ வுண்டுண்
டுன்னகத் தறிவா நந்தங் கரைதரா தோங்கி மூசத்
தன்னகங் களிப்ப நின்றூர் சையிது முகியித் தீனே. (உ௦)

தேடரு மணியே வண்மை சிறந்தெழும் பொருளே யென்றன்
கோடரு நிதியே யுள்ளங் குலவிய மகவே யார்க்கு
நாடரு நன்மை யெல்லாங் குடிகொளு நடக்கை நல்குஞ்
சூடரு முபதே சச்சொற் பயனகை சூட்டு வாயே. (உக)

கருத்துறு நாட்ட மெல்லாங் கண்ணுநின் னுயன் பாலி
னருத்தமெய்ப் பொருளி னேர்மை யாற்றினி னொழுகிச் செல்வான்
பொருத்திய வறிவா லெந்தா யாரையும் புணர்த்தி யென்னு
வருத்திய வமுதச் சொல்லான் முகம்மதாண் டறைந்து போந்தார். ()

விரிகதி ரொழுகு மேனி மான்மத வெடிம ருத
கருணையங் குரிசி லூட்டு மமுதத்தாற் கனியா நின்றார்
சரிகதிர்ப் போதிற் செய்யும் லுகரது வணக்கந் தன்னைப்
பரிவுடன் செய்து பின்னும் பலன்பெறுந் தவிசி னுற்றார். (உரு)

வணங்கிபுண் மகிழ்வி னீங்காக் கருத்தொடு மன்னி மீட்டுங்
கணங்கொளு மாக்க ளியாருங் களிப்புட னறிவு கேட்பா
னிணங்கிய தகையிற் சூழ்ந்தாங் கிருப்பமுன் போல வள்ளல்
மணங்கெழு மலர்வாய் விள்ளா மவுனமுற் றிருந்தா ரன்றே. (உச)

எத்தகை யியல்புந் தம்மி லிருந்துமற் றவர்க்கு நல்கு
மத்தகை வலுமை யுள்ளா ரவையினி னுவெ ழாம
லித்தகை நெடும்போ தாக விருப்பது புதுமை யேதோ
வுத்தகை யறிது மென்னு வச்சமுற் றெவரு முற்றார். (உரு)

நெஞ்சினிற் கருத்தெ ழாது நிலைப்படு மறிவி னோடு
மொஞ்சிய குத்பு நாத ருகுநிலா முகத்தின் முன்னர்
மஞ்சுலாங் கவிகை வள்ளன் மருகனு ரருகி னுரை
யஞ்சலித் தாளு மென்கோ னலியுல்லா தோன்றி னுரால். (உசு)

ஆர்தரு மறிவி னுய நகரியா னதற்குட் போதுஞ்
சீர்தரும் வாயி லென்னத் திருநபி யுரைத்த மேன்மைப்
பேர்தரும் வள்ள லேக்கிப் பிரியமுற் றெழுந்து தாழ்ந்து
நேர்தரு மொழுங்கி னஞ்சி யுள்ளங்கூர்ந் திவர்க ணின்றார். (உஎ)

கண்ணரு மணியே யாயுங் கருத்தினி னறிவே யென்ற
னெண்ணரும் வரிசைப் பேறே யிசைதரு மகவே சூழ்ந்த
புண்ணிய கணங்கள் வாழி புகழ்பெறு மறிவு கூறு
வுண்ணினை வென்னை யென்ன வுவப்பெழ வினவி னுரால். (உஅ)

வரிசையிற் சிறந்த கோவே மலிந்தன கணங்கள் சூழ்ந்து
பிரிசமுற் றிருப்ப வுள்ளம் பேதலிப் படரா நின்ற
பரிசிஃ தென்ன நன்கின் பரிவுகூர்ந் தஞ்ச லின்ற
னுரிசையின் மணிவாய் மைந்த துறத்தியென் றுரைத்தார் தாதை. ()

அளவிலாத் தோற்றத் தாகி யெவற்றினு மாக்க மீறி
வளவியுள் ளச்ச மேக மறைவிலா தறிவு பொங்கத்
தெளிதரு மமிழ்த மொவ்வாச் செய்யவா யமுத மூட்டிக்
களிதரச் செய்தா ராறு தரமுறை கருது நீரார். (௩0)

மாநில வுமிழுஞ் செவ்வி மதிமுக நோக்கி யின்பத்
தேனிவ ரமுத மேழு விசைகொடு நிறையச் செய்யா
தேனிது நடந்த தெந்தா யெனவருள் கனிந்துள் ளூறுங்
கோனிதி யனையார் கேட்பத் தெளிதரக் கூறி னரால். (௩க)

இருட்குலஞ் சீத்த சோதி மதிபொரா தெங்கும் பூக்கு
மருட்கொரு மணியாய்த் தோன்று மாளுடை யிறசூல் செய்த
தெருட்குடி யிருந்த செய்கை முறைப்படி செய்த லேனு
மருட்குடி யிராது பேணி வந்தனன் மருங்கை யென்றே. (௩உ)

கலக்கறுத் தொதுக்குஞ் சூழ்ச்சக் கலைகண்மே மௌலாது மல்கும்
விலக்கறுத் தலியுல் லாவு மேலிட மறைய வாக்கை
யலக்கணற் றெறிந்து மீறி யடங்கலு மமுதம் பாய்ந்து
துலக்கிமா யாது மேன்மேற் சுரந்தறி வோங்கிற் றன்றே. (௩௩)

அடல்பெறும் பெருமை பூண்ட வாழிய கருத்தென் றேதுங்
கடலிடை மறைவா மிப்பிக் கண்ணக மறிவாஞ் சோதி
யிடனுறு முத்தங் கொள்வா னெப்புறத் தேயும் பாய்ந்து
திடனுறு மாராய் வென்னுஞ் சீரியர் மூழ்கி னரால். (௩௪)

ஒருங்கடைந் தோடி வல்லே யெடுத்தெடுத் துயர்ந்து மேலா
வருங்கனா நெஞ்சிற் சேர்ப்ப வாணிகர் தம்மைக் கூவி
யருங்குணந் தெரியா ராவாந் தரகனுங் கள்ளி யுள்ளி
யிருங்குண வழிபா டென்னு மேறிய விலையி னேற்றி. (௩ரு)

உயர்தரத் திருத்தற் காக வுத்தர மளித்த வல்லோன்
பெயர்தரச் சிறந்த மேலாம் பேறுடைப் பள்ளி தன்னி
லயர்தரா தெவர்க்கும் வில்லா நிற்பமா வதிச யத்தான்
மயர்தரா முகியித் தீன்செவ் வாய்மலர் மலர்ந்த தன்றே. (௩௬)

அருமறை முகம்ம தண்ண லமுதமு மருகர் வண்மை
தருமமு தமுமொன் ருகித் தழைத்ததிற் காய்த்த தேபோன்
மருமலி வள்ளல் செவ்வாய் மதுவினு மதுர மூற்றி
வருமொழிக் கனிக டம்மை மழையெனப் பொழிந்த தன்றே. (ங௭)

கருத்தினுக் ககன்று மன்னுங் கலைகளி னுயர்ந்து ளாய்ந்து
பொருத்தினும் பொருத்தற் கேலாப் பொலிவுள பொருளா யின்ப
மருத்திய பலனுங் கைமே லமைவதாய்ப் பிறந்த தீஞ்சொற்
றிருத்திய வுணர்வி னெங்குந் தேனினு மினித்த தன்றே. (ங௮)

வேதியர் கலைக ளாய்ந்தார் விஞ்சையர் முறைமை நீங்கார்
நீதியர் செங்கோன் மன்னர் நெறிபல ரறிவின் மிக்கார்
காதிரண் டொன்றே கொள்ளுங் கருத்துமற் றொன்றே யென்று
லேதினி பெறுவ மென்ன விதபமே நோக்கா நிற்பார். (ங௯)

மாதவர் துறவ லாளர் மவுனியர் கவன மாந்தர்
நாதர்மா சித்தர் முத்தி நடையினர் கருத்தா வானோர்
போதமிக் குடையர் தேடும் பொருளொடு பொலிந்து மேலாம்
பாதமுற் றின்பா நந்தப் பரவச மெய்தா நின்றார். (௪0)

மிக்கவர் களிப்ப நன்றி மேலவர் களிப்பச் சூழுந்
தக்கவர் களிப்பப் பாடுந் தவத்தினன் களிப்பச் செல்வ
மொக்கலுங் களிப்ப வாழி முகம்மது மஸ்தா னுள்ளு
மக்கமுங் களிப்பப் பூத்த தமுதவாய் மலரின் வாசம். (௪௧)

காண்பருங் காட்சி யாவுங் காணல்போல் கருத்தி னெல்லாம்
பூண்பன பூண்டா நந்தப் புணர்ப்பினின் பத்தி னுக்கை
யூண்பெற வுயிரு மாயா வுயர்பதம் பெறவல் லோரு
மாண்புற வமுதம் வள்ளல் வாக்கினு லூட்டி னுரால். (௪௨)

மன்னிய வுயிர்க ளெல்லாம் வழிபெறக் காப்ப தாகத்
தன்னிய லருளின் கோன்மைத் தகுதியி னுணை யீந்து
நன்னிலத் திறைவன் றந்த கடவுணு யகத்தின் வாய்மைச்
சொன்னிலைத் தெழுந்த சங்கப் பெருமையார் சொல்ல வல்லார். (௪௩)

புகழ்பெறு முலக மெல்லாம் போற்றிய பொருளாய் வந்த
சகதசற் குருவி னுக்கந் தழைத்தல்போ னுளு நாளு
மகிமையு நவமுங் காணு வரிசையு மோங்கும் வல்லோன்
மிகுதியாற் சிறந்த சங்க மேன்மையிற் சிலசொல் வாமால். (௪௪)

வேதநாற் பொருளுந் தோற்றும் விளக்கினும் விளக்கா நின்ற
தூதர்நா யகமு மற்ற தொகைநபி மாரும் பல்போ
தாதர வுடனே போந்து ளன்புகூர்ந் திருப்ப தாக
மாதவர் தம்மிற் காண்போர் காணலாய் வதிவ ரன்றே. (௪௫)

அன்றியும் பல்போ தோங்கு மருணபி மார்க ளாவி
துன்றியும் புவியில் வானிற் றேற்றுமா நந்தத் தாடி
யொன்றியுங் காலி னெங்கு முலவியும் வாழி கூறி
நின்றினி துணரு மேன்மை யுதவுநீ ளவைபா லன்றே. (௪௬)

புனலினர் மணலி னரும் பொறியழல் வாயு வாரும்
வனைதரு தொழிலி னரு மாகிய வானோர் கூட்ட
நினைதரு பேறு கொள்வா னிரைநிரை யிறங்கிச் சூழ்ந்து
புனைதர வலஞ்செய் தோம்பிப் புகழ்தரச் சிறந்த தன்றே. (௪௭)

ஊர்வன முதலா யாவு மொருமையிற் படைத்துக் காக்கு
நேர்வளர் வல்ல நாயன் பொருத்தமே நிறைந்து நாளும்
பார்வளர்ந் தேற நிற்கும் பஃறுரைகை லிஜா லுல்கைபென்
றேர்வள ரவுலி யாக்க ளிடந்தொறுஞ் சூழா நிற்பார். (௪௮)

திசைவளர் பொருள்கள் மற்ற வுயிர்கள்தஞ் சொல்லிற் செல்ல
நசைவளர் சித்துஞ் சித்தி நவப்புனை கவனத் தார்மே
லிசைவளர்ந் தழிந்து முற்று மேகமாம் படிவந் தென்றும்
விசைவள ரறிவின் மாய்ந்து வீறுபெற் றிடுவ ரன்றே. (௪௯)

ஏவலாற் றுமாய் நாளு முலகினி னியலுங் கன்மங்
காவலாற் றுங்குந் திக்கிற் கணிபொரு ளுடைய பால
ராவலா லடைந்து செய்கைக் காவன முயற்சி பெற்றுப்
போவலா லொழிவ னுக்கப் பொலிவுள வவையிற் றன்றே. (௫0)

திரைபுனை கடலிற் றீவிற் றிசையினிற் காணு தாகி
நிரைபடு பொருள்கள் வேண்டும் நெறிபடப் பேத மாக்குந்
தரைபடாப் பூதக் கூட்டந் தந்நிலை திரிந்து மேலா
முறைபடற் குனக்கெ னக்கென் றுண்மையிற் படரா நிற்கும். (௫௧)

கைவசப் படுத்தி யாளுங் கருத்தரி னுணை தானு
முய்வசப் படுத்தா தண்ண லுரைவசப் படுத்தி மேலா
மெய்வசப் படுத்தற் கொன்றுக் கொன்றுமுன் விரைந்து கொள்ளு
மைவசப் படுத்த சங்கத் தரியஜான் கூட்ட மன்றே. (௫௨)

தெண்டிரை யுடுத்த தீவு திசைபுவி யெல்லா மோம்புந்
திண்டிறல் கிளிருஞ் சான்றீர் திருவருள் பெறுவீர் மேலா
மெண்டரு மின்ப முன்பா னுடுவீ ரிதனைப் பற்றிக்
கொண்டுறீ ரென்னக் கூறி நாடொறுங் குறுகா நிற்பார். (௫௩)

அகத்தொரு கண்ணு மேலா மறிவொரு கண்ணுந் தோற்றுஞ்
சகத்தொரு கண்ணுங் கொண்ட தாபதக் கணங்க ளெல்லாம்
பகுத்தருள் பணிபி னூடும் பல்புறஞ் சூழ்ந்து நிற்ப
மகுத்துவத் திறைவ னல்கும் வரிசைக ளிறங்கா நிற்கும். (௫௪)

ஆண்டருள் குத்பாய்த் தோன்று மன்புடை முகியித் தீன்றம்
மாண்டரு முறையிற் காணு மகிமையா விறையோன் பாலிற்
பூண்டபே ராசை யாலே போன்றலுஞ் சிதையா வுள்ளின்
மீண்டெழுந் திடலு முண்டு மேன்மையி னவையி னன்றே. (௫௫)

தலைப்படு மாண்டுந் தோன்றுந் திங்களுந் தகைந்து ரூப
மலைப்படா தடைந்து பாதம் பணிந்துவாழ் விக்குஞ் செய்கை
குலைப்படா தின்ன தின்ன தெனப்பணி விடையைக் கூறி
யுலைப்படா தருள்பெற் றேகு முயர்ந்தபே ரவையி னன்றே. (௫௬)

மேருவிற் சிறந்த காபென் றோங்கிய வெற்பி னப்பா
லாருமா கணங்கள் வானத் தளவெல்லா நிறைய மன்னிக்
கூருநங் கடவுள் வாக்காற் கொள்ளும்பே ராசை வெந்தீ
யூருமா வுடையு மோலி யொளியெழ வெரியா நிற்பார். (௫௭)

மலைப்புறத் தினருந் துன்னும் வனத்தினர் வானோர் தீவி
னலைப்புறத் தினரு மாக்க ளருகினு மேலுந் தோளி
னிலைப்புறத் தினுமெப் போது நெருக்குற்றுப் பெருகுஞ் சங்கத்
தலைப்புறத் தளவி னெந்தக் கணத்தினைச் சாற்று வேனே. (௫௮)

பரிசுகழ் மதுரத் தீஞ்சொற் பயன்படு பேறு மாரு
வரிசைக ளுடையோன் பாலின் வகைவகை தகுதி போலத்
தரிசனத் தவையி னூர்க்கு நாடொறுஞ் சாரா நிற்கு
மெரிசினத் தீமை யெல்லா மெதிர்ப்படா மொழியு மன்றே. (௫௯)

தரந்தர மாய மேலோர் தம்மியல் பாக மேவிப்
பரந்தமை பீடம் பள்ளி தொழுமிடம் பயில்கல் லூரி
வரந்திகழ் வேத மோதுங் கடைபல வகையி னூகி
விரிந்தபே ரவையி னெங்குங் காரணம் விளங்கா நிற்கும். (௬0)

கோலமுங் குணமும் பேதங் கொளுமஃ றிணைபின் சாதி
காலமும் பருவந் தானுங் கரைந்துநின் றருதுஞ் சொல்லி
ஞாலமு மிசையு மின்பத் தூற்றமும் விதியிற் கொண்ட
சீலமும் புனைந்த வேத மோதுவார் சிறப்பி னன்றே. (சுக)

எங்களி னருளாய் வந்த விறையருள் முகியித் தீன்றஞ்
செங்கனி வாயி னூறும் பொருளினிற் சிறந்த நூல்கள்
பொங்கிய வுலமா மற்றோர் பொறித்திடற் கமைந்த மைக்கூ
டங்குள நான்கு நூறென் றறைபவல் லவர்க ளன்றே. (சுஉ)

ஐந்துநூற் றிருபத் தோராண் டாதியா யறிவு சொல்ல
லைந்துநூற் றிருபத் தெட்டாண் டாதியா யோது வித்தன்
மைந்துள நீதந் தண்டங் கற்பித்த லாணை மாட்ட
லைந்துநூற் றறுபத் தோராண் டளவுமே யோங்கிற் றன்றே. (சுங)

மதிக்கருங் காய மெங்கு மண்ணெங்கு மலைக ளெங்கும்
விதிக்கருங் கார ணீக விளக்கெங்கும் விளங்கு மாப்போற்
றுதிக்கருந் தூயோ ஞானை யவையினிற் றுலங்கா நின்ற
பதிக்கரு முகியித் தீன்றம் பேரவை பகர்தற் பாலோ. (சுச)

அதனியல் புரைக்க வுன்னு மகத்தியல் பெரிய தாகில்
புதனியல் புடைய மேலோர் புகன்றதே தேர்ந்து கொள்க
இதனியல் பினியாஞ் சொல்லு மிறும்பூதி களினும் வள்ளன்
மதனியல் பிடத்துங் காண்க மதியுணர் சான்றோ ரன்றே. (சுரு)

குருநிலைபெற்றபடல முற்றுப்பெற்றது.

ஆக படலம்-க-க்குக் கூடிய திருவிருத்தம்-சுரு.

# விதிமுறைவிலக்கியபடலம்.

**தாழிசை,**

செழுந்தா துகு மலர்த்தாமரை செறிவண்டுக ணிலக்
கொழுந்தா துக மிளிர்மாமணி குலவுந்தட வுடையா
லழுந்தாதெழு பகுதாதினி னருளாதன நிலைகொண்
டெழுந்தா தரம் புரிநாயக ரியல்கூரண மிசைப்பாம். (க)

மணியாசன மலராசன மணியாசன மெல்லாம்
பிணியாசன மென்றேநிதி பெரியோர்மதி யுரியோர்
பணியாசனம் பெறுமாண்டகை பாலவ்வரு டத்திற்
கணியாசன மொருகாரண முண்டாயது கவல்வாம். (உ)

அதிருங்கட லுடைகொண்டக லகிலந்தரு புகழுந்
துதியுஞ்செறி நகரத்தனி லுயர்செல்வமுந் தொழிலும்
நிதியும்பல பொருளுந்தவ நிலைகொண்டதோர் வணிகர்
முதிருங்குண நயமுங்கபுல் முலப்பரென் பவரே. (ங)

குலைவுற்றிடு முடலுந்துயர் குடியுற்றிடு மனமு
மலைவுற்றிடு மதியும்புல ரலரொத்திடு முகமு
மலைவுற்றிடு முணர்வும்புனல் வழிவுற்றிடு விழியுங்
கலைவுற்றிடு நிலையுங்கொடு கவலைக்கட லாழ்ந்தே. (ச)

ஆற்றுதள மாற்றுதல மரல்கொண்டடி யாடிக்
காற்றுவலை திரும்பாய்வரு காலைத்தெருத் தலையி
னேற்றுவுயர் வல்லோன்விதி யியலானடை முயலுந்
தேற்றுவுளத் தென்கோனிவை தெரிந்தாரருள் சுரந்தார். (ரு)

நீடுந்தொழி லுடையாய்நிதி யுடையாய்நெறி யுடையாய்
வாடுந்தொழி லென்கொல்மன மறுகித்திரு வதனங்
கோடுந்தொழி லென்கொல்லிஃ தெவ்வாற்றின தென்னத்
தேடுந்தொழில் வணிகாதிபர் தெரிவித்தன ரன்றே. (சு)

என்பாடுள முறைபோற்றெழில் செய்வானெழு நூறு
பொன்பாடுயர் காசிற்கெழில் புதிதாயுள சரக்கி
னன்பாடுள பலகொண்டெறும் நனிவொட்டையி னேற்றி
முன்பாடுள தொழிலாரொடு சேர்த்தேன்முயல் பெறவே. (எ)

தேனுங்கனி பாலுந்தரு சேதாவன மலர்கள்
வானும்பொலி நகர்சாமது வழிச்செல்குவ ளுகை
நாளும்பிர யாணத்தொடு நவின்றின்னருள் பெறுவான்
காணுந்திய புயாாதவ கம்மாதிட மடைந்தேன். (அ)

காணத்தொகை முதலாவுள கருபத்தொகை யெல்லா
மாணத்தொடர் பால்விண்டும தருளின்திரு வுளையோ
டேணத்தகை பணிபிட்டரு ளுகவெம்மிறை யென்றென்
பாணத்தனி மதிநோக்கினர் வழியாயிது மொழிந்தார். (கூ)

இவ்வாண்டினி லொழிவீர்தொழி லியைந்தேகுவி ரென்னி
னவ்வாற்றினி னடைவார்சில ரடர்வாரவர் படையுஞ்
செவ்வாவியை யுண்ணும்பொருள் சேரப்பறி படுமா
லொவ்வாதென விடிபோலிய வுரைகேட்டன னன்றே. (௧௦)

வல்லாரறி வுள்ளாருணர் வழியால்வரு முறைபோற்
சொல்லாமுன முடைந்தேன்மன மடைந்தேன்படு துயரா
லெல்லாவவ யவமுந்திரி படலாயெதிர் நீங்கி
நில்லாநிலை யானிவ்வழி நேர்ந்தேனுமை யென்றார். (௧௧)

இவர்தந்திடு முறைநன்குணர் வினினுண்டுள மகிழ்வாய்க்
கவர்தந்தும திதயந்துயர் படல்கண்கனா படலா
துவர்தந்திடு முறையின்பிணை யுளனென்சொலின் படியே
நிவர்தந்துயர் தொழிலன்பொடு நிலைகொண்டிடு மனனே. (௧௨)

பழிவுற்றிடு மெனவும்பொருள் பறிபட்டிடு மெனவு
மழிவுற்றிட வுளமிப்பொழு தருளிற்செலு மிவணின்
றெழிலுத்தம தொழிலிற்பல னெழுமிக்குறு செல்வந்
தழுவிச்சுக வுடலத்தொடு தகைமைப்பெற வடைவீர். (௧௩)

ஒன்றும்புற நோக்காதுள முறுதிக்கடைப் பிடியிற்
சென்றுளுதி யென்றேவிடை கொடுத்தார்செழுந் தீனுக்
கன்றுவியு மியல்பும்பல வணியுங்கொடுத் தகில
நின்றுணையி னடவுந்தவ நிதியாமுகி யித்தீன். (௧௪)

மதியுந்திரி மனமுந்தெளி தரமண்டிய மகிழ்வால்
துதியும்பணி தகையும்பெறு சுகமுங்கொடு தனது
நிதியுஞ்செறி பொருளுந்தொடர் நெறியின்குழு வுடனே
விதியுஞ்செல வழிகொண்டனர் விழையுந்தொழின் முறையார். (௧௫)

துன்றுந்தரு வுந்தும்புய றுஞ்சும்பொழி லிடமுங்
குன்றுஞ்சிறு தொண்டும்படு குண்டுங்குழி பெங்குஞ்
சென்றும்பொருள் சிந்தும்புனல் சிந்துஞ்செறி பழுவ
மென்றும்புடை தங்குங்கிரி யின்பங்கினு மேகார். (௧௬)

வானியாறென மலரும்படி வனமன்னிய முல்லைக்
கானியாறடு வழியுஞ்சுடு கனலாற்படு முழையி
னூனியாறிடை நகராகமு குழலாவழி யுஞ்செங்
தேனியாறெழு கியபாதையுங் கண்டார்வழி சென்றார். (௧௭)

மேவும்பயில் துறையும்மிகு பொழிலும்விரி நகருங்
காவுஞ்செறி தினையும்பல கடந்தாரிட ரிலராய்
தாவும்பரி யெருதொட்டைக ளராதணி சுமையோ
டேவுந்துணை யவருங்குறி மதியெய்தின ரன்றே. (கஅ)

நிறைகின்றன சுபமுந்தரு கொடையுந்நிலை யலையா
தறைகின்றன முரசுந்துயில் கொள்ளாதறி வுள்ளோ
ருறைகின்றவப் பதிசாமிடை யுற்றார்தொழில் பெற்றார்
முறைகொண்டுள பொருளியாவையு முதலாம்விலை விற்றார். (ககூ)

வழுவாநெறி யுடையாருடன் வருமாந்தருந் தத்தங்
குழுவாகிய பண்டம்மிகு குணமாம்படி விற்று
ரெழுநூறுள தெங்கோனரு ளெழில்வாய்மையி னேங்கி
முழுநூறொரு பத்தாயது முதிரும்புக ழோடே. (உ0)

நற்சித்தியி னெடுவர்த்தகர் பலநாணய வர்க்கப்
பொற்சிற்சில வெல்லாமுயர் பொற்காசின டக்கித்
தற்சித்திர மடியிற்புறந் தழுவாதவ னுற்று
ரச்சித்திறை யவனைப்பய ணத்தாதர மனத்தால். (உக)

படிமீதுயர் பதிமேவுறு நாளோர்பக லுடலத்
தடிமீதடர் மலவாதையி னயர்வான்மையி டம்போய்
மடிமீதுறு பொற்பையினை மாடக்குழி வைத்தே
தடிமீதுள முடித்துப்பொருள் கருதார்வெளி வந்தார். (உஉ)

கருமத்துறை தனினெய்தினர் கதித்துப்படர் தூக்கத்
தொருமைப்படு துயிறற்கிடை யுற்றாருணர் வற்றே
பெருமைப்படு கனவொன்றுதெ ரிந்தார்பெரி யவரு
மருமைப்புது மைப்பாலென வறைதற்குள தன்றே. (உங)

தொழிலாரொடு தாமும்பல தொகையுந்தொடர் வழியிற்
குழுவார்சில ரடைந்தார்பழி கொண்டார்பொருள் கவர்ந்தார்
கழுவாரினி லொருவன்கடி தெய்திக்கதிர்ப் படையா
லழுவாரழ வடிவார்கள மறுத்திட்டனன் போலும். (உச)

கண்டேயுள முட்கித்திரு வுடலங்கடி நடுக்கங்
கொண்டேயெழுந் தடனேகிலை கொள்ளாதயர் கின்றோர்
தண்டேன்மல ரங்கைக்கொடு தடவக்கள நோக்கா
டுண்டேறில தந்செம்புன லுளதாலதி சயித்தார். (உரு)

அடிகொண்டிடு குணமுங்கள ஃறுகின்றதொர் குணமுங்
கடிகொண்டிடு மனமுங்கதி விதியின்வழி கருதா
மடிகொண்டிடு பொருளெங்கென மறவாமுணர் வுறலா
லிடிகொண்டுள வெல்லாஞ்செல விரைந்தாருட னெழுந்தார். (உசு)

முன்மேவிய தலமெய்தினர் முறைபோன்முடி யுடைய
பொன்மேவுதல் கண்டார்மடி கொண்டார்புக ழுடையோன்
றன்மேன்மையின் விதியால்வரு தகைகாரண நவமீ
தென்மேலுள தோவென்றினி தெழுதோத்திரஞ் செய்தார். (உஎ)

ஒருபோதினு நடவாதன வுயர்காரண மறையா
வருபோதினின் வரலாலது வருவித்திடு மகிழ்விற்
கிருபோதினும் புதிதாயொரு போதெய்தினு மிதினு
மருபோதர லாலாயினும் புகழ்மாறுற லரிதே. (உஅ)

## வேறு,

மாமறை வல்லார் செய்யும் வரிசையிற் சிறந்த கீர்த்திச்
சாமெனு நகரி னின்று தம்பொருள் சரக்கு மற்றை
தேமரு வருக்க மெல்லாங் கொண்டுதஞ் சேக ரத்தோ
டாமுறை முயனு மிக்கோ ரரும்பதிக் கெழுந்தா ரன்றே. (உகூ)

அடங்தெழு சோலை நீழ லரம்பையங் குலையிற் றத்திக்
கடங்தெழுங் கதிர்வாள் வாளை யொல்லெனக் கலிக்கும் வாவிப்
படர்ந்தெழு மருத நீந்திப் பன்னெறி பலவு நீந்தித்
தொடர்ந்தெழும் புகழின் மூதூர் தொல்லரண் புகுந்தா ரன்றே. (௩0)

அகம்புகு மபுல்மு லப்ப ரகத்தினே ராய்தல் கொண்டார்
தகுந்தவம் புனைந்த கம்மா தென்பவர் முதுமை சான்றோர்
பகுந்துணை தந்தோ ரப்துல் காதிறிப் பயண மாறு
திகந்துயிர் பொருளி னுக்கு மியான்பிணை யென்று நின்றோர். (௩க)

சொற்பொருள் சிதையா வண்ண நிறுத்தினோர் வயதின் றேற்றஞ்
சிற்பொரு ளானோ ரேனு நாமெவர் தெரிச னத்தை
முற்பொரு ளாகக் கொள்ள லெனவிது முற்று முன்ன
நற்பொரு ளுணர்ந்த கம்மா தங்கடு வழியின் வந்தார். (௩உ)

தொழினலம் புனைந்து வந்தீர் தூயுளத் தபுல்மு லப்பர்
எழினலத் தப்துல் காதி றிடத்தின்முன் னடைக நப்பாற்

பொழிநனி கருத்து மாக்கை வாக்கொடு பொருத்தி வல்லோ
னுழிநனி வருந்தி மிக்குப் பாடுபட் டுறுத லாலே. (௩௩)

அறிகநீ ரகன்ற பின்ன ரமைதரு பலகை நோக்கிச்
செறிதரு மென்சொற் போலச் சிறந்துற விறையைப் போற்றி
யறைதரு தஞ்சொன் மாறு தாதர முயற்சி மிக்குக்
குறிதரக் கெஞ்சிக் கெஞ்சிக் குறைவற விரவா நின்றார். (௩௪)

ஆண்டவ வுள்ள மெல்லா மறிபவ பிறந்த வென்சொற்
பூண்டவப் பயன்பொற் காத்த வின்புகழ் பொலிவிற் றமால்
மாண்டகு மன்றாட் டொன்றே மதித்தருள் புரிக வென்று
வேண்டினர் பதினேழ் போதும் விழைவுறு முகியித் தீனே. (௩௫)

இரங்கினர் வருந்தி மாறு திதயமற் றெழியா தூன்றிக்
குரங்கிநின் றிரப்ப வாதி கூறின னுணர்க வென்ன
லரங்கிய விதிக ளொன்றுந் தவறிலா தாகு மென்ன
வரங்கிளர் முகியித் தீனு மறுகினர் மாழ்கி னரால். (௩௬)

மலைவிலா தொருமை பற்றி வல்லவ கருணை மன்னித்
தொலைவிலா தெவைக்கு நல்குந் தூயவ விவருக் கென்சொல்
கலைவிலா தாக வேண்டு மெனக்கனிந் துருகிப் பின்னு
மலைவிலா திரந்து மன்றாட் டாடினர் விடாது மிக்கே. (௩௭)

வருந்திநின் றிரக்கும் போதில் மறுத்தனன் வல்லோன் மீண்டும்
பொருந்தியே முடிந்து கொண்ட காரியம் புதிய தாமோ
திருந்திய ததனின் மன்றாட் டொருமையிற் செய்யல் மற்றைப்
பெருந்தவ முயல்க வென்னப் பின்னும்வற் புறுத்தி யன்றே. (௩௮)

எவ்வகை யானு மென்சொன் னிலைபெற வியற்றல் வேண்டுஞ்
செவ்வகை யுணரும் வல்லோ யெனவவன் செறுப்பப் பின்னு
மிவ்வகை யாக மன்றாட் டெழுபது முறைமட் டாக
வவ்வகை யிரங்கி யாதி யொவ்வகை யாக்கி னனால். (௩௯)

வெளிப்படை கனவி லாக வினைகவர் மறதி யாகத்
தெளிப்புறச் செய்தா னென்னு செய்குகம் மாது கூறிக்
களிப்பொடு போந்தார் பின்னர் கனநிதி யாள ரின்பங்
குளிப்பொடு போந்தா ரெங்கள் குத்புநா யகர்பா லன்றே. (௪௰)

படர்பெருந் துன்ப மொன்றும் பாவியா தெழிலி னுயை
வுடல்பெருங் களிப்பிற் றூழ்ந்து மலர்க்கர முவந்து முத்தி
யடல்பெற நின்றார் நின்றீ தறைகுவா னுன்னு முன்ன
மிடல்பெற வள்ள லாமே விளக்கின ரனைத்து மன்றே. (சக)

மறைபடா தொன்று மின்று மகத்துவ நிலையி னார்க்கென்
றுறைபடாப் புதுமை மேன்மே லோங்கநல் லருளிற் போற்றிக்
குறைபடா மதியே யென்னக் குணம்பெற வாழ்த்தி யின்சொ
னிறைபடா தபுல்மு லப்பர் நிறைதிரு மனையைச் சார்ந்தார். (சஉ)

விதிமுறைவிலக்கிய படல முற்றுப்பெற்றது.

ஆ படலம் உ-க்கு கூடிய திருவிருத்தம் கoஎ.

# மலசலத்திடர் துடைத்தபடலம்..

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,**

வளந்தருங் கருணை வல்லோன் வழிதரு மறிவு கேட்பா
னுளந்தரு முதியோ ராக முவந்தரு கனேகர் மொய்ப்பக்
களந்தருஞ் சிறப்பு வாய்ந்த கதிர்மணித் தவிசி னெங்கோ
னளந்தரும் பொருள்க ளோது மமைதியோர் போதி னன்றே. (க)

தேர்ந்துணர் சிந்தை யாளர் செறிதரு மவையின் கண்ணே
நேர்ந்துணர் முதியோர் தம்மி னிருமல ரொருவர் பன்னு
நேர்ந்தெழு மபுலம காலி யெனப்புக முயர்ந்தோர்க் கப்போ
தார்ந்தெழுந் ததுமே லிட்டு மலசலத் தடைப்பு மாதோ. (உ)

பல்பல திசையின் மேலோர் படர்தரும் பெருக்கத் தானுஞ்
சொல்பயி லறிவி னானு மொருமுகந் தொடர்கை யாலும்
புல்பவ ருயிர்ப்பி னேசைப் புணப்புந்தோற் றரிய தானு
மல்படு விருப்பி னானு மறைபட வடக்கி னால். (ங)

அழுந்திய துதரம் விம்மி யடிக்கடி நோதல் காட்டி
யெழுந்ததாங் கெழுந்தாற் காலி னிழிதரு மெவருங் காண்பா
ரொழுங்கிஃ தன்றென் றெண்ணி யிருந்தன ருடலி னெங்கும்
புழுங்கிமே லேறி வாய்வி யாதனைப் புணர்த்திற் றன்றே. (ச)

கையிணை சோர வுன்னுங் கருத்துளஞ் சோரக் கால்க
ணையடல் சோர யானர் நனிமுகஞ் சோர வண்ண
மெய்யெறுழ் சோர வொன்றும் விள்ளலா தூதவி தேடுஞ்
செய்யபூங் கண்ணி னேக்காற் செம்மலை நோக்கி னூரல். (௫)

குறிப்புணர் வள்ளல் மேவுங் குரிசினின் றிழிய வாங்கு
பொறிப்புணர் சிரமொன் றுற்ற பொருபடி யிரண்டி னெய்த
நெறிப்படு மார்புந் தோளு நிறைபட மூன்றி னெய்த
பெறற்கரு முறுப்பு மெல்லாம் பொலிதர லாயிற் றன்றே. (௬)

மேற்றவி சிருந்த வள்ள லிறங்கலுங் கீணின் றுயங்
கேற்றநல் லுருவ மன்னேர் வடிவினி னியல்பின் வாக்கி
னாற்றலி னெப்பா யார்க்கு மவ்வறி வவையா ராய்ந்து
போற்றநன் மொழியி னேடு மிடையிடாஅ புணர்த்தா நிற்கும். (௭)

மாதவ ரிறங்கும் பண்பு மற்றொரு வடிவந் தோற்றி
யாதவர்க் கறிவு சொல்லும் புதுமையு மவர்க்கும் வல்லோன்
மேதகு மருள்பெற் றோர்க்குங் காண்டக விளக்கிற் றல்லால்
லேதமற் றவையி னுற்றோ ரெவர்கட்குந் தெரியா தன்றே. (௮)

நிறைந்தவர் தமக்குத் தோற்று நிருமல ரவையின் மன்னி
யுறைந்தவர் விலக நீக்கி யுட்பிணி யாளர் பால்வந்
தறந்தருங் கரத்தின் போர்வை யாலவர் தலையை மூடத்
திறந்தருங் கார ணத்தின் றிருவருள் பூத்த தன்றே. (௯)

சுற்றிய மாந்தர்க் கெல்லாஞ் சொல்லுவ தொடர்பு மாறு
துற்றுணர் பவர்க ணேக்கிற் குண்மையுஞ் சிதையா தாக
மற்றவர் கேள்விக் கேதோர் மறைவிலா தாக வள்ள
லுற்றிது நிகழும் போதி லொருபெரு வெளியி னுனர். (௧௦)

நறைவழி மலருஞ் செய்ய நறுங்கனிக் குலமுஞ் சிந்துந்
துறைவழி தேனு மன்னுங் கோட்டினிற் றூங்கி ருலி
னறைவழி தேனு மாங்காங் கணிபொழி னீழல் பூத்த
நிறைவழி தோறும் புட்க ளின்னிசை நெகிழா நிற்கும். (௧௧)

குளிர்ந்தபூ வாடை யள்ளிக் குணங்கொள வெறிந்து வாவித்
தளர்ந்திடா துள்ளம் பூப்பத் தவழ்தருந் தென்ற லோடு
வளர்ந்தெழு குயிலி னேசை மருங்கெலாஞ் செழிப்பப் பல்பாற்
கிளர்ந்தெழு மளியுந் தேனு மதுவினுற் கெழுமு மன்றே. (௧௨)

வடிவினின் மிகுத்த முத்தி னிலத்தினின் மலர்ந்த சோதிப்
பொடிதரு பொன்பூத் தென்ன வெண்மணற் புளின மெங்கு
நடிதரு மன்னம் பொன்மை நனிசிறு தூவி யாற்றுங்
கடிதருங் கமலம் பூத்த கனைவிரி நதியு மோடும். (கரு)

ஆளிலா தின்ன தன்மைப் பொழிலினை யமைய நோக்கிக்
கோளிலா தொருபாற் போந்து குலவிய தருவின் கோட்டிற்
றேளினிற் கிடந்த லேஞ்சித் துறவுகோ லொடுகொ ளீஇப்பின்
றாளினின் மலச லத்தின் றுன்பத்தைத் தொலைத்துக் கொண்டார். ()

வண்டலின் மணிகள் சிந்து மாநதிக் கரையின் வந்துத்
தண்டரக் கால்க ழீஇப்பின் றவந்தர வுலுவுஞ் செய்து
கொண்டதை மறந்தோர் தாரு குளிர்நிழ லிடத்தி னன்மை
யெண்டர விரண்டு றக்கஅத் திறைவனை யிறைஞ்சி னரால். (கரு)

தொடர்விடக் கடையின் வாய்ந்த சலாஞ்சொலித் தீர்த்த பின்ன
ரிடர்விடத் தலையை மூடுங் கையினை யெடுப்ப வள்ளல்
படர்விடப் பாந்தள் வாயின் பருவர லொழிந்து திங்கள்
சுடர்விடு மாறு பூத்தார் திருமுகந் துணைக்கண் ணோடே. (கசு)

வனைந்தமே லவர்கள் மொய்ப்ப வாயுரை யிடைவி டாது
புனைந்தவா சனத்தின் வள்ளல் பொலிதர வவையு முன்போ
னினைந்தவை நிறையா நிற்பச் சலமல வாதை நீங்கி
நனைந்ததம் முறுப்பு மாகக் கண்டனர் நடுவ னுற்றே. (கஎ)

தகைதரு மபுல்ம காலி தம்மிடந் தோற்று மெய்ம்மை
வகைதரும் புதுமைக் கெட்டா மதியொடு மதிச யித்துத்
தொகைதரு மாக்க டம்மி லொருவர்க்குஞ் சொல்லா துள்ளு
வகைதர வாநந் தத்தின் வழியறி வுணரா நின்றார். (கஅ)

தோற்றிய கார ணத்தாற் றுளங்கிய வுள்ளத் தோடே
யேற்றிய செல்வம் பூத்த முகம்மது மஸ்தா னென்போன்
போற்றிய மலர்ந்த சிந்தை போலிய தவிசின் வள்ளல்
சாற்றிய துணர்ந்த பின்னர் தம்மனைக் கேகி னரால். (கசு)

வாழ்மனை யிடத்திற் கையின் வத்திரத் துறவு கோலைச்
சூழ்மனங் கொண்டு தேடிச் சோலையி னினைவு தோன்றி
யாழ்மனத் தகப்ப டாதென் றமைத்துத்தம் மியல்பி னுற்றார்
தாழ்மனத் தகையார் சின்ன டரிப்பொடு நகரி னன்றே. (உ0)

இருக்குங்கா லரிய வாடை முதலிய வவ்வூர்க் கேய்ந்த
வருக்கங்கள் பலவுஞ் சேர்த்து வாணிகர் துணையுங் கொண்டு
திருக்கிள ரஜமு தேயச் செய்தொழிற் கெழுந்தார் சீத
மருக்கமழ் மரபத் தாரின் மாதவ ரபுல்ம காலீ. (உக)

தாங்கிய வொட்டை யேறு சரக்கொடு சூழ வாழ்வி
னோங்கிய மனத்தி னொப்ப வுயர்பொழின் மருத மற்ற
வீங்கிய வனங்க ளெல்லா மகறர வகன்று வெள்ள
மோங்கிய நதியொன் றெய்த வொருகரை விடுதி செய்தார். (உஉ)

நன்னகர் விடுத்த நாள்பன் னன்கினி னவணி னுற்றூர்
மன்னிய மலச லத்தாம் வாதைதீர்த் திடுவா னகை
வுன்னியக் கரையின் ஞாங்க ருள்ளகம் புகுந்தா ரீது
முன்னய தாகத் தோற்றப் புதுமையின் முதுமை பூத்தார். (உஉ)

மறிபடு மனத்தா னுள்ள மதிப்பினுன் மாறி மாறி
நெறிபட நோக்கி நோக்கி யஃதென நிச்ச யித்துக்
குறிபடுந் தருவின் பாலிற் குறுகினர் துறவு கோலு
முறிபடும் வத்தி ரத்தின் முறைபடத் தூங்கக் கண்டார். (உச)

அன்றுகா ணதிச யத்தி னதிசய மிஃதென் றாறி
யின்றுகாண் டுறவு கோலு மெடுத்துக்கொண் டிரண்டு கட்டும்
வென்றுகா ணன்னீ ராடி விடுதிபுக் கெழுந்து போந்து
சென்றுகாண் டகைய வூரிற் செய்தொழிற் பலவுஞ் செய்தார். (உரு)

தொழின்முறை முகிந்த பின்னர் துணையொடு பகுதா தென்னு
மெழினகர் மனைவந் தெய்தி யறிவிப்பா னிதனை யுன்னிப்
பொழிநனி மழையு மொவ்வாப் புண்ணிய மூர்த்தி யாகி
மொழிநலம் பயிற்றும் வள்ளன் முகியித்தீ னிடத்தின் வந்தார். (உசு)

அன்பொடு தாழ்ந்து முன்சென் றறையுமு னகத்தி னோங்கு
மின்பொடு மலர்ந்த கையா லிவரெழிற் செவியைப் பற்றி
யென்புக மூவி யாக்கைப் புவியிடை யிருக்குங் காறும்
மீன்புறங் கண்ட தொன்று நிகழ்த்திட லெவர்க்கு மென்றார். (உஎ)

இத்தகை தெரிந்த வுள்ளத் திடையொரு தொடர்புங் கொள்ளா
தத்தகை மிருந்தார்க் கெல்லா மாண்டகை முகியித் தீன்சொ
லெத்தகை யானும் பேணி யெழிற்பத விளக்கம் பேணி
முத்தகைப் பொறியுந் தொண்டி னொளெலா முயலா நின்றார். (உஅ)

எங்கணு யகர்தந் தொண்டி னிருந்தவ ரெவரும் வாழி
பொங்கிய கார ணத்திற் புகுந்தவ ரெவரும் வாழி
தங்கிய புகழின் கீர்த்தி சாற்றுவ ரெவரும் வாழி
நங்குல நெறியும் வல்லோன் றருமத்தும் வாழி யன்றே. (உசு)

மலசலத்திடர்துடைத்தபடல முற்றுப்பெற்றது.

ஆ படலம் ௩-க்கு கூடிய திருவிருத்தம் கநசு.

# இறந்தவனையெழுப்பியபடலம்.

கலிநிலைத்துறை.

எறிந்த தெண்டிசை யுடுத்தவிப் பாரெலா மியல்பிற்
செறிந்த நன்னெறி யுயர்கதி பெறுகுவான் றிருத்து
மறிந்த வல்லவர்க் கொருமணி யாயப்தல் காதிர்
வெறிந்த மாநகர்த் தவிசின்வீற் றிருக்கின்ற வேலை. (க)

புறந்த தும்பிய வறிவொடு கீர்த்தியும் புகழுந்
திறந்த தும்பிய புதுமையுங் காரணச் செயலு
நிறந்த தும்பியெத் திசையெலா நிலவிய தணர்கொண்
டறந்த தும்பிய நகர்ஜைலி லானிய ரறிந்தார். (உ)

ஆக்க மீறிய களிப்பின னருங்கிளை யெல்லாம்
பூக்கு மேன்மையி னிறைவனைப் புகழ்தரா நின்றார்
தேக்கு மாமறை நிறைதவத் தேசிகர் மூவர்
காக்கு நாயகர் திருவடிக் காண்குவா னெழுந்தார். (ந)

குடிகொள் செல்வநன் னகர்ஜைலி லானியின் குருமார்
படிகொள் கீர்த்தியம் பதிபகு தாதினிற் புகுந்து
கடிகொள் பேரவை வாயிலிற் காவல ருரைபெற்
றடிகள் மேவிய வகத்தினிற் சிறப்பெழ வடைந்தார். (ச)

ஏவு நற்பணி புரிபவன் முன்னுற விறையோன்
காவ லின்கிபு லாத்திசை யன்றிநீர்க் கரகத்
தூவு நாமுக மாறுறப் புத்தகந் தணர்கை
மேவு றத்தவி சாண்டகை விளங்குறக் கண்டார். (ரு)

கண்ட போதினி லொருவருக் கொருவர்கண் கொண்டு
மண்டு கீர்த்தியு மாதவ முறைமையும் வரைவற்
றுண்டு யர்ந்துள திவரவை யொழுங்கிஃ தென்ன
விண்டு தம்மனப் பொருத்தமி லாரின்மிக் காய்ந்தார். (சு)

பாக நிற்பவன் முன்னுறல் படுகிபு லாநே
ராக நிற்பன பொருடிசை மாறலு மதபன்
றேக நன்னெறிக் கெனநினை யாமுன மிறையோ
னேகை யந்துறை குத்புநா யகருளத் துணர்ந்தார். (எ)

காத்த மைந்தபுத் தகத்தினை வைத்துத்தங் கண்ணு
லுரத்தி னுய்ப்பவர் தங்களை நோக்கின ருருத்துத்
திரத்திற் றெண்டனை நோக்கினர் செறிந்தகெண் டிகையின்
புரத்து நோக்கினர் காரணக் குருநிலை புணர்ந்தார். (அ)

பார்வை தாக்கலும் வேலையாள் படிவிழுந் திறந்தான்
நேர்வ ரத்திரிந் தாயது கெண்டிகை நெடுமூக்
காரு மித்திறங் கண்டவ ரச்சமுற் றகத்து
ளோர்த லுற்றன ரப்பொழு தற்றன ரவணின். (கூ)

வளரு மேன்மையின் சைய்குப காவொடு வரிசைக்
கிளருஞ் சைய்கலி யிபுனுகித் தியும்கரு தியாங்
கிளபி றேங்கிய சைய்குமா ஜிதுமருள் கெழுமி
விளையுங் கைலவி சைய்கபூ சகீதுமே லவரும். (க0)

இன்ன மேலவ ரனையவர் மன்றிடத் தெய்தி
நன்ன லந்திகழ் நாயகர் நனிகழ லிறைஞ்சிச்
சொன்ன யப்பெற விருந்தனர் காரணத் தோற்றம்
பன்ன யந்தரப் பெரும்புகழ் திசைபடர் தரவே. (கக)

கருணை நாயகர் முகியித்தீ னுண்டவர் கனிவுற்
றருகு நோக்கிமற் றொருபணி யாளனுக் கறைந்தார்
பருகு மின்சுவை யுணவுகள் பரிவொடு கொணர்ந்து
பெருக விங்கமைத் திடுதியென் றுயர்குணம் பிறங்க. (கஉ)

பிறந்த சொன்னயப் பணியினைப் பேமறனக் கொண்டு
சிறந்த நல்லன வுண்பன தின்பன கொணர்ந்து
புறந்தி கழ்ந்ததோர் பாயலு பாடையும் பொலிய
நிறந்த ரப்பல பரப்பினன் பணியொடு நின்றுன். (கங)

வந்தி ருந்தமா தவரொடு வரிசைமிக் காகப்
பந்தி செய்துகொண் டிருந்தநந் நாயகர் பாங்கி
னந்தி லாதுட னிருந்தனை வுண்டிநம் மோ டென்
றந்தி நின்றவற் கிசைத்தன ரவனெதி ரிசைத்தான். (கச)

இன்றி யானுயிர்க் காக்கமா நோன்புள னென்ன
நன்றி நோன்பது பலனுண்டா நலிவற வுண்பா
யென்று நாயகர் சொல்லினர் நோன்புள னென்று
னென்றும் வாரத்தின் பலனுண்டா முண்ணுதி யென்றார். (கரு)

பின்னு நோன்பினைப் போர்த்திடேன் பெருமையீ ரென்று
னின்னு மோர்மதி நோன்பினுக் குளபல னெய்து
மன்னி யுண்குவை யென்றனர் வள்ளலு மறுத்து
நன்னர் நோன்பினை முறித்திடே னடுவினி னென்றான். (கசு)

வருட மொன்றுகொள் விரதத்தின் வருபல னினக்குத்
தருவன் மேலவ னிப்பொழு தெம்மொடு சமமாப்
பருகு வாயுண வென்றனர் நாயகர் பரிவாய்த்
திருகி நோன்பினைச் சிதைத்திடே னென்றனன் பினும்ம். (எக)

ஒறுத்த வார்த்தையி னுறுபய னனைத்தையு மொருவி
மறுத்த போதினி லெம்முயி ரனையவர் மனத்திற்
கறுத்து மேலெழ வெஞ்சினங் காட்டலிற் கண்ணுற்
செறுத்து நோக்கினர் திசையெலாந் திடுக்குற வன்றே. (கஅ)

நோக்கந் தாக்கலுந் தெறிபடு மரமென நொடியி
னுக்கந் தாக்கொடு நிலத்திடை விழுந்தன னுவி
யேக்கந் தாக்கிய வுடலழிந் தூதியெப் புறமு
நீக்கந் தாக்கிலா தொழுகிய தூனிவர் செல்கள். (கசு)

முன்னி றந்தவ னுங்குற வளர்முனி வதனுற்
பின்னி றந்தவ னித்தகை யழிதரப் பெரிது
பன்னி றந்தர வலதரு முலகெனப் பயந்து
நன்னி றந்தருந் திருச்சபை நடுக்கொடு மயர்ந்த. (உ0)

பொய்ம றந்தவ ரெவர்களும் புதியது நோக்கி
மெய்ம றத்தன ரகத்துணர் மறந்தனர் விதிர்த்துக்
கைம றந்தனர் கலங்கினர் மலங்கினர் கடிகொ
ணெய்ம றந்திடா விளக்கெனு நிமலரைப் பணியார். (உக)

மதிய றிந்திலா வுணர்வினர் மதியினு முயர்ந்த
விதிய றிந்திடற் குரியரோ விதிதரு பயனின்
பதிய றிந்தவை யறிந்தவ பலபல வினையின்
கதிய றிந்திலார் செய்பிழை பொறுப்பது கடனால். (உஉ)

புரக்கும் வல்லவ ரருளொடு பொறுத்திடா ரென்னி
னிரக்கு மேழைக ளெவ்விடத் தெய்துமா லின்பஞ்
சுரக்கு மேதகு கருணைக்கண் ணஃதுண்மழை சொரிந்து
பரக்கு மேன்மையி னுடைக வெனப்பகர்ந் தனரால். (உ௩)

மாட்டின் வைகிய மாதவர் வருந்திமன் றுட்டங்
கேட்ட போதினிற் பொன்னெனக் குளிர்ந்தது கெழுமி
யீட்டும் வெஞ்சின மற்றளி யிதயத்திற் பூப்பக்
கோட்ட மின்றிய விழிகொடு நோக்கினர் குரிசில். (உச)

தண்ண லர்ந்தமு தருமருட் பார்வையின் சால்பா
லுண்ண யங்கொளா தெதிரினின் றவனுளா மறுத்து
மண்ண ழிந்தவ னிருவரும் பவவுடன் மாய்ந்து
வெண்ண ழிந்திடாத் தவவுட லெடுத்தல்போ லெழுந்தார். (உ௫)

நினைந்த றத்துபின் றெழுந்தவர் போலெதிர் நின்று
வணங்கிதா துங்கிமுப் பொறியினு லிறைவனை வாழ்த்திப்
புனைந்த நம்முயிர் குத்புநா யகனையும் புகழ்ந்து
வினைந்த பேரவை யானையு மேத்தின ரன்றே. (உசு)

முன்ன டைந்தவர் மற்றவர் பன்னெறி முதிர்ந்தோர்
பின்ன டைந்தவ ரெவர்களும் புதுமையிற் பிறங்குந்
தென்ன டைந்தன ரடிக்கடி புகழ்ந்தனர் செல்வ
மன்ன டைந்தன வுலகெலா மாதவர் பொருட்டால். (உஎ)

இறந்தவனையெழுப்பிய படல முற்றுப்பெற்றது.

ஆகூ படலம் ச - க்கு கூடிய திருவிருத்தம் கசு௫.

ஜின் கொண்ட

# பெண்வணத்தருவித்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிறைந்த கருணை மழையான்முப் புவன வுயிர்க ணிவந்தெழவெப்
புறைந்த குணங்க ளறபாய்ந்து விளங்க வுவந்து குத்பென்ன
மறைந்த பொருளை வெளிநிறுத்தும் வல்லோ னெல்ல வல்லமையாற்
சிறந்த சுல்தான் முகியித்தீ னாணை செலுத்தி வருநாளில். (க)

தண்ணந் துறைக டொறும்பணிலந் தவழ்ந்து நிழலி னுகுத்தமணி
வண்ண நிலவி னமிழ்தென்ன வார்ந்த சடைஞ்சூழ் பகுதாதி
னெண்ணஞ் சிறந்த பெருஞ்செல்வத் தினிய மறைதே ரகுமதரு
ளண்ணல் வரிசை அப்துல்லா வவையி னடைவோ ரொருபோதில். ()

மன்னு முலகி னிறையுயிர்கள் வருந்தா திடர்மற் றனவகற்றிப்
பொன்னும் பொருளும் புகழுமனப் பொருத்தப் போல வருத்திவிக்குந்
துன்னுங் கருணை வளர்முகிலே தூயோன் கவுதே முகியித்தீ
னென்னுங் குத்பென் றேங்குமெம ரிறையே வடியேற் கருள் புரிவீர்.()

மணமுங் கியபூங் கரும்புயலு மலரு மொளிவிற் றிகழ்மதியுங்
குணமுங் கியமெல் லிதழ்மலருங் கோடா தொசியுஞ் செழுங்கொடியுங்
கிணமுங் கியநல் லவயவத்தை நிகர்த்த லரிய வழகாய
கணமுங் கியவென் றவப்பேறின் கன்னி யொருத்தி யுதித்தனளால். ()

அருவ வுயிரைப் பேணுமணி யாக்கை போலு முயரறிவி
னுருவம் பேணு மதிபோலு முவப்பின் வளர்த்து வருநாளிற்
பருவம் பதினு றெய்திநலம் பயிலு நெறியி னொழுக்குடைய
திருவு மருவ மேனிலையிற் சிறந்து பண்பி னிருந்தனளால். (ரு)

நிறைந்த மனையு ளிருந்தவர்க்கு நேர்ந்த சுற்றத் தயலார்க்கு
முறைந்த வூரி னுளரெவர்க்கு மொன்றுங் குறிப்பு மறிவரிதாய்
மறைந்த விந்தை யாற்கொடிய மாயஞ்செய்திட் டெளியேனிங்
கறைந்துவிழுவானெவையோவென்மகட்கொண்டகன்றதாண்டகையே

இவ்வா றியற்று மாக்கமுள தெறும்கொள் ஜின்னே யலதிலையா [பவளச்
லொவ்வா முறைசெய் பெரும்பகையை யொறுத்துத் தண்டித் தெழில்
செவ்வா யமுத மொழிக்கிளியை யெளியேன் செய்த தவப்பயனைத்
தவ்வா தருளி னருள்கவெனத் தாழ்ந்திட்டெதிர்விண்ணப்பஞ்செய்தார்

ஊறுங் கவலைப் படலகத்தி லுடையோ னருள்வ னீதறிதி
கூறுங் கறுகி யெனுந்தலஞ்சார் புடைய கொடிய படுவனத்தின்
மீறு மணன்மே டொன்றுளது மேவி யவணி னெனைநினைவிற்
றேறிப் பிசுமி லுரைத்தொருகோ டாழி யாகத் திருத்திடுவாய். (அ)

சூழ்ந்த காவ லுளகோட்டை துலங்க நடுவி னுறுதிபக
லாழ்ந்து பெருகு மிரவணுகி லணுகும் ஜின்னின் கணமுருவங்
காழ்ந்த கோலம் வன்மனமுங் கலங்கி யுழலக் காட்டுமுரண்
வாழ்ந்த துன்னைப் புறஞ்சுற்றி வளைந்து கொண்டு நிற்குமால். (கூ)

ஆரா யாத விரிபுவியி னமையா விகற்ப மெத்தனைக்கும்
பேரா துள்ள மனுவளவும் பெயரா தச்ச மெனுநாமஞ்
சாரா துறுவா யுறுங்காலைச் சாரு மவற்றி னதிவன்மை
வேரா யெழுந்த பெருஞ்சேனை புடைய வேந்த னடைவானுல். (க0)

விளங்க நோக்கி நின்வரவை வினவும் வினவுங் காலைநின்பாற்
றுளங்குமப்துல் காதிறெனை விடுப்ப வடைந்தே னென்றுசொல்லி
வளங்கொ ணின்றன் மகளிழந்த வழியுஞ் சொற்றி யெனவுலகிற்
களங்க மொருவுங் கதிர்மதியிற் கருணை நாத ரருளினரால். (கக)

முதிரும் புகழி னெங்கோமான் மொழிபி னெழுந்த பெருமகிழ்ச்சி
யதிரு முளத்தி னிழந்தபொரு ளடைந்தாங் காக்க முறப்போந்து
விதிருந் துணர்ப்பூம் பொழின்மருதம் விடுத்துக் குறித்த தலத்தினுயர்ந்
தெதிரு மேட்டி னம்முறைசெய் திருந்தா ரப்துல் லாநடுவே. (கஉ)

சொற்கொண் டுறுதி நிலையின்மனந் துளக்கா தமைய விறையாணை
முற்கொண் டுலவ வக்கணங்கள் முறைகொண் டெய்தும் வழிபார்ப்பப்
பற்கொண் டாகுங் காரியத்தை யறிந்து விரைந்தா லெனவுணர்வு
தற்கொண் டடைந்தான் குடபாலிற் பகல்செய் தபன னென்பவனே.

பரந்த தண்ணந் தடந்தோறும் பதும மலர்கள் குவிந்தனமேற்
கரந்த பகலோன் கதிரினின்று கருணை நாதர் சொற்போலச்
சுரந்த விரவும் ஜின்கணமுந் தோன்று மயிலுங் கிடைக்குமென
தரந்தை நீங்கு மென்றலர்ந்த முகத்தி னமுத மதியானே. (கச)

துன்னித் திகழுங் கருமாலைப் பொழுதை நோக்கித் துணர்மௌவன்
மின்னித் திகழு நகைசெய்ய வேறு மலர்கள் பயங்காட்ட
மன்னிப் பதுங்கப் புள்ளினங்கள் மதிக்கு மப்துல் காதிறரு
ளுன்னிச் சிறந்த வறிவினெழு மொளிபோன் மதியம் வெளிப்பட்டான்,

தெரியுங் கருணை முகியித்தீ னப்துல் காதிர் திருவாயிற்
புரியு மின்சொற் புகப்பலவாய்ப் பொங்குங் களங்க மறக்கருத்துட்
டிரியுந் தெளிவு படர்வதெனத் தெளித்த வமுதம் பாற்கடற்போல்
விரியு முலகத் தெப்பொருளும் விளங்க விளக்கித் தோன்றினனால். ()

தூவா நிலவின் கதிர்க்கரத்தாற் றாங்கு நறவக் கயிரவத்தின்
மேவா முன்னஞ் சகோரமகிழ் மிகைப்பா னிசைப்ப வுளநாணிக்
கூவா வனுப்புந் தூதென்னக் குழீஇய வறுகாற் புள்ளினங்க
டாவா நிற்கு மலரெல்லா முலக விழியாச் சமைந்தனவால். (களை)

செறிந்த குடம்பை தொறும்பறவை யடங்கத் திசையி னுள்ளவெல்லா
மறிந்து மயங்கா தாகவெளி மாசொன் றின்றி மிகவிளங்க
வறிந்து மறியா ருறக்கமென வரவ பொடுங்க மதியமுத
மெறிந்து நிற்ப வெதிராமென் றிருளின் ஜின்க டோன்றியவால்.(கஅ)

கருவா யமைந்த கொடுந்தொழில்கள் கருத்தோ டெழுந்துமதிட ழித்திட்
டெருவாய் வஞ்ச மலமுதலா வெவையு நிலனுக் கொண்டுநய
மருவா தோங்கு மவபவத்தி னடுங்கு மடங்கா வலியுடைய
வுருவாய் வெருவா வாண்மையினே டொருசா ரடைந்தா ரொருசாரார்.

மேலி னளவு மணிச்சிரமும் வீதி யளவும் பேருடலும்
பாலி னளவு நெடுங்கரமும் பகையோ டளவுங் கொடுங்கண்ணுங்
காலி னளவுந் திடர்தசளுங் கருத்தி னளவு மறிவெல்லா
மாலி னளவப் பயமளிப்ப வொருசார் வருவா ரொருசாரார். (உ0)

சுடரா ரழலிற் றிசையெரியச் சுடுமா விழிகள் பலேக்குகையின்
விடரார் புகையின் பேழ்வாய்கள் வினையாக் கான்ற வன்முகங்கள்
படரார் மனங்க ளினங்காணுப் பல்பல் லுருவக் கோலமெடுத்
தடராக் கோட்டி விளையாட்டி னெருசா ரடைவா ரொருசாரார். (உக)

பந்தி பழியாச் சிலமிருகம் போலும் பாந்தள் போலுமெறி
மந்தி போலு மேனப்போல் மதமாப் போலும் புலிபோலு
நந்தி போலுஞ் செந்நாய்போல் கரடி போலு நரிபோலு
முந்திப் பல்பால் விளையாடி யொருசார் புகுவா ரொருசாரார். (உஉ)

கல்லா யிறுகு மனமெல்லாங் கரைய வுருக்குந் திடக்குடைய
வல்லாங் காரப் பலபேத வண்ண வடிவுஞ் சொலுப்விருது
மெல்லாங் கொண்டு மிகுகணங்க ளிட்ட கோட்டைப் புறஞ்சூழ
நல்லாங் குடையார் சொற்போல நடுங்கா தற்று ரவரன்றே. (உங)

உண்டாட் டுள்ள விருமாப்பி னென்று மதியா வகங்கார
மிண்டாட் டுடைய சிலவடங்கா வேக முடைய சிலதம்மைக்
கொண்டாட் டுடைய சிலநெறியிற் குறுகா மறுகிப் பஃறிசையுந்
தண்டாட் டுடைய சிலவாகத் தாவுங் கடலின் மேவியவால். (உச)

மீறி யடரு முலகவின்ப மேலா மின்ப மெழுந்தோறும்
பாறி யொழியு மாறுகப் படரு மதிய நிறங்குலையச்
சீறி யெழுந்த பருதிகள்போற் செவ்வா யழலிற் பலபந்த
மேறி யெங்கும் பகல்செய்ய விடையி னரசன் றேன்றினனால். (உரு)

திசைக ளளாவும் பல்கொடியுஞ் செறியும் விருதும் பல்லியமு
மிசைக ளளாவ வெண்கவரி வெளியி னளாவக் கதிர்கான்று
மிசைக ளளாவு மணிக்குடையி னிழலின் விளங்குஞ் சுடரேபோல்
விசைக ளளாவு மாசையெல்லாம் வேகப் பரியிற் றேன்றினனால். (உசு)

நெருங்குஞ் சுற்ற மந்திரியர் நட்டா் நிமித்தி கப்புலவர்
பொருங்கைத் தலைவர் தூதர்மருத் துவர்பு ரோகி தப்பெயரார்
மருங்கி னறிஞர் சாரணர்பன் மறவர் புரோசர் காப்புடையா
ரொருங்கு சூழப் பலகணத்தின் சேனை யோடு மெய்தினனால். (உஎ)

அமிழ்தம் பொழியு நிழலும்வெயி லவையும் பொழியும் பசுங்கதிரு
முமிழு மணிகள் பலசுடரு மொன்றுத் திரண்டா லெனமகுடங்
குமிழி யெறியு மொளிவாகக் குலவு பூண்க டருநிழலி
னிமிழின் மருவு சுற்றமெல்லா மேக மயமாய்த் தோற்றுமால். (உஅ)

இவ்வா றென்ன வகுத்தறியா வியல்பி னமைந்த குழுவோடு
செவ்வா றெய்தி யிடுகோட்டின் புறத்தே செம்ம னின்றெவரு
மவ்வா றிவணி னடைந்திடலோ வரிது மனிட ரினத்துள்ளா
யெவ்வா றுவந்தாய் நீயென்ன வினவா முன்ன மிதுசொன்னார். (உகூ)

கொண்ட நினைவின் மாறுது குலவா நிற்கு மென்கோமா
னண்ட முழுதும் புரந்தாளு முடையோ னருளின் குத்பாகிக்
கண்ட வுண்மைப் பொருளப்துல் காதி றனுப்பப் புகுந்தேனென்
றுண்ட வுறுதி யுளத்தஞ்சா துரைத்தா ரப்துல் லாவன்றே. (௩0)

வள்ள லைமங் கேளாமுன் வாசி யிழிந்து மனத்தச்சங்
கொள்ள வுடனே நிலந்தொட்டுக் குனிந்து தாழ்ந்து முத்தமிட்டுத்
துள்ளு மகிழ்வி னுளத்தரசன் சூழ வெவரும் புறங்கோட்டை
யெள்ள லின்றி யிருந்தான்மற் றெப்பா லாணை யொப்பாக. (௩க)

வேறு.

ஆரணப் பொருளுங் காணு வரியவ னுரிய தன்மைக்
காரணப் பொருளா யாவுங் காவலிற் றேன்று நாதர்
மாரணப் புன்மை யேனை மதித்தொரு பொருளா யெண்ணிப்
பூரணக் கருத்தி னின்னை விடுத்ததென் புகறி யென்றுன். (கூ௨)

ஆருயி ரென்னு மென்ற னணியிழை மயிலன் னுளை
யோருயிர் கொள்ளு பாறு கொண்டுபோ யொழிந்த தஞ்சாக்
காருயிர்க் கணமென் செய்வேன் கருணையீ ரென்ன வள்ளல்
பேருயிர் காப்ப நின்பாற் பெயர்த்திட வடைந்தே னென்றூர். (கூகூ)

சஞ்சலக் கருத்தி னப்துல் லாவிவை சாற்றக் கேளா
நெஞ்சினிற் படர்ந்த வெம்மை யிஃதென நிகழ்த்தற் கேலா
மிஞ்சிய தழல்கள் பூத்த தாமென முசமும் வெப்பிக்
கஞ்சமென் மலரிற் கண்கள் கனற்பொறி யுகுத்த வன்றே. (கூச)

வேறுகொண் டகலா வுள்ள வேகத்தாற் றிசைக ளெட்டுங்
கூறுகொண் டழிய விண்மாண் குலைவுகொண் டொழிய வெந்தீ
மீறுகொண் டொழுந்தா லென்னச் சூழ்தரு கணத்தை வேந்தன்
மாறுகொண் டிருந்த கண்ணால் வற்பொடு மதித்து நோக்கான். (கூரு)

எவ்வுல கிடத்தும் வாய்ந்த வெவ்வுயிர் தமையுங் காத்துச்
செவ்வுல களிக்கு நாதர் செய்பிது முகிபித் தீன்வா
மூவ்வுயர் பதியிற் சற்று மச்சமில் லாம லின்ன
வெவ்வினை செய்த கள்வ னியாவனோ வீர மென்னே. (கூசா)

வந்தவர் பயனு மெண்ணு வல்லவ னயமு மெண்ணு
நந்தமக் குரிய நீத நடக்கையும் பெண்ணு வன்பி
னிந்தவல் வினைஞன் றன்னை யெடுத்தவப் பெண்ணி னேடே
யுந்துபே ரவையி னின்னே கொணர்தியென் றுரைத்திட் டானல். ()

திடனுடை வேந்த னிட்ட பணியினைச் சிரத்தி னிட்ட
வடலுடை வீரர் வேகத் தொழுந்தன ராய்ந்து வல்லே
வடதிசைப் புறத்துந் தென்பால் வாருதிப் புறத்தும் வெற்பார்
குடதிசைப் புறத்தும் வல்லைக் குணதிசைப் புறத்து மாக. (கூஅ)

தன்னினந் தழுவி மற்றும் புறவினஞ் சாரா துள்ளத்
துன்னிய செய்கை யாவும் வழியினே டொழுகி யாளு

மன்னவ னாணை போல மருவிய ஜின்கள் கூட்ட
முன்னிய திசைக டோறு முயறரக் கண்டா ரன்றே. (௩௯)

கணைக்கிடற் கரிய செல்வக் குழாத்தினிற் களிப்ப வாய்ந்த
பணைக்கடி முரசுந் துஞ்சா மகாசீன்த் தேயத் தெல்லைக்
குணைக்கடற் கப்பாற் கோரக் குறும்புடை யொருஜின் னுள்ளப்
பிணைக்கறு மகிழ்விற் கொண்ட பெண்ணின்முன் னிருப்பக் கண்டார்.

அற்புத வடிவ நோக்கி யகங்கொளா துயர்ந்த காம
முற்பட முளைத்த வெம்மை மயக்கத்தான் முயக்க முன்னிக்
கற்புடை யவளை நீண்ட கைதொடா முன்னஞ் சென்றோர்
பற்புயத் திறத்தி னானை வற்பொடு பற்றி னால். (௪௧)

சென்றவர் போக மற்ற சேனையின் றலைவர் சூழ
நின்றவர் விளைவ தேதோ வெனவயர் நினைவி னாயு
மன்றினி னரசன் முன்னர் மலர்ந்தபூங் கொப்பன் னாளை
ரன்றிய திறத்தன் னேனை யுருப்பறார் விடுத்தா ரன்றே. (௪௨)

கனியுருக் கொண்டு வந்த கன்னியை நோக்கான் வேக
முனியுருக் கொண்ட வீரர் முனையினை நோக்கான் றீமை
நனியுருக் கொண்ட வண்ட ஜின்னையே நவங்கொள் சிற்றந்
தனியுருக் கொண்ட வேந்தன் றழலுக நோக்கா நின்றான். (௪௩)

எண்டிசை முழுது போர்கோ லோச்சுவா னிறைவ னாட்சி
கொண்டிசை படர்ந்த வள்ள லின்னைநின் குலத்தை யென்னை
மிண்டிசை மற்றை பேதை கணங்களை மிகைக்கு மென்ப
கண்டிசை யாத தென்கொ லெனக்கனன் றுருத்து நக்கான். (௪௪)

கலிகெழு புதுமை யென்னுக் கணமெல்லாங் கைகா லுள்ள
நலிகெழ நடுங்கா நிற்க நஞ்சழன் றென்னச் சீறி
யொலிகெழ வலிய தண்டாற் புடைத்தன னாக்க மன்னன்
பலிகெழு மவன்றன் சென்னித் துகளெனப் பறந்த தன்றே. (௪௫)

ஆய்ந்துணர்ந் தறிமின் காணு விடத்தினு மணித்தி னேக்கத்
தோய்ந்துறு பாணை வல்லோன் றன்னரு டோய்ந்த மேலோர்
காய்ந்தெதறி கோபச் செந்தீ யுடன்குணங் காட்டு மென்றால்
வாய்ந்தவல் வினையீர் பேணி வழிபெற வொழுகு மின்காள். (௪௬)

பிழைசெய்தாற் பொறுப்பார்க் கேனும் பிழைசெய்த லாகா தன்றிப்
பிழைசெய்தாற் பொறுருக் கென்கொல் பிழைசெய்தல்பிழைசெய்தோர்க்
கனைழசெயுங் கருத்தர் காதி தானென நிற்கை யாலே [கெல்லாங்
மழைசெயுங் கருணை நாதர் மகிமைவேண் டிடுமி னென்றான். (சஎ)

தன்பெருங் கணத்துக் கெல்லாந் தவப்பெருங் குத்பின் வண்மை
மன்பெருந் தகுதிக் கோங்கும் வழியினி னெழுகக் கூறி
முன்புறு மயிலன் னூளை முகமனோ டினிது சாற்றி
யன்புறுந் தந்தை பாலிற் சேர்த்தின னரச னன்றே. (சஅ)

மாண்டகை யறிவிற் பூத்த மதியருள் முகியித் தீனெம்
மாண்டகைக் கொருவின் னப்ப மடியனு மடியன் கூட்டம்
பூண்டகை நேர்மை கொள்ளக் கருணையே புரிக வென்ன
நீண்டகை யுடையாய் சொல்வா யெனப்பின்னு நிகழ்த்தி னனல். (சகூ)

இவ்வகை யியற்றிப் பின்ன ரெழுந்தனன் கணத்தி னோடே
செவ்வகை யாசா ரத்தின் சீர்மையா னடந்து சென்று
குவ்வினின் வெகுதூ ரத்தின் பின்னுயர் குதிரை மேற்கொண்
டவ்வியல் புடைய மன்னன் றன்றிசை யகன்று போனான். (ரு0)

மறைந்தபின் விடிந்த காலை யத்தலம் விடுத்து மாண்பி
னிறைந்தமா மகிழ்விற் பெற்ற நேரிழை யுடனும் புக்கி
யுறைந்தவெம் பெருமான் பாதந் தொழுதிவை யனைத்து மோதி
யறைந்தசீ ரப்துல் லாவுந் தம்மனை யடைந்தா ரன்றே. (ருக)

ஜின்கொண்டபெண்ணைத் தருவித்த படல முற்றுப்பெற்றது.

ஆ படலம் ரு-க்கு கூடிய திருவிருத்தம் உகச.

# அப்துற்றகுமான்ஐயந்தீர்ந்தபடலம்.

### கலிவிருத்தம்.

ஓங்குநிழ லின்கவிகை மன்னுபிறை யெல்லாந்
தாங்குமரு ளின்கடவு டன்பணை யுடுத்திட்
டோங்குபகு தாதினெழு நீதியுல கத்துள்
வீங்கமலி கின்றபுகழ் மீறிவரு நாளில். (க)

தென்றல்சிறு கன்றுதவழ் சிந்துதிசு லாபான்
மன்றல்கப ழுந்தபுச வஞ்சியென வெங்குங்
குன்றலில ழுந்தபுசழ் கொண்டநகர் தன்னி
னென்றலுள ரப்துற்றகு மானென வுயர்ந்தோர். (உ)

நந்நெறி யுணர்ந்தபல நன்மைநிலை யெல்லாந்
தந்நெறி யெனத்தொடர் தவத்திற மிகுத்தோர்
பன்னெறி யருந்தவர்கள் பாரவொலி யானோ
ரெந்நெறி நடக்குமொரு செய்கென விருந்தார். (ந)

பல்புர மதிப்பவெழில் பாரதவி சுற்றே
செல்புகழ் தவத்தினுயர் தேசிகர நேகர்
மல்கிபுறு போரவையின் மாண்பறிவின் வாய்மைச்
சொல்பவர்தம் மேன்மையொரு போதுசொல லுற்றார். (ச)

ஆண்டொழு தவத்தவுலி யாக்களிடை யென்றன்
மாண்டொழு தவத்தினிலை மன்னுகுரு கென்னக்
கூண்டொழு கணத்தினிலை கொள்ளுமொரு நாளை
நீண்டொழு கழுத்தினுயர் சென்னிநிக ரென்றே. (ரு)

சொன்னபொழு தன்னசபை தூயவர்க டம்மின்
மன்னுநகர் சுன்னத்துள ரஹ்மதருள் மைந்தர்
துன்னுபுக ழின்முகிபித் தீன்பணி தொடர்ந்தார்
நன்னிலைய புல்கசன கைத்துட னெழுந்தார். (சு)

ஊறிய சினத்தினொ டுடற்பொறை யணிந்த
மீறுகவ சத்தினை வெளிப்புற மெறிந்திட்
டேறிய விழிப்பொறி பறக்கவெரி மைப்போற்
சீறியிரு கையினுயர் திண்புய மெறிந்தார். (எ)

நின்பெருமை நின்னிலைமை நிற்றிறமை யெல்லா
மென்பெருமை யாலுணர லாமிவ ணிருந்தோர்
மன்பெருமை காண்குற வெடுத்தெறிவன் மற்போ
ரின்பெருமை கொள்ளமு னெதிர்ந்திடுதி ரென்றார். (அ)

வற்பினொடு வந்திடுதி ரென்னலு மதித்துச்
சொற்பயில்வ தின்றிமணி வாய்துணர்மு கிழ்த்துக்
கற்பனையி தென்கொலென வுன்மதி கலந்து
பொற்றவி சிழிந்திலர் புகழ்ந்தபெரு மானே. (கூ)

யாதுமுனை யாதறனு மின்னவர்க னன்று
வாதுநிலை கோடலு மருங்கினியல் சீட
ரீதுமுறை யாலமைவ தென்னகோ லெனத்தம்
போதமிக வாய்தலொடு புந்திக டிகைத்தார். (கய)

திகைத்தவர் முகத்தினை விழித்திவர் சினத்தை
யகைத்தவர் வரத்தினின் மிகைத்தவ ரவத்தைப்
பகைத்தவர் தவத்துறை படைத்தவர் புவத்தைத்
தகைத்தவ ரதற்குள தகைத்திற லெடுத்தார். (கக)

என்னெனி னுடற்புற மலர்ந்தெழுமு ரோமந்
தன்னின்மிக குன்றியது தானுமிறை யோன்றன்
மன்னருளி லாமலுறல் காண்கிலன் மனத்தை
யுன்னுமென அப்துற்றகு மானிவை யுரைத்தே. (கஉ)

வெஞ்சின மெடாதொழிக வீறுநிலை கொண்டோர்
நஞ்சின மெலாமெவரு நன்மைபெற வன்றி
வஞ்சனைகொ ளாதணிக வற்பினொ டெறிந்த
மஞ்சனைய கையினெழின் மன்கவச மென்றார். (கங)

இன்னுரை யிசைத்தலு மெறிந்ததை யெடுத்தென்
பொன்னுலாயி னல்லுட லணிந்திடல் பொருந்தேன்
மன்னுமாயு மற்றுமாயு மானிலம் விளங்கத்
தன்னுமை விதைத்தவென தத்தனருள் சால்பால். (கச)

என்னவிது கூறிவெகு தூரமுள சுன்னத்
தென்னுநகர் தன்னினுய ரில்லக மிருந்த
பொன்னனைய தேவியர்பு னைந்தபெயர் சொல்லி
யின்னசபை நின்றிவர்வி ளித்திவை பகர்ந்தார். (கரு)

காவென விளங்குமக முற்றக வசத்திற்
பூவென விளங்கிய தெடுத்தரிது பூப்பத்
தாவென வழங்கவெழி லுங்குமணி பாத்தி
மாவென வழங்குமயின் மாண்டகை யுணர்ந்தார். (கசு)

அக்கண மெழுந்ததை யெடுத்தருள்பொ திந்த
தக்கண மிருந்தவர்மு னந்தர வெறிந்தா
ரிக்கண மடங்கலும் வியப்பவிடை நீட்டிக்
கைக்கணமை யக்கொடுக ளித்துட லணிந்தார். (கஎ)

அத்தகை புனைந்ததிரு வாயிழையு மன்பி
னித்தகைபு னைந்தவிறை யும்பிணை சமானத்
தெத்தகையு நல்கியரு ளேகனை விளங்கு
முத்தகை யரும்பொறிபி னெத்தினர்மு திர்ந்தோர். (௧௮)

### வேறு.

இதயநன் குணரு மிக்க விருந்தவத் தபுல்க சன்றன்
வதனவெண் மதியை நோக்கி வண்மையம் பேறு கொள்வா
னதிவிதக் கருணை நல்கு மருமையிற் றொடர்ந்த நின்றன்
பதவியி னைய ரியாவ ரென்றனர் பயன்கொ ணாதர். (௧௯)

எந்நயப் பயன்க ளெல்லா மெதிர்பணிந் தொழுகா நிற்கு
நன்னயக் குருவா னோர்க ணாயகர் புவன மாளு
மன்னவ னருளி னெங்கு மலிபுகழ் குத்பாய் வந்த
வென்னகத் தலர்ந்த அப்துல் காதிறென் றிசைத்தா ரன்றே. (௨௦)

சொற்றவை யுணர்ந்து காணுங் காரணத் தொடர்பின் மேன்மை
பெற்றவ ரிவரென் றின்ன பேரின ரென்றும் நாமா
வுற்றமா னிலத்தி னன்றி மற்றிடத் துயர்த்தக் கேளேன்
நற்றவ முயன்றோர்க் கெல்லா நாதனென் றிசைத்து நின்றாய். (௨௧)

ஆய்ந்துநீ ருணர்க வல்லோ னாக்கவு மழிக்கத் தக்கத்
தோய்ந்ததோர் குதறத் தென்னுஞ் சுடர்பனை வாயி றன்னி
னேய்ந்தன பதவி பெற்ற தெனக்கவ ணிருப்ப தாக
வாய்ந்தது நாற்பா னாண்டு வரையுமியான் காவா நின்றேன். (௨௨)

அப்பெரும் வாயில் காக்கு மாளனா யாள்வா னாட்சி
யெப்பெரும் பேறும் பெற்ற மேலவ ரெவர்க்கு நல்கு
மொப்பரு மதிகா ரங்க ளொப்பிப்பா னாகி நின்றே
செப்பரு மவுலி யாக்க ளளவிலர் தெரிந்த தன்றே. (௨௩)

பேறுடை யவர்கள் பூவான் பெரிதுடை யவர்க ளெஞ்சா
வீறுடை யவர்க டம்மிற் கிடையொரு போது மேன்மை
யாறுடை யவரென் றேது மவனையாங் கவர்கு றிப்பைக்
கூறுடை யவனை யேனுங் காண்கிலன் குலவ வென்றார். (௨௪)

என்றபி னவையி னுற்ற விருந்தவ மேலோ ருள்ள
மொன்றினர் சிலரை நோக்கி யுரைத்தனர் குளிர்ந்த பூங்கா

மன்றலின் பகுதா தென்னு மாநகர் புகுந்து நீவிர்
சென்றுயர் புகலினப்தில் காதிர்பாற் சிறப்பி னெய்தி. (உரு)

வளம்பெறுத் தபுச வப்ஜீய் வருமப்துற் றகுமா னென்போ
ருளம்பெறுஞ் சலாமுஞ் சொல்லி யோதின ருடையோன் வல்ல
களம்பெறுங் குதுறத் தென்னுங் கடையினிற் பிரிவி லாது
தளம்பெறு மேலோ ரியாருஞ் சார்புறக் காவா நிற்பேன். (உசா)

பெற்றவந் நிலையின் ஞண்டு நாற்பதிவ் வனாயும் பேரா
துற்றன னொருபோ தேனு முள்ளினும் புறத்தி னேயுஞ்
சற்றுங்கண் டறியே னும்பேர் தகைபெறுங் கீர்த்திப் பூவிற்
றுற்றதே யன்றி மற்ற விடத்தினைத் தொடரா தென்னே. (உஎ)

பேர்பெறும் வலிய நீர்மைப் பெற்றவ ராகி யாரு
நேர்பெறு நிலையி னின்று திருமிக்குந் தகைய ராயு
மூர்பெறும் பெருமை வான்மே லுயர்பெறு தென்கொ லென்று
சார்பெறக் கேட்டே னென்று சாற்றிபிங் கடைக வென்றே. (உஅ)

விளக்கியாங் கனுப்பும் போழ்தே விளக்கிய விளக்குப் போலக்
களக்கறுங் கருத்தின் வள்ளல் கௌதுமு கிபித்தி னேர்ந்தே
யளக்கரும் புகழின் வாய்ந்த வவையினி லுரிய மேலோர்
துளக்கிலோர் கணத்தைக் கூவி யினையன சொல்லி னூரால். (உகூ)

இன்னன கரும மென்பால் வினவுவா னுக வின்று
ரின்னன முதியோர் தம்மை விடுத்தன ரின்ன பாதைக்
கின்னன வவரா நீரு முடன்கொண்டே யின்னர் பால்போந்
தின்னன வறிவித் தேனென் றிசைத்திரென் றேவி னூரால். (௩௦)

உண்ணிலைப் புறமுங் கண்ட வுண்மையங் கடவுள் வாய்மை
நண்ணிலை யுள்ளங் கொண்டோர் விரைந்தனர் நடக்கு மாற்றின்
கண்ணிலைத் துறைபி னன்ன கத்தரா யெதிர்ந்தார் தம்மிற்
கொண்ணிலை யாசா ரத்திற் கலந்தனர் குணங்கொண் டன்றே. (௩க)

நிகழ்ந்தகா ரியமு மன்றி நீவிர்கொள் கருமந் தானு
மகிழ்ந்துரைத் ததரி னெய்து வாரொடு சென்றன் னேர்பாற்
புகழ்ந்திடற் குரிய செய்தி யிவையிவை புகல்க வென்றேந்
திகழ்ந்தசீர் பகுதா தன்ன லேவலுஞ் சிறப்பி னுற்றேம். (௩உ)

ஆதலி னுன்றன் சிந்தை யமைந்தன நல்கி னார்பாற்
போதலே கரும மென்னப் பொருந்தின ருள்ளங் கூர்ந்தார்
பேதகு மிரண்டு கூட்டத் தவர்களுஞ் சென்று மேன்மை
யோதிய தபுச வஹ்ஜீய் புரவனாக் கண்ணுற் றாரால். (௩௩)

சொற்றொடர் வாய்மை கொண்டு தோற்றிய மேலோர் வண்மைப்
பெற்றதோர் சலாமுங் கூறிப் பிரத்திபின் பலனுந் தாங்கி
மற்றவர் வதன நோக்கி மாதவத் துறையி னேங்கி
வெற்றிகொள் குத்பு நாதர் சலாமையும் விளக்கி னாரால். (௩௪)

இவ்விடத் திவணி னுற்ற தீனத்தையு மெடுத்துக் காட்டி
யவ்விடத் தெமரை நுப்பா லனுப்பின ரருளிற் பூத்த
தெவ்விடத் தினுந்தோற் றாத செய்திக ளியப்ப வென்னக்
குவ்விடத் தேத்தும் வள்ளல் கேண்மெனக் கூற லுற்றார். (௩௫)

நாற்பதாண் டளவு நாடு நாட்டமுஞ் செபமு மொன்றி
யேற்பது முடிக்கும் வல்ல வல்லப மனையின் வாயில்
காப்பது தொழிலா யுற்றுங் கண்டில னென்ற வாய்மை
யாப்புள தென்றும் பின்னு நாயக ரியப்பி னாரால். (௩௬)

அரண்மனை வாயி லாள ரருஞ்சபை யாரைக் காணார்
திரள்சபை யாரு முள்ளிற் செல்பவர் தம்மைக் காணார்
வரமுடை யவரும் வல்ல பகிமையி னறையுள் வைகுந்
திரமுடை யவரா யென்கொல் காணலாஞ் சீர்மை யுண்டோ. (௩௭)

குறிபடாப் பரமாச் செல்லா வரணி யக்குணங்க ளொன்று
மறிபடா வறையி னுள்ளே யாடிய வாட்ட மெல்லா
மறிபடாப் பலபாற் கோவை மயங்கிடா தோங்கி யாக்கு
நெறிபடா நிற்கு மென்றன் பெருமையார் நிகழ்த்த வல்லார். (௩௮)

தொகுத்தமே லறிவா மியாருந் துறக்கலா வறைக்குக் காண
வகுத்தசிற் றென்ன விட்ட வாயிலுண் டின்ன மின்னம்
பகுத்திட வரிது நோக்கிப் பார்த்திடிற் சிறிது தேர்ந்தான்
மகுத்தவம் பெரிது வல்ல வரிசைக ளுளது மன்னே. (௩௯)

தேக்கிய வரிசைப் பேறுந் திருவுளச் சபையு மெல்லா
மாக்கிய வந்த ரங்கத் தவ்வழி வாயி றன்னிற்
போக்குடன் வரவுங் கொண்டு புணர்த்தவ புணர்க்கு மென்னை
நோக்குத லுமக்கு ளாகா வெளிப்பட நோற்று நின்றீர். (௪௦)

அப்புறத் தப்பு றத்தே யப்புற மாகச் சென்று
மெப்புறத் தெந்த நேர்மை யியல்பினிற் பதிந்து நின்றூர்க்
கிப்புறத் ததற்கா மேன்மை வரிசைக ளெடுத்து நல்கு
மொப்புறற் கரிய வேலே யென்வசத் துளது மன்னே. (சக)

கலப்பிலா வணக்க மேய்ந்தார் கதிபல கலவா துற்றூர்
உலப்பிலாத் தவக்கல் செய்தா ரனைத்தையு மொப்பி வித்தார்
மலேப்பிலா வுள்ளங் கொண்டார் மன்னிய வினைத்தும் நீத்தார்
கலேப்பிலாக் கருமஞ் சான்றூர் பிறபொருள் காண்கி லாதார். (சஉ)

உயிரெல்லாந் தானு நின்றூர் வேறென்ப தொன்றுஞ் சொல்லார்
செயிரற மாய்ந்தார் நாளுந் தெளிகிலா வுறக்க மற்றூர்
பயனுடை யினைய மேலோ ரளவிலர் பரிவாய் வல்லோ
னயனருள் வரிசை யெல்லா மென்கையா னல்கப் பெற்றூர். (சங)

இத்தகை யியற்று மெய்மைக் கிதயநீ ருணர்ந்து கொள்ளு
மத்தகை யடையா ளங்க ளறைகுவ னறிந்து கொள்க
எத்தகைப் புறத்தும் பன்மை யெழுந்தொறுங் கண்டித் தோர்மை
யுத்தகைப் புறத்தி னேறு முறுதியிற் பற்று நின்றீர். (சச)

நிலேயினை நிலேக்க நிற்கு நியதியாற் கருணை பொங்கிக்
கலேயினுங் காணு வல்லோன் களிப்பினு லென்கை யாலே
யலேவிலோர் போதிந் நாளிற் பொருத்தமாம் பரிவட் டத்தை
மலேவற வுமக்கு வண்மை மாண்புற வருளி னுனல். (சரு)

இன்னமோர் குறிப்புக் காண்பீ ரியற்றிய வியல்பின் செய்கை
யென்னென வெனினுந் தன்பாற் பழுதிலா தேற்ற மாகி
நன்னயப் பொருத்தங் கொள்ளு நடையெனப் படலா லுள்ளம்
பின்னெரு கார ணத்திற் பெயர்ந்திடா தொன்ற லாலும். (சசா)

உடற்குணப் பன்மை யெல்லா முயர்குணப் பன்மைக் குள்ளா
யடக்குதல் கொண்ட தாலு மாண்டவன் கருணை யாலே
யெடுக்கரும் வெற்றி யென்ன வெழும்பரி வட்ட மிந்நா
ளடுக்குநள் ளிரவி னும்பா லென்கையா லருளி னுனல். (சஎ)

அன்றியு மின்னஞ் சொல்வே னடையாள மாய்ந்து கொள்க
வென்றியின் றுறையி னின்று வேண்டுவ தவத்தின் மார்க்க
நன்றியி னடையு முற்றத் துறத்தலி னடையும் பற்றற்
றென்றிய னடையுந் தன்னை யுணர்ந்தமே னடையுங் கொண்டீர். (சஅ)

எடுத்தன குணங்க ளேழு மிரவலற் றுடையான் கைக்கொண்
டடுத்தவற் றியற்கை யெல்லா மாளுகை யாலே யாவு
மடுத்துணர் வேக மாகி மாய்ந்ததால் காரி யங்கள்
தொடுத்தமை யுலகின் காவ லிவையெனத் தோன்ற லாலே. (சகூ)

காரிய கருத்த னென்னும் விலாயத்தா மதிகா ரத்திற்
காரியல் பமைந்தீர் நீரென் றுண்டவ னவன்கை வேலைப்
பேரியல் பருள்வா ளுகைப் பேரருள் கூர்ந்திந் நாளி
லோரியல் புடைய போதி னுயர்வெளிப் பதவி தன்னில். (ருo)

ஒருநிலை யன்றி மிக்கி னுயர்நிலை பலவும் பூண்டு
வருநிலை யவுலி யாக்கள் பன்னீரா யிரவர் மல்கத்
திருநிலை யவையிற் கர்த்தத் துவமெனச் சிறந்த பட்டந்
தருநிலைப் பரிவட் டத்தை யென்கையாற் றந்திட் டானால். (ருக)

கில்அத்துல் விலாயத் தென்னக் கிளர்ந்தது பசிய வண்ண
மல்கிய தருங்குப் பாய மாண்பின தருகி னெல்லாஞ்
சொல்கெழு மிகுலா சென்னுஞ் சூறத்தோங் கியது மேன்மை
நல்கிய பற்றா ஜீய்யா வெனுமுயர் நாமத் தன்றே. (ருஉ)

இவ்வியல் புடைய மேன்மை யெடுத்ததோர் பெருமை யெல்லாஞ்
செவ்வியல் பென்கை யாலே சிறந்தன வென்று லென்ற
னெவ்வியல் பினையு நீர்தா மெப்படிக் காண்பீர் காணீ
ரவ்வியல் புடைய வார்த்தை யறைதரற் றகுதி யன்றால். (ருரு)

வல்லப முடைய மேலோர் வல்லவ முறைமை யிற்ப
வல்லப முறைசெய் தாளும் வல்லவன் வல்ல பத்தை
வல்லப மென்னக் கண்டோர் வல்லப மில்லை யென்னும்
வல்லபந் தம்பாற் காண்பார் வரிசைகள் பலவுங் கண்டார். (ருச)

என்றிவை யிசைத்த போதி னென்புநெக் குருகி யுள்ள
மொன்றிய வன்பி னுர்வ மடிக்கடி யுவட்டி மீறி
நின்றவெள் ளத்தி னுழ்ந்து நிறையுமா நந்தத் தோங்கி
யன்றெழு மையந் தீர்ந்தா ரடலப்துற் றகுமா னன்றே. (ருரு)

என்னடைக் கியைந்த பேறு மெனக்கிறை யருளிச் செய்த
நன்னடை வரிசை யெல்லா நாயக ரறிந்த தன்றே
கொன்னடை யில்லை யில்லை யதிசயங் குறித்து நின்ற
சொன்னடை யனைத்து முண்மை யவர்நடை தொகுக்கற் பாலோ. (ருசு)

கடல்புடை பரந்த பாருங் கதிர்புடை பரந்த வானு
மிடல்புடை மற்றை யாவு மேவிய வுயிரு மெல்லா
மடல்புடை பரப்ப நாளு மாளுடை யவுலி யாக்க
ளுடல்புடை யுயிரிற் றேற்று முயர்குது பாகு மன்னே. (ருஎ)

பல்லபல் லிடத்து முற்ற விருவகைக் கணங்கள் பாங்கி
னல்லநல் லியல்புங் கொள்வா னுகநாட் டுலக மெல்லாம்
வல்லவல் செய்கு மாகி வரிசையி னிக்கா லத்திற்
சொல்லசொல் லாணை மாட்டும் சுல்தா னு மாகு மன்னே. (ருஅ)

உடையவற் குரிமை பூண்டு முரியன வுரிய பண்பா
னடைபெற நடத்து மந்த ரங்கத்தி னண்பு கொண்டே
யிடையறு தொழுகுங் கௌதுல் லகுலமென் றப்துல் காதிர்
தடையிலா துலக மோம்புஞ் சையிது முகியித் தீனே. (ருகூ)

தொழிலொரு மூன்றி னுட்டுந் தூயவ னிருமித் திட்ட
வெழிலினை முற்றச் செய்தற் கியற்றிய விவரின் பான்மை
விழுமங்க ளெம்ம னோரால் விரிப்பதற் கரிதென் றோதி
யெழுமபுல் கசனே நோக்கி யிசைத்தவை யுண்மை யென்றார். (சுo)

தன்னுனாக் கடங்கி னோர்க்குஞ் சான்றவர் சால்பு காட்டி
யென்னுனா தனக்கு மேலா யிதயமீ திருக்க வின்ன
மன்னுனா விளக்கு மப்துல் காதிர்வாய் மலர்ந்து பூத்த
பொன்னுனா யனைய தேனை யெனவருள் பூட்டி னரால். (சுக)

இன்னன வியந்து கொள்ளு மியல்பினுக் கெல்லா மாளு
மன்னவ னருளின் வந்த மாமறை முகியித் தீனின்
சொன்னயம் பேணி நின்றார் தூங்கிசை மதுர மாறுப்
பொன்னகர் தபுச வஞ்ஜீப் போற்றிய சைய்கு மாதோ. (சுஉ)

அப்துற்றகுமான் ஜயந்தீர்ந்தபடல முற்றுப்பெற்றது.

ஆ படலம் சு-க்கு கூடிய திருவிருத்தம் உஎசு.

# சைய்குகம்மாதின்சூகை நீக்கியபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேடிய பலன்கள் கொள்வான் சிந்தையின் மவுனங் கொண்டார்
கூடிய சங்க முற்றுங் குணந்தரு மறிவின் பான்மை
யோடிய திசைக ளெல்லாம் புகழ்மல ரோங்கா நிற்ப
நீடிய பகுதா தன்னை னீதியி னேம்பு நாளில். (க)

வேண்டிய குணங்க ணோக்கி வேண்டிய குறிக ணோக்கி
வேண்டிய வியற்கை நோக்கி வேண்டிய செயற்கை நோக்கி
யாண்டியங் குண்மை யின்ன திவற்றிவற் றினுக்கென் றூழு
மாண்டகை முகியித் தீன்றம் வயதைம்பா னெட்டின் மாதோ. (உ)

மருமலி நரந்த மேனி முகம்மதின் கிசுறத் தைஞ்னூற்
றிருபதிற் றென்பா னுண்டி னிறையவ னருள்கு லாய
வொருமைதல் கச்சி மாதத் தொன்பதோ டொன்பா னென்பா
னருகிய தேதி சிந்தை கூரிய வறிஞ னுளில். (ங)

வானகக் கவனத் தாரும் வழிகொள மொழிகொ ளுள்ளந்
தேனகக் கமல மொத்த செய்யிது முகியித் தீன்றங்
கோனகக் கருணை பெற்ற குணம்பெறுஞ் சிடர் சூழ
வூனகத் துடலும் பூத்த வுயிருமொத் தெழுந்தா ரன்றே. (ச)

அருந்தவ நிலையி னின்று ரறிவினிற் சிறந்தா ரியாதும்
திருந்தவத் திருமை பூண்டா ரினையன சிரி யோர்க
ளிருந்துயர்ந் தடங்கி மெய்ம்மை யேறிய ஜௌனி சிய்யென்
றிருந்தலம் புகுந்து நன்மை யியல்பொடு தரிசித் தாரால். (ரு)

பேர்பெறச் சிறந்த மேலோர் பெருந்தலம் பயன்கள் பூப்பச்
சீர்பெறக் கண்டு கண்டு செய்வன முறைகள் செய்து
நேர்பெறப் பின்ன ருற்ற நெறிபெறுஞ் சைய்கு கம்மா
தேர்பெற வமைந்த பீடத் தெதிர்பெறப் புகுந்தா ரன்றே. (சு)

கருத்தொடு பந்த னஞ்செய் கனிவொடு பீட மாட்டி
னருத்தபா கத்தி னேடு மடைந்தவ ரயர்ந்த வுள்ளம்
பொருத்திய முகவாட் டத்திற் புணர்த்திய வியலி னேடு
மெருத்தங்கோட் டாகு லத்தி னெடும்பொழு தேற நின்றார். (எ)

பண்புளத் தறிவு ஞான பாகுயர் திறவு பூத்த
நண்புள முதியோ ரெல்லா மென்கொலோ வென்ன நைந்து

விண்படு கதிரோன் காந்தி மண்படக் கொதிக்க வேக
நண்பக ரேன்றப் பின்னே நயம்பெறத் தாமு நின்றார். (அ)

அருகினின் றயரும் வள்ள லருங்கர மேந்தி யுள்ள
முருகியன் பொழுக வல்லோ னிடத்தினி னிரந்துள் ளார்வம்
பெருகிட வோதி நின்ற பின்னர்தண் முகமும் பூப்பச்
செருகிய மகிழ்வும் பூப்ப நிலையினைத் திரிந்தா ரன்றே. (கூ)

அத்தலம் விடுத்து மற்ற வமைதரு மவுலி யாக்க
ளத்தல முற்று நோக்கி யெழுமனக் களிப்பி னேடே
முத்தல வுலக மேத்து முகம்மது நயினர் பேர
ருத்தல மேலோர் சூழ வுயரவை யிடத்திற் போந்தார். (க0)

ஆதரம் பெருகு முள்ளக் கருணையி னுள வந்த
மாதவக் குரிசி லுந்த மலரடி வருந்த மிக்குப்
போதொரு நிலையா வன்னோ ரிடத்தினிற் புகழ்ந்தி ரந்த
தேதெமக் கறிய வேண்டு மென்றனர் மருங்கு சூழ்ந்தார். (கக)

வேறு.

தேர்ந்த சிந்தையி னுணர்வுளீர் திருத்தல முழுது
மார்ந்த மேலவ ரெவனாயு மவரவர் பெறுபே
றார்ந்த வண்மையி னிலையினிற் கண்டன னுவர்போற்
சேர்ந்த மேன்மையி னுற்றனர் செய்குகம் பாது. (க௨)

எடுக்குந் தற்குண நற்குண மிருமன மின்றித்
தொடுக்கு நேர்மையி னடக்கையாற் றுதிதர விவணி
னடக்கு நற்றலத் தணிமணி யருங்கதிர் குலவி
விடுக்குஞ் சோதியின் மண்டபத் தவிசின்வீற் றிருந்தார். (க௩)

இருந்த வாசனத் தெழின்மணி யிருமருங் கோங்கி
விரிந்த பேரொளி கான்றதோ விளங்கிய மகுடஞ்
சொரிந்த பன்னிற முமிழ்ந்ததோ வவையெலாந் தொக்கிப்
புரிந்த சோதியோ வெனவுடற் பட்டுடை பொலியும். (க௪)

பரவு மின்னொளி பயிறரு பன்மணி பகல்செய்
திரவு காண்கிலா திருஞ்சுடர் வெட்கிட விலங்குந்
திருவு லாமுடி யெழிலினாற் செழித்தரு மணத்தி
னுருவு பூத்ததோர் நளினமொத் தணிமுக மொளிரும். (க௫)

நிலங்க ளேழினுங் கிடைப்பரு நிதியுரு வமைந்து
துலங்கு மாற்றுயர் மாதங்கங் கடகமுஞ் சுடரும்
விலங்க லொத்தன மணிப்புயம் விலங்கலி னருவி
யலங்க லொத்தன வலங்கலின் விலகொளி யலரும். (கசு)

பகுப்ப ருமர கதச்சுடர் பசும்பொனி னிமைக்கு
முகப்பி னுற்றிசை பாசொளி முழுவது மாளும்
வகுப்ப ருந்திரு வுதரபந் தனமும்வான் மலருந்
தொகுப் பருமணிச் சித்திரக் கழல்பதந் துலங்கும். (கஎ)

மின்னு மின்னிய கதிர்மதி மிகுமுடிக் கணங்க
ளென்னு மன்னிய வுருவொழித் தெழினகை யுடையாய்த்
துன்னு மன்னவ ரவயவ நனிபயன் றுலங்கப்
பின்னு மின்னலின் வலக்கரஞ் சூகைபெற் றமையும். (கஅ)

இனைய மேன்மைக ளருளிய விறைவனுக் கிதோர்
வினைய மூத்தலோ வென்கொலோ வறிவமென் றுன்னி
வனையு மாதவக் குரிசிலிவ் வலக்கரஞ் சூகை
புனையுங் காரண மென்னென வினவினன் புகழ்ந்தே. (கசு)

உருக்க முற்றகத் தன்பினு லருளொடு நோக்கிப்
பெருக்கு நற்றவ நிலைப்படு முகம்மதின் பெயர
செருக்கு மின்பத்தின் சுகத்தினிற் சிறப்பிவை பூண்டுங்
கருக்கு முள்ளத்தின் கவலையைக் கேண்மெனக் கவலும். (உ௦)

ஒன்றெ ழிந்தவஞ் ஞூறெனுங் கிசுறத்தி னுடையோ
னன்றி சேர்சகு பான்மதி பதினைந்தா நாளின்
மன்ற லம்பொழி லுயர்பகு தாதினின் மகிமை
துன்றும் வெள்ளியிற் குத்துபாத் தொழுவதற் காக. (உக)

கரியி னுஞ்சிறு கல்லினிற் கனறிசை நான்குஞ்
சொரியும் வன்பனிக் கடுங்குளிர் தளக்கவி னமைக்கு
முரிய ஜாமிகுற் றவாபத்தென் றுயர்பள்ளி வாசற்
கரிய நங்கணச் சீடரோ டனைவரும் போந்தோம். (உஉ)

ஊற்ற மிக்கொடு போம்பொழு துயர்த்திடு பாலத்
தேற்ற மிக்கினின் மனத்தினின் மதித்திடா திகழ்விற்
கூற்ற மிக்கினு மும்மையென் வலக்கரங் கூசா
தாற்றின் மிக்கருங் குளிரினிற் றள்ளிய தன்றே. (உங)

தள்ளி விட்டதைக் காலையிற் கொள்கிலாத் தகைய
வெள்ளி நற்றினங் குளித்தலிற் கேவிய வியப்பென்
றுள்ளி யுட்களித் துயர்மொழி நிய்யத்தோ டுரைத்துத்
துள்ளி யாற்றினி னேடிய சுழியினில் வீழ்ந்தீர். (உச)

ஓது தற்குள புத்தக மொருகையி னுயர்த்தி
மோது தண்புன றெறித்திடா துவப்பொடு மூழ்கிக்
காது வன்குளிர் கடியன கருத்தினுள் ளடக்கித்
தீது ருதுறு வலியினு னீச்சலிற் சென்றீர். (உரு)

நீரிற் போதலு நோக்கிடா நினைவொடு நேடுஞ்
சீரிற் போந்தனம் விரைந்தனஞ் சீடரு மியானு
மேரிற் போக்குள நிலையுளாய் மேலிடு வினையைப்
போரிற் போக்கிய தாமென நதிக்கரை புகுந்தீர். (உசு)

அணிந்த மெய்யினின் மயிர்ப்படப் போர்வையி னறலை
யிணைந்து யர்ந்தநுங் கையினுற் பிழிந்துகொண் டிதயம்
பிணைந்தொ டுக்கிய கொடுங்குளிர் நடுக்கினும் பிரியாத்
துணிந்த நீர்மையின் விரைந்தெமைத் தொடர்ந்தடுத் தீரால். (உஎ)

மதித்த பேரிடத் தடுக்குமுன் மதிபெறு நயமும்
விதித்த நீர்குடைந் தாடியுட் பொறைவிழை நயமுங்
கதித்து வந்தடுத் திடுதலி னெனைத்தொடர் கணத்தார்
கொதித்த சிந்தையி னிகழ்தலிற் குறித்துநோக் கினரால். (உஅ)

காக்கு நல்லறி விழைதரு ஞானநூல் கருத்தி
னுக்கு மெய்யுணர் தேசிகன் கரத்தினு லகலப்
போக்கு மாற்களங் கடியுமா னுக்கரிற் புன்மைப்
பூக்கு மாலெனக் குறைபட நிறையலர் பொழிந்தார். (உகூ)

அளக்க லாதவர் தமைச்சினந் தகத்தினி னிகழல்
விளக்க லாதன விடக்குமிக் குமரனை விளங்குந்
துளக்கி லாதுயர் மலையெனத் தோன்றிநின் றதனுற்
களக்கி லாதியான் சோதிப்பான் கருதிய தாலே. (௩0)

ஈது செய்தன னுணர்ந்துகொள் வீரென வொழுங்கிட்
டோத யாவரு மச்சமுற் றுளத்தினி னுவந்தார்
போத மூறிய தவத்துறை நாயக பொருந்தி
மாத லத்தினுக் கேகின மருவியன் றன்றே. (௩க)

அன்று பாரினி னுமைமதி யாதகம் பேணு
தொன்று செய்கையா னிறைபவன் குறைபட வுதவு
மின்று கண்டவிவ் வலக்கரச் சூகையென் றிசைத்துக்
கன்று மிப்பிழை பொறுப்பிரோ நீரெனக் கரைந்தார். (௩உ)

அன்பி னேக்கொடு நன்றென வறைந்தன னண்ண
லின்பி னேக்கொடு நோக்கியென் னிருங்கரஞ் சிறப்பத்
துன்பி னேக்கற விறைபவ னிடத்தினிற் றுதித்து
முன்பி னேக்கினே டிரந்தருள் முயல்கவென் றிசைத்தார். (௩௩)

கருத்த னுரிது கூறலுங் கரைந்துளங் கனிவுற்
றிருக்கு மங்கிலே பெயர்ந்திடா திருகர மேந்தி
யுருக்க மோடிறை யவனிடத் துரிமையிற் கெஞ்சிப்
பெருக்க மேகொள நின்றன னீவிர்பின் னிற்ப. (௩ச)

நின்றி ரக்குமப் போதினி னிறைதவம் பூண்ட
வென்றி மேனெறி யவுலியாக் களினையா யிரவர்
துன்று தம்மிடத் தமைந்தவ ரெழுந்துதா யுளத்தோ
டொன்று வாய்மையி னிருகர மேந்தின ருரைத்தார். (௩ரு)

தூங்கு மெய்யரு ளோங்குநா யகதொடு துன்பந்
தாங்கு சைய்குகம் மாதினுக் காகவித் தகைய
பாங்கு ளார்க்கொரு பதியெனு முகியித்தீன் பயமுற்
றேங்கிக் கேட்பதைக் கருணையி னேற்றிடு கெனவே. (௩சா)

காவ லுயகன் பொறுக்கவுங் கலங்கிய குற்றத்
தாவ லுயகன் பொறுக்கவு மாக்கமுற் றுள்ளத்
தோவி லாதுமன் றுடிநின் றுருகிட வுருகித்
தாவி லாப்பெரும் புகழொடு தரித்துநின் றனனல். (௩எ)

பூண்ட நன்னிலைக் கிரங்கின னருளொடு பொருந்தி
யாண்ட நாயக னவர்பிழை பொறுத்தன னழகின்
மாண்ட பொற்பணிக் கிணங்கிய மற்றயை வம்போ
னீண்ட வண்கரச் சூகையு நீங்கிய தன்றே. (௩அ)

திருந்து மென்கரத் தாலணி திகழ்தர வென்கைப்
பொருந்த நண்பொடு பற்றினர் முத்தினர் புல்லி
வருந்தி யன்பொடு வாழ்த்தின ரகமலர் பூத்தார்
தெரிந்த வல்லவ னன்றியாற் செழித்தன னியானும். (௩கூ)

நிறைந்த வுட்களிப் பேயபின் றிரிந்தன னெடும்போ
துறைந்த காரண மிஃதென முகியித்தீ னுரைப்ப
மறைந்தி டாதுய ரதிசயத் தானந்த மாறு
தறைந்த பேரின்பக் கடலிடத் தனைவரு மாழ்ந்தார். (சo)

வேறு.

சிறந்தமைந்த பெருந்தவத்தின் குருநிலைமை மாறுத
செய்கு கம்மா
திறந்தமைந்த வதிசயத்தி னிடத்திலுமோர் குறையென்று
லிறைவன்றீர்த்தான்
துறந்தமைந்த நிலையுடையீ ரெனத்தோழ ரொடுசொன்ன
தூயோர் வார்த்தைப்
பிறந்தமைந்த நகர்முழுதுங் கதிரொளிபோ லியாவருக்கும்
பிறங்கிற் றன்றே. (சக)

வாரமுளத் திடையூறு மறிவாள ரருந்தவத்தார்
மவுனம் பூண்டார்
சாரமிகை யுடையவர்க ளினையமஷா யிகுமார்கள்
சைகு கம்மா
தாரமணி தருந்தோழர் பகுதாதில் வாழ்பவர்க
ளதனைக் கேட்டுக்
காரமுகு மனத்தோடு மனைவருமொத் தனர்கூடிக்
கவல்குற் றூரால். (சஉ)

நாட்டுநிலை யலையாத நங்குரிசிற் கொருபங்க
நண்ணிற் றென்றுற்
கோட்டுமஃ தியான்பொறுப்ப விறைபொறுத்துக் கொண்டான்பின்
குலவுக் துன்ப
வாட்டமகன் றனரென்ன வருமப்துல் காதிர்சொல
மகிழ யாருங்
கேட்டதிக புதுமைகொண்டா னந்தகுதி நிலையென்கொல்
கிளத்த லாமே. (சந)

தாங்தொடர்ந்து கல்விபல கற்றிருந்து முற்றுணராத்
தகைமை யென்னே
நாங்தொடர்ந்த தொடர்பகலா துரைத்ததனை வெளிப்படுத்தி
நாட்டு ளோரீ
தாங்தொடர்பென் றுண்மைகொளச் சான்றளிப்பீ ரெனஅப்துல்
காதிர் தம்பாற்
போங்தொடர்ந்து பிடிப்பமென வுளந்துணிந்து விரைந்தெழுந்தார்
பொருப்புப் போல்வார். (சச)

புதுமையுள வரும்பொருளா யந்தரங்கத் தமைந்ததனைப்
பொருந்துஞ் சாட்சி
முதுமொழியின் விளக்கிடுவா னெழலுமறி குவமென்ன
முனிவர் வல்லார்
துதிமறைஞ ரருணெறியார் மவுனியர்மற் றனேகமனந்
தூய்மை பூத்தார்
கதுமெனநண் பொடுதொடர்ந்தார் வழிநயத்தின் பலன்பெறுவான்
கருதி யன்றே. (சரு)

கூண்டெழுந்த தங்குழுவும் பிறகுழுவு மடைந்தவனி
கொள்ளச் சோதி
மாண்டெழுந்த திருவடிவின் குத்புநா யகத்தையெழின்
மதியை யின்பம்
பூண்டெழுந்த வருட்கனியை யினியமுகம் மதுமஸ்தான்
புந்தி யென்ன
வாண்டெழுந்த வுயர்தவிசிற் பேரவையிற் றகையோங்க
வழகிற் கண்டார். (சசு)

மலைதிகழ்ந்த தெனவிளங்கு முகியித்தீ னருணயனம்
வழியா நிற்பக்
கலைதிகழ்ந்த தெனப்பிறழு முகநோக்கி யடைந்தவர்கள்
கருத றேறுர்
நிலைதிரிந்து ளுணர்மயங்கி நளினமலர் குவிந்ததென
நிறம்போய்த் துண்டத்
தலைகவிழ்ந்து புறஞ்சூழ்ந்து நனியிருந்தார் சான்றுரைகள்
சாற்று தன்றே. (சஎ)

வருங்கருத்துக் கோருணர்வுந் தோற்றாது பெருந்தகையின்
வன்மை தாக்கப்
பொருங்கருத்தற் றுடையார்மு னில்லார்போ லிருப்பவர்கள்
புந்திக் கேற்ப
விருங்கருத்தி னினைத்துவந்த திஃதென்ன வினைத்தும்விரித்
தெடுத்துக் காட்டி
யருங்கருத்துப் பரிகரிப்பா னேதுவொன்றை நம்பெரும
னறைய லுற்றார். (சஅ)

அருவமெனக் காரணமுங் கொள்ளாத அறுவாகின்
ஆலங் காணு
முருவருவ நிலைபூண்டார்க் கிடைநடந்த செய்தியினை
யுரைக்கு மென்சொற்
றருமுண்மை யினைவெளியிற் றங்காவான் விளக்கிவிக்குந்
தகையுள் ளாரி
னிருவர்தமர் முனிவரரிற் றெரிந்துகொண்மின் றிடப்படவென்
றினிதி னன்றே. (சகூ)

பேரறிவு மேனலத்தின் கம்மாது தமைத்தொடர்ந்த
பெரியோர் தம்மிற்
சீரறிவுந் தவநிலையுந் துறைபோய்மே லவனிடத்திற்
சிறப்பும் பெற்ற
நேரறிஞர் கம்தானி நகரினுள ரங்காளி
னிகழு மூரிற்
பாரறியுந் தொழின்முறையா னுறுஞ்சைய்கு யூசுபெனும்
பண்புள் ளாரை. (ரு0)

கடிமலர்தண் பொழில்சூழுங் குறுதியெனும் பதியுதித்தார்
கலைவல் லாரி
னடிகளென வருந்தகுதி மேனிலையின் பானிலைத்தா
ரருமை யோங்கக்
குடிபெருகப் பகுதாதில் வாழ்ந்திருப்பா ரப்துற்றகு
மானென் றோது
மடிவிலறி வாளரையுந் தெரிந்துளத்திற் பொருந்தினர்பின்
வழங்க லுற்றார். (ருக)

எங்குழுவார் தமிலிவர்க ளகந்துறந்தார் புறந்துறந்து
மியல்பி னின்ருர்
தங்கருத்துக் கண்டுணர்ந்து சார்ந்திவணிற் சாற்றுவரேற்
றகுதி யுள்ளீர்
நுங்கருத்துப் பேறுமுறை யினற்கரியா மதற்காக
நுமக்குத் தந்தெம்
மிங்கிதத்தி னெருகிழமைத் தவணையிதற் கிடையினியற்
றிடுக வென்ன. (ருஉ)

இவ்வார்த்தை யினிற்பிறந்த குணத்தானங் நெறிவழுவா
தியற்றுங் கோமான்
செவ்வார்த்தை யுடையவவ ரெவ்விடத்தி னுற்றிடினுந்
தெளிந்து யான்சொ
லவ்வார்த்தை வார்த்தையென வந்தறையக் கேட்டன்றி
யகத்திற் பற்று
மெவ்வார்த்தை யுடையீரும் பேரவைவிட் டகலன்மி
னெழலன் மின்னே. (ருங)

எனதவைபி னடைந்தவர்கள் குறைதீரா தகன்றதிலை
யென்னெ டாக்கந்
தனதாய மதிதகைந்து நின்றவர்நீ ராதலினல்
தகுதி குன்ரு
மனமுறுதி பூண்டுமது குறைமுடித்துப் போதலன்றி
மறுத்தி டாதிர்
கனதியுளத் துணர்திரென முகியித்தீ னெனுங்கொண்டல்
கருத்தைச் சார்ந்தார். (ருச)

தகைத்துயிரைத் தம்பித்துப் பொறியொடுக்கிப் புலனடக்கித்
தன்னைக் காட்டு
மகத்துணர்வை யுள்ளுணர்விற் புணர்த்தியித யாசனத்தி
னருளை நோக்கித்
தொகுத்தினிய சிரங்குனிவுற் றியோகநிலை கொளலுமற்றத்
தொடர்ந்தோர் தாமும்
வகுத்தநிலை கொண்டமைந்தார் பேரவையு மத்தகையே
வதிந்த தன்றே. (ருரு)

களைகடந்து புறமலர்ந்த கடலென்ன வவ்வகையின்
கடையி னிப்பாற்
றிளைபடர்ந்த தெனப்படர்ந்த புகருக்கண் மறையுணர்ந்து
தெளிந்த பேர்காள்
தளைபடர்ந்த மன்பதைகாள் புதுமைகளிற் புதுமைவிளை
தன்மை காண்பீர்
விளைபடர வருதிரிவண் வருதிரெனப் பேரொலியின்
விளியா நின்றார். (ருசு)

இவ்விதத்தி னுறும்போதின் முன்குறித்தோர் தமில்யூசு
பென்னு மிக்கார்
செவ்விதத்தி னுடைகுலைய வுடல்குலைய நடைகுலைய
திகைப்புண் டார்போல்
எவ்விதத்து மடங்காது விரைந்தோடி வெறுங்காலி
னிளைப்போ டுற்று
ரவ்விதத்தை யென்னென்பாம் பேரவையி னேர்மையுள
வண்ணன் முன்னே. (ருஎ)

சொல்லரிய பெரும்புகழி னுளுடைய நாயகனென்
றாய யோகத்
தெல்லிடையி னிப்போதி னென்குருவாம் கம்மாதை
யெதிரிற் காண
நல்லருள்செய் தானவரு மன்பினெடு மெனவிளித்து
நயத்தி னேக்கி
வெல்லரிய பெருஞ்சங்கத் ததிவிளைவி னேகியிது
விளக்கி யென்ன. (ருஅ)

எனைத்தொடர்ந்த பெயர்களவ ணிகலினகத் திருந்தனர்மு
னென்பா னுய
தனைத்துமுள தகிலமெலா மோராணை யாலாளு
மப்துல் காதிர்
நினைத்துரைத்த பொருளொன்றுந் தவறன்று மறையாத
நிசமே யென்று
வினைத்திறஞ்செய் தனரியானு மிவணடைந்தே னிஃதென்ன
விளக்கி யிட்டார். (ருகூ)

இவ்வார்த்தை முற்றுமுனப் துற்றகு மானென்ன
வெடுத்து நாட்டு
மவ்வார்த்தை முற்றிவிக்கு மாதவரும் விரைந்தடைந்தா
ரதுபோற் சொன்ன
ரெவ்வார்த்தை யாயிடினு மெய்வார்த்தை கண்டுணரு
மிதய நோக்குஞ்
செவ்வார்த்தை யுடையவர்க ளியாவருமிக் கானந்தந்
திளைத்தா ரன்றே. (சு0)

வெளியியலாப் புதுமையினை வெளியாக்க வேண்டியவர்
வெளியில் வந்து
களியியலாக் கருத்தோடு மொழியமுதஞ் செவிதோறுங்
கலந்து ளின்பங்
தெளியியலாக் கடன்மூழ்கி யார்வமொடு பேரவையார்
தெளிக்குஞ் சீதத்
துளியியலாப் புகழ்ந்துழனி கொல்லென்னச் சோணையினுந்
துளக்கிற் றன்றே. (சுக)

வகையுணர்ந்த சம்மாதின் வழிதொடர்ந்த மஷாயிகுமார்
மதித்தா நந்தத்
தொகையுணர்வி னெழுந்துடனே திருக்கடமாழ்ந் தறிவுயராச்
சோப முள்ளே
மிகையுணரா துறுபிழைகள் செய்தமைந்தேம் பொறுத்துரிமை
விருப்ப நல்கிப்
பகையுணரா தருள்புரிக வேண்டுமென முகியித்தீன்
பாதந் தாழ்ந்தார். (சுஉ)

எவ்வுலகுந் திரிவாணை முறைபிறழா தோம்புமரு
ளியற்கை குன்று
தொவ்வியல்பி னுறுஞ்சிந்தை யாதலினு லவர்முகநோக்
குருக்கம் பற்றிச்
செவ்வியல்பின் வல்லவன்பா லினிதிரந்து விடைகொடுத்தார்
செல்வ மெல்லா
மவ்வவைபி னிடையெழவா ழியகௌதுல் அகுலமென்ற
னகத்தின் வாழ்வே. (சுந)

சைய்குகம்மாதின் சூகைநீக்கிய படல முற்றுப்பெற்றது.

ஆக படலம் எ-க்கு கூடிய திருவிருத்தம் ௩௩௬.

# கொழிஞ்சிக்கனியளித்தபடலம்.

**கலிநிலைத்துறை.**

ஓரி டத்தினின் றெழுந்துவெண் ணிறம்பழுத் தொழுகிப்
பேரி டத்தினு நிலைநிறைப் பேதியாப் புகழென்
றூரி டத்தினு நிலவுமிழ் மதியமாள் பருதா
தூரி டத்தினம் முகியித்தின் வாழ்வுயர் நாளில். (க)

சிந்தை மீறிய நல்லறி விளைதரு சிறப்பி
னுந்த காரண நனிதரு பேரவை யோங்க
விந்தை வல்லவ ரியல்பினர் முனிவரர் மேலோர்
புந்தி கூர்தர நாயக ரிருக்குமப் போதில். (உ)

மைந்த மைந்தவெங் களிறெனு மாற்றலர் செவ்வூன்
சிந்துங் கூரிலை வேல்வலத் தலைமைசெய் திறத்தின்
வந்த மன்னவ ரளவிலா நிதியினர் வழிபா
டுந்து சிந்தையின் யூசுபென் பவரவ ணுற்றார். (ங)

உலக மாயையி னுழற்றிய கருத்திடை யுரிமை
பலவும் பூப்பதா லமைதரு பெருமையாற் பதியா
நிலையி னின்றதோர் வியப்பினர் நிமலர்தா டொழுது
குலவு மாதவர் கணத்திடை குறைவற விருந்தார். (ச)

மகிழ்வி னன்புகொண் டிருந்தவம் மன்னனை நோக்கித்
திகழு நின்கருத் தொருதலை யுறுதியிற் றெளிவா
னிகழ வேண்டுவ தென்னைகொ லெனநில முழுதும்
புகழுங் காரண முகியித்தி னண்டவர் புகன்றார். (ரு)

செயற்கை யான்வர வரிதுறுங் காலத்துந் தேடு
மியற்கை யானுமிங் கரித்த விருதுவு மிலவா
லயற்கு ளெய்திடா தப்புறத் திருக்கினி னுங்கா
முயற்கு ளெய்துமப் பலத்தினைக் கருத்தினின் முன்னி. (சு)

இன்ன பேரவை யிடத்திடம் பெயர்ந்திடா திப்போ
துன்னு மின்சுவைக் கொழிஞ்சியங் கனியழைத் துதவின்
முன்ன மேவுமை யுறலறு முழுமதி யென்னப்
பொன்ன மாநதிப் பெருந்தொகைப் புரவலன் புகன்றான். (எ)

சொன்ன சொல்லொடு மெம்மிறை யுளங்களி துளங்க
பொன்ன லந்திகழ் கரத்தினை வெளிப்புற நீட்ட
வின்ன றுஞ்சுவை மதுநிறைந் தழகுமொய்த் தெழுந்த
நன்ன லந்தருங் கனியிரண் டுற்றது நவமா. (௮)

நிரந்த பேரவை யதிசயம் பெறவெழி னிவந்த
நரந்த மென்கனி யொன்றினை யவர்கர நல்கித்
திரந்த ருங்குணக் குத்புநா யகர்கரஞ் சிறந்து
பரந்த தொன்றினை யுரித்தனர் பிளந்தனர் பரிவாய். (௯)

மறைந்த வண்சுளை நிலவுமிழ் பொன்னென வழிதே
னுறைந்த தீங்கனி நரந்தமா மணமிக வோங்க
நிறைந்த பேரவை களிப்புற வுணநிரந் தருளிக்
குறைந்தி டாப்புகழ் படைத்தனர் திசையெலாங் குலவ. (௧௦)

மற்று மன்னவர் தம்மணிக் காத்துள வண்ணம்
பெற்ற தீங்கனி யுரித்தலும் பழக்குணம் பெயர்ந்து
முற்றுஞ் செந்தலை வெண்புழு நெளிதர முரனும்
பற்றுங் கையொடு நெஞ்சமுந் திகைத்தனர் பதறி. (௧௧)

உலக மியாவையுந் தாங்கிய நாயக வுங்கைக்
கலகி லாமதுத் துளியொடு மான்மத மலர
நலனு லாவிய தக்கனி யிக்கனி நலிவுற்
றுலவு மிம்முறை யென்னென வினவின ருவந்தே. (௧௨)

திசைய டங்கலு மற்றுள நிலைகளுந் திரியா
திசைய டங்கிடா நிலைகொள னீதியி னியல்பால்
வசைய டங்கிடாப் பயன்பட லடங்கிடா வளர்நோய்
விசைய டங்கிடாத் துயருறாஉ மந்நிலை விடுக்கில். (௧௩)

பேணு மாநில முறைநிறை பெயர்தர வன்மை
பூணு மாலவ நீதியிற் புனைகர மதனுந்
காணு மாநவத் தருங்கனி தானுந்தன் கனமற்
றேணு றுதல கறிதர விளக்கிய தென்றார். (௧௪)

களங்கி லாதொளிர் கௌதமு கியித்தீன் கழற
விளங்கு மன்னவ ருடலமு முள்ளமும் வெருவித்
துளங்க வத்துள ககத்திடை யுறுதியிற் றுணிவுற்
றுளங்க னிந்தன ராண்டகை பெருந்தகை யுணர்ந்தார். (௧௫)

மன்னு மாநிலத் தெவர்களு நந்தவ மகிமை
யின்ன மாண்பென வளர்ந்திடா வியல்புள மேலோ
யென்ன வேற்றினர் வாழ்த்தின ரிருங்கழ ரூழ்ந்து
நன்ன யத்தொடு மேகினர் நனிநிதிச் செல்வர். (கசா)

வேறு.

திருவளர் செல்வ மேன்மை மனைபுகுஞ் செம்ம லுள்ளத்
தருமையின் குத்பு நாதர்க் கருள் பெறச் சங்கை செய்வா
னொருபஃ தாளின் சும்மை யொருபது பையா மாடை
யருகினிற் கொண்டு வந்தா ரறிகிலா திரவி னன்றே. (கஎ)

தன்னுணர் வுடைய மேலோர் தவநிறை யவையிற் புக்கி
யென்னுணர் வனைய வள்ள லெழின்மலர்ப் பாதந் தாழ்ந்து
முன்னுணர் வுடனே யுற்று நடப்பன முறைக ளென்பான்
மன்னுணர் வுடையீ ருள்ளம் பயன்பட வகுக்க வென்றார். (கஅ)

நன்முறை பிறழா தோம்பு நடுமன வியல்பு மேற்குஞ்
சொன்முறை பிறழா தோம்புந் தொழில்களு மடங்காக் கண்மர்
வெண்முறை பிறழா தோம்பும் விறனிலை யோத லோடு
தன்முறை பிறழா தோம்புந் தவத்தியல் புணர்த்தி ஞரால். (ககூ)

மாட்டிய வாணை வல்ல மகிமையி னுலக மெல்லாஞ்
சூட்டிய புகழின் வள்ளல் முகியித்தீன் றெகுத்த வாய்மைக்
கேட்டுளங் கனிந்து பூரித் தாக்கையின் கெழும லோடு
வீட்டுயர் பதவி பெற்றே னெனவிறை வியந்திட் டாரால். (உ0)

எழுந்துநின் றினிய கூறி யின்னரு ளாலே துன்பம்
விழுந்துநற் றுறையி னெய்தற் கார்வமிக் குடையே னியாருந்
தொழுந்தகை யுடைய வள்ளல் சோர்விடா தரிதிற் கொள்க
கொழுந்தம னியத்தை யென்னக் கொணர்ந்துமு னமைத்தா ரன்றே.

முன்னிட்ட பைக ளேக்கி முதிர்புகழ் முகியித் தீனு
மென்னிட்ட முடைய தன்று விருப்பமு மின்று கொண்டு
நின்னிட்டம் போலச் செய்க நிதிபதி யென்ன மன்னர்
தன்னிட்டத் தன்பி னேடு தாழ்ந்திரந் திதனைச் சொன்னர். (உஉ)

வரம்பெறு மேலோர் தொண்டின் வழிபெறு பலனி லியாதோர்
தரம்பெறு தாத னன்னே தண்ணளி யுறையு ளாய

கரம்பெறு மடியே னன்றோ கருணையிற் கோடல் வேண்டும்
பரம்பெறு மருளின் வந்த பயகாம்பர் பெயர ரென்றார். (௨௩)

இருவினைக் குரிய தேனு மொருவினை யியல்பே மிக்கின்
வருவது பவத்தின் பன்மை வழிக்கெலா முரிய தாலே
தருவது கெடுதி யாட்கள் தகைகெடக் கொல்லி யென்ன
வொருவினை யுடைய தாலே யுவந்தில னிதனை யென்றார். (௨௪)

அகம்புற மொருங்கு தோற்று மறிவினுக் குறையு ளான
சகம்புகழ் குத்பு நாதர் மறுத்தலுஞ் சஞ்ச லத்தி
னுகம்புகுங் கண்ட மென்ன நொந்திடைந் தீதுன் றங்கை
முகம்புகா தகலேன் கொள்க வெனவவர் முயலா நின்றார். (௨௫)

சொற்குண முணரா துள்ளந் தன்னிலைத் தொடர்பே கொண்ட
மற்குணந் திகழுந் திண்டோண் மன்னவர் முறையே காண்பான்
பற்குணப் பான்மை யெல்லாம் பகுந்துணர் நாதர் சங்கத்
திற்குணத் திரண்டு பொற்பை யிருகையி னெடுத்திட் டாரால். (௨௬)

கையிரண் டாலுங் கொண்ட கனகத்தைப் பிழிய வந்தப்
பையிரண் டாலு மூனும் படுமுடை நீருஞ் சேலு
மெய்யிரண் டாலுங் காலா தொழுகமெய் யுணர்ந்தோ ரங்க
மையிரண் டாலு மோங்கு மரசர்வாண் முகத்தை நோக்கார். (௨௭)

திரிதரு முறையா னுளஞ் சிந்தைநொந் தழுங்க மாந்தர்க்
கெரிதரக் கவர்ந்த தீமை யுனிண மெல்லா மீட்டிச்
சொரிதரு பொன்னென் றெற்கு நல்குவான் றுணிந்தாய் வல்லோன்
புரிதரு நகைக்குச் சற்று நாணிலா தென்கொன் மன்னே. (௨௮)

நுறிப்பினிற் கண்டு கொள்வான் கூறிய கூற்றை யுள்ளம்
வெறுப்பினி னமைத்துக் கொண்டாம் நீயிதை விளங்கிக் காணு
யறத்துறை மறுத்து வையத் தழிதுறை யெடுத்துத் தாங்கா
மறத்துறை வாழ நோற்று யென்றுவற் புறுத்தி னாரால். (௨௯)

காக்கிய வந்த நாதர் கனமொழி பிடியின் மீறித்
தாக்கிய போதின் மன்னன் றனைமறந் தடித்து வீழ்ந்தா
னுக்கிய பொறிக ளோடு மையறி வொழிந்து முள்ளும்
போக்கிய வறிவொன் றாங்கும் பொருளெனக் கிடந்தா னன்றே. (௩௦)

சீற்றத்தாற் குத்பு நாதர் மீளவுஞ் சினந்து மெய்ம்மைத்
தோற்றத்தா ரெம்மூ தாதைத் தொடர்மதிப் பில்லை யாகி

லேற்றத்தா னுயர்ந்தோன் மேன்மை யாணையா லிவ்வூண் மிக்கி
னூற்றத்தா லிம்ம வில்லி னளவுமோட் டிடுவ னென்றார். (௩க)

ஒடுங்கிய வுயிரி னுக்கைக் குணர்வெழ வெழுந்து நெஞ்ச
நடுங்கிய நடுக்கத் தோடு நாயக ரடியிற் றாழ்ந்து
விடுங்கதி ரமுதத் திங்கள் முகமலன் விழிப்ப நாணிக்
கடங்கவுள் வேக மற்ற களிறெனத் தயங்கி நின்றே. (௩௨)

தெரிவுறு தியற்றுந் தீமைச் சிற்றடி யவர்க ளுய்ய
வருமொரு கடவு ளாய மாதவ வள்ளல் நாயேற்
குரியவை பொறுத்துக் காத்த லுளதுநும் மருளுக் கென்னுப்
பரிவுட னேத்தி வேந்தர் பையொடு நையப் போனார். (௩௩)

கொழிஞ்சிக்கனியளித்த படல முற்றுப்பெற்றது.

ஆ படலம் அ-க்குக் கூடிய திருவிருத்தம் ௩௭௨.

## தன்னிலைவிளக்கியபடலம்.

### கலிவிருத்தம்.

விண்ணிலா வொளிவென விளங்கும் பாரெலாந்
தண்ணிலாப் பெரும்புகழ் தாங்குந் தூய்நிலை
யெண்ணெலா நிலைகொள வியற்றி வானெலா
மண்ணெலா முகியித்தீன் வாழு நாளினில். (க)

உரிமையி னுயர்பகு தாதி னோங்கிய
பெருமையின் மற்றுள பதியிற் பேறுளா
ரருமையி னருங்கழ றாங்குந் தோளரா
வொருமையின் குத்பென வுயர்த்தி வாழ்குவார். (உ)

திசைபடர் பல்பல ஜீவ செந்துக
ணசைபடர் தரவொரு நாத னுமென
விசைபடப் பணிதலி னியங்கு மாலருண்
மிசைபட வுலகெலாம் விளங்கும் வள்ளலே. (௩)

விளங்கிய நாளினோர் வெள்ளி நாளின்
வளங்கனி நகர்பகு தாதின் வாக்கியந்

துளங்கிய பள்ளியிற் ேறேற்றுங் காரண
விளங்கதிர்ப் பருதியி னிறைவ ரெய்தினர். (௪)

கண்டவ ரியாவருங் கருத்தின் மேன்மையிற்
கொண்டில ரெழுந்திலர் சலாமுங் கூறிலர்
விண்டலர் கமலமென் கரமும் வேண்டிலர்
தொண்டிய லொருவருந் தொடர்கி லாரினே. (௫)

இயக்கமி லாமுறை யிதயத் தூடுசென்
றுயக்கிய புதுமையா னுடன்வந் தெய்திய
பயக்குநற் கருணை * பச் சாசென் போர்மிகத்
தியக்கிய வுணர்வினிற் சிந்தித் தாரரோ. (௬)

நாடொறு மெய்திபே குத்பு நாயக
ராடொறுங் குழுவெவா மெதிர்ந்த ருங்கர
நீடொறுந் தொடுபவர் நெருக்கு நேர்தருந்
தாடொறு பணிபவர் நெருக்குஞ் சாலதே. (௭)

ஆதலி னொருத்தரு மரிய பள்ளிபுட்
போதர லரியதாற் புறத்திற் றுன்னின
மீதறி யாததோ ரியல்பிங் காவது
பேதியாப் புதுமையின் பேத மென்னவே. (௮)

இங்கினை வெழுந்துமுற் றுமு னேகமா
மன்னினை வுடையதோர் வள்ளல் வாழிய
தன்னினை வுடனிவர் தம்மை நோக்கினர்
புன்னகை யொடுமுக மலர்ந்து பூப்பவே. (௯)

இவர்புற நோக்குமு னிருந்த மாக்களு
ளிவர்தருங் கருத்தினே டெதிர்ந்தெ ழுந்துமுன்
னிவர்தருஞ் சலாமொடு நெருங்கி யங்கைதொட்
டவரவ ராவலின் முகந்து முத்தினர். (௧௦)

தொடுபவர் சலாஞ்சொலித் தொடர்ந்த பேர்க்கென
விடுபவ ரளவிலர் வெளியெ லாநிறை
படுபவர் மேலுமேற் படர்ந்து நீள்கர
மெடுபவர் தேனிற்சூ ழீயி னபினர். (௧௧)

---

* பச்சாசென்பவர் புதுமையாற்றிய வுணர்விற் சிந்தித்தாரென்று கொள்க.

உள்ளிய பொருளெலா மொருங்கி வாய்ப்பதைக்
கொள்ளிய கொள்ளையிற் குழீஇய பேர்களா
லொள்ளிய சுடரெனு முரவர் தோற்றிடாத்
தள்ளிய தவளைப்பிற் றகைந்த வீட்டமே. (கஉ)

அடுப்பதற் கிடமிலா தகன்று மாண்டகை
யெடுப்பருங் காட்சியு மெய்தி லாமையால்
படுப்பருந் திகைப்பினல் பச்சாசி யென்பவர்
கடப்பதற் குன்னினர் கருத்தின் மாழ்கினர். (கரு)

எழுந்தவ ரவர்தொடர்ந் தீண்ட லாற்புற
மொழிந்தன வருத்தமு முற்ற தாகையாற்
றெழுந்தகை யிதனினுந் தொடரத் தோர்தகைச்
செழுந்தகை யாமெனச் சிந்தை செய்குற்றார். (கச)

இவ்வுதிப் பொழியுமு னெங்க ணயகர்
செவ்வுதிப் பொடுசிறு நகைசெய் தார்வமோ
டவ்வுதிப் பினர்புறந் திரும்பி யாண்டரு
ளுவ்வுதிப் பொடுவிழித் துமறென் றோதுவார். (கரு)

இதயத்தி னுவப்பின * னிடுகு றிப்பெய
ருதயத்தி னீமுன முளத்தி னெண்ணினுப்
பொதியமற் றவரெலாம் புகுந்து கைதொடச்
சிதையப்பின் னினைத்திடல் செம்மை யாகுமோ. (கசு)

ஒருநிலை கொள்கிலா துற்ற பான்மையா
லிருநிலை கொள்ளலோ விதய மென்கொலோ
அருநிலை கொண்டநீ யறிந்தி லாய்கொலென்
பெருநிலை கொண்டதோர் பெற்றி தன்னையே. (கள)

ஆய்ந்துணர்ந் தறிகொணு தாய தாள்விதி
வேய்ந்ததோர் பொருளெலாம் விளங்க வுட்புறந்
தோய்ந்தபே ரறிவினுந் தொடத்த காதவன்
வாய்ந்ததோர் வசித்துவ நிலைவ ழங்கினன். (கஅ)

காரிய கருத்தனுய் விளங்குங் கௌதெனப்
பேரிய பெயரொடு பேறு பூண்டதால்

---

* இடுகுறிப்பெயருதயத்தால் விழித்தோதுவாரெனக் கொள்க.

வாரியு மகிலமும் வானு மீன்களு
மாரியு மாணையின் வழியின் மன்னிற்றால். (கக)

வகைப்படா விடந்தொறும் வாழும் பல்பல
தொகைப்படா வுயிரெலாந் தொடுமென் ஞலெழு
மகப்படா வுசும்புத லன்றி யாக்கையா
னுகப்படு முள்ளத்தா னுசும்ப லில்லையால். (உ0)

அவற்றவற் றியற்கையின் விரோத மண்டிடா
தெவற்றினும் பகைத்திடா திகலி லாதுளம்
பவத்தொடர் பெடாதுநான் பாது காத்திடு
நவத்தொடர் பெடுத்ததால் நயங்கள் பூண்டவே. (உக)

ஆதலின் மாக்களி னுக்கை யாக்கத்திற்
போதர நடாத்துமுட் புந்தி யாவுமென்
னேதமில் கைவசத் தியங்கு கின்றது
பேதக வியலெலாம் பிரிந்தி டாதரோ. (உஉ)

என்மனம் போலொரு நாட்ட மெய்திடி
னன்மனத் தெவரையு நண்ணச் செய்குவன்
பன்மன மாயவர் பராக்கி னுகவுந்
தென்மன முன்னுமேற் றிருப்பு வேனரோ. (உஙு)

இத்திறத் தாலிது நடந்த துள்ளத்தி
னத்திறத் தினையுணர்ந் தறிகி லாயறிந்
தெத்திற நடப்பினு மேது வாய்ந்திடாய்
முத்திறத் தொழிலருண் முதியர் பாலென. (உச)

அகம்புற மிரண்டினு மமைந்த பேரொளி
யிகம்பர மாகிய நபியு மேத்துமுச்
சகம்புகழ் முகியித்தீன் றவத்தி னயகர்
சுகம்பெறச் சொல்லினர் களிது ளங்கவே. (உரு)

உட்புல னுணர்ந்தவர் கருத்தி னுண்மைகொண்
டெட்புலப் படுவன வெவையு நீத்துயர்
நட்புல வியல்பொடு நாளுந் தொண்டொடு
கட்புல னுகர்வொடு கலந்து மேயினர். (உசு)

தன்னிலைவிளக்கிய படல முற்றுப்பெற்றது.

ஆ படலம் கூ-க்குக் கூடிய திருவிருத்தம் ஙகூஅ.

# பாந்தள்சோதனைசெய்தபடலம்.

### கலிவிருத்தம்

நவநீதமு நம்பகு தாதினையர்
தவநீதமு மார்ந்துத ழைத்திடமற்
றவநீதம கன்றிட வாளுமிறைத்
துவநீதம டர்ந்துது லங்குமரோ. (க)

தவநத்தினர் தாபதர் சான்றவர்வான்
கவனத்தினர் சித்தர்க ருத்தர்மிகா
மவுனத்தினர் முத்தர்வ ரத்தினர்வாழ்
சுவனத்தினர் சூழ்ந்து துதித்திடவே. (உ)

வேதாதிபர் வித்தகர் பற்பலநூன்
மேதாவியர் மேலவர் மாநெறியா
ராதாரமெ னச்செறி பேரவையிற்
போதாசன மேனுறு போதொருநாள். (ங)

ஒருநாயக னுண்மையு முண்மையினின்
வருநானில மும்பல வாழுயிரும்
பொருநாவனு போகமுந் தந்நிலையும்
குருநாதர்வி ளக்கினர் கோட்படவே. (ச)

அறிவும்மறி யுந்தர மும்மறியாக்
குறியும்மொளி வும்மிரு ளுங்குறியா
நெறியொன்று மிலாத நிராதரமாப்
பொறியின்றிய தோர்தனி மைப்பொருளே. (ரு)

தன்னைனிலை யாகிய தன்மையினி
னுன்னவுண ராததொ ருண்மையதே
மன்னுதன மன்னி மயங்கெரியா
தென்னுளு மிருப்ப திருந்ததுபோல். (சா)

அவ்வுண்மை யகத்தி னகத்தறிவொன்
றெவ்வுண்மையு மின்மையு மேய்ந்திலதாய்ச்
செவ்வுண்மை யெனத்திரி பற்றமையா
திவ்வுண்மை யெனத்திகழ் தற்குறியே. (எ)

தன்னிற்றனி மைப்படு தன்னறிவி
னுன்னித்திக ழொண்குறி யாம்அகுயான்
பின்னித்த குணத்தகை பெற்றதுபோன்
மன்னித்தது வேவரு தாப்பித்தத்தாம். (அ)

அறிவிற்றிக ழப்பொரு ளத்தனையு
மறிவிற்கொளு மெக்குண மக்குணமே
பெறுதற்குள தாற்பெறு பேறிதனைச்
செறிதற்குள இஸ்திகு தாதெனலே. (கூ)

ஒவ்வொன்று தனக்குள வேற்றுமையை
யவ்வொன்றறி விற்பெற லாலதற்கே
செவ்வொன்றிய பண்பென வேசெறிய
விவ்வொன்றுத லின்பெயர் காபிலியா. (க0)

தொகையித்தனை யுங்கொடு தோற்றுதலே
தகைபெற்றது வேவெளி சார்தலதற்
குகையப்படு காரிஜி யாவுயர்பேர்
வகையிப்படி வல்லவ ரோதினரால். (கக)

ஒன்றாய்ப்பிரி யாவுயர் முற்றுறையி
னின்றாகிய வித்தனை யும்நிலையிற்
பின்றாகிய நாற்றுறை பேறதனிற்
சென்றாகுத லேயுயி ரின்றிறனே. (கஉ)

மூன்றாந்துறை மூசிய வப்பொருள்க
ளூன்றாதட னூன்றிய தன்னியல்பை
யீன்றாவன பேறினி யங்கிடலே
தோன்றாதன தோற்றுல கத்தகையே. (கங)

தான்றான்பெறு தன்மைக டன்புறமா
யென்றாண்டிட வேற்றது வல்லவன்ற
ஞன்றாள்விதி கற்பினை யாயகலா
மூன்றானது மோர்பொருண் முற்றியதே. (கச)

ஆளும்பய னும்மடு காரணமும்
நாளுந்தகு நாழிகை யும்வினையுங்
கோளும்பல வோடு குறித்துறுதல்
கேளுங்கத ரென்று கிளத்துவதே. (கரு)

ஏத்தன்மையி னாகிய வெவ்வுயிரு
மத்தன்மையி னன்றிய சைந்திலவால்
சித்தங்கொளு நன்மையுந் தீமையுமாள்
சுத்தங்கொளு மின்பமுந் துன்பமுமே. (கசு)

கற்பித்ததொர் கற்பினை யின்படியே
யுற்பத்தியி னேங்குவ தென் றுணர்வி
னற்புத்தியி னேடுள நந்தலிலா
தற்புத்தகை யோடமை வார்சிலரே. (கஎ)

விதியின்றிற மின்றியொர் வேற்றுமைதன்
கதியின்றிற மோடு கலத்தலுறு
ததிகந்திகழ் நன்மதி யீரறிவின்
றிதியென்றுனா செய்திடு போதினிலே. (கஅ)

ஏடுமேன்மை யெழுந்தலர் பேரவையி
னடுமோட்டி னிருந்தொரு நச்சரவந்
தொடுமாண்புறை தூயவர் போர்வையணி
விடுமாமடி மீதுவி ழுந்ததுவே. (கசு)

அண்டாவனல் பாய்விழி யுங்கடுவுங்
கொண்டாடு படச்சுடி கைக்கொளிதீ
யுண்டாட வளைந்துல மொத்துறலைக்
கண்டாரவை யுற்றவர் கண்மருளா. (உ0)

திடுக்குற்றனர் சிந்திய சிந்தையினன்
மிடுக்குற்ற வுறுப்புடன் பேனியெலா
நடுக்குற்றிரி வுற்றரு காநணுகா
வடுக்குற்றவை யின்புற மாயினரால். (உக)

புடையார்புற மாக வனற்பொழிகண்
கடையார்செவி காயர வின்கதியா
லடையாரடை யாவரு ளின்றுறைமே
னடையார்நலி யாதில நாட்டினரால். (உஉ)

ஈதோர்பொரு ளென்றுமி தற்குளமற்
றியாதோர்வலி யென்று நினைத்திலராப்
போதோர்விதி போக்குடை யானருளின்
மீதோர்மையி னுற்றனர் வீறுடையார். (உந)

கடிமீதரு நச்செயி றுங்கடைவா
யடிமீதெழு நாவு மலர்ந்துமணி
முடிமீதெழ முன்படம் விட்டுடல
மடிமீதி னெகிழ்ந்தது வல்லரவே. (௨௪)

மணியோங்கிய மேனி வனைந்துசிறந்
தணியோங்கிய போர்வை யகத்துடலத்
திணியோங்குபு சென்றுல விக்களமேற்
பணியோங்கிய பொற்படர் குற்றதுவே. (௨௫)

காப்பொன்று வளைத்து முகப்பதனிற்
சேப்பொன்றிய செம்மணி யிற்பணிசெய்
தியாப்பொன்றிய பொற்பட மேலெழுமுன்
கோப்பொன்றவு றாஉங்கொடு மைத்ததுவே. (௨௬)

மிடரிற்பண மேவ மிடற்றொலியும்
படர்சொற்பய னும்பழ யத்திறனே
யுடலிற்குண மும்முலை யாதலையா
தடல்பெற்றரு ளுதர மைந்தனரால். (௨௭)

தகமேவ நிறத்தலர் தண்கமல
முகமேன்மையு மூதனை யின்குணமு
நகநோக்கிய நச்சர வங்களிகொண்
டகமோடு மகிழ்ந்தயர் பூண்டதுவே. (௨௮)

கலைவுற்றுட லங்கடி தாரருவி
மலையுற்றிழி கின்றென மாமலர்மெய்த்
தலைவிட்டெதிர் தாழ்ந்து படர்ந்துமுன
நிலைபெற்றது நீணில மண்டலியே. (௨௯)

கால்சுற்றி மடக்கிய காவலர்முன்
வால்சுற்றி மடக்கி மலர்ந்தபொறி
பால்சுற்றிய நீள்பட மிட்டிருநா
வால்சுற்ற வருந்தொனி காட்டியதே. (௩௦)

ஆடுந்தகை யோடரு ளோடரிதா
நீடுந்தகை கொண்டு நிலைத்தெழிலார்
சூடுந்தகை கண்டு துதித்துமிகைப்
போடுந்தகு பாடயி னைத்துனையா. (௩௧)

மதியிற்படு மாண்பின் மறுத்துவாயு
மெதிரிற்றர வள்ளலி யைந்தினிதிற்
றிதியுற்றர வோங்கிய செய்கையெலாங்
கதியிற்புற நின்றவர் கண்டுறலும். (௩௨)

மனமீது நிறைந்த மகிழ்ச்சியுடன்
கனமாதவர் பொற்கழ றூழ்ந்தகடுஞ்
சினமாறிய சீத குணத்துடனே
வனமாடு படர்ந்தது வல்லரவே. (௩௩)

வெம்பாந்தள கன்றிட மேலவர்க
டம்பாக மகிழ்ந்து சவைக்கணடைந்
தெம்பாவினை யாகிய வெம்மிறைபூஞ்
செம்பாதம் வணங்கினர் செப்பினரால். (௩௪)

இகல்கொண்டட லேறிய வல்லரவம்
புகல்கொண்டெதிர் நின்று மிகும்பொழுதா
மகிழ்கொண்டு சிறந்து மதித்துவிராந்
தகல்கொண்டது மென்கொ லெனுவருளால். (௩௫)

வேறு.

முன்னரி னடைந்த சர்ப்ப முறைமுறை வணங்கிப் போற்றிப்
பின்னரின் சலாமுங் கூறிப் பேசிய தன்பி னேக்கி
நன்னிலை யுடையீர் கேட்க னனிதவ முயன்று நாளுஞ்
சொன்னிலை யலையா துற்று ரெவனாயுஞ் சோதித் தேனல். (௩௬)

காண்டலு முள்ள மெல்லாங் கலங்கினர் சிலர்மெய் யங்கம்
பூண்டலு நடுங்கா நின்றார் சிலர்புணர் மேனி யன்றி
யாண்டக மயரா நின்றார் சிலரமைந் திருந்த செய்கை
வேண்டிலர் சிலரிவ் வாறே விளங்கின ரெவரு மன்றே. (௩௭)

அத்தகை யானு ரல்லா லணிந்தவென் செய்கைக் கெல்லா
மித்தகை யுமைப்போ லானு ரொருவருங் காண்கி லேனு
லெத்தகை வரினு முள்ளத் திழிதமை யுறுது பேணி
முத்தகை நிலையி னின்ற முதல்வவென் றேத்தி யன்றே. (௩௮)

அருமையாய் வியந்த சர்ப்ப பாடையா லதனை நோக்கிக்
கருமையா யுறைந்தே னியானுங் கதிபெறும் கணங்க ளாகப்

பெருமையின் மொய்ப்ப வல்லோன் விதிதரு பேற லாம
விருமையு நடவா தாய்க வென்றறி வோ தங் காலே. (௩௯)

பூமுதற் பூத மைந்தும் புணர்த்திய தோற்றந் தன்னின்
மாமுத லினதம் பாலின் புன்மையால் வன்மை கொண்ட
நீமுதற் பகைய னேடு சேர்ந்துமற் றிழிவு பெற்று
மேமுதற் கிட மென்னைச் சோதிப்பான் விரைந்தற் றுயால். (௪௦)

மாருத மேனுங் காயும் வெவ்வழ லேனும் வாரி
வாருதி யேனு மல்கு மைப்புய லிடிக ளேனு
மோரதிர் வலுமை செய்தற் குளதுகோ ளளவி னரும்
பேரரு ளுடையா னுட்ட மின்றெனிற் பெலனும் பேறும். (௪௧)

இறையரு ளுண்டே லுண்டு மில்லெனி லின்று நீர்சூழ்
பொறைநிலைப் பான்மை யாலோர் போக்குமி லின்னு லென்ன
வுறைகின்ற விடமுஞ் சொல்லு முறுதியோ டயரா தற்றே
னிறைகின்ற சொற்போற் செய்கை நீர்மையி னேர்மை யென்றேன். ()

சொல்லொன்றி வினையு மொன்றித் தொகையொன்றி விகற்ப மின்றிச்
சொல்லொன்றி நின்றே னென்று திருவுளா யுள்ளந் தாங்கி
மெல்லொன்றிக் களிகூர்ந் தேத்தி விரைந்தது பாந்த ளென்றார்
சொல்லொன்றி னென்றுச் செங்கை கைய்குப்தல் காதி றன்றே. (௪௩)

மேனல மொழியின் செந்தேன் வியன்செவி குளிர மாந்திக்
கானலம் பரவும் புந்திக் களிப்பினே டலம் பூத்தார்
வானலந் தகைய வும்பர் மற்றவர் மொய்த்த சங்கத்
தானலத் தியல்பி னின்ற துறைவினை யாடு நீரார். (௪௪)

பாந்தள்சோதனைசெய்தபடல முற்றுப்பெற்றது.

ஆ படலம் ௧௦ - க்கு கூடியதிருவிருத்தம் ௪௪௨.

## சைய்குஉதுமான்வழிகொள்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பல்லறி வுணரு மிக்கோர் பணிதர மேலோர் போற்றச்
சொல்லறி கறவ மாந்திச் சுகம்பெற்று நந்த மூழ்கி
நல்லறி மடமை பூண்டார் நனிகொள முகிழ்த் தின்தம்
வெல்லறி மெய்ம்மை நீதி விளக்கென விளங்கா நின்றார். (௧)

செங்நெலின் முத்துங் கன்னல் முத்தமுஞ் செழுங்கை யேந்தி
யங்கலர் பரிந்தம் பானை டாடமோ மருதஞ் சூழ்ந்த
நன்னகர் சரீபின் றன்னி னுதரா முஹறத் தென்போ
ரின்னருள் கனிந்த தோன்ற லெழில்சைய்கு உதுமா னன்றே. (உ)

தொகைவரும் ஜீவ செந்தின் றேற்றத்துந் தோற்று நின்ற
வகைவரும் வராது மேவும் வல்லவன் பரத்தின் வாஞ்சை
மிகைவருங் கருத்தி னன்னு ரோரிரா வெளிமுற் றத்தி
னகைவரு முளத்தி னேடு நடுவினிற் படுத்தா ரன்றே. (ங)

மெய்முது கினின்மல் லாக்கு மேலிடை விழிநோக் குற்றுச்
செய்முக மலர்ந்துள் ளாய்விற் றிகழ்பொழு தாகா யத்தி
னைமுதிர் பவளச் செங்கா லேம்புரு மனிதர் சொற்போற்
மெய்முது மொழியி னேடு பெயர்தரக் கேளா நின்றார். (ச)

தொடர்தரு மறிவின் முன்ன ரிட்டதோ ரளவிற் றேற்றிப்
படர்தரப் படைத்த சீவன் பயிறரு கருகூ லங்க
ளிடர்தர லின்றிக் காக்கு மிறைமைபி னெருமை வல்லோன்
சுடர்தரு தூய நாத னென்றென்று சொல்லிற் றன்றே. (ரு)

சொற்றகும் படைப்புக் கெல்லாந் தோற்றிய நாம ரூபம்
பெற்றன பேறு மன்னுங் குணம்பல பெரிதி னல்கி
யுற்றமை வழியும் பின்ன ருதவினின் றவனே தூயோ
னற்றவத் துயர்ந்தா னென்னு மற்றென்று நவிற்றிற் றன்றே. (சு)

மெய்யியல் விளக்கி விப்பான் விரிதரு படைப்புக் கெல்லா
முய்யியல் கரியாய் மேலா நபிகளை யனுப்பி யுற்ற
வையர்க டம்பின் மேன்மை முகம்மதை யாக்கி வித்த
துய்யவ னவனே தூயோ னென்றென்று சொல்லிற் றன்றே. (எ)

விரிபடு முலகி னுள்ளார் பலபல விகற்பி னுக்குந்
தெரிபடு நெறிக ளெல்லாம் பயனின்றிச் சிதைந்த தன்றித்
திரிபடா னுக்குந் தூதா னவர்க்குஞ்சென் மார்க்க மொன்றே
தரிபடு பலனிற் றென்னு மற்றென்று சாற்றிற் றன்றே. (அ)

பல்பல பலனிற் கேற்ற பண்பொடு வடிவத் தாக்கை
செல்பல சிந்தை தோறும் வேற்றுமை செய்யா நின்ற
சொல்பல வுணர்த்தா வல்லோ னுண்மையைத் தொடாது நாளும்
புல்பல வினையின் பாய்ந்த புந்தியி ருலகி ரென்றும். (கூ)

நிலைகொளா துற்ற வெல்லா நிலையெனல் நன்றி யின்பான்
மலைகொளல் பன்மை யோடு மறுகுத லுயிரி னுக்கங்
கலைகொள வுலக வாஞ்சை கொளவிவை கலந்தி டாது
தலைகொளற் கின்னே யின்னே தலைவனைச் சார்மி னென்றும். (௧௦)

வானிடத் தவர்க ளேனு மாதலத் தவர்க ளேனு
னானிலத் தவர்க ளேனு நனிகொண்மற் றுயிர்க ளேனு
மீனமி லியற்றும் வண்மைக் கியற்றுமோ கைமா றேதுந்
தானமிக் குடையான் செம்மை யருளிடஞ் சார்தி ரென்றும். (௧௧)

தீவினை முயன்று மாறாச் சிந்தனை யுடைய ரேனுங்
காய்வினை கொலைமற் றுள்ள பாதகக் கைய ரேனு
மாய்வினைப் பாவ நீக்கி யின்னரு ளருள்வோன் றன்னை
மாய்வினை வருமு னின்னே மருவுமின் விரைமி னென்றும். (௧௨)

சிக்கிய நிலையி னின்ற நினைவினிற் சீர்மை காணு
துக்கிய துயிறல் கொண்டீ ருண்மையி னுக்கு மாக்க
மிக்கவ னுண்டென் றுள்ளம் விழிமின்கா ளெழுமின் காளென்
றெக்குமெய் யுறுதி வாய்மை மற்றொன்று முரைத்த தன்றே. (௧௩)

சொன்னெறி வழாது மிக்க பயனலம் தொகுத்தவ் வைந்து
மிந்நெறி யிசைப்ப வுள்ளத் திருந்ததம் முணர்வுமாறிப்
பன்னெறி பொறிக ளொன்றும் படைத்திடா வாக்கை யேபோல்
மன்னெறி யுதுமா னென்போ ரறிவுக மயங்கி னரால். (௧௪)

காண்டகாச் சுடரி னுள்ளே கசிந்தநெய் யொழிந்த போதிற்
றாண்டருந் திரிபுக் கென்னத் தொகுமுணர் வுள்ளம் புக்க
வாண்டவர் கிடப்பக் கங்கு லடரிரா வகல மாய்ந்த
மாண்டகை பூப்ப தேபோ லிரவியு மலர்ந்த தன்றே. (௧௫)

விடம்படர்ந் தளவுங் காயத் திடையின்வெள் ளமுத மூறி
யிடம்படர்ந் தென்ன வாய்ந்த விம்மொழி தன்னுன் முன்னர்
தடங்கெழு முலக வாஞ்சை தகைப்பொருள் பாச வேரு
மடங்கலு மொழிந்து சிந்தை யறிவொடு தெளிந்த தன்றே. (௧௬)

தெளிவுணர் வெழுலும் வள்ளல் சிந்திய சிந்தை யூடு
களிவுணர் வொருவன் பாலே கலப்புற வுலப்பி லாது
ளொளிவுணர் தூங்க மற்றை யுரியன பொருள்கண் மீதி
னளியுணர் துறந்து பற்றும் பற்றினோ டமையா ரன்றே. (௧௭)

என்னுயிர்க் குயிராய் நின்ற னியல்பினுக் கறிவாய்த் தோற்று
மன்னுயிர்க் குயிரா யெய்துந் தேசிகர் மலர்த்தாட் காளா
யின்னுயி ரளித்தே னின்னே யறிகநீ யிறைவா வென்னத்
தன்னுயி ரோம்பும் வாய்மைத் தலைப்பெய்திட் டெழுந்தா ரன்றே. (கஅ)

இயல்புள நெறியி னோம்பு மிதயமு முணர்வு மெய்மை
பயிறருங் குருவின் பொற்றாள் பணிதர வருள்வாய் வல்லா
யயல்படா தாளா யாளா யெனவடர்ந்தேறு நாட்ட
மயல்பட வொன்றிற் சொக்கி மயங்கினர் வாஞ்சை மிக்கால். (கசு)

பலபல விடங்க ளோங்கு முயிரெலாம் பயிலுஞ் செய்கை
கலகமற் றெழுவி னேதை கருத்தன தொருமை தோற்று
தலமரு ளறிவின் கள்ளுண் டடர்வெறி யேறி யேறி
மலர்முகங் கொண்ட போக்கே நடந்தனர் மருங்கு காணர். (உ0)

வேறு.

நிலவே யெனவாய்ந் தொளிர்மாட நிரையிற் செறிந்த சரீபீனு
நலவே விளையு முதியோர்வாழ் நாடும் நாட்டின் பல்வளமும்
பலவேய் நிலனுங் குணந்தோற்றுப் பயிற்சி பூண்டு தன்னுணர்வு
மிலவே யுளவே யெனக்காணு திதய விழைவி னேகினரால். (உக)

உறங்குங் கரையிற் கண்ணோட்டத் துயர்ந்த மாணுக் கரினெப்பக்
கறங்கு நீரின் கயறெட்டிற் களிவெண் குருகே யெனக்குருகே
யறங்கொண் டுலகத் தவருய்ய வாதி யருளிற் பேரறிவின்
றிறங்கொள் சைகு மலர்ப்பாதந் தெரியக் காட்டாய் சுட்டாயே. (உஉ)

கரிய மேதி முலைமுறுகிக் கான்று புனலிற் கலந்தவெண்பால்
பிரியப் பிரித்துத் தலைசிடர் பெற்றி யுணர்வி னுண்டுநறுச்
சொரியுங் கமலப் பள்ளியுறை யன்னத் துணையே யித்துணையே
யுரிய குருவின் பதங்காணு துழல்வேற் கருள்வாய் நிழல்வாயே. (உஙு)

கருத்துங் கருத்திற் கருதியதுங் கருது பொருளின் விளக்கமுமே
பொருத்துங் காட்சிப் பொருவில்லாப் புனிதக் கடவு ளெவணுளரோ
திருத்து நீதி யுளம்பூண்பான் செங்கண் வளருங் கருணையென
வருத்த நாமத் தளியினங்கா அளறையிர் வண்ணச் சிறையிரே. (உச)

சேட்டுச் செழிய கயல்வாயிற் சிக்கா நிற்பப் பசியின்றி
மோட்டுக் ககனத் திடையேகு முதிர்வெண் ணாராய் நயோரா

கேட்டுச் செல்வீ ரியான்கொண்ட கிலேசம் புகல்வீ ரிக்கோல
நாட்டிச் சொல்வீ ரிக்கமெனு நாம நல்லீ ரல்லீரோ. (உரு)

தனக்கும் பிறர்க்குங் களிபூண்பான் றகைய வோதை நலங்கிளர்க்கும்
வனக்கங் குலிற்கும் பொருவாத மலர்மாங் குயில்காள் வெயில்காலா
மனக்கண் விளக்குஞ் செழுஞ்சுடரா மதிப்பி னமைக்குந் தேசிகருண்
டுனக்கென் றொருசொற் குறிப்பாயே லொப்பா ருளரே யிப்பாரே. ()

முன்ன ரெனக்கு மதிபூண்பான் முறைமை யுணாத்தும் நன்னெறியின்
மன்ன ரிவரென் றுணர்த்துமன மலர்க்கண் விளக்கு மிவரென்று
துன்ன தருபத் திடஞ்சென்ற வோகோபு றக்காஅள் நின்மின்காள்
பன்னு முறையோ விக்கோலம் படுத்தன் முறையோ வுணர்வீரே. ()

நின்ற வடவி யடர்ந்தவிரு ணிழலா ளுடு மயிலினங்கா
ணன்றி பயக்குந் துறையாகி நவமே பயக்குந் துறைமேய்ந்து
வென்றி பயக்குந் தனக்குள்ள வீட்டி னிருந்த வொருபொருளாய்த் [யே.
துன்றிப் பயக்கு மவரினென்போற் றொடர்ந்தோ தொழிலிற் படர்ந்தா

தானுய்த் தன்மை தனிப்புடனே தனித்தா னுகி யெவ்வுயிர்க்குங்
கோனுய்ப் பன்மை யெழுகுணங்கள் கொண்டா னுகிக் குறிப்புணரா
வானுய் நிலனு யிருசுடராய் வாழ்விற் சிறந்தார் தாமாகி
யேனோர்க் கடங்கா னுளத்திருத்து மெளியேன் குருவே மருவேயோ.

கண்ணிற் றேற்றுக் கருத்துணர்வாற் கணிக்குங் கணிப்பொன் றில்லா
மண்ணிற் றேற்று வானந்த வாரி யமிழ்த்த வேறென்று [தாய்
மெண்ணிற் றேற்றுக் கனாகாணு திருகை மறந்து தாழ்வேற்கோர்
வண்ணிற் றேற்றும் புணையாகி வருவா ரெவரே தருவாரே. (௩௦)

உடலிற் றிறங்கள் பன்மையற வோங்கி யோங்கி யெழுமுவகைக்
கடலிற் பிறந்த மயக்கமெனு மேற்றிற் கடிபட் டுழலாது
நடலிற் சிறந்த பெருந்தோற்ற நாதன் முகமுங் கருணைவிழி
யடலிற் சிறத்த லெப்போதோ வென்ன வயர்வாய்ச் செலும்வேலே. ()

வேறு.

மறுவறு மயிர்தச் சோமன் வண்ணிலா முகமும் வான்போ
னிறைதரு கருணை பூத்த செவ்விழி நிழலு மேன்மை
நெறியுற வலர்ந்த சையு நிலாமணி யாக்கை யோடு
மறிவுறு குணமுங் கொண்டோ ராண்டகை யெதிர்ந்தா ரன்றே. (௩உ)

வல்லவன் புறத்தி னூடு மனப்பயம் பெருத்த சிந்தை
நல்லவர்க் கடிமை யாவா னயம்புனை சரீபீ னென்னும்
புல்லிய னகரின் வாழும் புகழுது மானே யென்ன
வொல்லையின் விளித்து முன்ன ருவப்பொடு சலாஞ்சொன் னாரால். ()

உளைவழி கருத்தி னூடே யுணர்வழி பிறத்த லோடு
களைவழி விழியா ருள்ளக் களிப்பொடு விடையுங் கூறி
வளைவழி கதிரிற் பூத்த மணிவிளக் கென்னத் தோற்றும்
விளைவழி தோளி னாரை வியப்பொடு நோக்கி னாரால். (௩௪)

அரியவன் வரிசை யானை யையயான் வாழு மூரு
முரியவென் பெயரு மெவ்வா றுணர்பெற்றீர் மேன்மை தொக்க
பெரியரி னியாவர் மேவும் பெரும்பதி யாதோர் போதுந்
தெரிதரக் கண்டே னல்லேன் முன்னெனச் சிறப்பக் கேட்டார்.(௩௫)

மதியுறு மறிவிற் பூத்த மடமையார் வதன நோக்கி
நிதியுறுந் துறைகள் மற்ற நிலங்கடல் வனங்கள் யாவுந்
திதியுறக் காவ லோம்புஞ் செயற்கையி னிற்ப வல்லோன்
வதியுறுங் கருணை பூத்த வரத்தினன் கலிறென் போனே. (௩௬)

காணருங் காட்சி நோக்குங் கருத்தினர் கருதா மேன்மைப்
பூணருந் தகையின் மிக்க புண்ணிய பகுதா தென்னுஞ்
சேணரும் புகழின் மூதூர் சிறந்துறாஉங் கௌதுல் லஃலம்
வேணருங் குணத்தார் ஞாங்கர் மேவின னினனே மன்னே. (௩௭)

எங்கடங் குணத்திற் றேற்று மின்னறி வுணர்ந்து நிற்கு
மங்கன மென்னை யன்பி னுண்டகை விளித்து நோக்கிப்
பொங்கிய மகிழ்வி னோடு பூரணச் சசியி னோங்குந்
தங்கெழு வதனங் காட்டிச் சாற்றின ரதனைக் கேட்க. (௩௮)

வெண்மணி வளையி னார்ப்பின் விளரிவண் டிசையிற் றுஞ்சுந்
தண்மல ரன்ன மாடுந் தடப்பணை சரீபீன் றன்னி
னெண்மணி முதியோர் தம்மி னியல்புறு முதுமா னென்போர்
விண்மணி மறைய நென்னல் விழைதரு ஜதுபு கொண்டார். (௩௯)

அஞ்சிறை குலாம்பு ருக்க ளறைசிறை யாகி யின்ப
மிஞ்சிறை யருளின் வெள்ள மிடுசிறை மிதந்து பூத்த

தஞ்சிறைப் புலனிற் செல்லா தொருமையிற் றடைபட் டுள்ளம்
வெஞ்சிறை கழிய வுண்ட வெறியினே டெழுந்தா ரன்றே. (௪௰)

விரிகதிர்ச் சுடர்க ளாட மீனின மதிப்பி னாடச்
சரிகதிப் புயல்வா னாடத் தராதல முவப்பி னாடப்
புரிகதி யுயிர்க ளாட வுடனொன்றிற் பொலிந்த நாட்டந்
தெரிகதிக் கருத்தா நந்தத் தீம்புன லாடா நின்றார். (௪௧)

தற்குணங் கோட லானுந் தவக்குண மியைத லானுஞ்
சொற்குணம் போலும் பற்றுஞ் செயற்குணந் தொடர்த லானு
நற்குண மாகப் போற்றி நடையினைப் பொருந்தி வல்ல
பற்குண முடைய நாதன் புகழ்தரப் பலன்கொண் டாரால். (௪௨)

காண்டகாக் குணத்தி னென்னைக் கருத்தொடு திருத்தி யென்பாற்
றேண்டரு மாசை பூண்ட சிறப்புடை யடியா யுள்ளம்
பூண்டபே ருவகை யென்றன் சோபனம் புனைதி யென்ன
மாண்டமேம் புகழின் வல்லோ னேத்திய வரிசை பெற்றார். (௪௩)

உள்ளகக் கருத்தி னூற்ற வுணர்வினை யுணரக் கூறி
வெள்ளமொத் தினிய வின்பம் வெளிப்படக் காட்ட வல்ல
வள்ளலாந் தேசி கர்க்கென் றனைவழங் கினனென் றுண்மை
யுள்ளிய வாய்மை மேலோற் குரைத்தவர் சார்கின் றாரால். (௪௪)

இத்திறங் கொண்டோ ராற்றி னெதிர்வர நீர்செல் கண்டா
லத்திற மனைத்துங் காட்டி யழைத்திவண் கொணர்க வென்ன
வெத்திறப் பயனுங் காண்போர் விடுப்பயான் புகுந்தே னென்று
முத்திற முணர்ந்த வள்ளன் மொழிந்துபின் மொழிவ ரன்றே. (௪௫)

வேறு.

வரத்தினிற் படர்ந்தெழும் புகழின் மாட்சிமை
தரத்தினி னின்றவ தவத்தி னிற்பதற்
குரத்தினின் முயற்சியா ருணர்வின் மேனலம்
பரத்தினர் நவநிலை பயிலுங் காட்சியார். (௪௬)

கண்பொறி நுகரருங் காட்சிப் பேரரு
ளெண்பொறி நுகரமற் றெவற்றி னேங்கிய

நண்பொறி நகருமா ஆரி பீன்களுக்
கொண்பொறி நாயக ருயரிக் காலத்தே. (சள)

தங்கிலே யுணர்தலிற் றகைய சால்பொடு
நன்னிலே வேண்டியே தொடரு நாதர்கள்
முன்னிலேப் பொருள்பலன் முதிரிப் போதினின்
மன்னிலேக் குளபகு தாதின் வாழ்வரோ. (சஅ)

வஞ்சமற் றுயர்வழி வளர வெம்பவப்
புஞ்சமற் றெழிதரப் புணர்த்தும் பேரரு
ணெஞ்சமுற் றுயர்தர நிகழ்த்து மின்சொலா
ரஞ்சலித் திடுஞ்சைய்கு அப்துல் காதிரும். (சக)

தீஞ்சுவை மதுவிரி செழீஇய தாமரைப்
பூஞ்சரண் பணிவிடை புரிந்தன் னேருநா
தேன்சுவை பருகுதி திறத்திற் பற்றுதி
வான்சுவை யமிழ்தமு மெளிதின் வாய்க்குமால். (ரு0)

முற்பட வுளத்தினின் முன்னு முன்னலி
னற்படு பயனெலா மறியு மாளுடை
சொற்பயில் பவரது துங்க மேன்மைக
ணற்பய னுமிக நயந்து பேணுதி. (ருக)

பரவிய கருத்தொடு பற்ற னற்றவத்
தரவிய லெனவுரைத் தொக்கல் செல்லுமக்
குரவர்சொன் முடிவினற் றெளிவு கொண்டபி
னுரவர்தம் விழிகளா லுவந்து நோக்கினர். (ருஉ)

கலந்தடைந் தவர்தமைக் காண்கி லாதுதா
மலர்ந்தெழு மலர்வனம் பொழிலு மற்றுள
நிலந்தரு சேணெலா நீந்தி மாநகர்
தலந்தனி லுறமிகப் புதுமை தாங்கினர். (ருங)

வல்லவர் மறைந்ததும் வழியி னஃகலு
மெல்லையி னடந்தது மெழுந்த கீர்த்தியின்
றெல்லையம் பதிபகு தாதிற் றேற்றமுள்
சொல்லருங் காரணத் துளங்கு ளங்குமால். (ருச)

தன்னிலை யுணர்வொடு தனித்து முன்னுறு
மன்னிலை யறிமட மகிமை யானுயர்
நன்னிலை கொள்பவர் நடக்கை கொண்டுதாஞ்
சென்னிலை சென்றனர் சீர்மை செல்லவே. (ருரு)

வேறு.

திணியணி யுடலந் தேட்ட வாட்டத்திற் சிறந்த வள்ளல்
மணியணி யலங்கன் மார்பன் முகம்மது மஸ்தா னென்போன்
பணியணி யுளமபோல் பூத்த பதுமத்தா சனத்தின் மேன்மை
யணியணி முகிபித் தீன்வா ழவையினிற் புக்கி னரால். (ருசு)

வண்ணிலாக் கதிரிற் பன்மை வழிகதிர் மணிக ளுப்பண்
தண்ணிலா வொழுகுஞ் செய்ய மாமணி தயங்க லேபோற்
கண்ணெலாஞ் சுடர மேலோர் கருத்தெலாஞ் சுடர வைகு
மண்ணலார் மகிழ்வி னேக்கி யறைந்தன ரிதனை யன்றே. (ருஎ)

நறுஞ்செழுஞ் சிறைபின் புட்க ளுவினு லிறைவன் றன்பா
லுறுஞ்செழுங் கருணை யீர்ப்புண் டுறுதிபூண் டுயரு நன்மை
பெறுஞ்செழுந் துறைகு லாவிப் பேரின்ப நயம்பெற் றுருக்
கறுஞ்செழுஞ் சோப னங்க ளணிகவிங் கடைக வென்றும். (ருஅ)

முன்னிலை படர்க்கை யாக முகமனே டுயர்த்தி யன்பி
னன்னிலை யுதுமா னென்ன விளித்துநான் மறைக்கும் வல்ல
பன்னிலை தமக்கு மெட்டா மேலவன் பரிவு கூர்ந்து
நின்னிலை தனக்கோர் சீட னிழல்கொடை யருள்வா னென்றும். (ருகூ)

வரம்பல நாட்டுஞ் சிந்தை வழிபெறு மவுலி யாக்க
டரம்பெறு மவரின் மேலாந் தகுதியு மமரர் தம்பா
லுரம்பெறு வீறு பேசு முடையவ னருளுங் கொண்டுங்
கரம்பெறு நருத்தா அப்துல் கனியெனு மைந்த னென்றும். (சுo)

பேரணி பிறங்கப் பின்ன ரெய்துவ பிரித்துக் கூறி
நீரணி யுலகந் தாங்கு நிலையென நின்ற வள்ளல்
சாரணி சரீபீ னுதர் தலையினின் வைத்தார் மேன்மைச்
சீரணி தாஜொன் றேந்தித் திருமலர்க் கரத்தா னன்றே. (சுக)

உயர்சிரந் தொட்ட போதே யுச்சியி னெழுந்த தண்மை
வியர்வினி னமிர்த மூறி மிகமிகப் பொங்கிப் பொங்கிப்
பெயர்தர வகத்திற் செய்ய பெருமனக் கமலஞ் சிதத்
தயர்தர லோடு தோற்றிற் றருஞ்சுடர் விளக்க மன்றே. (சுஉ)

நிரைநிரை யமரர் வான நிகழ்நவ மெவையுந் தோற்றத்
தரைமுதல் வாழுஞ் சீவன் சகலமும் வெவ்வே றாக
வுரையினு னிறைவன் றன்னைப் புகழ்தலி னேங்கு நாத
மிரைதரு பொருளி னேடு கேட்டன ரிதய மாய்ந்தார். (சுங)

எண்டிசை யெழுந்த நாதக் கடலிடை யுதய மெல்லாங்
கண்டிடா தழுந்து மின்பங் கதித்துத்தன் னுக்கை தோன்று
தண்டிய மயக்க மெய்தும் போதினி னலர்ந்த பஞ்சின்
றுண்டமொன் றெறிந்தார் கையாற் றுதிதரு முகியித் தீனே. (சுச)

கையினி னிருந்த பஞ்சிற் கலக்கம்போ யுள்ளம் பூத்த
மெய்யினி னறிவும் புத்தி விளக்கமுந் தரிபா டாகத்
துய்யவ னிடம்பா டெல்லாந் துதிபெறக் கருணை செய்ய
வையமற் றுதுமான் வள்ள லகமொரு மித்த தன்றே. (சுரு)

திருவருள் கனிந்த சிந்தை செய்யிது முகியித் தீன்பின்
மருவரு ளருளி யோக வழிமுறை யருளி வல்லோ
னொருவரு ளருள்வா னுகக் கல்வத்தி னொருங்கு வைப்பப்
பெருவரு ளுடையார் திங்க ளொன்றினி லனைத்தும் பெற்றார். (சுசு)

அகம்புற மமைந்த செய்தி காணுமுன் னுகும் பண்பிற்
றகுந்துறை தன்னி னேறிச் சேருமுன் சாருங் காட்சி
மிகுந்துள பதவி யெல்லாந் தெரியுமுன் விபர மாகப்
பகுந்துரைத் தருளி யல்லால் பயன்பெற வில்லை யன்றே. (சுஎ)

இருபுறக் கருமந் தன்னி னேறுமத் துறையின் மன்னி
வருபுறப் பொருளின் காட்சி வகையினி னுள்ள செய்தி
யொருபுறத் திருபு றத்து மொதுக்கமு மிடையூ றெய்தா
வெருபுறத் தியல்புஞ் சொல்லிச் சொல்லியே விளக்கா நின்றார். (சுஅ)

இம்முறை விளக்கி யெய்துந் துறைதொறு மிறக்கி வல்லோன்
செம்முறை விளங்குங் காட்சி பறிவினிற் சேர்க்க நாடு

மம்முறை யெல்லா நல்கு மளவுமே பயிற்றி வித்தார்
மும்முறை யுணரு மென்கண் மணியெனு முகியித் தீனே. (சுகூ)

மேல்வருங் கருமந் தானும் விளக்குவர் விளக்கு மாறு
பால்வரு முப்பா னுண்டு பின்னரும் பயினு மன்னே
ரால்வருஞ் சிடன் சொற்போ லேயைந்தி னடைந்தா னென்று
னூல்வருங் கல்வி வள்ளல் காரண நவலற் பாலோ. (எ0)

காண்டகாப் புறத்து முள்ளுங் கதிர்விரி யொளிவா யாவும்
பூண்டகா ரணத்தி னின்ற பொருளெனப் புகழிற் பூத்த
வாண்டகை முகியித் தீன்செவ் வடிமலர் முகந்த மேலோர்க்
கீண்டிய பெருமை யென்னென் றியம்புவன் சிறிய னம்மா. (எக)

சைய்கு உதுமான் வழிகொள் படல முற்றுப்பெற்றது.

ஆூ படலம் கக-க்குக் கூடிய திருவிருத்தம் ருகஉ.

ஆூ காண்டம் உ-க்கு படலம் உஅ-க்கு

கூடிய திருவிருத்தம் தருசு0.

# குத்புநாயகம்

முற்றுப்பெற்றது.

# அறிக்கை.

**கனவான்களே!**

இதனடியிற் கண்ட யாதொரு பிழையு மில்லாத சுத்தப்பதிப்புகளான புத்தகங்களும் மற்றும் தங்களுக்குத் தேவையுள்ள புத்தகங்களும் வேண்டுமானால் அடியிற் குறித்த எமது விலாசத்திற்கு எழுதி வி. பி-யில் பெற்றுக்கொள்ளலாம்.

---

புத்தகங்களின் பெயர்களாவன.

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| சீறாப்புராணம் மூலமும் பொழிப்புரையும் முதற்பாகம் | | | | | |
| தோல் பயிண்டு புத்தகம் 1-க்கு ரூபா ... | | ... | 3 | 8 | 0 |
| ஷை உயர்ந்த கிளேஸ் புத்தகம் 1-க்கு ரூபா | | .. | 4 | 8 | 0 |
| சீறாவசனம் பெரிது தோல் பயிண்டு | ,, | ,, ... | 4 | 0 | 0 |
| சீறாப்புராணம் ... ... | ,, | ,, ... | 1 | 4 | 0 |
| சீறாக் கீர்த்தனை ... ... | ,, | ,, ... | 1 | 8 | 0 |
| முகியித்தீன் புராணம் முதற்பாகம் | ,, | ,, ... | 2 | 0 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | ,, | ,, ... | 1 | 8 | 0 |
| நசீஹத்துல் மூமினீன்மாலை | ,, | ,, ... | 1 | 8 | 0 |
| குதுபுநாயகம் ... ... | ,, | ,, ... | 1 | 0 | 0 |
| இராஜநாயகம் ... | ,, | ,, ... | 2 | 0 | 0 |
| தகுறூல்ஜன்னா ... ... | ,, | ,, ... | 1 | 8 | 0 |
| தரீக்குல் ஜன்னா ... ... | ,, | ,, ... | 0 | 10 | 0 |
| கசசுல் அம்பியா ... | ,, | ,, ... | 1 | 8 | 0 |
| கசசுல் அவுலியா ... ... | ,, | ,, ... | 1 | 4 | 0 |
| புதுகுஷ்ஷாம் வசனம் ... | ,, | ,, ... | 1 | 8 | 0 |
| திருநாகூர்த் திருபந்தாதி<br>திருக்கோட்டாற்றுப்பதிற்றுப்பந்தாதி } | | ,, ... | 0 | 4 | 0 |
| துகபத்துல் இந்து ... | ,, | ,, ... | 0 | 12 | 0 |
| ஸுருல் முஸ்லிமின் ... ... | ,, | ,, ... | 0 | 13 | 0 |
| அசன்பேகதை... ... | ,, | ,, ... | 0 | 8 | 0 |
| கீர்த்தனாலங்கிருதம் ... | ,, | ,, ... | 0 | 4 | 0 |
| பலபாடற்றிரட்டு ... ... | ,, | ,, ... | 1 | 8 | 0 |
| றவுசுல்கூல் வசனம் ... | ,, | ,, ... | 0 | 8 | 0 |
| நவநீதபுஞ்சம் ... ... | ,, | ,, ... | 0 | 12 | 0 |

☞ **இ. பார்த்தசாரதிநாயுடு.**

**84.** நெ, ஆச்சாரப்பன் தெரு

சென்னபட்டணம்.

சூசிகை.

## முதற்காண்டம்.


| பக்கம். | பெயர். | பாட்டு. |
|---|---|---|
| 1 | காப்பு ... ... ... ... | 2 |
| 2 | கடவுள்வாழ்த்துப் படலம் ... ... ... | 33 |
| 7 | நாட்டுப்படலம்... ... ... ... | 100 |
| 20 | நகரப்படலம் ... ... ... ... | 53 |
| 27 | மரபியற்படலம் ... ... ... | 20 |
| 29 | சகலசற்குரு உதயஞ்செய்தபடலம் ... ... | 73 |
| 41 | விரதத்தையமறுத்தபடலம் ... ... | 25 |
| 44 | ஒலிநிலைகண்டபடலம் ... ... ... | 27 |
| 48 | யாத்திரைப்படலம் ... ... ... | 60 |
| 51 | வாய்மைவிளக்கியபடலம் ... ... ... | 53 |
| 63 | பகுதாதுபுக்குபடலம் ... ... ... | 44 |
| 70 | கல்விபயில்படலம் ... ... ... ... | 20 |
| 73 | கவுதைக்கண்ணுற்றபடலம் ... ... | 32 |
| 77 | கச்சிற்குப்போந்தபடலம் ... ... ... | 74 |
| 89 | கிலிறுநபியைக்கண்ணுற்றபடலம் ... ... | 37 |
| 94 | முரீதுபெறுபடலம் ... ... ... ... | 47 |
| 100 | நாமோதயப்படலம் ... ... ... | 26 |
| 104 | கொற்றமுற்றபடலம் ... ... ... | 104 |


## இரண்டாங்காண்டம்.


| | | |
|---|---|---|
| 119 | குருநிலைபெற்றபடலம் ... ... ... | 65 |
| 127 | விதிமுறைவிலக்கியபடலம் ... ... ... | 42 |
| 133 | மலசலத்திடர்தொலைத்தபடலம் ... ... | 29 |
| 137 | இறந்தவரையெழுப்பியபடலம் ... ... ... | 27 |
| 141 | ஜின்கொண்டபெண்ணைத்தருவித்தபடலம் ... | 51 |
| 147 | அப்துற்றகுமான் ஐயந்தீர்த்தபடலம் ... ... | 62 |
| 156 | செய்குகம்மாதின் சூகைநீக்கியபடலம் ... | 63 |
| 167 | கொழிஞ்சிக்கனியளித்தபடலம்... ... ... | 33 |
| 171 | தன்னிலைவிளக்கியபடலம்... ... ... | 26 |
| 175 | பாந்தள்சேர்தனைசெய்தபடலம்... ... ... | 44 |
| 180 | சைய்கு உதுமான்வழிகொள்படலம்... ... | |